Registered as a Newspaper at G.P.O.

விலை 10.00

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

# தமிழ்த்தந்தி

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

www.facebook.com/ thamilthanthi

Follow@thamilthanthi

தமிழ் 07 தந்தி 29 ஞாயிற்றுக்கிழமை 16.06.2019 Sunday 16th June 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com




★ விளம்பரங்கள்

★ வாழ்த்துகள்

மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:

Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

# தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க கூட்டமைப்பு முன்வரவில்லை!

வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்

தமிழ்த்தந்திக்கு பிரத்தியேக பேட்டி

**கூட்டமைப்பின் செயற்பாடுகள் மக்களுக்கு எதிராகவே இருந்தன............**

நான் அரசியலுக்குள் உள்நுழைந்தபொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையில் பாரிய முரண்பாடுகள் இருந்தன. இதை அறியாமலே கூட்டமைப்பின் அழைப்பின் பேரில் நான் அரசியலுக்குள் நுழைந்தேன்.

இவ்வாறு வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த்தந்திக்கு கருத்துத் தெரிவிக்கும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நான் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சிபார்சின் பேரில் அல்லது அவர்களின் வேண்டுதலின் பேரில் அரசியலுக்குள் நுழைந்தேன். அப்பொழுது எனக்குச் சரியாகத் தெரியவில்லை

**சிங்கள பௌத்தர்களின் மனமாற்றம் வரவேற்கத்தக்கது....................**

02 ஆம் பக்கம் பார்க்க

## ரிசாட், ஹிஸ்புல்லாவிற்கு எதிராக நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம்



க.கிஷாந்தன்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதின், முன்னாள் ஆளுநர்களான ஹிஸ்புல்லாஹ், அசாத் சாலியை கைது செய்யுமாறு கோரியும், குருணாகல் வைத்தியர்

02 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்களின் தியாகங்களை நீர்த்துப்போக செய்துள்ள கூட்டமைப்பு


சிவசக்தி ஆனந்தன் கண்டனம்



தமிழர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு பிள்ளையார் சுழிபோட்டு தொடக்கி வைத்தது செல்வநாயகம் ஐயா. அவரைத் தொடர்ந்து வட்டுக்கோட்டைத் தீர்மானம், தனிநாட்டுப் பிரகடனம் எல்லாம் செய்து கடந்த 30வருட காலம் நடந்து ஆயுதப் போராட்டத்திற்

02 ஆம் பக்கம் பார்க்க

## உயிர் கொடுத்த உத்தமரே!



உளமார போற்றுகிறேன்! இன்று தந்தையர் தினம்



## இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்கத் தீர்மானம்

பாதசாரிகள் மீது விபத்துக்களை ஏற்படுத்திவிட்டு தப்பிச் செல்லும் வாகனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

அத்துடன் வாகன காப்புறுதி நிறுவனங்கள் மூன்றாம் தரப்பினரின் காப்புறுதிகள் மூலம் பெற்றுக் கொள்ளும் வருமானத்தில் வீதி பாதுகாப்பு அதிகார சபைக்கு வழங்கும் நிதியானது ஒரு வீதத்திலிருந்து இரண்டு வீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

வீதி பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபை எதிர்காலத்தில் ஒரு ஆணைக்குழுவாக மாற்றியமைக்கப்படும். வீதி பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் சேவையை விரிவாக்கும் நோக்கில் அதனை ஒரு ஆணைக்குழுவாக மாற்றியமைக்க தீர்மானித்துள்ளோம். அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வீதி பாதுகாப்புக்காக உரிய தீர்மானங்களை எடுப்பதில் நான் ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை. விபத்துக்கு உள்ளான

02 ஆம் பக்கம் பார்க்க

## தற்கொலைதாரியின் உடல் பாகத்தை புதைக்க எதிர்ப்பு

கல்லடி நிருபர்



மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பாரதி வீதியில் உள்ள மயானத்தில் சீயோன் தேவாலய தற்கொலை தாரியின் உடல் பாகத்தினை புதைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் அப்பகுதியில் எதிர்ப்பு போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை குறித்த பகுதியில் சீயோன் தேவாலய தற்கொலை தாரியின் உடல் பாகத்தினை புதைப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படு

02 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் கரு!

வவுனியா நிருபர்



வவுனியா ஈரட்டை பெரியகுளத்தில் அமைந்துள்ள டீ.யு.லீ நினைவு நூலகம் மற்றும் மஹாகருணா பள்ளியினை நேற்று (15.06.2019) காலை 10.30 மணியளவில் பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரிய உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

வவுனியாவிற்கு நேற்றுக் காலை 9.00 மணியளவில் விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரிய ஏ9 வீதி

02 ஆம் பக்கம் பார்க்க

## பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மட்டு. சீயோன் தேவாலயத்திற்கு விஜயம்

கல்லடி நிருபர்



இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் அருட்திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

நேற்று காலை மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவர் மட்டக்களப்பு ஆயர் இல்லத்திற்கு சென்று அங்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையினை சந்தித்து கலந்துரையாடினார்.

அதனைத்தொடர்ந்து கடந்த ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுக்குள்ளான சீயோன் தேவாலயத்திற்கும் விஜயம் செய்த பேராயர் அங்கு

02 ஆம் பக்கம் பார்க்க

## இன்டர்போல் அறிவித்தலுக்கு அமையவே மொஹமட் மில்ஹான் கைது

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுடன் தொடர்புடைய மொஹமட் மில்ஹான் என்ற நபர் தங்களது சிவப்பு அறிவித்தலுக்கு அமையவே சவுதியின் ஜித்தாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என சர்வதேச காவல்துறையான இண்டர்போல் தெரிவித்துள்ளது.

இண்டர்போல் இணைத்தளத்தில் அதன் செயலாளர் நாயகம் ஜுகன் ஸ்டொக்கால் இந்தத்

02 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் முதலாவது செய்மதி விண்ணில் பாய்கிறது



இலங்கையின் முதலாவது செய்மதி எதிர்வரும் திங்கட்கிழமை விண்ணுக்கு செலுத்தப்படவுள்ளது.

இலங்கை தொழில்நுட்பவியலாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது செய்மதியாக இது கருதப்படுவதாக ஆதர் சீ கிளார்

02 ஆம் பக்கம் பார்க்க

## மொஹமட் மில்ஹானிடமிருந்து பல இரகசியங்கள் வெளியாகின

சவுதி அரேபியாவில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் தீவிரவாத தலைவனாகக் கூறப்படும் மொஹமட் மில்ஹான், அபுபீலன் ஆகியோர் மற்றும் இத் தீவிரவாத அமைப்பில் தொடர்புடைய ஐந்துபேர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதாக சிங்கள ஊடகம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

02 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா.பாதுகாப்புச் சபை தீர்மானம் எமது போராட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றி

தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார்



நாங்கள் இன்று 848 ஆவது நாளாக ஜனநாயக ரீதியில் தொடர் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

எங்களின் போராட்டத்திற்கு சாதகமாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதாவது, காணாமல் போனோர் சம்பந்தமான உடனடிப் பொறுப்புக்கூறல், மற்றும் நீதியை நிலைநாட்டல், குற்றஞ்செய்தவர்களுக்கான தண்டனையை வழங்குதல் என்ற தீர்மானம் ஒன்று ஐ.நா. பாதுகாப்புச் சபையிலே நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆங்கில செய்திகளிலும், அதனை தமிழாக்கம் செய்து தமிழ் ஊடகங்களிலும்

02 ஆம் பக்கம் பார்க்க

# நாவலப்பிட்டி கடுங்கஞ்சேன ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேக உற்சவத்தில் பக்தர்களுடைய தங்க சங்கிலியை அறுத்த ஆறு பெண்கள் கைது

**க.கிஷாந்தன்**

நாவலப்பிட்டி கடுங்கஞ்சேன நகரத்தின் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் 14.06.2019 வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கும்பாபிஷேகத்திற்கான விஷேட பூஜைகள் இடம்பெற்று கொண்டிருந்த வேளை பெண் ஒருவரின் தங்க சங்கிலியை அறுத்த ஆறு பெண்கள் நாவலபிட்டி பொலிஸாரினால் கைது செய்யபட்டுள்ளனர்.

ஆலய கும்பாபிஷேகம் இடம்பெற்று கொண்டிருந்த வேளை பக்தர்களின் நெரிசல் அதிகமாக காணப்பட்டத்தை வாய்ப்பாக பயன்படுத்தி உட்புகுந்த ஆறு சந்தேகத்திற்கு இடமான பெண்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதை போல் நடித்து, வழிபாடுகளில் ஈடுப்பட்டிருந்த ஏனைய பெண்ணுடைய தங்க சங்கிலியை அறுத்துள்ளனர்.

இதனை அறிந்த குறித்த பெண் கூச்சலிட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த நாவலப்பிட்டி பொலிஸார் குறித்த பெண்ணை கைது செய்துள்ளதோடு, அறுக்கபட்ட தங்க சங்கிலியையும் நாவலப்பிட்டி பொலிஸார் மீட்டுள்ளனர். இந்த திருட்டு சம்பவத்தில் தொடர்புடைய மொத்தம் 06 பெண்கள் கைது செய்யபட்டுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரனைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. இந்த ஆறு பெண்களும் ஆலயங்களில் இடம்பெறுகின்ற விஷேட பூஜைகள் மற்றும் கும்பாபிஷேகங்கள் இடம்பெறும் பிரதேசங்களுக்கு குழுவாக சென்று பக்த அடியாரிகளின் தங்க சங்கிலிகளை களவாடும் சம்பவத்தில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்துள்ளதாகவும், மேற்படி இந்த ஆறு பெண்களும் வாழைச்சேனை, புத்தளம், ஆலாவத்த, வத்தேகம ஆகிய பகுதிகளை சேர்நத வர்கள் எனவும் இந்த ஆறு பெண்களும்



23 தொடக்கம் 28 வரையான வயதினை மதிக்கத்தக்கவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யபட்ட ஆறு பெண்களும் 15.06.2019 அன்று நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையினை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இந்த திருட்டு சம்பவம் குறித்து விசாரனைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.

# வாகன விபத்தில் இளைஞன் பலி - சாரதி கைது

**க.கிஷாந்தன்**

அட்டன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை பதுபொல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார். 15.06.2019 அன்று காலை 11 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



நீர்க்கொழும்பில் இருந்து அட்டன் நோக்கி பயணித்த அரச பேருந்தொன்றில் மோட்டர் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கினிகத்தேனை பிரதேசத்தில் இருந்து ரஞ்ஜூராவ நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டர் சைக்கிள் பேருந்தில் மோதியதையடுத்து பேருந்தின் பின்பக்க சில்லில் குறித்த இளைஞர் சிக்கியுள்ளார்.

பின்னர், படுகாயமடைந்த நிலையில் அவர் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கினிகத்தேனை அம்பகமுவ பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய சந்துன் மதுரங்க என்ற இளைஞரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி விபத்து அருகில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கெமராவில் பதிவாகியுள்ளது.

உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# நீர்வற்றிய நிலையில் காணப்படும் குளம்

**வவுனியா நிருபர்**

வவுனியா, புதுக்குளம், மூனாமடுக் குளம் விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டுள்ள நிலையில் நீர் வற்றி மீன்கள் இறந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.



வவுனியாவில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரணமாக குளத்து நீர்மட்டம் சடுதியாக குறைவடைந்து வருகின்றது. இந்நிலையில் புதுக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நீர்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள மூனாமடுக் குளத்தின் நீரும் வற்றிய நிலையில் மீன்கள் இறந்து துர்நாற்றம் வீசுவதுடன், அதன் கீழான விவசாய நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளது.

மூனாமடு குளத்தின் கீழ் காணப்படுகின்ற 230 ஏக்கர் வயல் காணிகளில் சிறுபோகத்திற்காக 45 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டுள்ளது. குறித்த குளத்தின் நீர் வரத்துக்கேற்ப 35 ஏக்கரில் செய்கை பண்ண வேண்டிய நிலையில் 45 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டு நீர் விநியோகிக்கப்பட்டமையாலும், வரட்சி காரணமாகவும் குறித்த குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்து அக்குளத்து மீன்கள் இறந்து வருகின்றன. அத்துடன் கால்நடைகள் குடிக்கத் இல்லாமல் அலைந்து திரிகின்றது.

குறித்த குளத்தின் கீழ் 45 ஏக்கர் விசாயம் செய்கை பண்ணப்பட்டுள்ளது. இக்குளத்தின் கீழ் 72 பங்காளங்கள் உள்ளனர். வரட்சி காரணமாக வயல் நிலங்களுக்கான நீரும் விரைவாக வற்றிப் போவதால் குளத்தில் இருந்து இறைத்து பயன்படுத்தப்படுகின்றது.

## ரிசாட்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

சியாப்தீன் மொஹமட் ஷாபிக்கு தகுந்த தண்டனை வழங்க கோரியும் 15.06.2019 அன்று நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த மூவரையும் கைது செய்யுமாறு கோரியும், வைத்தியருக்கு தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் நுவரெலியா நகர மத்தியில் முன்னெடுக்கப்பட்டது. எதிர்ப்பு வாசகங்களை எழுதிய சுலோகங்களை ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு சுமார் 100ற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

தேசிய சுதந்திர முன்னணியினால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாகாணத்தின் முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் நிமல் பியதிஸ்ஸ, நுவரெலியா பிரதேச சபையின் உப தலைவர் சரத் குமார உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## ஐ.நா.பாதுகாப்பு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

முதன்மை பெற்றுள்ளது அந்தச் செய்தி. அதற்கு புலம்பெயர் தேசங்களிலுள்ள மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தொடர்ந்து தமிழர்களின் நீதிக்காக போராடுபவர்களின் கடின உழைப்பும், புலம்பெயர் தேசங்களிலுள்ள இளையோர்களின் தொடர் போராட்டங்களும், அதற்கு முக்கிய காரணமாக கருவாக தாயகத்தில் நடக்கின்ற தொடர் போராட்டங்கள், முக்கியமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டங்கள் அமைந்திருக்கின்றன.

குறிப்பாக எமது போராட்டம், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் கொடிகளைப் பிடித்து அவர்களின் உதவிகளை வேண்டி, அதன் முதற்கட்டமாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு, தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத் தரவேண்டுமென்று கோரி கடிதம் ஒன்றை நேரடியாக அவருக்கு அனுப்பியிருந்தோம்.

அத்துடன் கடந்த முறை மனித உரிமைகள் தினத்தன்று ஐ.நா. மனித உரிமை உறுப்பு நாடுகளுக்கும், ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கும் நாங்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அந்தக் கோரிக்கையில் நாங்கள் வலியுறுத்தியிருந்தோம், முக்கியமாக காலநீடிப்பு வழங்கக்கூடாது, அப்படி வழங்கினால், சிறிலங்காவை போர்க்குற்றவிசாரணை செய்ய வேண்டும், அதற்கு பாதுகாப்புச் சபைக்கு இவ்விடயம் மாற்றப்பட வேண்டுமென்று கேட்டிருந்தோம். அடுத்ததாக, ஐ.நா.வின் அமைதிப்படை வரவேண்டும் என்றும் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வரவேண்டும் என்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து அந்த மகஜரை வழங்கியிருந்தோம்.

அத்துடன் கடந்த மே மாதம் 16ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற உண்ணாவிரதத்தின் பின்பும் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஐ.நா.விற்கு மகஜர் வழங்கியிருந்தோம். அதுபோல வீதியில் வருடக் கணக்காக இடம்பெறும் போராட்டமும் எங்களின் போராட்டம் மட்டும்தான்.

சர்வதேச நாடுகளிலிருந்து வந்து சந்திக்கும் அமைப்பாக தமிழர்களின் குரலாக தமிழ் தேசிய கூட்டமைப்பு இருக்கின்றது. ஆனால் அது தமிழர்களுக்கு சார்பாக பேசாமல் சிங்களவர்களுக்கு ஆதரவாக ஒலிக்கின்றது என்று மேலும் கூறினார்.

## மொஹமட்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இதன் முதற்கட்ட விசாரணையின் போது தடைகள் ஏற்பட வாய்ப்பிருந்தமையால் இது சம்பந்தமாக தகவல்களை வெளியிடவில்லை என பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களிடமிருந்து வெளியான தகவல்களின் அடிப்படையில் சஹ்ரானின் குழுவில் இன்னும் சிலர் கைது செய்யப்படலாம் என இரகசியப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நாட்டில் இன்னுமொரு குண்டுத் தாக்குதலை நிகழ்த்த இருந்ததாகவும் மொஹமட் மில்ஹானின் குழுவிலிருந்த அந்த ஐந்துபேர் கைது செய்யப்பட்டதால் அந்த வெடிப்பு சம்பவத்தை நிகழ்த்த முடியாது போயுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வவுணதீவு சம்பவத்தில் கொல்லப்பட்ட பொலிஸார் மற்றும் முன்னாள் அமைச்சர் கபீர் ஹாசிம் அவர்களின் செயலாளரான மொஹமட் நஸ்லிம் அவர்களுக்கும் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடனும் மொஹமட் மில்ஹான் சம்ந்தப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பேராயர்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

புனரமைக்கப்பட்டுவரும் ஆலயத்தினை பார்வையிட்டார்.

இதன்போது குறித்த தேவாலய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடையவும் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்தனைகளிலும் பேராயர் ஈடுபட்டார்.

இந்த விஜயத்தின்போது இராணுவ அதிகாரிகள், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை உட்பட பலர் இணைந்திருந்தனர்.

## இன்டர்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மொஹமட் மில்ஹான் உட்பட சந்தேகநபர்கள் நான்கு பேர் சவுதியின் ஜித்தாவில் வைத்து கைது செய்யபபட்டு, இலங்கைக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் என்று இண்டர்போல் இணைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை கைது செய்ய ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில் இண்டர்போல் பெருமிதம் அடைவதாக அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் சட்டத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ள குற்றவாளிகளை கைது செய்வதற்காக சிவப்பு அறிவித்தல் விடுப்பது ஒரு பலம்வாய்ந்த செயலாக இருப்பதாகவும் இண்டர்போல செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் தலைவரான ஸஹ்ரான் ஹாஷிமுக்கு மிக நெருக்கமானவராக 29 வயதுடைய 29 வயதுடைய அறியப்படுகிறார்.

பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புடைய மொஹமட் மில்ஹான் உட்பட சந்தேகநபர்கள் நான்கு பேர் சவுதியின் ஜித்தாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவர்களிடம், கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்களம் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## தமிழர்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கூடாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கதவை போராளிகளின் தியாகங்களும், மக்களின் போராட்டங்களும்தான் தட்டியிருக்கின்றது.

இவ்வாறு வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த நான்கு வருடகாலத்தில் நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்கின்ற இந்த அரசாங்கத்துடன் இணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்களினதும், போராளிகளினதும் தியாகங்கள் அனைத்தையும் நீர்த்துப் போகச் செய்துள்ளது.

மூன்றுதடவை காலநீடிப்பை வழங்கி தமிழரின் பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்துள்ளது. கடந்த நான்கு வருடங்களில் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கி, மீண்டும் வடக்கிலும் கிழக்கிலும் இராணுவம் தங்களைப் பலப்படுத்துவதற்காகவும் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடாமல் வைத்திருப்பதற்காகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரங்கள் போன்ற அனைத்தையும் நீர்த்துப் போகச் செய்தது தமிழ் தேசிய கூட்டமைப்புத்தான். கடந்த 52 நாட்கள் அரசியல் குழப்பம் ஏற்பட்ட பொழுதும் அரசாங்கத்தைப் பாதுகாத்தது கூட்டமைப்புத்தான்.

எதிர்வரும் நான்கைந்து மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆகவே இந்த நான்கு வருட காலத்தில் அத்தனை விடயங்களையும் நீர்த்துப் போகச் செய்து, இன்றைக்கு தனிநாட்டுக் கோரிக்கையிலிருந்து அதை இல்லாமல் பண்ணி பின் சமஷ்டி கேட்டு, பின் அதையும் நீர்த்துப் போகச் செய்து, அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் தாங்கள் வெல்வதற்காக தமிழ் மக்களுக்கு இன்றைக்கு, சமுர்த்தி நிவாரணம் என்ற பெயரில் குறிப்பிட்ட மக்களுக்கு அதுவும் தங்கள் கட்சி சார்ந்தவர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. கம்பரெலிய வேலைத்திட்டம், பனை நிதியம் என்ற பெயராலும் இந்தத் தேர்தல் நெருங்கும் காலத்தில் இவர்கள் சகலதையும் நீர்த்துப் போகச் செய்து வெறும் சலுகை அரசியல் செய்து வருகின்றார்கள்.

கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் பல தடவைகள் கூறினார், அபிவிருத்திக்காக நான் அமைச்சர்களின் கால்களில் விழத் தயாரில்லை என்று. எங்களுக்கு உரிமை முக்கியம் என்று கூறியவர்கள் எல்லாம் இன்று அத்தனையும் இல்லாமல் செய்து தமிழ் மக்களை சமுர்த்தி முத்திரைக்கு கையேந்தும் நிலைமைக்கு கொண்டு வந்துவிட்டுள்ளார்கள். ஆகவே இதற்கு அத்தனை பேருடைய தியாகங்களையும் நீர்த்துப் போகச் செய்துள்ள தமிழரசுக் கட்சி எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் முற்றாக நிராகரிக்கின்ற நிலைமை வரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அது புவியில் இருந்து 400 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள விண்ணுக்கு இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு விண்ணுக்கு செலுத்தப்படவுள்ளது.

ஜப்பானின் தொழில்நுட்ப உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இதற்கு ராவணா-வன் என பெயரிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## வவுனியாவில்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

யில் அமைந்துள்ள ஸ்ரீ போதிதக்சிணாராமய பௌத்த விகாரைக்கு சென்று விகாரதிபதி சியம்பலாகஸ்வெல விமல சாரநாயக்க தேரர் அவர்களிடம் ஆசிகளை பெற்றதுடன் வவுனியாவில் தற்போதைய நிலமைகள் பற்றியும் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் 10.30 மணியளவில் ஈரட்டை பெரியகுளத்தில் அமைந்துள்ள டீ.யு.லீ நினைவு நூலகம் மற்றும் மஹா கருணா பள்ளியினை திறந்து வைத்தார்.

இவ் கட்டிட திறப்பு விழாவில் ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கருணாதாச மற்றும் சிங்கப்பூரிலிருந்து வருகை தந்த வெளிநாட்டவர்கள் , பௌத்த விகாரதிபதிகள் , பாடசாலை மாணவர்கள் , பெற்றோர்கள் , பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## தற்கொலை...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

வதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அப்பகுதியில் ஒன்றுகூடிய பிரதேச மக்கள் மாநகரசபை உறுப்பினர்கள் இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டனர்.

வீதிகளில் டயர்களை எரித்தும் வீதிகளை மறித்தும் நடைபெற்ற இந்த போராட்டத்தினால் அப்பகுதியில் பதற்ற நிலைமையேற்பட்டது.

சீயோன் தேவாலய தற்கொலை தாரியின் உடல் பாகத்தினை மட்டக்களப்பில் புதைப்பதற்கான நடவடிக்கையில் பொலிஸார் நடவடிக்கைகள் முன்னெடுத்துவரும் நிலையில் மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

## இழப்பீட்டு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

வர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கும் வரை மனித நேயம் வளர்ச்சியடைய வேண்டும். அப்போதுதான் ஒரு சாரதி மனிதராகுவார். வீதி பாதுகாப்புக்காக பாரிய வேலைத்திட்டங்கள் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும். பாதுகாப்பான போக்குவரத்துச் சேவையே எமக்கு அவசியமாகவுள்ளது.

அதன் ஒரு கட்டமாக சொகுசு பஸ்கள் மாத்திரமே எதிர்காலத்தில் போக்குவரத்து சபைக்கு கொண்டுவர நடவடிக்கையெடுக்கப்படும். சில வர்த்தகர்கள் இதனை எதிர்க்கின்றனர். என்றாலும், மக்களுக்காக உரிய தீர்மானத்தை எடுக்க நான் பின்நிற்கப் போவதில்லை. வாகன காப்புறுதி நிறுவனங்கள் மூன்றாம் தரப்பினரின் காப்புறுதி மூலம் பெற்றுக்கொள்ளும் வருமானத்தில் வீதி பாதுகாப்பு அதிகார சபைக்கு வழங்கும் நிதியானது ஒரு வீதத்திலிருந்து இரண்டு வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பாதசாரிகள் மீது விபத்துகளை சம்பவித்துவிட்டு தப்பிச் செல்லும் வாகனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் இழப்பீட்டுத்தொகையையும் அதிகரிக்க நடவடிக்கையெடுக்கப்படும் என்றார்.

## தமிழ்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மக்களின் எதிர்பார்ப்புக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கும் இடையிலே பலத்த முரண்பாடுகள் இருப்பதைத் தெரியாமல்தான் நான் அப்பொழுது உள்நுழைந்தேன்.

மக்களை நான் முதலமைச்சர் என்று ஆனதன் பின் சந்திக்கத் தொடங்கியதன் பின்னர்தான், மக்களுடைய எதிர்பார்ப்பு, அவர்களுடைய பிரச்சினைகள் என்று பலவிதத்திலும் பலவற்றையும் தெரிந்து கொள்ள முடிந்தது. எங்களுடைய கட்சித் தலைமை, பாராளுமன்றத்தில் எதை எதை முக்கியமாக கருதியதோ, அவை எவற்றையும் மக்கள் முக்கியமாகக் கருதவில்லை.

தங்களுடைய பிரச்சினைகளையும், தங்களுடைய வருங்காலத்தைப் பற்றியும், தங்களிடமிருந்து பறிபோகின்றவற்றைப் பற்றியும்தான் அவர்கள் முக்கியமாகக் கூறிவந்தார்கள். ஆகவே எதனை நாங்கள், 2013இல் மக்களிடம் சொல்லி அதனடிப்படையில் மக்களினுடைய வாக்கைப் பெறுவதற்காக, மக்களிடம் சென்றோமோ, அவற்றிற்கு முரண்பட்ட விதத்திலே, என்னுடைய கட்சி செயற்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டவுடன் எனக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

அதன் காரணத்தினால்தான், 2013இல் நாங்கள் எந்த அடிப்படையிலே, எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளிக் கொணர்ந்து வந்தோமோ, அவற்றிலிருந்து விடுபட்டு, எங்களுடைய தலைமைத்துவம் செயற்பட்டுக் கொண்டிருப்பதை எதிர்த்துத்தான் அந்த அடிப்படையில்தான் என்னுடைய கட்சியைத் தொடங்கினேன்.

ஆகவே நாங்கள் அடிப்படையாக எதனை மக்கள் சார்பிலே இதுவரை காலமும் வேண்டிக் கொண்டிருக்கின்றோமோ, அவற்றை முன்வைத்து அவற்றிற்காக மக்களின் வரவேற்பு இருந்தால், அதனைப் பெறுவதற்காகத்தான் என்னுடைய கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் அல்லது என்னோடு தொடர்புடைய மற்றைய கட்சிகளுக்கும் வாக்களிக்க வேண்டும் என்றும் நான் எதிர்பார்க்கின்றேன்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு வடக்கில் அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டு தெற்கில் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்து வருகின்றது. இது தமிழ் மக்களின் நீண்டகால விமர்சனம். அது என்னுடைய விமர்சனமும் கூடத்தான். அதாவது, பலவிதங்களில், நாங்கள் கொழும்புக்கு வந்தவுடன் எங்களுடைய சிந்தனைகள் மாற்றமடைவதை நான் கவனித்திருக்கின்றேன். நான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தவன். மற்றவர்கள் வடமாகாணத்தில் அல்லது கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்புக்கு வந்தவர்கள். இங்கு வந்தவுடன் அவர்களின் எண்ணங்கள், நிலைப்பாடுகள் எல்லாம் சற்று மாற்றமடைவதை நான் கண்டுள்ளேன்.

எனக்கு அவ்வாறான பிரச்சினைகள் இல்லை. நான் இவர்களுடன்தான் பிறந்து வளர்ந்தவன். எனக்கு எதைவேண்டுமானாலும் எங்கள் மக்கள் சார்பிலே கூறக்கூடிய ஒரு வல்லமை இருக்கின்றது. ஆனால் எங்களின் தலைமைத்துவம், அவர்கள் என்ன நினைப்பார்களோ, எங்களுக்கு என்ன நடக்குமோ, எங்களுக்கு கிடைப்பதும் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பலவிதமான சிந்தனைக்குள்தான் அவர்கள் சிறைப்பட்டு அந்தவிதத்திலே அவர்கள் நடந்து கொண்டு வருகிறார்கள்.

அவர்களின் பேச்சுக்கும், செயலுக்கும் முரண்பாடுகள் இருப்பதை நன்றாக நான் கவனிக்கின்றேன். அதன்காரணத்தினால்தான் நான் இந்த வயதிலும் ஒரு கட்சியைத் தொடங்க வேண்டிய அவசியமேற்பட்டது.

அத்துரலிய ரத்னதேரரின் நிலைப்பாட்டைப் பொறுத்தவரையில், தான் முன்னர் புலிகளை எதிர்த்ததாகவும், பலவிதத்திலும் தமிழர்கள் நாட்டைப் பிரிக்கப் போகின்றார்கள் என்ற எண்ணத்தில் இருந்தபடியால், அது சம்பந்தமாக தான் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும், ஆனால் இன்று வடக்கு, கிழக்கு மக்களுக்கு தெற்கிலிருந்து சில பலாத்கார நடவடிக்கைகள் நடைபெறுவது என்றால் அதைத்தான் எதிர்ப்பதாகத்தான் அவர் கூறுகின்றார்.

அவர் கூறுவது என்னவென்றால் பௌத்தர்களும் இந்துக்களும் ஒருமித்து செயற்படக்கூடிய ஒரு நிலை இருக்கும் போது, நாங்கள் பிரிந்து நின்று செயற்படுவது சரியல்ல என்ற அடிப்படையிலே எங்களுடன் சேர்ந்து, செயற்படவேண்டும் என்ற எண்ணப்பாட்டில் இருக்கின்றார். அது அரசியல் ரீதியான அவரது தந்திரோபாயமோ அல்லது மனமாற்றமோ என்று என்னால் கூறமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச வனப்பகுதியில் குப்பைகளை வீசிவிட்டு செல்வதால் சூழல் மாசடைவு

**க.கிஷாந்தன்**

பண்டாரவளை எல்ல பகுதியின், ராவண எல்ல அரச வனப்பகுதியில் குப்பைகளை வீசிவிட்டு செல்வதால் சூழல் மாசடைவதோடு நுளம்புகளும் பரவுவதற்கு வாய்ப்புள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

உணவு பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களை சூழலில் வீசியெறிந்துவிட்டு செல்வதால், பாரிய அசௌகரியங்களுக்குள்ளாவதாக பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இப்பகுதிகளில் செல்லும் சுற்றுலா பிரயாணிகள் தங்களது உணவு பொருட்களை ஆங்காங்கே கொட்டி எரிந்து வருகின்றனர். இதன் போது கட்டகாலி நாய்கள் மற்றும் பறவைகள் ஆகியன உணவுகளை உண்ணும் அதேவேளை அவ்விடங்களிலிருந்து தூக்கி செல்வதால் வீதிகள் மாசடைவதுடன் குப்பைகள் வீதிகளில் பரவக்கூடிய





நிலை ஏற்படுகின்றது. அத்தோடு அரச வனப்பகுதியும் நாசமாக்கப்படுகின்றது.

மேலும் பயணிகள் மற்றும் குறித்த பிரதேச வாசிகள் வீசிச் செல்லும் யோகட் கோப்பைகள், பொலித்தீன் பைகள் ஆகியவற்றில் நீர் நிறைந்து நுளம்பின் பெருக்கம் அதிகரிக்க வாய்ப்பு இருக்கின்ற அதேவேளை, பிரதேசத்தில் துர்நாற்றம் வீசிவருவதாக தெரிவிக்கும் மக்கள், இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

இப்பிரதேசங்களுக்கு வரும் சுற்றுலா பிரயாணிகள், ஏனைய பிரதேசவாசிகள் இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்வார்களாயின் இவ் சூழலை பாதுகாப்பது சிரமம் அல்ல.



ஆரையம்பதி, சிவமணி வித்தியாலத்திற்கு மிக நீண்டகாலத் தேவையாக இருந்துவந்த தண்ணீர்த் தாங்கி இல்லாப் பிரச்சினையை விஸ்வகலா விளையாட்டுக்கழகத்தால் நிவர்த்தி செய்து கொடுக்கப்பட்டது. இதனை கழகத்தின் தலைவர் இரா.சுரேஸ் மற்றும் கழக உறுப்பினர்கள் ஆகியோர்கள் இணைந்து பாடசாலையின் அதிபர் வி.தட்சணமூர்த்தியிடம் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

படம்: சீலாமுனை நிருபர் துஷாரா

## காரைதீவில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் ஒருவர் பலி

**கரடித்தோட்ட நிருபர்**

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைதீவில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் மேலும் ஒருவர் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது காரைதீவு - 12 ஆம் பிரிவில் திருமண நிகழ்வொன்றிற்குப் பின்னர் இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்டதகராறு காரணமாகவே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் இருவர் கத்திக்குத்துக்கு இலக்கானதுடன் இவர்கள் காரைதீவுவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் ஒருவர் அங்கு உயிரிழந்துள்ளார். மற்றையவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காககல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் காரைதீவு 12 வடிவேல் வீதி என்ற முகவரியில் வசித்து வந்த ஒரு பிள்ளையின் தந்தையான ஞானசேகரம் ராதாஸ் என்பவராவார்.இச்சம்பவம் தொடர்பில் சம்மாந்துறைப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சட்டவிரோதமாக மூடப்பட்டுவரும் புறத்தோட்ட ஊர்க்கரை வாய்க்கால்

**பைஷல் இஸ்மாயில்**

அட்டாளைச்சேனை 9 ஆம் பிரிவு புறத்தோட்ட ஊர்க்கரை வாய்க்கால் சில தனி நபர்களினால் சட்டவிரோதமான முறையில் மூடி வருகின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர், அட்டாளைச்சேனை பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் ஆகியோர் இது விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அரச அதிகாரிகள் இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் கடந்த காலங்களைப் போன்று பொலிஸ் மற்றும் இராணுவத்தின் உதவியை மக்கள் நாடவேண்டிவரும் என்றும் அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



## உபதபால் நிலையத்திற்காக அமைக்கப் பட்ட கட்டடம் திறக்கப்படுவது எப்போது?

**நடராஜன்**

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்திற்கு உற்பட்ட தாண்டியடிக் கிராமத்தில் கடந்த 1995ம் ஆண்டில் உப தபால் நிலயத்திற்காக அமைக்கப்பட்ட கட்டடமானது திறக்கப்படாத நிலையில் பாழடைந்து காணப்படுகிறது.

இந்த தபால் நிலையம் இயங்காமையினால் இங்கு வாழும் மக்கள் அன்றிலிருந்து இன்று வரை பாடசாலை மாணவர் முதல் வயதானவர்கள் வரை பலதரப்பட்ட இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

எனவே இந்த கட்டடத்தை மிகவிரைவில் புணரமைத்து திறந்து தருமாறு தாழ்மையுடன் அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் கவனத்திற்கு இப் பகுதிவாள் மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.



## வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக புதுவித வியாபாரம்; நோயாளிகள் அவதி!

**வவுனியா க.மதி**

வவுனியா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களை இலக்கு வைத்து அவர்களது உடைமைகளை பாதுகாப்பதற்காக பணம் அறவிடும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது.

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களிற்கு பின்னர் வவுனியா வைத்தியசாலைக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வைத்தியசாலைக்கு நோயாளர்களோ அல்லது அவர்களை பார்வையிட வருபவர்களோ மோட்டார் சைக்கிள் தலைக்கவசங்களை உட்கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக வைத்தியசாலைக்கு வருபவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறான சூழலை இலக்காக வைத்து வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் அவர்களை பார்வையிட வருபவர்களிடமும் தலைக்கவசங்களை பாதுகாப்பதற்காக பத்து ரூபாய் வீதம் அறவிடப்பட்டு வருகின்றது. இந்த புதிய வியாபார தந்திரத்தினை வைத்தியசாலையை சூழ உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் அதிர்ஸ்ட இலாப சீட்டு விற்பனை செய்பவர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.



## அநாமேதய துண்டுப்பிரசுரத்தால் அக்கரைப்பற்றில் பதற்றம்

**பைஷல் இஸ்மாயில்**

கவனம் மக்காள் கவனம் எனும் தலைப்பிலும் எமது சமூகத்தை நாமே பாதுகாக்கவேண்டும் என்ற துண்டுப் பிரசுரம் அக்கரைப்பற்று முஸ்லிம் பிரதேசம் முழுவதும் போடப்படுள்ளதால் முஸ்லிம் பிரதேசமான அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் போன்ற பிரதேசங்களுக்கு அன்றாடம் வருகை தந்து கூழித்தொழில் செய்துவருகின்ற பெருமளவிலானவர்கள் அச்சத்தினால் வருகை தரவில்லை.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கோடிஸ்வரன் எம்.பி நமது சமூகத்தை சீரழிக்க நினைக்கின்றான. மேசன்மார்களிடம் ஆயுதங்களை கொடுத்து நமது வீட்டு வளவுக்குள் வைத்து ஆமியை கொண்டு செக்பன்னி நமது சமூகத்தை கூண்டில் அடைக்க திட்டமிட்டுள்ளான். பயங்கரவாத தடை சட்டம் நீக்கும் வரை எவர்களையும் வேலைக்கு அழைக்க வேண்டாம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் எமது சமூகத்தை நாமே பாதுகாக்க வேண்டும், தமிழர்களை நம்பவேண்டாம் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

முஸ்லிம்களும், தமிழர்களும் மிக ஒற்றுமையாக ஒரு பரஸ்பர இன ஒற்றுமையை பேணிக் கொண்டு மிக நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றார்கள். இதனை சீர்குலைக்கும் நோக்கில் ஒரு சதிகாரக் கும்பள் பாரிய சதித்திட்டத்தை தீட்டி தமிழ், முஸ்லிம் மக்களிடத்தில் இருக்கின்ற இன உறவை பிரிக்க முனைகின்றனர். இதைச் செய்த சதிகாரக் கும்பலை இரு சாராரும்தான் கண்டுபிடிக்க முனையவேண்டும் என்று தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த விடயத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களாகிய நாம் மிகத் தெளிவாக இருக்கவேண்டும் என்றும் இது தொடர்பானவர்களை பொலிஸார் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி சரியான தண்டனையை பெற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் இது போன்ற விடயங்களில் ஈடுபட நினைப்பவர்களுக்கு இது ஒரு பாடமாக அமையும் என்று தமிழ், முஸ்லிம் பொதுமக்கள் மேலும் தங்களின் கருத்தினை தெரிவித்தனர்.



காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ நிறைவின் பின்னரான எட்டாம் நாள் பொங்கல் சடங்கு நிகழ்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

படம்: கரடித்தோட்ட நிருபர்




கராத்தே சர்வதேச மார்சல் ஆர்ட் சங்கத்தினால் நடாத்தப்பட்ட தரப்படுத்தல் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அச்சங்கத்தின் இலங்கை பிரதம போதனாசிரியரான முஹம்மட் இக்பாலின் தலைமையில் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது. இதன் போது போதனாசிரியர் முஹம்மட் இக்பால் சான்றிதழ்களை வழங்குவதையும், சான்றிதழ் பெற்ற மாணவர்களையும் காணலாம்.

படம்: எஸ்.அஷ்ரப்கான்

## ஆளணி பற்றாக்குறையை நிவர்த்திக்க கோரி மகஜர்

**கந்தளாய் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச சபைக்கு மிக நீண்ட காலமாக நிரப்ப படாதுள்ள ஆளணியினரை விரைவாக இணைத்துக்கொள்ளுமாறு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸினால் கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேச சபையின் அலுவலகத்தின் கீழ் ஆளணி பற்றாக்குறையாக, காரியாலய உதவியாளர்,காவலாளி,நூலகர்,நூலக பாதுகாவர் , வெளிக்கள வரி சேகரிப்பாளர்,சேவைக்கள தொழிலாளர்,மற்றும் நூலக மண்டப பராமரிப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்குமான ஆளணியினர்இல்லாததால் சபையினால் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளில் பல்வேறு கஷ்டங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இதேவேளை தேவையான ஆளணியினரின் உதவியுடன் சபையின் மக்கள் சேவையை முறையாக முன்னெடுக்கக் கூடிய வகையில் இவற்றை பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ரஷ்யாவில் 40,000 ஆண்டுகளுக்கு முந்தைய ஓநாயின் தலை கண்டெடுப்பு



ரஷ்ய நாட்டின் செர்பியாக்கு உட்பட்ட பகுதியில் யாகுடா என்ற குடியிருப்பு பகுதி உள்ளது. ஆர்ட்டிக் பனி பிரதேசத்தினை அருகாமையில் கொண்டுள்ள அப்பகுதியில் திர்குட்யாக் என்ற ஆறு பாய்கிறது. இந்நிலையில் யாகுடா பகுதியினை சேர்ந்த பவேல் என்ற நபர் திர்குட்யாக் ஆற்றின் கரையிலிருந்து பனி ஓநாயின் தலை ஒன்றினை கண்டெடுத்தார். ஓநாயின் தலை மிகவும் வித்தியாசமான உருவ அமைப்பினை கொண்டிருந்ததால் அதனை யாகுடாவில் உள்ள அறிவியல் ஆராய்சி மையத்திற்கு அப்பகுதி மக்கள் அனுப்பி வைத்தனர்.

அந்த ஓநாயின் தலையினை ஆய்வு செய்த யாகுடாவில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் அதன் வாழ்நாள் காலம் குறித்த அடுத்தகட்ட ஆய்வுக்காக ஜப்பான் மற்றும் சுவிடன் நாட்டில் உள்ள சக ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு ஓநாய் தலையின் மாதிரிகளை அனுப்பி வைத்தனர்.

ஜப்பான் மற்றும் சுவிடன் நாட்டின் ஆராச்சியாளர்கள் ஓநாயின் தலையின் மாதிரிகளை ஆராய்ந்ததில் அது சுமார் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பனி ஓநாயின் தலை என கண்டுபிடித்துள்ளனர். மேலும் பனியில் இருந்ததால் அதன் தலை பகுதி அழுகாமல் உரைந்து உள்ளதாக ஆராச்சியாளர்கள் தெரிவித்தனர். இது குறித்து பல்வேறு ஆராய்ச்சிகளை ஆய்வாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

40,000 ஆண்டுகளுக்கு முந்தைய பனி ஓநாயின் தலை ரஷ்யாவில் உள்ள ஆற்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது பல ஆராய்ச்சியாளர்களுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஜூலியன் அசாஞ்சேவை நாடு கடத்தும் வழக்கு அடுத்த ஆண்டுக்கு விசாரணை ஒத்திவைப்பு



ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஜூலியன் அசாஞ்சே (வயது 47) கடந்த 2006-ம் ஆண்டு சுவீடனில் ‘விக்கிலீக்ஸ்’ என்கிற நிறுவனத்தை தொடங்கினார். இவர் அமெரிக்க ராணுவம் குறித்த ரகசிய ஆவணங்களை தன் இணையதளத்தில் வெளியிட்டு உலகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தினார்.

இதன் மூலம் ஜூலியன் அசாஞ்சே சர்வதேச அளவில் பிரபலமான அதேவேளையில், பல நாடுகளின் எதிர்ப்பையும் சம்பாதித்தார்.

அதே சமயம் உலக அளவில் அவருக்கு பெரும் ரசிகர் பட்டாளம் உருவானது. அவர் அடுத்து எந்த நாடு குறித்த ரகசிய தகவல்களை வெளியிடுவார் என உன்னிப்பாக கவனிக்க தொடங்கினர். ஜூலியன் அசாஞ்சே மீது கடும் கோபம் கொண்டிருந்த அமெரிக்கா அவரை பலமுறை கைது செய்ய முயற்சித்தது. ஆனால் முடியவில்லை.

இதற்கிடையில், சுவீடனில் 2 பெண்களை ஜூலியன் அசாஞ்சே கற்பழித்ததாக 2010-ம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டது. ஆனால் அவர் தன் மீதான குற்றச்சாட்டை மறுத்தார்.

எனினும் அவர் கடந்த 2011-ம் ஆண்டு ஜூன் மாதம் சுவீடனில் இருந்து இங்கிலாந்துக்கு தப்பிச்சென்றார். சுவீடன் கேட்டுக்கொண்டதன் பேரில் இங்கிலாந்து போலீசார் அவரை கைது செய்தனர். எனினும் அந்நாட்டு சுப்ரீம் கோர்ட்டு அவருக்கு ஜாமீன் வழங்கியது.

இந்த வழக்கு விசாரணைக்கு பின்னர் ஜூலியன் அசாஞ்சேவை சுவீடனுக்கு நாடு கடத்த இங்கிலாந்து முடிவு செய்தது. அப்படிதான் சுவீடனிடம் ஒப்படைக்கப்பட்டால், சுவீடன் அரசு தன்னை அமெரிக்காவிடம் ஒப்படைக்கும் என்றும், அமெரிக்கா தனக்கு அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்கலாம் என்றும் அவர் அஞ்சினார்.

இதனால் அவர் 2012-ம் ஆண்டு இங்கிலாந்தில் உள்ள ஈக்குவடார் நாட்டு தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார். தனக்கு அடைக்கலம் கொடுக்கும்படி ஜூலியன் அசாஞ்சே முன்வைத்த கோரிக்கையை ஈக்குவடார் அரசு ஏற்றுக்கொண்டது. இதனால் அங்கு அவர் பாதுகாப்பான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். எனினும் ஜூலியன் அசாஞ்சே தூதரகத்தை விட்டு எப்போது வெளியே வந்தாலும் உடனடியாக கைது செய்யப்படுவார் என இங்கிலாந்து போலீசார் எச்சரித்து இருந்தனர்.

இந்த நிலையில், ஜூலியன் அசாஞ்சே சர்வதேச நெறிமுறைகளை தொடர்ந்து மீறிவருவதால் அவருக்கு அளித்து வந்த அடைக்கலத்தை திரும்பப்பெறுவதாக ஈக்குவடார் அதிபர் லெனின் மேரேனோ திடீரென அறிவித்தார்.

இதனால் அவரை கைது செய்வதற்கு இதுவரை இருந்த தடை நீங்கியது. இதையடுத்து, இங்கிலாந்து போலீசார் நேற்று ஈக்குவடார் தூதரகத்துக்குள் அதிரடியாக நுழைந்து ஜூலியன் அசாஞ்சேவை கைது செய்தனர்.

கோர்ட்டின் ஜாமீன் நிபந்தனைகளை மீறியதற்காக கடந்த 2012-ம் ஆண்டு ஜூன் மாதம் பிறப்பிக்கப்பட்ட பிடிவாரண்டின் கீழ் ஜூலியன் அசாஞ்சேவை கைது செய்ததாக இங்கிலாந்து போலீசார் தெரிவித்தனர்.

தூதரகத்தில் தஞ்சம் புகுந்த 7 ஆண்டுகளுக்கு பின் கைது செய்யப்பட்ட ஜூலியன் அசாஞ்சே ஜாமீன் நிபந்தனைகளை மீறிய குற்றத்துக்காக லண்டன் நகரில் உள்ள சவுத்வார்க் கிரவுன் கோர்ட்டில் கடந்த மாதம் ஆஜர்படுத்தப்படுத்தப்பட்டார்.

இதை தொடர்ந்து ஜூலியன் அசாஞ்சேவுக்கு 50 வாரம் சிறை தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டார். தற்போது லண்டன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜூலியன் அசாஞ்சேவுக்கு எதிரான கற்பழிப்பு வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்க ஸ்வீடன் அரசு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், ஜூலியன் அசாஞ்சேவை நாடு கடத்தும் வழக்கு தொடர்பான முழுமையான விசாரணை அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக லண்டன் ஊடகங்கள் இன்று தெரிவித்துள்ளன.

# போலி வங்கி கணக்கு மோசடியில் பாகிஸ்தான் முன்னாள் அதிபரின் சகோதரி கைது



பாகிஸ்தானின் யுனைடெட் வங்கி மற்றும் சம்மிட் வங்கிகளில் 29 போலி கணக்குகளை தொடங்கி சுமார் 15 கோடி ரூபாய் அளவில் நிதி மோசடி நடந்திருப்பது தெரிய வந்தது.

இதில் பாகிஸ்தானின் முன்னாள் அதிபரும், பாகிஸ்தான் மக்கள் கட்சி இணைத்தலைவருமான ஆசிப் அலி சர்தாரி, அவரது சகோதரி பர்யால் தல்புர் ஆகியோர் உள்பட 20 பேருக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இந்த மோசடி தொடர்பாக சம்மிட் வங்கி தலைவரும், சர்தாரியின் கூட்டாளியுமான உசேன் லவாய் கடந்த ஆண்டு ஜூலை மாதம் கைது செய்யப்பட்டார். இதைத்தொடர்ந்து இந்த விவகாரம் அங்கு பூதாகரமாக வெடித்தது.

இந்த முறைகேடு தொடர்பாக நடைபெற்று வந்த வழக்கு விசாரணையை பாகிஸ்தான் பொறுப்புடைமை நீதிமன்றம் பின்னர் ஏற்றது.

முன்னாள் அதிபர் ஆசிப் அலி சர்தாரி மற்றும் அவரது சகோதரி பர்யால் தல்புர் ஆகியோர் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டது. இவ்வழக்கு தொடர்பாக முன்னாள் அதிபர் ஆசிப் அலி சர்தாரி சமீபத்தில் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், அவரது சகோதரி பர்யால் தல்புரையும் போலீசார் இன்று கைது செய்தனர். பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவின் கணவரான ஆசிப் அலி சர்தாரி, பெனாசீர் பூட்டோ சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் கடந்த 2008 முதல் 2013-ம் ஆண்டு வரை அதிபராக பதவி வகித்தவர் என்பது நினைவிருக்கலாம்.

# அணைக்குள் ஒரு மர்மச்சுழல்!



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் இருக்கிறது பெர்ரியெஸ்ஸா ஏரி. இந்த ஏரியில் ஒரு மர்மச்சுழல் இருக்கிறது. அந்தச் சுழலின் பின்னணி என்ன?

ஒரு விபத்து எப்போதுமே ஏற்படாமல் தடுக்க இந்தச் சுழல் உதவுகிறதாம். அமெரிக்காவின் முக்கியமான நான்கு நீர்ப்பாசன ஏரிகள் அடிக்கடி நிரம்பி வெள்ள அபாயத்தை ஏற்படுத்துகின்றன. அவற்றில் பெர்ரியெஸ்ஸா ஏரி முக்கியமானது.

இந்த ஏரி திடீர் மழை காரணமாக ஆபத்தைச் சந்திக்கும் என்ற நிலையில், ஏரியின் கொள்ளளவு அபாயகட்டத்தை தொடும் நிலை ஏற்பட்டால், அணையின் மதகு வழியாக மட்டுமின்றி, கூடுதலாக ஒரு வெளியேற்றும் வழியும் உருவாக்கப்பட்டது.

அதுதான் இந்தச் சுழல். அணையின் நீர்மட்டம் குறிப்பிட்ட அளவுக்கு மேல் உயரும் போது, அதிகபட்ச நீர் இந்த வழியில் வெளியேறும். அப்புத அது மிகப்பெரிய சுழல் போல இருக்கும்.

மற்ற நாட்களில் அது ஒரு தொட்டிபோல காட்சியளிக்கும். அபூர்வமாக இந்தச் சுழல் உருவாகும். அப்போது அதைக் கண்டுரசிக்க ஏராளமானோர் கூடுவது வாடிக்கை.

# எண்ணெய் கப்பல்கள் மீதான தாக்குதலுக்கு பொறுப்பேற்க முடியாது



ஓமன் வளைகுடா பகுதியில் நார்வே மற்றும் சிங்கப்பூருக்கு சொந்தமான எண்ணெய் கப்பல்கள் மீது மர்மமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதே பகுதியில் கடந்த மே மாதம் சவுதிக்கு சொந்தமான 2 எண்ணெய் கப்பல்கள் உட்பட நான்கு எண்ணெய் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எண்ணெய் கப்பல்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதன் மூலம் உலகளவில் எண்ணெய் விலை கிடுகிடுவென உயர்ந்தது.

இதுகுறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமெரிக்கா தெரிவித்திருந்த நிலையில், ஓமன் வளைகுடாவில் எண்ணெய் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈரான் நாட்டு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவு துறை மந்திரி மைக் பாம்பியோ குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், அமெரிக்காவின் இந்த குற்றச்சாட்டிற்கு ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது. மேலும் அடிப்படை ஆதாரங்கள் ஏதுமின்றி அமெரிக்கா, தங்கள் மீது குற்றம் சாட்டுவதாக ஈரான் கூறியுள்ளது.

# தொகுதிக்கு பணம் தரமறுத்ததால் பெண் எம்.பி.க்கு கன்னத்தில் அறை



கென்யாவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது தொகுதிக்கு பணம் ஒதுக்காததால் சக பெண் எம்.பியை அறைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரஷித் காசிம் என்ற அந்த எம்.பி, தலைநகர் நைரோபியில் அமைந்துள்ள பட்ஜெட் கமிட்டியை சேர்ந்த ஃபதுமா கெடியை அறைந்ததாக கூறப்படுகிறது.

கெடி, வாயில் ரத்தத்துடன் அழுவது போன்ற புகைப்படம் டிவிட்டரில் பகிரப்பட்டு வருகிறது.

இதுகுறித்து நாடாளுமன்றத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் எம்.பிக்களை ஆண் எம்.பிக்கள் கேலி செய்ததால் அவர்கள் நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

வட கிழக்கு கென்யாவில் உள்ள வாஜிர் கிழக்கு பகுதியின் எம்.பியான காசிம், நாடாளுமன்ற கார் நிறுத்தத்தில் வைத்து கெடியுடன் தனது தகுதிக்கு பணம் தராதது குறித்து சண்டையிட்டு பின் அவரை தாக்கியதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவத்துக்கு பிறகு நாடாளுமன்றத்தில் உள்ள ஆண் எம்.பிக்கள் பெண் எம்.பிக்களை கேலி செய்ததாக நாடாளுமன்ற உறுப்பினரான சபினா வஞ்ஜிரு ஷெக் பிபிசியிடம் தெரிவித்தார்.

சில ஆண் எம்பிக்கள் எங்களை கேலி செய்து, இது அறை வாங்கும் தினம் என தெரிவித்தனர். என்று ஷெக் தெரிவித்தார்.

மேலும் பெண்கள் ஒழுங்காக நடந்து கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும் என்றும், ஆண்களை எவ்வாறு நடத்துவது என பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் ஆண் எம்பிக்கள் தெரிவித்ததாக அவர் கூறுகிறார்.

இந்த சம்பவம் தொடர்பாக காசிம் கைது செய்யப்பட வேண்டும் என்று போராடிய பெண் எம்பிக்கள் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறினர். பின்னர் காசிம் கைது செய்யப்பட்டார்.

நாங்களும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தாம் நாங்கள் யாருக்கும் குறைந்தவர்கள் இல்லை.என ஷெக் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக காசிம் எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்கவில்லை.

# பிரசவம் நடந்த 30 நிமிடங்களில் மருத்துவமனையில் தேர்வு எழுதிய பெண்



எத்தியோப்பியாவில் உள்ள ஓர் ஆண் குழந்தையை பிரசவித்த அரை மணி நேரத்துக்கு பின் மருத்துவமனை படுக்கையிலேயே தனது தேர்வுகளை எழுதியுள்ளார்.

21 வயதாகும் அல்மாஸ் டெரீஸ் மேற்கு எத்தியோப்பியாவைச் சேர்ந்தவர். கர்ப்பிணியாக இருந்தபோது பிரசவம் நடப்பதற்கு முன்னரே தேர்வுகளை முடித்து விட தீர்மானித்திருந்தார். ஆனால் ரம்ஜான் காரணமாக அவரது உயர்நிலைப் பள்ளித் தேர்வுகள் தள்ளி வைக்கப்பட்டது.

திங்கள் கிழமையன்று அவருக்கு தேர்வுகள் நடப்பதற்கு முன்பு பிரசவ வலி ஏற்பட்டது. குழந்தையைப் பெற்றெடுத்தப் பின் அவர் தனது தேர்வுகளை எழுதினர்.

கர்ப்பிணியாக இருக்கும்போது படிப்பது ஒன்றும் பிரச்சனையாக இருக்கவில்லை. அடுத்த ஆண்டு வரை நான் தேர்ச்சி பெற காத்திருக்க விரும்பவில்லை என்றார்.

ஆங்கிலம், அம்ஹாரிக், கணிதம் உள்ளிட்ட தேர்வுகளை திங்கள் கிழமையன்று மருத்துவமனையில் எழுதினர். அடுத்த இரண்டு நாள்களில் நடக்கும் தேர்வுகளை அவர் தேர்வு மையத்துக்குச் சென்று எழுதவுள்ளார்.

எனக்கு பிரசவம் ஒன்றும் அவ்வளவு கடினமான இருக்கவில்லை ஆகையால் நான் அவசரமாக பரீட்சை எழுத உட்கார்ந்தேன் என பிபிசியிடம் அவர் தெரிவித்தார்.

மருத்துவமனையில் தனது மனைவியை தேர்வு எழுதுவதற்கு அவர் படித்த பள்ளியை இணங்கச் செய்ததாக அல்மாசின் கணவர் தடீஸ் துலு தெரிவித்தார்.

எத்தியோப்பியாவில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை இடையில் கைவிட்டுவிட்டு பின்னர் படிப்பை முடிப்பது அங்குள்ள பள்ளி மாணவிகளிடம் பரவலாக காணப்படும் விஷயம்.

அல்மாஸ் தற்போது கல்லூரியில் சேர்வதற்கான இரண்டு வருட படிப்பை முடிக்க வேண்டும் என விரும்புகிறார். அல்மாஸ், தேர்வுகளை சிறப்பாக எழுதியிருப்பதாகவும் தனது ஆண் குழந்தை நன்றாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# 30 இலட்சத்திற்கு ஏலம் போன துரியன் பழம்



முன்னெப்போதும் இல்லாத வகையில், தாய்லாந்தில் நடைபெற்ற ஏலத்தில், பழங்களின் அரசன் என்றழைக்கப்படும் துரியன் பழம் இந்திய மதிப்பில் சுமார் 33 லட்சம் ரூபாய்க்கு விலைபோயுள்ளது.

ஒரு சிலருக்கு பழங்களின் அரசனாக இருக்கும் துரியன் பழங்கள், பிறருக்கு நினைத்து பார்க்கமுடியாத அளவுக்கு அதிக துர்நாற்றத்தை வெளிப்படுத்தும் பழமாக இருக்கிறது.

உலகின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடுகையில் ஆசிய நாடுகளில் போட்டி மிக்க சந்தையை கொண்டுள்ள துரியன் பழங்கள், பொதுப் போக்குவரத்து, உணவகங்கள் மற்றும் சில நாடுகளில் விமானங்களில் எடுத்து செல்வதற்கும் தடை செய்யப்பட்ட ஒன்றாகும்.

சமீபத்தில் தாய்லாந்தில் நடைபெற்ற ‘கிங் ஆஃப் துரியன் பெஸ்டிவல்’எனும் நிகழ்வின் ஒருபகுதியாக நடத்தப்பட்ட ஏலத்தில், மரத்திலிருந்து பறிக்கப்பட்டு ஒரே நாளான இந்த துரியன் பழம் இந்திய மதிப்பில் சுமார் 33 லட்சம் ரூபாய்க்கு விலைபோயுள்ளது.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
ஞாயிற்றுக்கிழமை 16.06.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

# தமிழ் மக்களின் இலட்சிய கனவுகள்

இலங்கையின் பேரினவாத அரசியல் கட்சிகளின் நகர்வுகளை நோக்கின் தற்போது இங்கு ஓர் அரசியல்ரீதியான கொள்கையற்ற போக்குகளே காணப்படுகின்றன. ஐக்கிய தேசிய கட்சியின் சில ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமைகளும் சேர்ந்து உருவாக்கிய நல்லாட்சி என்ற ஆளும் கட்சி காணப்பட்டாலும் அதோடு ஒத்தோடியும் சில சுயநல அரசியல் தேவைகளுக்காக எதிர்த்தும் செயற்படும் பொது எதிரணியினர் ஏன் பாராளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஆளும் கட்சியின் அடிவருடிகளாகவே உள்ளனர். பார்க்கப்போனால் நல்லாட்சியும் ஒரே அரசியல் பயணத்தில் நகர்ந்தாலும் நல்ல திட்டத்தை செயற்படுத்த முடியாத நிலைப்பாடு காணப்படுகின்றது. அது தமிழர் விவகாரம் மட்டும் அல்ல நாட்டின் பொது அபிவிருத்திகளின் கூட ஒன்றிணைந்து செயற்படுவதற்கு அரசியல் கட்சிகள் தயாராகவில்லை. ஆனால் வெளித்தோற்றப்பாட்டில் ஒரே பாதையிலே அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன.

இலங்கை தமிழர் விவகாரத்திற்கு நிரந்தர தீர்வை பெற்றுத் தருவதை பேரினவாத அரசியல் கட்சிகள் இடையே மாறுப்பட்ட தளம்பல்களே காணப்படுகின்றன. அரசியல் கைதிகள் விவகாரமாக இருந்தாலும், தமிழர்களுக்கு தேவையானது சமஷ்டியா?, ஒருமித்த நாடுதானா என்பதில் கூட பேரினவாத கட்சிகள் தமது சுயநல அரசியல் போக்கிலேயே செயற்படுகின்றன. அதே நிலையில் ஆளும் கட்சிக்கு தம் ஆதரவை தெரிவித்த போக்கிலே தமிழ் தேசிய கூட்டமைப்பில் அரசியல் பயணமும் அமைக்கின்றன. தமிழ் தேசிய கூட்டமைப்பினரும், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் பயணமும், ஒரே பாதையில் தான் நகர்க்கின்றது. இதிலிருந்து சரியான ஜனநாயக போக்குடைய மக்கள் ஜனநாயக அரசியலை இலங்கையின் நிகழ்கால அரசியல் தளத்தில் காண்பது அரிது என்றே கூறலாம். ஆகவே இலங்கையின் பேரினவாத அரசியலின் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு என்பது கடினமான பாதையாகும். இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பினுள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அதைவிட பெரும் குழப்பம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் விடுவிக்கப்படவில்லை அரசியல் கைதிகளின் மனிதாபிமான தேவைகள் நிறைவேற்றப்படவில்லை.இன்று தமிழகத்தின் அரசியல் போலவே குழப்ப அரசியல் ஆகவே இலங்கை தமிழரின் கட்சி அரசியலும் காணப்படுகின்றது.

தமிழ் தேசிய அரசியல் ஒரு இலட்சிய பாதையில் இயங்கவேண்டும். தந்தை செல்வா போன்ற மகான்களால் உருவாக்கப்பட்ட இலட்சிய பாதை பல மாவீரர்களின் இலட்சிய கனவு. தமிழ் தேசிய அரசியலை குழப்பிய குட்டையாக்கிய அதில் நல்ல மீன் பிடிக்க எத்தனிக்கும் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு தமிழ் மக்கள் தேர்தல்களில் நல்ல பாடம் புகட்டுவார்கள். தமிழ் தேசிய அரசியலை சிங்கள பேரினவாதத்தின் சூழ்ச்சிகளில் இருந்து முழுமையாக விடுபட்டு செயற்பட வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சியாகட்டும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாகட்டும் எவ்வாறு குழப்பிய அரசியல் பாதையில் நகர்ந்தாலும் தமிழர்களுக்காக எள்ளளவும் விட்டு கொடுக்க போவதில்லை என்பதை உணரவேண்டும். தமிழ் தேசிய அரசியல் தெளிந்த நீரோடையாக நகரும் போதும் தான் தமிழ் மக்களின் இலட்சிய கனவுகள் நனவாகும்.

# மலையக தேசியத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்

**கடந்தவாரத் தொடர்ச்சி**

மலையகம் என்ற கருத்துருவாக்கமும் மலையக தேசிய அரசியல் வேட்கையும் மரபு ரீதியான தொழிற் சங்கங்களில் இருந்து வெளிவர நியாயம் இல்லை. மலையக தேசியம் பற்றிய கருத்துருவாக்கமும் ஆரம்ப சமூக ரீதியான செயற்பாடுகளும் மலையகத்தில் கற்ற முற்போக்கு சக்திகளிடம் இருந்து வெளிப்பட்டன. இர. சிவலிங்கம் தலைமையில் 1967 இல் ஆரம்பிக்கப்பட்ட மலையக இளைஞர் முன்னணி, 1968 இல் வி.எல். பெரேரா, சக்தி பாலையா ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்ட மலையக இளைஞர் பேரவை, தொடர்ந்து எழுபதுகளின் நடுப்பகுதியில் எல். சாந்திகுமார், எம்.எஸ். கந்தையா ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட மலையக மக்கள் இயக்கம், பீ. ஏ. காதர், வீ. டீ. தர்மலிங்கம், ஏ.லோரன்ஸ், எஸ். தேவசிகாமணி ஆகியோரின் முன்னெடுப்பில் உருவான மலையக வெகுசன இயக்கம், வீ. புத்தரசிகாமணி, திவ்யநாதன், நேருஜி இணைந்து ஏற்படுத்திய மலையக ஐக்கிய முன்னணி, 1989 பெப்ரவரியில் பீ. சந்திரசேகரன், பீ.ஏ. காதர், வீ. டி. தர்மலிங்கம், ஏ.லோரன்ஸ், சரத் ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்ட மலையக மக்கள் முன்னணி என இந்த தொடர்ச்சி ஓர் தேசிய இன அரசியல் பாதையில் பயணித்து வந்துள்ளதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

இப்பின்னணியில் மலையக தேசியம் என்ற விடயம் மலையகத் தேசிய அரசியலில் மாற்று அரசியலாக முன்னிலைபெற ஆரம்பிக்கிறது. இது இ.தொ.கா. மலையகத்தில் முன்னெடுத்த தொழிற்சங்க வாதத்திற்கு மாற்றாக மலையக மக்களை அரசியல் மயப்படுத்த வேண்டும் என்ற அரசியல் பிரக்ஞையின் வெளிப்பாடு என்று குறிப்பிடலாம்.

இந்த அரசியல் வெளிப்பாட்டிற்கு இறுதியில் மலையக மக்கள் முன்னணியே தலைமை தாங்கியது. மலையக மக்கள் முன்னணி இ.தொ.கா. விலிருந்து வெளியேறியவர்களினால் தோற்றுவிக்கப்பட்டதாகும். மலையக மக்கள் முன்னணியை தோற்றுவித்து அதன் அப்போதைய தலைவர் பெ. சந்திரசேகரன் ஆற்றிய உரை பின்வருமாறு அமைந்திருந்தது.

சிறுபான்மை மக்கள் தங்கள் உரிமையைப் பெற்றுக் கொள்வது என்பது ஐக்கியப்பட்ட போராட்டத்தினால் தான் முடியும். இதைக் கடந்த கால உலக வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன. அரசாங்கத்தோடு தோழமை கொள்வதாலோ அவர்களை தாஜா பண்ணுவதாலோ அல்லது அரசாங்கத்திலுள்ள தனிப்பட்ட ஒரு சிலரின் நட்பைப் பயன்படுத்துவதாலோ தான் எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதில்லை. நம் மீது பச்சாதாபப்பட்டோ இரக்கப்பட்டோ வழங்கப்படும் உரிமைகள் நிலைக்க முடியாது. எமது பிரச்சினைகளும் தீரப்போவதில்லை. அப்படி நட்போடு கூடிக்குலாவிய மலையக அமைப்புகள் கூட இன்று 13 வருடங்களுக்குப் பின் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகவே கூறிக் கொள்கின்றார்கள்.

இக் கூற்று மலையகத்தில் ஒரு மாற்று அரசியல் அதாவது இணக்க அரசியலுக்கு மாற்றாக மலையக மக்களின் உரிமைகளை முன்னிறுத்திய எதிர்ப்பு அரசியல் கூறுகளுடன் வெளிப்பட்டது. எனினும் மலையக தேசியம், மலையக தேசிய அரசியலை முன்னெடுப்பதற்கு ஏற்ற மூலோபாயங்களை மலையக மக்கள் கொண்டிருக்கவில்லை என்பதை 1994 ஆம் ஆண்டு தொடங்கிய இணக்க அரசியல் இன்று பாராளுமன்ற வாதத்திற்குள் முழுமையாக அடங்கிப் போயிருப்பதில் இருந்து வெளிப்படுகிறது. இன்று மலையக மக்கள் முன்னணி மலையக தேசியம் தொடர்பாக வரையறுத்த அளவில் பேசி வருகின்றபோதும் அது முழுமையாக தேசிய அரசியலுக்கான உள்ளடக்கத்தை இழந்த நிலையிலேயே உள்ளது.

எனினும் இ. தம்பையா, இமையவரம்பன், சி. கா. செந்திவேல் போன்றவர்கள் மலையக தேசியத்தின் குறும்பார்வையை விமர்சித்து வெகுஜன அரசியல் ஊடாக ஒடுக்கப்பட்ட ஏனைய தேசிய இனங்களுடனும் சிங்கள உழைக்கும் மக்களுடனும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கரத்தினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

புதிய ஜனநாயக கட்சி என்ற கட்சியானது இந்தக் கருத்தை தேசிய இனப் பிரச்சினைக்கான தனது தீர்வுத் திட்டத்தில் முன்வைத்துள்ளது. எனினும் இந்த அமைப்பு வெகுஜன போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற போதும் மலையகத்தில் அரசியலில் தீர்க்கமான சக்தியாக இல்லாமை கவனிக்கத்தக்கது.

## தொழிற் சங்கவாதம், தேசியவாதம் மற்றும் பாராளுமன்ற வாதம்

### 1993 இல் இருந்து இன்று வரை


பாராளுமன்ற அரசியலுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருந்த இ.தொ.கா. 1994 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலும் அங்கம் வகித்து பாராளுமன்ற வாதத்தின் அடுத்த எல்லையான அபிவிருத்தி அரசியல் வரை சென்றுள்ளது.

இதனூடாக சமரச அரசியல், அபிவிருத்தி அரசியல் என்பதனை மக்களை அணித் திரட்டுவதற்கான மூலோபாயமாக கொண்டுள்ளது. இது மாகாண சபை, உள்ளூராட்சி சபைகள் வரையில் நீட்சி பெற்று தொடர்கிறது.

1988 ஆம் ஆண்டு குடியுரிமை பிரச்சினைத் தீர்க்கப்படும் வரை மலையகத்தில் தொழிற்சங்கவாதம் முதன்மையான அரசியல் கூறாக இருந்த நிலையில் அதனை மையப்படுத்திய மலையக அரசியல் கட்டமைக்கப்பட்டிருந்தது. தொழிற்சங்கவாதம் மலையக மக்களின் உரிமைகளையும் அபிலாடிகளையும் உள்வாங்க முடியாத நிலையில் இருந்த போது மலையக மக்களை தொழிற்சங்கவாதத்தில் இருந்து நீக்கிய மலையக தேசியம் சார்ந்த அரசியல் முன்னெடுப்புக்கான தேவை மலையக மக்களுக்கு இருந்தது. இதற்கு மலையக மக்கள் முன்னணி தலைமை தாங்கிய போதும் ஏற்கனவே குறிப்பிட்டது போல அதுவும் பாராளுமன்ற வாதத்தில் சங்கமித்தமையின் காரணமாக இன்று தோல்வி கண்டுள்ளது.

தமது வாக்குரிமை மீட்பினால் மலையக மக்கள் பெற்றுக் கொண்டுள்ள அரசியல் பலம் வெகுஜன அரசியலுக்கு பங்களிக்கும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் மலையக தொழிற் சங்கங்கள் தொழிற் சங்க வாதத்தில் இருந்து தொழிற் சங்க சீரழிவு நிலைக்கு போய் மக்களை மேலும் மலினப்படுத்தியுள்ளன. இது மலையகத் தோட்டத் தொழிலாளர்களை தொழிற் சங்கங்கள் மீதும் வெகுஜன அரசியல் மீதும் எவ்வித நம்பிக்கையும் அற்றவர்களாக மாற்றியுள்ளதுடன் பாராளுமன்ற அரசியலின் தயவில் தமது உரிமைகளை தலைவர்கள் நிலைநாட்டும் வரை காத்திருக்கும் ஒரு அமைதி அரசியல் காலசாரம் நிலவும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இன்று தொழிற் சங்கவாதம் மிகவும் பலவீனப்பட்டு போயுள்ளமையினால் தனியார்மயமாக்கப்பட்டுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளைத் தோட்டத் தொழிலாளர்கள் மீதான பொருளாதார சுரண்டலுக்கு (உழைப்புச் சுரண்டலை) எதிராக போராடும் பண்பையும் மக்கள் இழந்துள்ளனர்.



மரபு ரீதியான தொழிற் சங்கங்களும் உருவாகின்ற புதிய தொழிற் சங்கங்களும் தொழிற் சங்கவாதத்தையும் உள்ளடக்கத்தில் போதாமைகளுடனான மலையக தேசியத்தையும் வைத்துக் கொண்டு அரசியல் நடத்தி வருகின்றனர். இவர்கள் அனைவரும் வெகுஜன அரசியல் பாதையை முன்னெடுப்பதில் தயக்கம் காட்டி வருகின்றமையும் மக்கள் மீது சலுகை அரசியலைத் திணிக்கும் போக்கினையும் கொண்டிருக்கின்றன.

தொழிற்சங்கவாதத்திற்குப் பின்னதான பாராளுமன்ற வாதம், தொழிற் சங்கவாதத்தைப் போலவே மலையகத்தில் வெகுஜன அரசியலையும் ஏனைய ஒடுக்கப்படும் தேசிய இன மக்களுடன் ஒற்றுமைப்பட்டு போராடும் பண்பாட்டையும், சிங்கள தொழிலாளர்களுடன் இணைந்து அரசியல் செய்யும் பண்பாட்டையும் முற்றாக தகர்த்துள்ளது.

அத்துடன் மக்கள் மீதான அநீதிகளுக்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் மீறல்களுக்கும் எதிராக குரல் கொடுக்கும் பரந்த அரசியல் அணுகுமுறையையும் இழந்து நிற்கின்றது.

இது மலையக மக்களை வரலாற்று ரீதியாக தேசிய நீரோட்ட அரசியலில் சங்கமிப்பதை தவிர்த்து வந்த பேரினவாத அரசாங்கங்களின் போக்கிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒத்தாசை வழங்குகின்ற போக்கிற்கும் தேர்தல் கால குறுந்தேசிய வாதத்திற்கும் மலையக இனவாதத்திற்கும் வழிவகுத்துள்ளது.

இப் பின்னணியில் மலையக அரசியல் மலையக மக்கள் மீதான தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் நிலையை கொண்டிருக்கவில்லை.

அத்துடன் தொழிலாளர்கள், பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள், மாணவர்கள், முதியவர்கள் என்று ஒட்டுமொத்த மலையக சமூகமும் முகம் கொடுக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகளை வழங்க முடியாத நிலையிலேயே மலையக பாராளுமன்றவாத அரசியல் பயணிக்கிறது. இது ஒரு அரசியல் நெருக்கடி என்ற போதும் மலையகத்தில் சலுகை அரசியலின் ஊடான அரசியல் மேலாண்மை பேணப்படுகிறது.

**இன்றைய மலையகமு எதிர்கால மலையகமும்**

இலங்கையில் அரை அடிமை தொழிலாளர்களாகவும் பின்னர் கூலித் தொழிலாளர்களாகவும் மலையக மக்கள் இலங்கையின் முதலாளித்துவ பொருளாதார முறைக்கு தேவையான மூலதனத் திரட்சியை உருவாக்குவதற்குப் பங்களித்துள்ளனர். 1970 கள் வரை இலங்கையின் பொருளாதாரம் பெருந்தோட்டப் பொருளாதாரத்தில் தங்கி இருந்தது. இவ்வாறான பங்களிப்பை மலையக மக்கள் வழங்கிய போதும் அவர்களின் உரிமைகள் இலங்கை அரசாங்கங்களினால் பறிக்கப்பட்டு அவர்களை திட்டமிட்ட ஒடுக்குமுறைக்கு உட்படுத்தி வந்தனர். காலனித்துவ காலத்தில் இருந்து இன்று வரையும் மிதமிஞ்சிய சுரண்டலுக்கு உட்படுவதை உறுதி செய்த அதேவேளை அரசியல் சமூக உரிமைகளையும் மறுத்து ஓரங்கட்டப்பட்டமையின் விளைவு இலங்கையின் ஏனைய இனப்பிரஜைகளைவிட சமூக, பொருளாதார, அடைவுகளில் இவர்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கின்றனர்.

**நக்கீரர்**

மலையகத்தில் நிலவிய தொழிற்சங்க அரசியல், பாராளுமன்ற அரசியல், அரசாங்கத்துடனான அபிவிருத்தி அரசியல் என்ற அத்தனை அரசியலும் அதற்கு தலைமை தாங்கிய, தாங்கி வருகின்ற தலைவர்களும் மலையகத்தில் உள்ள ஒரு இனப் பிரஜையின் முகவரி, வீடு, காணி உரிமைகளையேனும் இதுவரை பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் நாட் சம்பளத்திற்கு பணிபுரிகின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கான கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வீட்டு வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன. அவர்களது வாழ்க்கைத் தரம் நாட்டின் ஏனைய பொது மக்களது வாழ்க்கைத் தரத்தையும் விட கீழ் மட்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. சுகாதார வசதிகள் வாழ்வதற்குத் தகுதியற்ற முறையில் காணப்படுவதோடு, கால சாரம் மற்றும் வாழ்க்கை முறை மாத்திரமன்றி, குடும்ப உறவுகளைக் கூட நெருக்கடிக்குள் தள்ளும் லைன் காம்பரா எனும் குடியிருப்புக்குள்ளேயே வைக்கப்பட்டுள்ளனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு மத்தியில் வறுமை வீதம் 32% ஆக இருப்பதோடு முழு இலங்கையினதும் வறுமை வீதம் 15.2% க்கும் குறைவாக உள்ளது. தோட்ட மக்கள் தொகையில் 49.2% நாளொன்றுக்குத் தேவையான கலோரி, தேவையான அளவு கிடைக்காததோடு அதன் விளைவாக தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த பெண்களின் ஆரோக்கியம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பிறந்து 28 நாட்களுக்குள் மரணிக்கும் குழந்தைகளின் விகிதாசாரம் நாட்டின் பொதுவான வீத ஆயிரத்துக்கு 13.9 ஆக இருக்கும் போது தோட்டப் பகுதிகளில் அது 31 ஆக இருக்கிறது. 5 வயதுக்கும் குறைவான பிள்ளைகளின் மரண விகிதாசாரம் ஆயிரத்துக்கு 51.6% தோட்டப் பகுதிகளில் பிறக்கும் பிள்ளைகளின் வளர்ச்சிக்குன்றல் நகர்ப்புற பிள்ளைகளைவிட மூன்று மடங்காகும். இன்று மலையக மக்கள் தோட்ட வைத்தியசாலையை நம்பி இருக்கின்ற நிலையில் அவைகளின் சேவை மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளன. 1970 களில் பின்னர் படிப்படியாக அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட தோட்டப் பாடசாலைகளின் கல்வித் தரம் மற்றும் வளங்கள் விநியோகம் நாட்டின் தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது. பாடசாலை இடைவிலகல் முக்கியப் பிரச்சினையாக உள்ளது. 5 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாடசாலையை விட்டு வெளியேறும் பிள்ளைகளின் விகிதாசாரம் 8.4%ஆகும். கிராமம் மற்றும் நகரத்தைக் காட்டிலும் மிகவும் பின்தங்கிய சமூக, பொருளாதார நிலைமைகளிலேயே மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.மலையகத்தின் எதிர்கால அரசியல் இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதை மையமாக் கொண்டு இனப் பிரஜைகள் என்ற அடையாளத்தைக் கடந்து தேசிய பிரஜைகள் என்ற நிலைக்குச் செல்லவேண்டும்.

# கிழக்கில் சிந்திய இரத்தங்கள்

## 03

# பாரம்பரிய மீனோடைக்கட்டு தமிழ் கிராமம் பறிபோன கதை!

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உட்பட்டிருந்த தென்கிழக்கு பிரதேசங்களை பிரித்து பதுளை மொனராகல பகுதிகளில் உள்ள சில பகுதிகளையும் இணைத்து அம்பாறை மாவட்டம் 1961ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி உருவாக்கப்பட்டது. கல்லோயா திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தில் சிங்கள குடியேற்றங்கள் செய்யப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்களின் சனத்தொகை வீதமும் அதிகரிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்துடன் இருந்த கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளுடன் அம்பாறை தொகுதியையும் இணைந்து திகாமடுல்ல என்ற பெயரில் அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர்களை பெரும்பான்மையாக கொண்ட சேருவில தேர்தல் தொகுதி அமைக்கப்பட்டது போல அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்களை பெரும்பான்மையாக கொண்ட அம்பாறை தேர்தல் தொகுதியும் உருவாக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் ஒரு புறம் சிங்கள குடியேற்றங்கள் செய்யப்பட்ட சமகாலத்தில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த கிராமங்களிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றி விட்டு அக்கிராமங்களை முஸ்லீம்கள் ஆக்கிரமித்து கொண்டனர்.

காலத்திற்கு காலம் தமிழர்கள் மீது முஸ்லீம்கள் தாக்குதல்களை நடத்தியதால் தமிழ் மக்கள் தங்கள் பூர்வீக கிராமங்களிலிருந்து வெளியேற வேண்டிய அவலநிலை ஏற்பட்டது. யுத்தத்தை பயன்படுத்தி சிறிலங்கா படைகளின் துணையுடன் தமிழ் மக்களை வெளியேற்றுவதில் முஸ்லீம் அரசியல்வாதிகள் முனைப்புடன் செயற்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் பரம்பரையாகத் தமிழர்கள் வாழ்ந்து சூறையாடப்பட்டு இன்று சிதைவுக்குள்ளான கிராமங்களாக பாலமுனை, பாணமை, திராய்கேணி, மீனோடைக்கட்டு, ஒலுவில், நிந்தவூர் அட்டப்பள்ளம், சம்மாந்துறை, கரவாகு, தீகவாவி, மாந்தோட்டம், கொண்டாவெட்டுவான், செம்மணிக்குளம், தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம் சவளக்கடை, சொறிக்கல்முனை, மீராச்சோலை என தமிழ் கிராமங்களின் பட்டியல் நீண்டு செல்கிறது.




தமிழர்கள் வாழ்ந்தமைக்கான சுவடுகள் துடைத்தழிக்கப்பட்டு இக்கிராமங்கள் இன்று முஸ்லிம் கிராமங்களாக மாறியுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் நூறு வீதம் தமிழ் மக்கள் வாழ்ந்த கிராமங்களில் ஒன்று மீனோடைக்கட்டு. இன்று அவர்கள் முற்றாக துரத்தியடிக்கப்பட்டு அக்கிராமம் இன்று நூறு வீதம் முஸ்லீம் கிராமமாக மாற்றப்பட்டிருக்கிறது.

இக்கிராமம் மட்டக்களப்பு பொத்துவில் வீதியில் திராய்கேணிக்கும் பாலமுனைக்கும் இடையில் அமைந்துள்ளது.

1982ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருக்கோவிலுக்கு செல்லும் வழியில் மீனோடைக்கட்டு கிராமத்தில் தரித்து சென்ற ஞாபகம். அப்போது அக்கிராமத்தில் முழுமையாக தமிழ் மக்களே வாழ்ந்து வந்தனர். மீனோடைக்கட்டு அரசினர் தமிழ் வித்தியாலயம் என்ற பாடசாலையும் சைவக் கோவிலும் இருந்தன. மிகவும் அழகான வளம் நிறைந்த கிராமம். அம்பாறை மாவட்டத்தில் பழமைவாய்ந்த தமிழ் கிராமங்களில் மீனோடைக்கட்டு கிராமமும் ஒன்றாகும்.



**சிரேஷ்ட ஊடகவியலாளரும் முன்னாள் தமிழ்ப்பத்திரிகை ஒன்றியத் தலைவருமான**
**இரா.துரைரத்தினம்**

மீனோடைக்கட்டு கிராமத்தை ஆக்கிரமிக்க முற்பட்ட அயல்கிராமங்களில் வாழ்ந்த முஸ்லீம்கள் தமிழ் மக்கள் மீது நெருக்குதல்களையும் தாக்குதல்களையும் 1978ஆம் ஆண்டிலிருந்து மேற்கொண்டு வந்தனர்.

முஸ்லீம்களின் அச்சுறுத்தல் காரணமாக தமது உயிரை பாதுகாத்து கொள்வதற்காக தமிழ் மக்கள் இக்கிராமத்திலிருந்து இடம்பெயர தொடங்கினர் என்றும் இடம்பெயர்ந்தவர்களின் காணிகளை முஸ்லீம்கள் ஆக்கிரமித்து கொண்டனர் என்றும் சில காணிகளை முஸ்லீம்கள் பணம் கொடுத்து வாங்கினர் என்றும் அழிக்கப்பட்ட தமிழ் கிராமங்கள் என்ற நூலில் எஸ்.ஜெயானந்தமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தாம் அக்கிராமத்தில் வாழ முடியாது என்ற நிலை வந்த போது தமது வீடுவாசல்களை முஸ்லீம்களுக்கு விற்பதை தவிர வேறு வழி இருக்கவில்லை என அக்கிராமத்திலிருந்து வெளியேறிய தமிழ் மக்கள் கூறுகின்றனர்.

அச்சுறுத்தல் காரணமாக பலர் வெளியேறியதால் தமது பூர்வீககிராமத்திலேயே வாழ வேண்டும் என உறுதியுடன் இருந்தவர்களும் அச்சம் காரணமாக வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

1984ஆம் ஆண்டுக்கு பின் விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் முஸ்லீம்கள் அக்கிராமத்தில் இருந்த தமிழ் மக்களுக்கு நெருக்குதல்களை கொடுத்தனர்.

இதனால் 1985ஆம் ஆண்டில் இக்கிராமத்திலிருந்து தமிழ் மக்கள் முற்றாக வெளியேறினர்.

300க்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் வசித்த இக்கிராமத்தில் இன்று ஒரு தமிழ் குடும்பங்கள் கூட இல்லை.

தமிழ் மக்களின் வெளியேற்றத்தை தொடர்ந்து அங்கு பாலமுனை ஒலுவில் உட்பட வேறு கிராமங்களை சேர்ந்த முஸ்லீம்கள் மீனோடைக்கட்டு கிராமத்தில் குடியேறினர்.

மீனோடைக்கட்டு தமிழ் கலவன் பாடசாலை மீனோடைக்கட்டு டாக்டர் ஜமால்டீன் முஸ்லீம் வித்தியாலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அங்கிருந்த சைவக்கோவில்கள் இடிக்கப்பட்டு இருந்த அடையாளமே தெரியாமல் மாற்றப்பட்டிருக்கிறது. ஆலயங்கள் இருந்த இடங்களில் இப்போது முஸ்லீம்களுக்கு சொந்தமான கட்டிடங்கள் காணப்படுகின்றன.

மீனோடைக்கட்டிலிருந்து வெளியேறியவர்களில் கணிசமானவர்கள் அயல்கிராமமான திராய்க்கேணியில் குடியேறினர். ஏனையவர்கள் வெவ்வேறு இடங்களில் குடியேறினர்.

மீனோடைக்கட்டை தொடர்ந்து திராய்க்கேணியில் வாழ்ந்த தமிழ் மக்களையும் வெளியேற்றும் சதி முயற்சிகளில் முஸ்லீம் அரசியல்வாதிகள் ஈடுபட்டனர். அதற்கு துணையாக முஸ்லீம் பொது மக்களும் செயற்பட்டனர்.

தர்மரட்ணம் வன்னியனாரின் தென்னம் தோட்டம் இருந்த காணியில் 1954ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குடியேற்ற கிராமமே திராய்க்கேணி கிராமமாகும்.

மறைந்த ஊடகவியலாளர் டி.சிவராமின் பேரனான தர்மரட்ணம் வன்னியனாருக்கு ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி பகுதிகளில் பெருந்தொகையான காணிகள் இருந்தன. இந்த காணிகளில் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் குடியேற்றப்பட்டனர்.

ஒலுவில் துறைமுகம், மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு சுவீகரிக்கப்பட்ட காணிகளில் பெரும்பகுதி தர்மரட்ணம் வன்னியனாருக்கு சொந்தமானதாகும்.

திராய்க்கேணிக்கு கிழக்குப் பக்கத்தில் ஒலுவில் கிராமமும் தெற்குப் பக்கத்தில் பாலமுனையும் அமைந்துள்ளது. இக்கிராமம் பொத்துவில் தொகுதியில் உள்ள அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் திராய்க்கேணி கிராமத்தில் சுமார் 350 குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர்.

முஸ்லீம் அரசியல்வாதிகளும் பாலமுனை ஒலுவில் கிராம முஸ்லீம்களும் திராய்க்கேணியில் வாழ்ந்த தமிழ் மக்களை வெளியேற்றும் நோக்குடன் 1985ஆம் ஆண்டில் கலவரங்களை உருவாக்கினர். விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் தமிழர்கள் மீது முஸ்லீம்கள் தாக்குதல்களை நடத்தினர்.

இரவோடு இரவாக தமிழர்களின் வீடுகளுக்கு முஸ்லீம்கள் தீவைத்தனர். தமிழர்கள் மீது முஸ்லீம்கள் தாக்குதல் நடத்தினர். விசேட அதிரடிப்படையினரின் துணையுடனேயே இத்தாக்குதல்களை முஸ்லீம்கள் நடத்தினர்.

இதனால் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர்.

1985ஆம் ஆண்டிலிருந்து 1990ஆம் ஆண்டுவரை இக்கிராம மக்கள் இடம்பெயர்வதும் மீளக்குடியமர்வதுமாக அவல நிலையிலேயே வாழ்ந்து வந்தனர்.

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் 06ஆம் திகதி திராய்க்கேணி கிராமத்தில் நடந்த படுகொலையே இக்கிராமத்தை முற்றாக நிலைகுலைய வைத்தது.

1990.08.05 இல் திராய்க்கேணியை அண்டியுள்ள ஒலுவில் கிராமத்தை சேர்ந்த வசித்து வந்த முஸ்லீம்கள் 13பேர் தீகவாபி சிங்கள கிராமத்திற்கு தொழிலுக்கு சென்ற வேளை இனந்தெரியாதவர்களால் காட்டுப்பகுதியில் வைத்து வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் மோதல்களை உருவாக்குவதற்காக விசேட அதிரடிப்படையினரே இதனை செய்ததாக சில மாதங்களின் பின்னர் தெரியவந்தது.

13 முஸ்லீம்கள் கொல்லப்பட்டதை தொடர்ந்து மறுநாள் காலையில் 06.08.1990 அன்று ஒலுவில், பாலமுனை கிராமங்களை சேர்ந்த முஸ்லீம்கள் சுமார் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கத்திகள் வாள்கள் சகிதம் திராய்க்கேணி கிராமத்திற்குள் புகுந்தனர்.

இவர்களுக்கு உதவியாக விசேட அதிரடிப் படையினர் கவச வாகனங்களில் வந்து அக்கிராமத்தை சுற்றி வளைத்தனர்.

திராய்க்கேணி கிராமத்திற்குள் புகுந்த முஸ்லீம்கள் ஒவ்வொரு வீடாக சென்று தமிழர்களை தாக்கினர். வீடுகளையும் அவர்களின் உடமைகளையும் தீயிட்டு எரித்தார்கள். முஸ்லிம்களின் தாக்குதல் தீவிரமடைய கிராமமக்கள் அருகிலிருந்த பிள்ளையார் கோயிலில் அடைக்கலம் புகுந்தார்கள். பிள்ளையார் கோவிலுக்குள் நுழைந்த முஸ்லீம்கள் வெட்டிக்கொலை செய்தனர். இவர்களின் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என பலரும் கொல்லப்பட்டனர்.

பிள்ளையார் ஆலயத்திற்குள் இருந்தவர்களை முஸ்லீம்கள் வெட்டிக்கொலை செய்து கொண்டிருந்த போது அங்கிருந்த சில பொதுமக்கள் அதன் பின்புறமிருந்த நாகதம்பிரான் கோவிலுக்குள் சென்று தஞ்சமடைந்தனர்.

நாகதம்பிரான் ஆலயத்திற்குள்ளும் நுழைந்த முஸ்லீம்கள் அங்கிருந்தவர்களையும் வெட்டிப் படுகொலை செய்தனர். இதிலிருந்து சிலர் தப்பி காடுகளுக்குள் ஒழிந்து கொண்டனர்.

தப்பி சென்ற சிலரை பிடித்த விசேட அதிரடிப்படையினர் அவர்களை முஸ்லீம்களிடம் கொடுத்தனர். கொலை வெறியுடன் காணப்பட்ட முஸ்லீம்கள் தமிழ் மக்களை வீதியிலும் கோவிலிலும் வைத்து வெட்டிக்கொன்றனர்.

சுமார் 3மணி நேரம் கொலை வெறியாட்டம் நிகழ்ந்தது. ஆலயத்திற்குள் மாத்திரம் 36பேரின் சடலங்கள் காணப்பட்டன. வீதிகளில் 10 சடலங்கள் காணப்பட்டதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். எனினும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 90க்கு மேல் என வடக்கு கிழக்கு மனித உரிமை ஆணைக்குழுவின் வெளியீடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் பின்னர் சம்பவத்தை கேள்விப்பட்ட காரைதீவு முகாமிலிருந்த விசேட அதிரடிப்படையினர் உயிர் தப்பியிருந்தவர்களை தமது வாகனங்களில் ஏற்றி வந்து காரைதீவு பாடசாலையில் தங்க வைக்கப்பட்டனர்.

திராய்க்கேணியில் இருந்த 360 குடும்பங்களின் வீடுகளும் முற்றாக தீயிட்டு கொழுத்தப்பட்டது.

1990ஆம் ஆண்டிலிருந்து 1994ஆம் ஆண்டுவரை இம்மக்கள் காரைதீவு அகதி முகாமிலேயே வசித்து வந்தனர்.

1994ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிக்கா தலைமையிலான அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்டதை தொடர்ந்து காரைதீவு அகதி முகாமில் 4 வருடங்களாக தங்கியிருந்த மக்கள் மீண்டும் திராய்க்கேணிக்கு சென்று குடியேறிய போதிலும் அப்போது புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சராக இருந்த அஷ்ரப் இக்கிராம மக்களுக்கு எந்த வித உதவியும் செய்யவில்லை. அகதி முகாமில் இருந்தவர்களில் சொற்ப தொகையினரே திராய்க்கேணியில் குடியேறினர். ஏனையவர்கள் அச்சம் காரணமாக வேறு கிராமங்களில் குடியேறினர்.

மீண்டும் முஸ்லீம்கள் தங்களை தாக்குவார்கள் என அஞ்சி தங்களின் பூர்வீக இடங்களில் குடியேற தமிழர்கள் தயங்கியதை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட முஸ்லீம் அரசியல்வாதிகள் தமிழர்களின் நிலங்களில் முஸ்லீம்களை குடியேற்றினர்.

தமிழர்களின் பூர்வீக கிராமமான திராய்க்கேணியில் இன்று முஸ்லீம்களே அதிகம் வாழ்கின்றனர்.

அது போன்று அம்பாறையில் நடந்த மற்றொரு படுகொலைதான் உடும்பன்குள படுகொலை. அது பற்றி அடுத்த வாரம் பார்ப்போம்.

**தொடரும்**

# பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மதவாதியா?



அமெரிக்காவிலிருந்து எம்.ரூபன்

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு இடம் பெற்ற துயர சம்பவங்களையடுத்து கத்தோலிக்க திருச்சபையின் கருதினாலும்,கொழும்பு பேராயருமான அதி.வண.மல்க்கம் ரஞ்சித் ஆண்டகை இன்று இலங்கையில் மட்டுமல்ல உலகிலும் பலராலும் பேசப்படுகிற ஒரு மதத்தலைவராகிவிட்டார்.இந்த சம்பவங்களின் பின் அரசின் சில செயற்பாடுகளை விமர்சித்துள்ளார்.சில முஸ்லிம் தலைவர்கள் தமது பதவிகளை துறக்க வேண்டும் என வலியுறுத்தி கண்டியில் புனித இடமான தலதா மாளிகையின் முன் உண்ணாவிரதம் மேற்கொண்ட அத்துரலிய தேரரை பேராயர் நேரில் சென்று பார்வையிட்டது தவறான விடயம் என அமைச்சர் மங்கள சமரவீர,பேராயரை ஒரு இனவாதி எனத்தெரிவித்துள்ளார்.இதனை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உட்பட சிலர் கண்டித்துள்ளனர்.இதேவேளை அமைச்சர் மங்கள சமரவீர பரிசுத்த பாப்பரசருக்கும் பேராயர் குறித்து புகார் செய்து அனுப்பிய கடிதம் தவறானது என்றும், தான் அவ்வாறான கடிதத்தை பாப்பரசருக்கு அனுப்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.



கோப்புப்படம்

இலங்கையில் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக 1961 இல் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான கூட்டு முன்னணி அரசுதான் முதலில் செயற்பட்டது.கத்தோலிக்க பாடசாலைகளை அரசு சுவீகரித்து தனது இனவாத நடவடிக்கையை மேற்கொண்டது. கத்தோலிக்க மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அரசு பாராளுமன்றத்தில் அதனை சட்டமாக்கியது.தமிழரசு,ஐ.தே.க மட்டும் எதிர்க்க,சுதந்திர,கம்யூனிஸ்ட்,சம சமாஜ, ம.ஐ.மு.ஆகியன ஆதரவளித்தன.பல கத்தோலிக்க பாடசாலைகளில் கத்தோலிக்க மக்கள் இரவு பகல் மறியல் போராட்டம் செய்தனர்.பாடசாலைகளிலேயே சமைத்து உண்டனர்.கத்தோலிக்க தேவாலயங்களில் துக்க மணி அடித்தனர்.அதாவது,கத்தோலிக்கர் ஒருவர் இறந்தால் இந்த மணி அடிப்பர். இதனால்,அரசு இந்த பாடசாலைகளை அதிகாரிகள் மூலம் பொறுப்பேற்க முடியாத சூழல் ஏற்பட்டது.

பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கா 1956 இல் தனிச்சிங்கள சட்டத்தை கொண்டுவர பிரசாரம் செய்தபோது ஆங்கிலேய கலாசார, கல்வி முறைகள் நாட்டில் இருந்து நீக்கப்படவேண்டும் என்றார்.பௌத்த அமைப்புகள்,பிக்குமார் அவருக்கு அமோக ஆதரவளித்தன.அவரின் மறைவுக்கு பின் பௌத்த காங்கிரஸ் போன்றவை,நாட்டில் உள்ள கிறிஸ்தவ பாடசாலைகள் தமது சமயத்தை, கிறிஸ்தவ கலாசாரத்தை வளர்ப்பதாக விமர்சித்ததுடன், பிரதமர் சிறிமாவோ அரசின் கவனத்துக்கும் கொண்டுவந்து,இப்பாடசாலைகளை அரசு சுவீகரிக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து வந்தனர். இதனைத்தொடர்ந்து அவர் 1960 ஆடி பதவியேற்றதும் அவசர,அவசரமாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். அவரது அமைச்சரவையில் முஸ்லிமான பதியுதீன் முஹமத் அன்று கல்வி அமைச்சர்.

கத்தோலிக்க,அங்கிலிக்கன்,மெதடிஸ்த,அமெரிக்க திருச்சபைகளுக்கு சொந்தமான பாடசாலைகளை சிறிமாவோ அரசு சட்டமூலம் சுவீகரித்தது. அன்று இலங்கையில் கத்தோலிக்க திருச்சபைக்கு கருதினால் நிர்வாக முறை ஏற்படவில்லை.ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தே இந்திய கருதினாலின் கீழ் இலங்கை கத்தோலிக்க திருச்சபை இயங்கியது.அப்போது கொழும்பு மறை மாவட்ட பேராயராக அதி.வண.தோமஸ் குரே ஆண்டகை என்பவர் பணிபுரிந்தார்.அவர் கருதினால் பதவியில் இல்லை.அதனால் இந்திய கருதினால் மூலம் இப்பிரச்சினையை தீர்க்கவேண்டிய நிலை அரசுக்கு வந்தது.


இதனால் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்திய பிரதமர் நேரு மூலம் இப்பிரச்சினையை பம்பாய் கருதினால் கிறேசியஸ் ஆண்டகையிடம் முறையிட்டார்.அவர் இலங்கை வந்து பேராயர் தோமஸ் குரேயுடன் நிலைமையை ஆராய்ந்து பேச்சு நடாத்தினார்.அதன் பின் அரசுடன் எதிர்த்து போராடாது, பாடசாலைகளை பொறுப்பேற்க இணக்கப்பாடு ஏற்பட்டு,விட்டுக்கொடுத்து ஒத்துழைக்க முடிவு செய்யப்பட்டது.

பிரதமர் சிறிமாவோ உட்பட பல சிங்கள,தமிழ் அரசியல் தலைவர்கள் கத்தோலிக்க,கிறீஸ்தவ பாடசாலைகளிலேயே கல்வி கற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அரசு அன்று பொறுப்பேற்ற பல கத்தோலிக்க பாடசாலைகள் இன்று பௌத்த கலாசாரங்களை கொண்டதாக மாறியுள்ளன.கத்தோலிக்க பாடசாலைகளை நிர்வகித்த,அவற்றில் கற்பித்த ஆங்கிலேய துறவிகளை நாட்டை விட்டு செல்லுமாறும் உத்தரவிடப்பட்டது.அத்துடன் தெற்கில், மலையக பகுதிகளில் அரசுடைமையாக்கிய கத்தோலிக்க பாடசாலைகளில் தமிழ் மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைமைகளும் ஏற்படுத்தப்பட்டன.

சுதந்திரக்கட்சி அரசு கத்தோலிக்க பாடசாலைகளை சுவீகரித்தபோதிலும் ஒரு சில பாடசாலைகளை கத்தோலிக்க திருச்சபை இன்றும் நிர்வகித்து வருகின்றது.ஆனால்,1977 பதவிக்கு வந்த ஐ.தே.க அரசின் பிரதமர் ஜே.ஆர்ஜெயவர்த்தனா இப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு அரசால் சம்பளம் வழங்குவதற்கு விசேட வர்த்தமானி அறிவித்தலை 1979 ஆனி 20 ஆம் திகதி வெளியிட்டு,அதன்படி அந்த உதவி வழங்கப்படுகிறது. கத்தோலிக்க மக்கள் மத்தியில் ஐ.தே.க. எதிர்காலத்தில் ஆதரவை பெறவே அவர் இந்த நடவடிக்கையை எடுத்திருந்தார். அந்த பாடசாலைகளே தனியார் கல்வி நிறுவனங்களாகும்.

எமது போராட்டம் தொடரும்,நாம் கட்டிய பாடசாலைகளை விடமாட்டோம்,இரத்தம் சிந்தி மீட்போம் என பேராயர் கூறியதாகவும்,அவர் ஒரு இனவாதி எனவும் அன்று சில அரசியல்வாதிகள் மங்கள சமரவீரவைப்போல கூறியதை இங்கு குறிப்பிடவேண்டும்.பேராயர் தோமஸ் குரே இலங்கையின் முதலா வதாக தெரிவான கருதினால். அத்துடன் கொழும்பு பேராயராக ஆங்கிலேயர்களின் பின் ( 1947)தெரிவான முதலாவது சிங்கள இனத்தைச்சேர்ந்த பேராயருமாவார்.1965 இல் இலங்கையின் முதலாவது கருதினாலாக பாப்பரசர் 6வது சின்னப்பரால் தெரிவுசெய்யப்பட்டார். கருதினால் (Cardinal) பதவி என்பது ஆயருக்கு அடுத்த உயர் பதவி. ஒரு பாப்பரசரை தெரிவுசெய்ய தகுதியானவர் மட்டுமல்ல அந்த தெரிவிலும் பங்குகொள்பவர். பாப்பரசரின் வெளிநாடுகளின் தூதுவர்களாகவும்

13 ஆம் பக்கம் பார்க்க....

# அரசியற்தலைமைகளும் அலட்சியப்போக்குகளும்

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

எமது நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் என்பன தேர்தல் காலங்களில் பேரணிகள் மற்றும் கூட்டங்களுக்கு மாத்திரம் மக்களை அழைத்து தமது அரசியல் பலத்தைக் காட்டி விட்டு மறுமுனையில் தம்மை மக்கள் பிரிநிதிகளாக்கிய, உரிய பதவிகளை வழங்கிய மக்களை மறந்து அரசியற் தலைமைகள் செயற்பட்டுவருகின்ற நிலைமைகளே கடந்த பல வருடங்களாக காணப்பட்டுவருகின்றன

வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது தொழில்களை இழந்த நிலையில் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடியாத நிலையில் திண்டாடி வருகின்றனர். அதுமட்டுமின்றி யுத்தத்தால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளில் பெருமளவானோர் உரிய வருமானங்கள் எதுவுமின்றி இன்று வாழ்க்கையைத் தொலைத்தவர்களாக வடகிழக்கில் வாழ்ந்து வருகின்றார்கள்.

புதிய அரசாங்கமானது பதவியேற்று மூன்று வருடங்களாகியுள்ளது. இவ்வரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக பல்வேறு விதமான உறுதிமொழிகளையும் வழங்கியிருந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது தாம் ஆட்சிக்கு வந்தால் 10 இலட்சம் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வேலையில்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என பிரதமர் உறுதிமொழி வழங்கியிருந்தார். ஆனால் தற்போதைய நிலையில் நாட்டில் வேலையில்லாப் பிரச்சினையே அதிகரித்துக் காணப்படுகின்றது. பட்டதாரிகள் தமக்குரிய வேலை வழங்கப்படவேண்டுமெனக் கோரி வட கிழக்கில் பல்வேறு இடங்களில் பட்டதாரிகள் போராட்;டங்களை நடாத்தியும் எதுவித தீர்வும் இன்றி தொழிலின்றி உள்ளனர்.

அதுமாத்திரமின்றி தமிழர்களின் நீண்ட கால இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படாத நிலையில், கடந்த யுத்த காலங்களில் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்றும், அது முள்ளிவாய்க்காலில் மாத்திரமின்றி வரலாற்று ரீதியாக கட்டமைக்கப்பட்ட ரீதியில் நடைபெற்றுள்ளதாகவும் வடக்கு மாகாண சபையில் தீர்மானம் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்டது. பெப்ரவரி 10, 2015 அன்று நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தில் சர்வதேச விசாரணை மூலமாக நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்த தீர்மானம், சட்டம் மற்றும் அரசியல் துறை சார் வல்லுனர்களின் பங்களிப்புடன் உரிய ஆதாரங்கள், தரவுகள் திரட்டப்பட்டு இயற்றப்பட்டதாக வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தனது இனப்படுகொலை தீர்மான உரையில் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போர் வழி மாத்திரமின்றி வேறு பல வழிகளிலும் ஈழ மக்கள் அழிக்கப்படுகிறார்கள். மகிந்த ராஜபக்ச காலத்தில் வன்னியில் கட்டாய கருத்தடை செய்யப்பட்டது. இதேவேளை இறுதி யுத்தத்தின் பின்னர், அரசின் உயர்மட்டக் கட்டளைகளின் பிரகாரம், வவுனியா போன்ற மருத்துவமனைகளுக்கு வரும் கர்ப்பமடைந்த தமிழ் தாய்மார்களிடம் சிங்களப் படிவங்களில் கையொப்பம் பெறப்பட்டு அவர்களின் கருவை கலைக்கும் செயற்பாடுகள் நடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இது திட்டமிட்ட இன அழிப்பாகவும் ஈழத்தின் சந்ததியை கருவிலேயே அழிக்கும் செயல் என்றும் நிரூபிக்கப்பட்டமையும் நாம் அறிந்த ஒன்றே.

இது காலம் காலமாக வட கிழக்கில் பல்வேறு தமிழினப் படுகொலைகளாக உருமாறி இதன் ஓர் உச்ச கட்டமாகவே முள்ளிவாய்காலில் தமிழ் மக்கள் கொன்று அழிக்கப்பட்டார்கள். இனப்படுகொலைக்கான நோக்கங்களாக தமிழர்களுக்கான சுய உரிமையை மறுக்கும் செயலே காணப்பட்டது. தமிழ் மக்களுக்கான உரிமைகளை மறுக்கவும் அவர்களை இல்லாமல் செய்யவும் அவர்களின் சொத்துக்கள், அரசியல் உரிமை, தாயகம் முதலியவற்றை அபகரிக்கவும் இன அழிப்பு நடைபெறுது. தமிழர்களின் பிரதேசத்தில் திட்டமிட்ட குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு தமிழ் மக்களை தமது தாய்நிலத்திலிருந்து ஒழிக்கும் செயலும் இதன் பாற்பட்டதே.

மாறி மாறி ஆட்சியமைக்கும் தேசிய கட்சியை சார்ந்தவர்கள் என்ற வகையிலும் கடந்த கால ஆட்சியில் பங்கு பற்றியவர்கள் என்ற வகையிலும் தென்னிலங்கை சமூகம் என்ற வகையிலும் ஈழத் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட மாபெரும் இனப்படுகொலை குறித்த கூட்டுப் பொறுப்பை இலங்கை அரசு, மறுக்கவோ, நிராகரிக்கவோ முடியாது. ஒரு மாபெரும் இனப்படுகொலையை, உலகறியப்பட்ட மாபெரும் அநீதியை மூடி மறைப்பதும் அவ்வளவு எளிதல்ல. ஈழத் தமிழ் மக்கள் படுகொலைகளால் சந்தித்த காயத்தை ஆற்றுவது என்பது ஒரு இனப்படுகொலையாக அதை ஏற்றுக் கொள்வதுடன் மீண்டுமொரு இனப்படுகொலை நிகழாத வகையில் உறுதியும் நியாயமும் நிரந்தரமும் கொண்ட அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதிலேயே தங்கியுள்ளது.

நல்லாட்சியில் குறிப்பாக வடகிழக்கில் போதியளவு அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுப்பதற்காக நிதி ஒதுக்கிடப்படுகின்றது என பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றது. இருப்பினும் ஒதுக்கப்பட்ட நிதிக்கமைவான குறித்த அபிவிருத்திப்பணிகள் மாத்திரம் நிறைவுபெறாமல் இருப்பதறான காரணம் என்ன, இங்கு குறிப்பாக வடக்கில் இன்று பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கபட்டு வருகின்ற அதேசமயம் தமிழர் தாயகமான கிழக்கில் குறிப்பாக தமிழர்கள் அதிகம் செறிந்து வாழும் பகுதிகளில் மாத்திரம் பல அபிவிருத்தி செயற்பாடுகள் முடங்கிய வண்ணமே தற்போதுவரை காணப்படுகின்றது. அத்துடன் நிதி ஒதுக்கீட்டின் பெயரில் அபிவிருத்திகள் மேற்கொள்ளபட்டாலும் அவை முடிவுற்ற போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதனை அறிவிக்காத செயற்பாடுகளே அதிகளவில் இடம்பெறுகின்றன.

அதுமட்டுமல்லாது இன்று மட்டக்களப்பு சுற்றுலாத்துறையில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப் படுகின்றது. இங்கு ஒழுக்கத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளும் அரங்கேறிவருவதாக தகவல்கள் கிடைக்கின்றன. இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது எமது பாரம்பரிய ஒழுக்கத்தை சிதைக்காத விதத்தில் அந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் சுற்றுலாத்துறை சார்ந்த அபிவிருத்தி செயற்பாடுகள் மூலம் மட்டக்களப்பில் இன்று வேலையற்றிருக்கும் பல வேலையற்ற இளைஞருக்கான வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதுமட்டுமின்றி இன்று வடக்கு மற்றும் கிழக்கில் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது உள்ளூர் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் வேலையற்றோர் வீதத்தினை குறைத்துக் கொள்ளமுடியும். இன்று அதிகளவில் மட்டு மாவட்டத்தில் இயங்கிவரும் அரசசேவைகளானாலும் அரச சார்பற்ற நிறுவனங்களானாலும் அதிகளவில் வெளிமாவட்டங்களிலிருந்தே நியமனங்களை பெறுகின்றனர். இதன்போது கிழக்கு மாகாண இளைஞர் யுவதிகள் புறக்கணிக்கப்படுகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளை தடுத்து உள்ளூர் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பை முதலில் வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

உதாரணமாக பாசிக்குடாவில் அமைக்கப்பட்டுள்ள உணவுவிடுதிகளில் உள்ளூர் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படாதது அப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு வேதனையை அளித்துள்ளதுடன் இது தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகளும் வெளிவந்தவண்ணமே உள்ளன.

மேலும், 21ஆம் நூற்றாண்டு தகவல் தொழில்நுட்ப யுகத்தில் நாம் இன்று வாழ்கிறோம். ஆனால் இலங்கையில் அதிக;ட பிரதேசங்களில் வாழும் மக்கள் இதுவரையிலும் ஆரம்ப வளர்ச்சியையே கண்டிருக்கிறார்கள் என்பது நாம் அவர்களுக்கூடான உரையாடல்களின் மூலம் அறிந்துகொள்ளமுடிகின்றது. இவ்வாறான போக்குகள் நல்லாட்சி அரசாங்கத்தில் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அவர்களும் தொழில்நுட்ப யுகம் கண்டு புத்தெளிவு பெறவேண்டும்.

இவர்களுக்கான தொழில்நுட்ப அறிவினை வழங்கி அவர்களுக்கான தொழில்வாய்ப்புக்களை வழங்க இலங்கைத் தொழில்பயிற்சி அதிகார சபைகளுடாக செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலமே மக்கள் நல்லாட்சி அரசாங்கம் இடம்பெறுவதாக உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.

# வவுனியாவை வாட்டி வதைக்கும் வாகன விபத்துகள்

சி.திவியா

கொத்துக்கொத்தாய் பல உயிர்கள் செத்துப்போன 30 ஆண்டுகால முடிந்தாலும், உயிர்ப்பலிகள் தினமும் போய்க்கொண்டே இருக்கின்றது

யுத்த காலத்திலும் முன்பும் பலர் தினமும் இறந்த செய்திகளை அறிந்த எமக்கு, இப்போதைய யுத்தம் ஓய்ந்த சூழலிலும் தினந்தோறும் சாவு எண்ணிக்கைகளை கேட்டு மனங்கள் மரத்துவிட்டனவோ என எண்ணத் தோன்றுகிறது. இன்றைய நவீன தொழில்நுட்பத்துக்கும் வாகன பாதுகாப்புக்கும் மத்தியில் வாகன விபத்துகள் அதிக அளவில் இடம்பெறவே செய்கின்றன. பொதுவாக வாகன விபத்துகளுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. எனவே, வாகன சாரதிகள் விபத்துகளைத் தவிர்க்க வேண்டுமென்றால் விபத்துகள் ஏற்படுவதற்கான காரணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். தற்போதைய புள்ளிவிபரங்களின் பிரகாரம் அதிக ஆபத்து நிறைந்தவையாக மாறி வருகின்றன. 2011 இல் வீதிவிபத்துக்களில் 2100 பேர் உயிரிழந்தனர். 2015 இல் அந்த எண்ணிக்கை 2800 ஆக உயர்ந்தது. அதாவது 33 சதவீத அதிகரிப்பு. கடந்த ஆண்டில் மட்டும் நாடாளாவியரீதியில் பதியப்பட்ட விபத்துக்கள் 39719 நடந்திருக்கின்றன. இதில் 2800 உயிர்கள் பலியாகியுள்ளன.

இந்த வருடம் இப்போது வரை நடந்த விபத்துக்கள் பற்றிய சரியான தரவுகளைப் பெற்றுக்கொள்ள பல முயற்சிகள் எடுத்தும் ஆவணங்களாக எவற்றையும் பெறமுடியாமல் போனது. எனினும் இந்த 6 மாத காலங்களில் கடந்த ஆண்டினை விடவும் அதிக விபத்துக்களும் அதிக உயிரிழப்புக்களும் நடந்திருப்பதைக் கவலையுடன் அறியத்தந்தார் போக்குவரத்துப் போலீசின் பேச்சாளர் ஒருவர். இந்த வருடத்தில் இதுவரை மிகவும் அதிகமானவிபத்துக்கள் பதிவாகியுள்ளன.

வீதிகள் விருத்தியடைகின்றன; வாகனங்கள் நாளுக்கு நாள் புதிது புதிதாய்க் குவிந்தவண்ணமே இருக்கின்றன மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதனால் வீதி விபத்துகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் எதிர்காலத்தில் இன்னும் அதிகமாகவே இருக்கும். வாகன சாரதிகளின் தவறுதான் பெரும்பாலான வீதி விபத்துகளுக்கு பிரதான காரணமாவதாக கண்டறியப்பட்டுள்ளது. முதலில் வீதியின் கட்டமைப்பு விடயத்தில் வீதி தடுப்புகள், சமிக்ஞைகள், மிருதுவான மேற்பரப்பு என்பவற்றைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அடுத்து, வாகனம் செலுத்துவோருக்கான சிறந்த பயிற்சி, கூடுதலான வாகன கண்காணிப்பு , வேக அளவீட்டு கருவிகளுடன் கூடுதலான அதிகாரங்கள், கண்காணிப்பு கெமரா என்பவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும். காற்றுப்பை ஸ்திரக்கட்டுப்பாடு மற்றும் நவீன உபகரணங்களைப் பயன்படுத்துமாறு வாகனம் செலுத்துவோரை ஊக்குவிப்பதன் மூலமும் தெருக்களை பாதுகாப்பானதாக மாற்றலாம். இந்த ஏற்பாடுகள் நிச்சயமாக தெருப் பாதுகாப்புக்கு உதவி செய்யும். இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது வாகன சாரதியின் மனநிலைதான்.

வீதி விபத்துக்களைக் குறைப்பதில் வாகன சாரதியின் மனநிலையே முக்கிய பங்கு வகிக்கின்றது. பொதுவாக வீதி விபத்துகளுக்கு கவனச் சிதறல், அதிக வேகம், மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துதல், பொறுப்பற்ற விதத்தில் வாகனம் செலுத்துதல், சிகப்பு விளக்குகளை எரிய விடுதல் அல்லது சமிக்ஞைகளை நிறுத்திவிடுதல் என்பன காரணமாகின்றன. இவை யாவும் தவிர்க்கக் கூடியவையே.


கோப்புப்படம்

எனவே, வீதிவிபத்துகளை நாம் தவிர்க்க வேண்டுமென்றால் நாம் வாகனம் செலுத்தும் போது அதிக கவனத்துடனும், பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும். வீதி விபத்துகளைக் குறைக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் இப்போது பிரசார நடவடிக்கை ஒன்றை மேற்கொள்கிறது.

அது வரவேற்கத்தக்கதே. இன்று வாகனம் செலுத்துவோர் வீதியில் நடந்து செல்பவர்கள் குறித்து சற்றேனும் கரிசனையின்றி தாம் நினைத்தவாறெல்லாம் நடந்து கொள்ளலாம் என நினைக்கின்றனர். நேருக்கு நேர் வாகனங்கள் மோதுவதைப் பார்த்தாலே எமது வாகன சாரதிகளின் மனநிலையை நன்கு புரிந்து கொள்ளலாம்.

தடுப்புக்குறிகளுக்கு அருகிலும், ஆபத்தான வளைவுகளிலும் கூட அதிக வேகத்துடன் வாகனம் செலுத்துவது, முன்னால் செல்லும் வாகனத்தை முந்திச் செல்லுதல் போன்றன இன்று பொதுவாக காணக்கூடிய காட்சிகளாகி விட்டன. எவ்வளவு கடுமையான சட்டங்களை அமுல்படுத்தினாலும் அவர்களுடைய மனநிலையை மாற்ற முடியாது. இப்படிப்பட்ட வாகன சாரதிகளைத்தான் நாம் தெருக்களிலிருந்து அகற்ற வேண்டும். அவர்களுடைய மனநிலை மாறவில்லையென்றால் வீதி விபத்துக்கள் குறையவும் வாய்ப்பில்லை. வீதிப் போக்குவரத்துக் குற்றங்களுக்கான அபராதத் தொகையை உச்ச அளவுக்கு அதிகரிப்பதன் மூலம் வீதி விபத்துகளைக் குறைத்துக் கொள்ள முடியுமென அரசாங்கம் காரணம் கூறிக் கொண்ட போதிலும், அவ்வாறான நம்பிக்கை அடியோடு தென்படவில்லை.

வவுனியாவிலும் நாட்டின் ஏனைய பல்வேறு இடங்களிலும் இம்மாதத்தில் இடம்பெற்றுள்ள வீதி விபத்துகளையும் அதனால் ஏற்பட்ட மரணங்களையும் பார்க்கின்ற போது அதிர்ச்சி ஏற்படுகின்றது பெரும் வீதி விபத்தாக. கடைசியாக சாவகச்சேரியில் இடம்பெற்றது விபத்திலேயே ஸ்தளத்தில் பதினொரு பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் நான்கு பேர் காயமடைந்தும் உள்ளனர் மறக்கமுடியாதபதிவாகியது. அதே போன்று வட பகுதியில் மட்டுமன்றி நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் மோசமான வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன. மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை கள் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொன்டேசெல்கின்றது.

ஆகவே அபராதத் தொகையை அதிகரிப்பதனால் மாத்திரம் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தி விட முடியுமென்ற நம்பிக்கை தவறானது என்பது இங்கு நன்கு புரிகின்றது. வாகன விபத்துகள் அதிகரித்திருப்பதற்கான அடிப்படைக் காரணங்களை நன்கு ஆராய்ந்து அதற்கான பரிகாரங்களைத் தேடுவதே இப்போது முக்கியமானதாகும்.

வீதிப் போக்குவரத்து சம்பந்தப்பட்ட விடயங்களில் கடந்த காலத்தில் ஏராளமான தவறுகள் நடந்து விட்டன. அரசாங்கங்களின் பொறுப்பற்ற தன்மையும், அதிகாரிகள் மத்தியில் இலஞ்சம் சாதாரணமாகிப் போனதுமே இதற்கான முக்கிய காரணங்கள்.

பதினெட்டு வயதை நிறைவு செய்த எந்தவொரு நபரும் வாகனம் செலுத்தப் பழகிக் கொண்ட பின்னர் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாமென்ற நடைமுறை இலங்கையில் உள்ளது. சாரதி லைசன்ஸ் கோரி விண்ணப்பிக்கும் ஒருவர் சாதாரணமான அறிவாற்றல், மனிதநேயம், குற்றம் நாடாத சுபாவம் போன்றவற்றையெல்லாம் கொண்டதொரு பிரஜையா என்றெல்லாம் ஆராயப்பட வேண்டிய நடைமுறை இலங்கையில் கிடையாது. குறைந்த பட்சக் கல்வியறிவும் கொண்டிருக்காத, குற்றச் செயல்களில் ஊறிப் போன சமூகக் கட்டமைப்பிலிருந்து வந்த ஒருவர் கூட சாரதி லைசன்ஸ் பத்திரத்தை இலகுவாகவே பெற்றுச் செல்ல முடியும்.

இதுவே எமது நாட்டிலுள்ள நடைமுறை. மேற்கு நாடுகளில் இவ்வாறெல்லாம் கிடையாது. சாரதி லைசன்ஸ் கோருவோரின் அடிப்படைக் குணாம்சங்கள் அங்கே பரிசீலிக்கப்படுகின்றன. வீதியில் நடமாடும் உயிர்களை அற்பமாக எண்ணுகின்ற சாரதிகள் அங்கெல்லாம் லைசன்ஸ் பெற்று விட முடியாது. இலங்கையில் உள்ள வாகனமோட்டிகளில் பெருமளமானவர்கள் வன்முறை சுபாவம் நிறைந்தவர்கள். முச்சக்கரவண்டி செலுத்துகின்ற ஒருவரில் இருந்து ஆடம்பரக் கார் ஓட்டுகின்ற ஒருவர் வரை இவ்வாறான வன்முறை சுபாவம் நிறைந்திருக்கின்றது.

சாரதி பயிற்சியில் நன்கு தேறியமைக்கான செயன்முறைப் பரீட்சையையும் இவர்கள் முறையாகப் பூரத்தி செய்திருப்பார்களா என்பது சந்தேகமே!

அதிகாரிகள் மட்டத்தில் இலஞ்சம் ஊறிப் போனதால் ஏற்பட்ட மோசமான விளைவுகள் தான் இவை. இலஞ்சத்தை இத்தனை மோசமாக வளர விட்டதற்கான பொறுப்பு அரசாங்கங்களுக்கே உரியது. மக்கள் நடமாடுகின்ற வீதியில் வாகனம் செலுத்துகின்ற ஒருவர் வாகனமோட்டும் திறனை மாத்திரம் கொண்டிருந்தால் போதாது. வீதியில் நடமாடும் உயிர்களை மதிக்கின்ற ஜீவகாருண்யப் பண்பையும் கொண்டிருப்பது முக்கியம்.

நாட்டில் தற்போது இடம்பெறுகின்ற வீதி விபத்துகளில் கூடுதலாக முச்சக்கரவண்டிகளும், தனியார் பஸ்களுமே

II ஆம் பக்கம் பார்க்க....

# அதிகரிக்கும் சட்டவிரோதச் செயல்களும் அரசாங்கத்தின் கவனயீனமும்

**ஊ**ழல் மிக்க நாடு, கடந்தகால ஆட்சியாளர்கள் சர்வதிகார போக்கினை கடைப்பிடிக்கின்றனர் எனக் கூறி இவற்றையெல்லாம் ஒழிப்போம் என்று குறிப்பிட்டு தற்போதைய நல்லாட்சி என்று கூறப்படும் ஆட்சியாளர்கள் அரியணை அமர்ந்து கொண்டனர். மக்களும் இவ்வாட்சியை மிகுந்த எதிர்பார்ப்புடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனாலும் இதுவரை ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்காத நிலையே இருந்து கொண்டிருக்கின்றது. தற்போதைய ஆட்சி காலத்திலும் ஒரு சில அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஊழல்களில் ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. இதனால் தற்போதைய ஆட்சியிலும் ஊழல்களுக்கு அதிகளவான இடம் இருக்கின்றது என்பது நிரூபணமாகின்றது.

அரச பணமாகவிருந்தாலும், மக்களது வரிப்பணங்களாகவே அவை இருந்து கொண்டிருக்கின்றன. வரிப்பணத்தினை கொண்டு மக்கள் நலம் சார்ந்த செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டிய பணங்கள் ஒரு சில ஊழல்வாதிகளால் சூறையாடப்படுகின்றமை கவலை தரும் விடயமாகவே இருக்கின்றது. நாட்டின் பல பாகங்களிலும் இலஞ்சம், ஊழல் என்பது இன்றைய பேசுபொருளாக இருக்கின்றது. கடந்த வருடம் உட்பட அண்மையில் கூட வடமாகாண சபையில் இது தொடர்பில் பல்வேறு சர்சைகளும் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதேபோன்று மட்டக்களப்பிலும் ஊழலுக்கு எதிராக ஆர்பாட்;டங்களும் நடைபெற்றன. இவ்வாறான மக்கள் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றமை, இவ்வாட்சியிலும் ஊழல்வாதிகள் இருக்கின்றனர் என்பதையும், அவை நல்லாட்சியிலும் கண்டுகொள்ளப்படவில்லை என்பதையுமே எடுத்துக்காட்டுகின்றது. ஊழல் மற்றும் இலஞ்சம் போன்ற செயற்பாடுகள் நாட்டில் அதிகம் உள்ளமையினால்தான் நாட்டில் சட்டவிரோத செயற்பாடுகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என நாட்டில் ஏற்படும் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து அறிந்தவர்களும், அவை நிறுத்தப்படாமை குறித்து தெரிந்து கொண்டவர்களும் கூறுகின்ற வசனங்களாக இருக்கின்றன. இதனை பொய் என்றும் கூறிவிட முடியாது. அதேபோல உண்மை என்றும் நிரூபிக்கப்படவும் இல்லை. ஆனாலும் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டிய நிலையும் இருக்கத்தான் செய்கின்றது.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியிலேயே அதிகளவான சட்டவிரோதமான மண் அகழ்வு, சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, சட்டவிரோதமான முறையில் கால்நடைகளை கொண்டு செல்லுதல் போன்ற செயற்பாடுகள் தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களிலே இடம்பெற்று கொண்டிருக்கின்றன. ஒருபக்கம் தமிழ் பிரதேசங்களில் உள்ள வளங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்று கூட கூறக்கூடிய நிலைக்கு சூழ்நிலை சென்று கொண்டிருக்கின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தினை இரு பெரும் நிலப்பரப்பாக பிரித்துக் கூறுகின்ற தன்மை அங்குள்ள மக்களிடத்தில் இருக்கின்றன. நகரங்களை அண்டிய பிரதேசங்களை எழுவான்கரையென்றும், கிராமங்களை உள்ளடக்கிய பகுதியை படுவான்கரை எனவும் அழைப்பதுண்டு. இப்படுவான்கரைப் பிரதேசத்திலேயே கனியவளங்கள் குடிகொண்டுள்ளன. அவைகளாவன ஆற்றுமண், நிரப்புமண், கிறவல் போன்றவைகளை குறிப்பிட முடியும். அவற்றினை ஏற்றி விற்பனை செய்வதற்கு அரசாங்கத்தினால் குறிப்பிட்ட சிலருக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வனுமதிகளுக்கு ஏற்ற வகையில் கனியவளங்கள் நகர்புறங்களை அண்டிய பிரதேசங்களுக்கும், ஏனைய மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. இவை யுத்தத்தின் பின்னரான தற்போதைய காலப்பகுதியிலேயே அதிகமாக அனுமதிகள் வழங்கப்பட்டு கனியவளங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன எனக் கூறலாம். ஆனால் யுத்தம் நிறைவிற்கு வருவதற்கு முன்னரான காலப்பகுதியில் இங்குள்ள கனியவளங்கள் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படவில்லை. இதனால் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் குறைந்த செலவில் அவற்றினை அனுபவிக்க கூடிய சூழல் இருந்ததாக கூறப்படுகின்றது. தற்போதைய சூழல் இப்பிரதேசத்தில் உள்ள மண் அதிகளவில் தோண்டப்பட்டு நகரப்புறங்களையும், வெளிமாவட்டங்களையும் உயரமாக்குவதற்கும், கட்;டட வேலைகளை மேற்கொள்வதற்கும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனால் தோண்டப்படும் பிரதேசம் தாழ்வாக சென்று கொண்டிருக்கின்றது.



**முனையூரான்**

இயற்கையின் மூலம் கிடைக்கும் வளங்கள் என்பது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அவ்வாறு கிடைக்கின்ற அரிதான சொத்துக்களை அப்பிரதேசத்தில் உள்ளவர்கள் அனுபவிக்க வேண்டும். அனுபவித்து முடிந்தபின் எஞ்சியவற்றைதான் மற்றவர்களுக்கு வழங்க வேண்டும். என்பது பெரியோரின் கருத்துக்களாக இருக்கின்றன. வளங்கள் இருக்கின்றது என்பதற்காக எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு ஏப்பமிடும் சமூதாயமாகவும் மாறவும் முடியாது. மாறிவிட்டால் நாமே துயருறும் சமூகமாக மாற்றப்படுவோம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. உதாரணமாக அமெரிக்காவில் எண்ணை வளம் இருக்கின்றது. ஆனால் அவ் எண்ணை வளத்தினை அமெரிக்கா பயன்படுத்தவோ, மற்றவர்களுக்கு விற்பனை செய்வதோ இல்லை. பிறநாடுகளில் இருந்து கொள்வனவு செய்தே பயன்படுத்துகின்றனர். எல்லோரும் ஒரு காலகட்டத்தில் எண்ணைக்கு ஏங்கும் போது, கவலையின்றி அனுபவிக்கும் சமூகமாக அவர்கள் உச்சம் பெறுவர்.

ஆனால் இலங்கையில் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நகர்புறத்திற்கு படுவான்கரைப்பகுதியில் உள்ள உன்னிச்சை குளத்தில் இருந்து குடிநீர் எடுத்துச் செல்லப்படுகின்றது. ஆனால் அக்குளத்தினை அண்டியுள்ள மக்கள் குடிநீரின்றி அவதியுற்று நிற்கின்றனர். இந்நிலை அம்மக்களுக்கு அங்குள்ள வளத்தினை கொடுத்துவிட்டு தமக்கின்றி அவதியுறும் அனுபவ பாடமாக இருந்து கொண்டிருக்கின்றது.

அரசாங்கத்தினால் கனியவளங்களை பெறக்கூடிய இடங்கள் இனங்காட்டப்படுகின்றன. அவற்றிலிருந்து எடுக்ககூடிய அளவுகளும் குறிப்பிடப்படுகின்றன. ஆனால் இனங்காட்டப்பட்ட இடங்களிலிருந்து கனியவளங்களை பெற்றுக் கொள்ளாமல் பிற இடங்களில் இருந்து சட்டவிரோதமாக கனியவளங்களை சூறையாடுவதும், குறிப்பிட்ட அளவிற்கு மேலதிகமாக கனியவளங்களை சட்டவிரோதமாக அகழ்கின்ற சம்பவங்களும் இடம்றெ;றுக் கொண்டிக்கின்றன. குறிப்பாக இரவு வேளைகளில் இடம்பெற்றுக்கொண்டிருப்பதாக அறியமுடிகின்றது. இவற்றினை கட்டுப்படுத்த முடியாத நிலையும் மாவட்டத்திலே இருந்து கொண்டுதான் இருக்கின்றது. இவ்விடயம் குறித்து ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலே தொடர்ச்சியாக பேசப்பட்டுகொண்டே இருக்கின்றதே தவிர தீர்வுகள் கிடைக்கப்பெறவில்லை. இதனால் மக்களும் ஆர்பாட்டத்திலும் ஈடுபடுகின்றனர். அவற்றிற்கும் பதில் வழங்கும் வகையில் சட்டவிரோத மண் அகழ்வுகள் நிறுத்தப்படவும் இல்லை. அண்மையில் கூட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமொன்றில் சட்டவிரோத மண் அகழ்வினை தடுப்பதற்கு தற்காலிக காவலரண்களை பொலிஸ் அதிகாரிகள் அமைக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சட்டவிரோத மண் அகழ்வுகள் தடைசெய்யப்படுமா? என்ற சந்தேகமும் இல்லாமல் இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்திலே திடீரென மண்ணுக்கான விலை அதிகரித்திருக்கின்ற நிலையில் இப்பிரதேசத்து மக்கள் பெரிதும் துன்பவியலுக்குள் அகப்பட்டுள்ளனர். எரிபொருளுக்கான விலையோ, நாட்கூலியோ அதிகரிக்காத நிலையில் மண்ணுக்கான விலை அதிகரித்துள்ளமை மக்களிடத்தில் ஆச்சரியத்தினையும், பயத்தினையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ஏற்கனவே இருந்த விலையின் இருமடங்கை விட அதிகமாக உயர்ந்திருக்கின்றது. மண் ஏற்றுவதற்கான அனுமதி கொடுத்த பிரதேசத்தில் உள்ள மக்கள் உழவு இயந்திரத்தின் மூலம் ஒரு பெட்டி ஆற்றுமணலை ரூபா 2500க்கு

15 ஆம் பக்கம் பார்க்க....



# அமைதியின் அவசியம்!


கோப்புப்படம்

நாட்டை உலுக்கிய உயிர்த்த ஞாயிறுக்குப் பின்னர் இலங்கை வாழ் முஸ்லிம்கள் பற்றிய நிலைப்பாடு பெரும்பான்மைச் சமூகத்தினரிடமும், அரசியல்வாதிகளிடமும் மாறுபட்ட கருத்துக்களை தோற்றுவித்திருக்கின்றது. அந்த வகையில் சில ஊர்கள் மீதும் அவர்களுடைய பார்வைகள் திருப்பியிருப்பதையும் நாம் அறிந்தவையே. தமக்கும் இப்பயங்கரவாத குழுவினருக்கும் தொடர்பில்லை என்பதை ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் முழுமையான வகையில் ஒப்பித்த நிலையிலும் அந்தச் சமூகத்தின் அரசியல் தலைமைகள் ஒட்டுமொத்தமாக தம் பதவிகளிலிருந்து வெளியேறி தாங்கள் தொடர்பானவர்களாக இருந்தால் எங்களை விசாரியுங்கள் தண்டனை வழங்குங்கள் என்கிற அறிவிப்பினையும் ஒப்பித்து வெளியேறிய கையுடன் சில கோரிக்கைகளையும் முன்வைத்து தற்போது நாட்டிலுள்ள பல அமைப்பினருடனும், தனிப்பட்ட சமூகத்தலைவர்களிடமும் தாம் எந்த நிலையில் இருக்கிறோம், தமது எதிர்கால செயற்பாடுகள் எவ்வாறு அமையும், ஒட்டு மொத்த முஸ்லிம்கள் சார்பாக தமக்குரிய நிலைப்பாட்டினைத் தினமும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் இருப்பினையே கேள்விக்குறியாக்கியுள்ள இந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் வன்முறை விடயத்தில் சிறுபான்மைச் சமூகத்தின் மற்றுமொரு இனமான தமிழர் தரப்பினரும் இரு பக்க எறும்பான நிலையில் தமக்கும் இதேபோன்றொரு நிலை அன்றைய யுத்த காலத்தில் ஏற்பட்டதாகவும், இதன் வலிகள் தமக்குத்தெரிந்தவையே என்பதையும் நினைவுபடுத்தி இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த்தரப்பின் பக்கத்திலிருந்து நாட்டிலுள்ள அவசரகாலச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டுமென்கிற கருத்துக்களையும் தமிழ் அரசியல்வாதிகள் அவ்வப்போது பேசி வருகின்ற நிலையில் முஸ்லிம் தலைவர்கள் இன்றைய காலகட்டத்தில் அரசியல்வாதிகளும், பெரும்பான்மையினரும் கொண்டிருக்கின்ற மனோ நிலையிலிருந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் சிலபல விடயங்களில் அடக்கிவாசிக்க வேண்டியதும் அவசியமான ஒன்றாகும் என்பதை இவ்வேளை ஞாபகப் படுத்த வேண்டியிருக்கிறது.

ஏனெனில் அண்மைய நாட்களில் அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறுக்குப் பின்னரான நாட்களில் ஏற்பட்ட குழப்பநிலையினை விசாரிக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக முஸ்லிம் தலைவர்கள் பலர் தமது கருத்துக்களைக் கூறிவருகின்றனர். இந்தக் கருத்துக்கள் உண்மைத்தன்மையாக இருக்க வேண்டும். உண்மையான விடயங்களில் மாறுபாடுகள் இருக்குமானால் அது வேறொரு பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கலாம். ஏனெனில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் அகில இலங்கை உலமா சபைத்தலைவரும், முன்னாள் மாகாண ஆளுநரும் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக முஸ்லிம் அமைப்பொன்று அவர்கள் கூறியவைகளில் பலவற்றை மறுத்து தாமும் இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க தமக்கும் இடம் தறுமாறும் கோரிக்கை விடுத்திருப்பதாக ஊடகங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. ஆகையினால்தான் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு முஸ்லிம் நடுநிலை வாதிகள் கூறுகின்றனர்.

முஸ்லிம்களுக்குள் பல்வேறு ஜமாத்துக்கள் பிரிவுகள் உண்டு என்பதை மாற்றுமதச் சகோதரர்கள் வேவ்வேறு கோணங்களில் பார்க்க முற்படுகின்றனர். இந்த ஒற்றுமைத்தன்மைகள்தான் இந்த முஸ்லிம் சமூகத்திற்குள் பல்வேறு சந்தேகங்களை ஒப்புவித்திருக்கிறது என்பதையும் முஸ்லிம்கள் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. தலைப்பிறை பார்ப்பதில் சிக்கல், பெருநாள் கொண்டாடுவதில் முரண்பாடு, கைவிரலை ஆட்ட வேண்டுமா இல்லையா? என்பதில் பிரச்சினை, ஆளுக்கொரு பள்ளியும், தாமே தலைவராக இருக்க வேண்டும் என்கிற நிலைமைகள் பலவும் காணப்படுவதன் காரணமாக முஸ்லிம்களே தம் இனத்தின் வேடதாரிகளை காட்டிக் கொடுக்க வேண்டிய இக்கட்டான ஒரு சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஏனைய சமூகத்திற்குள் சில முரண்பாடுகள் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக வருகின்றபோது அவர்கள் ஒன்றாகிவிடுகின்றனர். ஆனால் முஸ்லிம்கள் விடயத்தில் பல்வேறு அமைப்புக்களாக பிரிந்திருப்பதும் இந்த அவல நிலைக்கு காரணம் என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டியிருக்கிறது.

இஸ்லாத்தில் இல்லாவற்றை நவீனம் என்கிற பேரில், மார்க்கத்தைப் பற்றிய அறிவு இல்லாதவர்கள் பலர் தங்களுக்கான பள்ளிவாசல் ஒன்றைக் கட்டிக்கொண்டு சர்வதேசப் பிறை என்பதும், இறந்தவர்கள் மீது எதுவும் செய்யக் கூடாது என்று ஒருசாராரும், தலையில் தொப்பியே அணியத் தேவையில்லை என்று ஒருசாராரும், மார்க்கத்தைப் பற்றியும், அதிலுள்ளவர்கள் பற்றியும் பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்ளவதும்தான் சிலரின் செயற்பாடுகள் என்பதைக் கண்டும் காணாமல் இருந்தமையினால்தான் இன்று அகில இலங்கை ஜம்யத்துல் உலமா சபையின் தலைவரையும், செய்யப்பாடுகளையும் விமர்சிக்கும் அளவுக்கு நிலை படமோசமாக இருப்பதையு; காணக்கூடியதாக இருக்கின்றது. எனவேதான் கிழக்கில் நிறைந்து வாழ்கின்ற முஸ்லிம்கள் தமக்குள் இருந்து குழிபறித்தவர்களை உரிய வேளைகளில் தட்டிக் கேட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. அத்துடன் உண்மையான உலமாக்களையே பார்த்து விமர்சிக்கும் அளவுக்கு இன்றும் இவர்கள் காணப்படுவது கவலையான விடயமாகும் என்பதைத்தான் நாம் கூறவேண்டியிருக்கிறது.

**தந்திமகன்**

அதேவேளை கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் கலாநிதி ஹிஸ்புல்லா கூறிய கருத்துக்கள் இனக்குரோதத்தை வளர்க்கும் வகையில் காணப்படுவதாக நாட்டின் பிரதமர் முதற்கொண்டு இன்னும் பலரும் கருத்துத்தெரிவித்தி;ருக்கின்றனர். ஒருசிலர் பொலிசில் முறைப்பாடும் செய்திருக்கின்றனர். முஸ்லிம் தலைவர்கள் அரசின் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதற்கு ஒருவகையில் காரணமாக இருந்தவரும், முஸ்லிம் அரசியல்வாதிகளை ஒன்றாக்கிய பெருமைக்குரியவருமான பாராளுமன்ற உறுப்பினரான ரத்த தேரர் அவர்கள் இந்த நாட்டு முஸ்லிம்கள் விடயத்தில் சில பற்றுக்களைக் கொண்டிருக்கின்றார் என்பதைக் காண்பிக்கும் வகையில் ஒரு வேண்டுகோளையும் விடுத்திருந்தார். அதாவது, முஸ்லிம் சமூகத்திலிருந்து தற்போதுள்ள பிரதிநிதிகளைப் போல அல்லாது நாட்டை நேசிக்கும் புதியத் தலைமைத்துவமொன்று உருவாக்கப்பட வேண்டும். நம்பிக்கையில்லாப் பிரேரணைக் குறித்து தற்போது பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. நாம் கடந்த காலங்களில் பல நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை நாடாளுமன்றில் கொண்டுவந்துள்ளோம்.

எனினும், இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் தோல்வியில்தான் முடிவடைந்துள்ளன. எனவேதான், எம்மால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த விடயத்தில் ஸ்திரமான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்று நாம் நேரடியாக வலியுறுத்தியிருந்தோம். நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றில் வெற்றி பெறுமா என்பதைவிட, நாட்டு மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திச் செய்ய வேண்டும் என்பதில்தான் இரண்டு தலைவர்களும் கவனம் செலுத்த வேண்டும். இந்த நாட்டைப் பொறுத்தவரை அரசியல் கொள்கையொன்று இல்லாதமை பெறும் குறையாக இருக்கிறது. அரசியல்வாதிகளுக்கென்று கொள்கைகளை வகுக்க மதத்தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டால் நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் ஏற்படாது.

நாடு குறித்து தற்காலிகமாக ஆட்சிபீடத்தில் அமரும் அரசியல்வாதிகள் தீர்மானிக்ககூடாது என்பதுதான் எமது நிலைப்பாடாக இருக்கிறது. முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை, புதிய நபர்கள் நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்படவேண்டும். இப்போதுள்ள உறுப்பினர்கள் அன்றி, நாட்டை நேசிக்கும் நபர்கள் அந்த சமூகத்தில் இருந்து வர வேண்டும். இதனைத்தான் நாம் தற்போது எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்கிற கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். அதாவது தொடர்ந்து ஒரே நபர்களை தொடர்ந்தும் தெரிவு செய்யாமல் புதியவர்களை தெரிவு செய்ய வேண்டும். அத்துடன் இஸ்லாமிய மார்க்க அறிஞர்களை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்கின்றபோது சமயப் பற்றாளர் மன்றமாக பாராளுமன்றம் அமைகின்றபோது எவ்விதமான பிரச்சினைகளும் எழாது என்பதையும் நாம் இவ்விடத்தில் நோக்கச் செய்கின்றோம்.

அதேவேளை இலங்கைவாழ் முஸ்லிம்கள் விடயத்தில் உலகின் பலம்பொருந்திய இரண்டு அமைப்புக்களும் சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறன. அதில் ஒன்று ஐரோப்பிய யூனியனாகும். அதாவது, இலங்கையின் முஸ்லிம் சமூகத்தை நோக்கிய அரசியல் ரீதியான அழுத்தங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கவனம் செலுத்தியுள்ளன. இவ்வாறான செயற்பாடுகள் சமாதானம் மற்றும் ஒருமைப்பாடு செயற்பாடுகளுக்கு தடங்கலாக அமையும். இலங்கையின் முஸ்லிம் சமூகத்தை நோக்கிய அரசியல் ரீதியான அழுத்தங்கள் தொடர்பில் நாம் அதிகளவு கவனம் செலுத்துவதுடன் இந்த நடவடிக்கைகள் சமாதானம் மற்றும் ஒருமைப்பாடு செயற்பாடுகளுக்கு தடங்கலாக அமைந்துள்ளதாகவும் நாம் கருதுகின்றோம். தப்பான எண்ணத்தை தோற்றுவிக்கும், உறுதிப்படுத்தப்படாத குற்றச்சாட்டுகளை ஊடகங்கள் தொடர்ச்சியாக வெளியிடுகின்றமை சகியாமையை தூண்டுவதாக அமைந்துள்ளன.

சகல சமூகங்களிடையேயும் சமாதானத்தை பேணி நிலை நிறுத்துவது தொடர்பில் அனைத்து இலங்கையர்களுடனும் நாம் பக்கபலமாக உள்ளதுடன்இ சமய தலைவர்கள் மற்றும் இதர சமூக தலைவர்கள் அவர்களை வழிநடத்தி, வன்முறைகளுக்கு எதிராக குரலெழுப்ப வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றோம். அனைவருக்கும் பொதுவான சட்டத்தின் கீழ் நம்பிக்கை அல்லது இன வேறுபாடின்றி, பரஸ்பர மதிப்பு, சகிப்பு மற்றும் சமமாக நடத்தல் போன்றவற்றுக்கான நாட்டின் அர்ப்பணிப்பை சகல அரசியல் தலைவர்களையும் மீள உறுதி செய்யுமாறு நாம் கூட்டாக கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் குறிப்பிட்டிருக்கின்றது. அதேபோலவே, இலங்கையுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டு, பொருளாதார தடைவிதிக்க நேரிடுமென்கிற கருத்தினை உலகில் - 57 நாடுகளை கொண்ட இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பு எச்சரிக்கை ஒன்றையும் இலங்கை முஸ்லிம்கள் விடயத்தில் விடுத்திருக்கின்றமை நோக்கத்தக்கதாகும்.

எனவேதான், இலங்கையின்; முஸ்லிம் தலைவர்கள் பொறுமையுடன் காத்து பொறுமையான வகையில் தங்களுடைய கருத்துக்களை வெளியிட வேண்டிய தார்மீகக் பொறும் காணப்படுவதை இவ்வேளை சுட்டிக்காண்பிக்க விரும்புகின்றோம். மேலும், பௌத்த பீடங்களின் தலைவர்களைச் சந்தித்த முஸ்லிம் ஒற்றுமையான அரசியல்வாதிகள் முன்னில் அவர்கள் கூறிய விடயங்களையும் இச்சந்தர்ப்பத்தில் மீட்டிக் கொள்ள வேண்டியது இலங்கை முஸ்லிம்களின் பொறுப்பாகும்.

இலங்கை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் சந்திப்பு சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது. அவ்வேளை முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் கூட்டாக பதவி விலகியது ஏன் என்பது

12 ஆம் பக்கம் பார்க்க....

# மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகின்றதா சிறுபான்மையினம்?

இன்று இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு யுத்தம் பல வழிகளாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக தீவிரவாதி ஸஹ்ரானை முன்னிலைப்படுத்தி தீவிரவாதத்திற்கு சம்பந்தமில்லாத அதற்கு எதிரான முஸ்லிம்களை எப்படியாவது சம்பந்தப்படுத்தி குறித்த தீவிரவாதியின் பெயரால் ஒட்டுமொத்த முஸ்லிம்களை அடக்கி ஒடுக்க ஒருசில பேரினவாத சக்திகள் கங்கனங்கட்டிக் கொண்டு முந்தியடித்துக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த ஏப்பரல் 21ஆம் திகதிய தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் மிகவும் ஒரு மோசமன ஒன்றாகவே அது இருக்கின்றது. அந்த வன்முறைகளையும், தீவிரவாத செயற்பாடுகளையும் எதிர்க்கும் முஸ்லிம்கள் அதற்கு எதிராகவே இன்று தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். குறிப்பாக இஸ்லாமிய வரையறைக்குள் மிகவும் வெறுக்கத்தக்க ஒரு செயற்பாடே தற்கொலைத் தாக்குதல்களாகும். இதனை அடிப்படையாக வைத்து தமது சமூகத்திற்குள் யாரும் எதிர்பாராத விதமாக ஒருசில கடும்போக்குவாத முஸ்லிம் குழுவினால் சர்வதேச வலையமைப்பின் ஊடுருவலுடன் அவர்களின் பாணியில் மேற்கொண்ட குண்டுத்தாக்குதல்களுடன் சம்பந்தப்பட்டவர்களை முஸ்லிம் சமுகம் தமது சமூகம் என்றும் பாராது உடன் காட்டிக் கொடுத்து சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கைது செய்ய முன்வந்தமை ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாகும்.

காரணம் இந்த நாட்டில் கடந்த பல தசாப்தகால வன்முறைக் கலாசாரங்களை சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால் 1983 காலகட்டத்தில் இந்த நாட்டில் பாரியதொரு இரத் ஆறு ஓடியதை மறந்துவிட முடியாது. அதனைச் செய்தவர்கள் வேறு யாருமில்லை அவர்கள்தான் இன்று நல்ல பிள்ளைகள்போல் நடிக்கும் ஜே.வி.பி. எனும் பௌத்த சமுகத்தைச் சேர்ந்த இனவாத சிங்களக் குழுக்களாகும். இவர்கள் தென்பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களை இலக்கு வைத்து மேற்கொண்ட அந்தக் கொடூரமான கொலைக்கலாசாரத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அந்தளவிற்கு அவர்கள் தமிழ் இளைஞர்களை உயிரோட தீயிட்டுக் கொழுத்தி கொலை செய்து அவர்களின் உடமைகளை சூறையாடியிருந்தனர்.

தீவிரவாதம் என்பது மனித சமுகத்திற்குள் பிறந்தது என்றாலும் அதனை எதிர்பவர்களும், அதனை விரும்பாதவர்களுமே அதிகம். ஆனால் இன்று குறிப்பாக இலங்கையில் நடப்பவையெல்லாம் சுய நலத்திற்கான ஒருவகையான கபட நாடகங்கள் என்றே கூறலாம். அதிலும் இந்த விடயத்தில் அரசியல் ஆசைகளும், உலக ஆசைகளும் பிடித்த ஒருசில பௌத்த துறவிகள் தமது பௌத்த தர்மங்களை தூக்கி எறிந்து விட்டு புத்த பெருமானின் நல்ல போதனைகளையும், வழிகாட்டல்களையும் கணக்கில் எடுக்காது செயற்படும் விதமானது பௌத்த தர்மத்தில் இப்படியும் இருக்கின்றதா? என சிறுபான்மைச் சமுகங்கள் சந்தேகங் கொண்டுள்ளனர்.

காரணம் மதப் போதகர்கள் மதப் போதகர்களாகவே மட்டும் இருக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொரு மனிதனையும் தீவிரவாத சிந்தனைகள், கடும்போக்குவாத சிந்தனைகளில் இருந்து மீட்டெடுத்து சமுகத்தில் நற் பிரஜைகளாக அவர்களை ஆக்க வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் அவர்களுக்கு உண்டு. ஆனால் இன்று இலங்கையை எடுத்துக் கொண்டால் பௌத்த தேரர்கள் அரசியல் களத்தில் குதித்து அரசியல் செய்ய தமது பௌத்த ஆடைகளையும், அதன் தர்மங்களையும் விலைபேசி உண்ணா விரதங்களை மேற்கொண்டும், சட்ட விரோதமான முறையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டும் மக்களின் இயல்பு வாழ்க்கையை மட்டுமல்லாது இலங்கையின் அரசியலமைப்புச் சட்டங்களையும், நீதித்துறை நடைமுறைகளையும் மீறி அரசாங்கத்தின் நடவடிக்கைளை முடங்கச் செய்கின்றனர்.

இவ்வாறான விடயங்கள் இன்று இலங்கையில் மக்கள் மத்தியில் பாரிய குழப்ப நிலைமைகளையும், பிரச்சினைகளையும் தோற்று விப்பதுடன் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களை அச்சமடையவும் செய்கின்றனர். இந்தச் செயற்பாடுகள் பல்லின சமுகங்கள் வாழும் இந்த நாட்டில் அவ்வளவு ஆக்கபூர்வமான செயற்பாடுகளாக அமையாது என்பதும். இது இலங்கையின் எதிர்கால செயற்பாடுகளுக்கு மிகவும் ஆபத்தானதொரு விடயமாகவே இருப்தாக கல்விமான்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இலங்கையின் அரசியல் நடவடிக்கைளில் பௌத்த தேரர்கள் பங்குபற்றாது செயற்பட்டால் பல பிரச்சினைகளை அரசியலமைப்பின் சட்ட ரீதியாகவும், நீதிமன்றங்கள் ரீதியாகவும் தீர்க்கப்படலாம் என சமுக ஆர்வளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி ஏற்பட்ட துர்பாக்கிய நிகழ்வு அனைவரையும் கவலையிலும், சோகத்திலும் ஆழ்த்திய ஒரு மறக்க முடியாத சம்பவமாகும். இது விடயத்தில் ஒருசில கடும்போக்குவாத முஸ்லிம் குழுக்கள் சம்பந்தப்பட்டுள்ளதால் ஒட்டுமொத்த முஸ்லிம் சமுகத்தினையும் தலைகுனிய வைத்துள்ளதுடன் முஸ்லிம் சமுகத்தின் இஸ்லாமிய கலாசார விடயங்களிலும் பல பாதிப்புக்களையும், பின்னடைவுகளையும் எற்படுத்தி விட்டமை முழு முஸ்லிம் சமுகத்தினையும் பாரிய மன வேதனைக்குள் உட்படுத்தியிருக்கின்றது.

குறிப்பாக மேற்படித் தாக்குதல்களை காரணமாக வைத்து காடையர்கள் முஸ்லிம் சமுகத்தினை தாக்கி அழித்து வருகின்றமை மிகவும் வேதனையானதும், கடுமையாக கண்டிக்கத்தக்க விடயமுமாகும். முக்கியமாக அவர்களின் பிரதான நோக்கம் முஸ்லிம்களை அரசியல், பொருளாதார ரீதியாகவும், சமய ரீதியாகவும் ஒடுக்குவதாகும். இந்த விடயங்களே இன்று ஒருசில கடும்போக்குவாத பௌத்த குழுக்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அன்மையில் கம்பஹா, குறுநாகல் மற்றும் சிலாபம் போன்ற இடங்களில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் எல்லாம் மேற்குறிப்பிட்ட அந்த மூன்று விடயங்களுக்குள்ளும் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களாகும்.

**சத்தார் எம் ஜாவித்**

ஒரு நாட்டின் படையினர் என்பது அவர்கள் அந்த நாட்டை அழிவுகளில் இருந்து பாதுகாப்தாகும். அது இயற்கை அனர்த்தங்களாக இருக்கலாம். அல்லது யுத்தம், வன்முறைகள் போன்ற விடயங்களாக இருக்கலாம் இது யாருக்கு வந்தாலும் அதனை தடுத்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் பாதுகாப்புத் தரப்பினருக்கே உள்ளது. ஆனால் இன்று இலங்கை வாழ் முஸ்லிம்கள் விடயத்தில் வேலியே பயிரை மேய்வதாக சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றமை ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பாதிப்புக்குள்ளும், அச்சத்திற்குள்ளும் இட்டுச் சென்றுள்ளதுடன் இந்த விடயங்கள் இன்று சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கின்றது.

இன்று இலங்கை வாழ் முஸ்லிம்கள் நீதி, நியாயங்கள் இன்றி மிகவும் ஒரு ஆபத்தானதும், சங்கடமானதுமான நிலைமைகளுக்குள் மாட்டிக் கொண்டு எடுத்ததுக்கு எல்லாம் ஸஹ்ரானின் பெயரைக் கொண்டு பழி தீர்க்கும் விடயங்களாகவே ஒவ்வொன்றும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த விடயங்கள் எல்லாம் அப்பாவி மக்களையும், சமயத்தையும் பாதிக்கின்றது என்ற அடிப்படையில் நாட்டில் அமைதி, சமாதானம் என்பன நிலைபெற வேண்டும் என்ற மிக உயர்ந்த ஒரு நிலைப்பாட்டிலேயே இந்த அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து ஆட்சி நடாத்திக் கொண்டிருந்த அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் மிகவும் இக்கட்டானதொரு நிலையில் தமது பதவிகளை இராஜினாமாச் செய்தனர் என்ற விடயம் இருக்கின்றது.

இதுவரை காலமும் எந்தவொரு சமுகத்துடனும் சண்டை சச்சரவுகளில் ஈடுபடாது எல்லாச் சமூகங்களுடனும் ஒன்றினைந்து சமாதானத்துடனும், புரிந்துணர்வுடனும் வாழ்ந்த முஸ்லிம் சமுகம் இவர்களின் செயற்பாடுகள் விடயத்தில் அதிர்ச்சியடைந்துள்ளனர் எனலாம்.

எது எவ்வாறாக இருந்தாலும் இன்றைய நிலையில் முஸ்லிம்கள் சமய மற்றும் சமுக ரீதியாக இலக்கு வைக்கப்படுவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்தி இந்த நாட்டில் சமுக ஒற்றுமையை நிலைபெறச் செய்ய வேண்டும். சட்டத்தை சகலருக்கும் சமமானது என்ற அடிப்படையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே ஒருசிறு குழுக்கள் செய்த பாதகச் செயற்பாடுகளை காரணமாக வைத்து இலங்கை வாழ் முஸ்லிம்களை தீவிரவாதிகள் என்றும் அவர்களை ஏனைய சமுகங்கள் குற்ற உணர்வுகளுடன் பார்ப்பதையும், முஸ்லிம் பெண்களை அவர்களின் அபாய போன்ற ஆடைகள் விடயத்திலும், பள்ளிவாசல்கள், குர்ஆன் மத்தரஸாக்கள், அராபிக் கல்லூரிகள் விடயத்தில் அவர்களின் சமய வரையறைகளை மீறி அவர்கள் மீது கடும்போக்குடன் நடக்கும் விடயங்களில் அரசாங்கம் உடனடியாக தலையிட்டு சட்டத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் கடும்போக்குவாத தேரர்கள், மற்றும் காழ்ப்புணர்ச்சி கொண்ட இனவாத அரசியல் வாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராக தெரிவிக்கும் கருத்துக்களுக்கும், மத நிந்தனைகளுக்கும் தடைகளை விதித்து முஸ்லிம் சமுகத்தினை பாதுகாக்க வேண்டிய கடப்பாடும், பொறுப்பும் அரசாங்கத்திற்கும், பாதுகாப்புத் தரப்பினருக்கும் உள்ளதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

# பல்வேறு மொழிகளைக் கற்றுக் கொள்வது மனிதருக்கு மாத்திரம் உரித்தான ஒன்றா?

அட்டாளைச்சேனை
எஸ்.எல். மன்சூர்

இன்று மொழி பற்றிய விடயங்கள் பல்வேறு தரப்பினாலும் கூறப்பட்டு வந்தபோதிலும் உலகிலுள்ள மொழிகளை அதிகம் அதிகம் யார் பேசுகின்றாரோ அவர் உலகின் முதல்;வனாகவே மதிக்கப்படுவார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஓர் அறிஞன் கூறுவதுபோல ஒரு மொழி தெரிந்தால் அவன் ஒருவனாவான், இரண்டு மொழிதெரிந்தால் இருவராவான், மூன்று மொழி தெரிந்தால் மூவராவான், நான்கு தெரிந்தால் நான்கு என்றும் அவனுக்கு எத்தனை மொழிகள் பேச முடியுமோ அத்தனை மனிதர்களுக்குச் ஒருவன் சமனாவான் என்;று கூறப்படுகின்றது. இந்தியாவின் முன்னாள் தலைவரான மன்மோகன் சிங்குக்கு பல மொழிகள் தெரிந்தவராகவும் எட்டுக்கும் மேற்பட்ட டாக்;டர் பட்டங்களையும் இன்னும் பல விருதுகளையும் பெற்றிருந்தார். அதுபோல் அன்று இத்தாலியரான கான்ச்டன்டைன் சோசப்பு பெச்கி**(Constantine Joseph Beschi)** என்பர் தமிழின் பற்றுக்கொண்டு தமிழைக் கற்றமையினால் அவர் வீரமாமுனிவராகினார். இவர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சிறப்பான பணிகளைச் செய்து, 23 நூல்களைத் தமிழில் எழுதியதுடன், இயேசு கிறித்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளையும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய புனித யோசேப்பின் வரலாற்றையும் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ப 'தேம்பாவணி' என்ற பெருங்காவியமாக இயற்றியது இவரின் தமிழ்ப் புலமைக்குச் சான்றாக உள்ளமையை வரலாற்றில் பார்க்கிறோம்.

எனவேதான் ஒருவனுக்கு பல்வேறு மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளமை கண்கூடு. இன்று விரிந்துகிடந்த உலகம் உள்ளங்கைகளுக்குள் வந்திருக்கிறது. புதி;ய தொழில்நுட்பம் மனிதர்களை ஒன்றுசேர வைத்திருக்கிறது. யாவருக்கும் அனைத்தும் தெரிந்திருக்க வேண்டிய இன்றைய நாட்களில் அதனை தடுக்க முயல்வது தனித்துவமான ஒரு நிலைக்குள் கொண்டு செல்லும் என்பதை ஏன் உணர்ந்து கொள்ள முடியாமல் இருக்கின்றனர். இலங்கையில் பல்லின மக்கள் வாழ்ந்து வந்தபோதிலும் இரண்டு மொழிகள் பிரதானமான இடத்தையே வகிக்கின்றது. முஸ்லிம்களைப் பொருத்தமட்டில் அவர்களின் சமயம் சார்ந்த மொழியை உயிரிலும் மேலாக மதிக்கின்றனர். அந்த மொழியில்தான் சமய அனுஷ்டானங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் காணப்படுகின்றது. இன்று பல இலட்சக்கணக்கான இலங்கை மக்கள் மத்திய கிழக்கிலுள்ள நாடுகளில் தெரிந்தோ தெரியாமலோ அந்நாட்டு மொழிகளை கற்றுக் கொண்டுதான் வருகின்றனர். இதனை யாரும் தடுத்துவிட முடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

இருப்பினும் அண்மைய நாட்களில் ஏற்பட்டுள்ள சில முரண்பாடுகள் காரணமாக அரபு மொழி மீதான தடைகள் பற்றியும் இப்போது பேசப்படுகின்றது. அரபு மொழியில் காட்சிப்படுத்துதல் தொடர்பான விடயங்களிலும் இப்போது தடை ஏற்படுவதற்கான சுற்று நிருபங்களும் வெளியாகியிருப்பதாகக் கூறப்படுகின்றது. சில பிரதேசங்களின் அதிகார மட்டங்களில்கூட இதனை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. எவ்வாறாகினும் முஸ்லிம்கள் ஐவேளை தொழுகைக்காக அழைப்பதும், தொழுகை நடாத்துவதும், புனித அல்குர் ஆன் ஓதுவதும், சமய விடயங்களை நடாத்துவதும் அரபு மொழியிலாகும். ஆகையினால் எதிர்காலத்தில் இதன் தாக்கம் எவ்வாறாக அமையப் போகிறது என்பதை சமயத் தலைவர்களும், முஸ்லிம் சமூகத்தலைவர்களும், மொழியில் அறிஞர்களும் பேச வேண்டிய காலகட்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

மொழி ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி எனக்கூறியபோதிலும், மொழி, அதைப் பேசுகின்ற இனத்தின் அரசியல், கலை, வரலாறு, சமூகநிலை, பழக்கவழக்கம், ஒழுக்கநெறிகள் மற்றும் எண்ணங்கள் போன்ற பல வாழ்வியல் கூறுகளையும் பண்பாட்டு நிலைகளையும் வெளிப்படையாகவும் விளக்கமாகவும் உள்முகச் செய்திகளாகவும் கொண்டு விளங்குகிறது. எனக் கூறுவர். அந்த வகையில் உலகில் ஏறத்தாழ 6000 மொழிகள் தொடக்கம் 7000 மொழிகள் வரை இருக்கக் கூடும் என அறிஞர்கள் கூறுகின்றனர். ஒரு மொழி காலப்போக்கில் மாற்றம் பெற்று



கிளைமொழிகளாகப் பிரிகின்றது. இத்தகைய மொழிகள் ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என அழைப்பர். இன்றைய உலகில் பேசப்படும் பெரும்பாலான மொழிகள் இந்தோ - ஐரோப்பிய, சீன-திபெத்திய குடும்பங்களைச் சேர்ந்தவை. தற்போது பேசப்படும் மொழிகளில் பல இந்நூற்றாண்டுக்குள் அழியும் நிலையில் உள்ளன.

நாம் பேசுகின்ற நமது தாய்மொழி செம்மொழியாக பிரகடணப்படுத்தப்பட்டிருக்கிறது. கல்தோன்றா மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த மொழியாக நமது தமிழைக் குறிப்பிடுவர் தமிழுக்கு நீண்ட நெடிய விளக்கங்களும், விபரங்களும் உண்டு. இன்னும் அதனை ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்து கொண்டிருக்கின்றனர். ஆகவேதான் தெற்கு ஆசியாவில் ஏறத்தாழ 22 கோடி மக்களால் பேசப்படும் திராவிட மொழிகள், இந்திய பழங்கால வரலாற்றை புரிந்துக் கொள்ள மட்டும் உதவவில்லை, மொத்த யுரேசியாவின் வரலாற்றையும் புரிந்துக் கொள்ள உதவுகிறது. திராவிட மொழி குடும்பத்தைச் சேர்ந்த 80 மொழிகளை, தெற்கு மற்றும் மத்திய இந்தியா மற்றும் இந்தியாவின் அருகே உள்ள நாடுகளில் வசிக்கும் ஏறத்தாழ 22 கோடி பேர் பேசுகிறார்கள். இந்த திராவிட மொழிகள் 4,500 ஆண்டுகள் பழமையானது எனக் கூறுகின்றனர்.

அந்த வகையில் ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ள மொழிகள் தான் உதவுகிறது. உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழிகளுள் 10 மொழிகள் முன்னிலை வகிப்பதை அறியக் கூடியதாக இருக்கிறது. அதில் உலக மக்களால் அதிகம் பேசப்படும் மொழி என்று கேட்கும் போது நாம் ஆங்கிலம் என்று தான் கூறுவோம். அது தவறு. ஆங்கிலத்தை விட அதிகளவு மக்களால் பேசப்படும் மொழியாக மாண்டரின் மொழி என்கிற சீனர்கள் பேசுகின்ற மொழியை உலகில் சுமார் 1 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் பேசுகின்றனர். அதேவேளை ஆங்கில மொழியை உலகில் 508 மில்லியன் மக்கள் பேசுகின்றனர். ஆகையினால் இது இரண்டாம் இடத்திலும், மூன்றாவது இடத்தில் சுமார் 497 மில்லியன் மக்கள் பேசுகின்ற இந்தி மொழியும், நான்காவது இடத்தில் ஸ்பானிஷ் மொழியை சுமார் 392 மில்லியன் மக்களும், ஐந்தாவது இடத்தில் ரஸ்ய மொழியை உலகில் 277 மில்லியன் மக்களும், ஆறாவது இடத்தில் 246 மில்லியன் மக்கள் அரபு மொழியை பேசுவதாகவும், ஏழாவதாக பெங்காலி மொழியை 211 மில்லியன் மக்களும், எட்டாவதாக சுமார் 191 மில்லியன் மக்கள் போர்ச்சுகீச மொழியையும், ஒன்பதாவது இடத்தில் மலாய்-இந்தோனேசியன் மொழியை சுமார் 159 மில்லியன் மக்கள்; பேசுவதாகவும், பத்தாவது இடத்தில் பிரெஞ்சு மொழியை சுமார் 129 மில்லியன் மக்கள் பேசுவதாகவும் ஆய்ந்திருக்கிறார்கள் மொழியியல் அறிஞர்கள்.

ஆக நமது தமிழ் எங்கே? நமது ஏனைய மொழிகள் எங்கே? என்பதை தேடித்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆக மொத்தத்தில் நாம் உலக மொழிகளையும் கற்க வேண்டியதன் அவசியம் இதிலிருந்து புரிகிறது அல்லவா? ஜப்பானியர்கள் தங்களுடைய மொழியை மாத்திரம்தான் கற்பார்களாம். அவர்களுடைய மொழியை உலக மக்கள் கற்க வேண்டுமென ஊக்குவிப்பார்களாம். ஏனெனில் நமது மொழி உலக மொழியாக வேண்டும் என்பதற்காகவே. ஆனால் நாமோ நவீனத்துவமிக்க காலகட்டத்தில் இருந்து கொண்டு இன்னும் உலகிற்குள் நுழைவதிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்கிற நிலைமைதான் இப்போது காணப்படுவதாக நண்பர் ஒருவர் கூறியிருந்தார்.

நாம் அராபிய மொழியைப் பற்றிப் பார்ப்போமானால் கி.பி 4 ஆம் நுற்றாண்டு காலப்பகுதிகளில் இஸ்லாம் அராபிய தீப கற்பத்தில் உதயமாகும் வரை பாரம்பரிய அரபு மொழியானது ஒரு செல்வாக்கு பெற்ற மொழியாக காணப்படவில்லை. அரபு மொழி என்பது கி.பி. ஆறாம் நுற்றாண்டுகளின் ஆரம்ப பகுதியில் அங்கு வாழ்ந்த நாடோடி பழங்குடி மக்களால் போசப்பட்ட ஒரு சிறுபான்மை மொழியாகும். இஸ்லாத்தின் வருகையுடன் பாரம்பரிய அரபு மொழியின் வரலாறே மாறியது. முகம்மது நபியின் பேச்சு மொழி, குர் ஆன் அரபு மொழியில் இறக்கப்பட்டதாலும் அரபு மொழிக்கான தேவை அதிகரித்தது. எனவே ரோம், பாரசீகம் போன்ற முந்தைய வல்லரசு நாடுகளும் சீனா, ஆப்பிரிக்கா போன்ற இடங்களில் இருந்தும் பலர் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி இஸ்லாத்தை அறிந்துகொள்ளல், வியாபாரம் போன்ற தேவைகளுக்காக வெளிநாட்டவர்கள் வரவு அதிகரித்தமையினால் அரபு மொழியின் இலக்கண இலக்கிய மறபுகளை கற்பதற்கும் ஆய்வு செய்வதற்குமான வாய்ப்புக்களின் தேவை உலக அளவில் ஏற்படலாயின.

அரபு மொழி ஒரு செழுமை மிக்க மொழியாகும். சொற் சுருக்கம், கருத்து செறிவு உண்மை தன்மை, பிற மொழிகளிடம் இருந்து இறவல் வாங்காத தனித்துவம் போன்றன அதன் சிறப்பு அம்சங்களாகும். அரபு மொழியில் 28 எழுத்துக்கள் காணப்படுகின்றன. அரபு மொழியானது உலகில் காணப்படுகின்ற ஏனைய மொழிகளைவிட பல வகையிலும் வித்தியாசமான இலக்கண முறையினை கொண்டுள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்வாறு உலகில் காணப்படுகின்ற முக்கிய மொழிகளில் இதுவும் ஒன்றாகும்.

ஆக மொழி ஒரு சமூகத்தின் உயிர் நாடியாகவும், மனித உள உணர்வுகளோடும், மனித உறவாடலுக்கான சாதனமாகவும் காணப்படுகின்றது. அதனை சரியாக பிரயோகிக்கத் தெரிந்தவன் மனிதர்களையே ஆள்கிறான். என்பதாக வல்லுநர்கள் கூறுகின்றனர். இன்று இலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் தாய் மொழியாக தமிழையே பேசுகின்றனர். பெரும்பான்மையினரோடு இணைந்து வாழ்ந்து வருவதால் அவர்களில் அதிகமானோர் சிங்கள மொழியையும் பேசுகின்றனர். ஒரு காலகட்டத்தில் தென் இலங்கையில் தமிழை பேச முடியாமல் இருந்தபோது அதனை மிகத் துணிவுடன் பேசியவர்கள் முஸ்லிம்கள். இன்று நிலைமை மாறியிருக்கிறது. தமிழைப் பேசினாலும் முஸ்லிம்களுடைய மார்க்க ரீதியான மொழியை வெளிப்படுத்துவதிலும் சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன. நாட்டின் பெரும்பான்மையின மக்கள் இதன் கருத்துக்களை பிழையாக விளங்கியிருக்கின்றனர் என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. அது ஒரு மொழி என்பதுதான் உண்மையான யதார்த்தமாகும். மத்திய கிழக்கில் சுமார் ஓரிரண்டு மாதங்கள் வேலை செய்தால் அவர்களும் அந்நாட்டு மொழியைப் பழகிவிடுவர்.

நமது நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து சென்றிருக்கின்ற பல இலட்சக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளில் அந்நாட்டு மொழிகளை பேசியே காலத்தைக் கழிக்க வேண்டியிருக்கிறது. தமிழை வீட்டு மொழியாக பேசினாலும் எதிர்கால சந்திகள், அந்நாடுகளில் பிறந்தவர்களுக்கு தமிழ் வேண்டாத ஒரு மொழியாகவே காணப்படுகின்றது. ஆதலால் தான் நமது தாய்மொழி மங்கி மறைவதிலிருந்து விடுபடும் நோக்கில் அந்நாட்டு மொழிகளில் சின்னஞ்சிறுசுகளுக்கு தமிழ் மொழி கற்பிக்கப்படுவதாக நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

எனவேதான் மொழி ஒரு ஊடகமாகும். ஒருவரோடு ஒருவர் தொடர்புகளை மேற்கொள்ள மொழி அவசியமாகும். மொழிக்கு ஆரம்ப வரலாறு என்றோ, எந்த மொழி முதல் தோன்றியது என்றோ கூற முடியாத போதிலும் இன்றைய உலகில் மொழி அவசியமான ஒன்றாகவே காணப்படுகின்றது. கருத்துக்களை அறிந்து கொள்ள, நவீனத்துமிக்க நாகரீக பண்பாடுகளை அறிந்து கொள்ள, புரிந்து கொள்ள உலகளவில் முன்னிலையிலுள்ள பத்து மொழிகளில் சிலவற்றையாவது நாம் பேசக் கற்றுக் கொள்ள வேண்டி அவசியமும் காணப்படுகின்றது. நாம் எமது நாட்டுக்கே உரித்தான சிங்களத்தையும், இணைப்பு மொழியான ஆங்கிலத்தையும் அவசியம் கற்க வேண்டும். மொழி புரிந்துணர்வினை ஏற்படுத்தும். பல மொழிகளை கற்பதானது மனிதர்களுக்குள்ள விசேட தன்மையாகும். இந்தியாவில் சிறுவன் ஒருவன் 400மொழிகளில் பேசுவதாக அறிந்திருக்கிறோம். எனவே, பல்லின மக்களோடு வாழ்கின்ற மக்கள் பல்வேறு மொழிகளைக் கற்பதன் காரணமாக முரண்பாடுகள் தோன்;றுவதைக் கூட தவிர்த்துக் கொள்ளலாம்.

# அன்றாட வாழ்வின் அறிவியலின் பயன்பாடு

லீனா ஜெசி

எழுவது முதல் விழுவது வரை அன்றாடம் நம் செயல்பாடுகளில் அறிவியலின் பயன்பாடு நீக்கமற நிறைந்திருப்பதில் எட்டுணையும் ஐயமில்லை. விழித்தவுடனேயே தேவைப்படும் நீர் முதல் உறக்கத்தின் போது தேவைப்படும் கொசு, மூட்டைப் பூச்சி நீக்கிவரை விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் இல்லாமல் எந்த நாளும் கழிவதில்லை. இவற்றின் எண்ணிக்கை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக பல்கிக் கொண்டே செல்கிறது. அவற்றை ஒவ்வொன்றாக இப்பொழுது விரிவாகக் காண்போம்.



நீர்:- வெளியில் செல்வது, பல் துலக்குவது, முகம் கழுவுவது,நீராடுவது, துணி துவைப்பது, பாத்திரங்கள் துலக்குவது, அரைப்பது, கரைப்பது, சமைப்பது இப்படி தொடர் பணிகள் அத்தனைக்கும் நீர், குளிர்நீர், வெந்நீர் போன்றவைகள் தேவைப்படுவதால் அவற்றிற்குரிய விஞ்ஞான சாதனங்களின் தேவையும் அவற்றின் பயன்பாடும், அவை குறையுடையவையாயின் அவற்றை செப்பம் செய்யும் முறைகளும் நாம் அறிந்திருப்பது இன்றியமையாததாகும்.

உண்டி:- சிற்றுண்டி, பேருண்டி எதுவாயினும் அவை கலப்புணவாக, சரிவிகித உணவாக, ஊட்டம் மிக்கதாக, உண்ணத்தக்கவையாக, உடலுக்கு ஊறு விளைவிக்காததாக, காலத்தால் அளவாக பசித்து புசிப்பதாக, வலிமை சேர்ப்பதாக, நோய்களுக்கு காரணம் இல்லாததாக, வயதுக்கும், தட்பவெப்ப நிலைக்கும் தக்கதாக அமைய அறிவியல் அறிவு இன்றியமையாததாக அமைகின்றது.

உடை:- மானங்காப்பதாக, தளர்வோ, இருக்கமோ, மிகுதியாக இல்லாததாக, தட்பவெப்ப நிலைகளால் குளிர் நடுக்கமோ, வெப்ப வியர்வை மிகையோ உடலில் தோன்றா வண்ணம் அமையும் உடுப்புக்கள், எளிதில் தீப்பிடிக்காத, சீக்கிரம் உலர்ந்து விடுவதாக அந்தந்த சமயங்களுக்கு ஏற்ற உடுப்புக்கள், பருத்தி பட்டு, கம்பளி போன்ற வகைப்பாடுகள் அறிந்து உடுத்த அறிவியல் மிகப் பயன்பாடு மிக்கதாகும்.

உறையுள்: -கூரையோ தளமோ சிறு பெரு சந்துகல் அற்றதாக கசிவு இல்லாததாக ஓதம் அற்றதாக இதே குறைகள் சுவர்களில், தரைகளில் இல்லாததாக, பலகணிகள், கதவுகள் தேவைப்படும்போது திறக்கவும், தேவை இல்லாத போது நன்கு மூடவும் தக்கவையாக, ஊதக்காற்று உள்வராததாக, கொசு, பூச்சிகள் போன்றவை வீட்டிற்குள் நுழையாதபடி பாதுகாப்பானதாக அமைய, வந்து விட்டால் நீக்குவதாக இவற்றை அறிந்து செயல்பட அறிவியல் பெரிதும் தேவைப்படுகிறது.

மின் சாதனங்கள்:- தூசு நீக்கி, ஈரம் அகற்றி, ஒட்டடை போக்கி போன்றவை பயன்படுத்தாத இல்லங்களே இல்லை என்ற அளவுக்கு அனைத்து மாதற்கும், பணியாட்களுக்கும் தேவையானதாகவும், அவை குறையுடைத்தாயின் அவற்றை செப்பம் செய்யும் முறைகள் அறிதல் இவை அறிவியல் அன்றாடம் பயன்படுத்தலின் நிலையைப் பெரிதும் உணர்த்தும்.

மருந்து:- நோய் வருமுன் காக்கவும், வந்த பின் போக்கவும், இன்று வீரிய மருந்துகள், பக்க விளைவுகள் ஏற்படுத்தாவண்ணம் புதிது புதிதாய் தேவைப்படுகின்றன.புதிய நோய்கள் பல்கியதாய்ப் படை எடுக்கின்றன.மருத்துவர் கற்காப் பிணிகள் பற்பல தோன்றி அவர்களையே அச்சுறுத்துகின்றன. மனிதனின் புறத்தும் அகத்தும் உள்ள உறுப்புகட்கு தனித்தனியே நுணுகிக் கற்ற வைத்தியர்கள் இன்று பற்பலர். பிறப்பு விகிதத்தை கட்டுக்குள் வைத்து, இறப்பு விகிதத்தை நன்று குறைத்திட பலரும் முயற்சித்து வருகின்றனர். அவர்களின் அறிவுரைகளை சமுதாயம் முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

தோட்டக்கலை, உழவு:- வித்து முளைக்க, துளிர் விட,பூக்க,காய்க்க, பழுக்க,பூச்சி, புழு அரிப்பு அணுகாது காக்க அறிவியல் அன்றாட வாழ்வில் பெரிதும் தேவையாகிறது. ஊட்டமுள்ள கீரைகள், காய்கள், பழங்கள், காய்கறிகள் நாம் பெற்றுப் பயன்பெற விஞ்ஞானம் தேவையாகிறது.

தொழில்:- எந்தத் தொழிலானாலும் அதைச் சார்ந்த தொழிற்சாலைக்கு இயந்திரங்கள் தேவைக்கு அறிவியல் துணை நிற்க வேண்டும். திறன் மிக பொருள்கள் உற்பத்தி பெருக, குறுகிய கால்ம் குறைந்த செலவில் தரமான கண்டு முதல் கண்டு பொருளாதார வளர்ச்சி பெற அறிவியலாலர்களின் நுண்ணறிவு, தொடர்முயற்சி, புதிய கண்டுபிடிப்புகளின் அணிவகுப்பு இவற்றிற்கு விஞ்ஞானத்தின் பயனபாடு தொடர்ச்சியான, இன்றியமையாத தேவையாக அமைகின்றது.

இசை, இசைக்கருவி:- கவலையை மறக்க, மகிழ்ச்சி அடைய இசை, மெல்லிசை,இன்னிசை, கருவி இசை, பஜனை, கர்நாடக இசை, காலட்சேபம், ஹரிகதை, வில்லிசை, கீழ்நாட்டு மேல் நாட்டு இசைக்கருவிகள், இசைத்தட்டு, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்,நாட்டியம், நுண்கலைகள், சின்னத்திரை, நாடகம் இவற்றிற்கு தேவைப்படும் கருவிகள் காண விஞ்ஞானம் தேவை.

தகவல் அறிய:- செல்பேசி, தொலைபேசி, கணினி,மடிக்கணினி, மின்னஞ்சல், வலைப்பூ, தினசரிகள்,வாரம் மும்முறை,இருமுறை,ஒருமுறை, மாதம் மும்முறை,இருமுறை,ஒருமுறை, காலாண்டு, அரையாண்டு இதழ்கள், ஆண்டுமலர்கள், சிறப்பு நாட்கட்கான மலர்கள் இவைகளை நாம் பெற்றுத் துய்க்க பல கருவிகள், இயந்திரங்கள் தேவைக்கு அறிவியலை நாம் துணை கொள்ள வேண்டும்.

ஒய்வு:- ஒய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழித்து மன நிறைவு பெற, மகிழ மகிழ்வூட்ட, பலருடன் கலந்து அனுபவிக்க, மழலைகளோ, மூத்து முதிர்ந்தோரோ, ஆடவரோ, மாதரோ எத்திறத்தார் என்றாலும் ஒள்ரிவனவும், வெளிச்சம் தருவனவும், புழுக்கம் போக்குபவையும் அறிவியலின் கொடைகளே!

சுற்றுச் சூழல்:- சுற்றுச் சூழலின் தட்பவெப்பத்தை சமனப்படுத்தத் தேவையான இய்ந்திரங்கள் இன்றீயமையாதவை ஆகின்றன.

அவற்றைப் பெற அறிவியல் பெரிதும் தேவையாகிறது. நம்முடைய தேவைக்கு வசதிக்கு தேவைகள் பற்பல. இவை இன்றைய நவீன சூழலில் பெரிதும் வேண்டப்படுகின்றன. அறிவியலின் கொடைகளாலேயே இவை ஈடுகட்டப் படுகின்றன.

போக்கு வரத்து சாதனங்கள்:-

பூமியில் பாலையில் கடற்கரையில் நீர் மீது நீருள்ளே,வானில், மலைமீது அடர்காட்டில், நிலவில் செவ்வாயில் என்று மக்கள் பயணிக்க இருப்புப்பாதை ஊர்திகள், அதிவிரைவு மெட்ரோ, மோனோ தொடர் ஊர்திகள் இப்படி யாவினுக்கும் அறிவியலின் பயன்பாடு அன்றாடம் தேவைப்படுகிறது.

# மக்களுக்கு பயனளிக்கும் தகவலறியும் உரிமைச் சட்டம்

றாசிக் நபாயிஸ்
(BA, MA) சமூகப்பணியாளர்,
மருதமுனை

2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற, மறுசீரமைப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் ஏகமானதாக நிறைவேற்றப்பட்ட 12ஆம் இலக்க தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமைகள் தொடர்பான சட்டம் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி மக்களுக்காகச் செயற்படத் தொடங்கியது. இதன்படி 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு 02 வருடம் பூர்த்தி. இதன் மூலம் தகவலறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் மக்களை வலுப்படுத்தல் ஆகிய இரு விடயங்களிலும் குறிப்பிடக்கூடிய வெற்றிகள் அடையப் பெற்றுள்ளது. தற்போது நாடு முழுவதிலும் பரந்துள்ள பல்வேறு மட்ட அரச நிறுவனங்களுக்கு, மக்களிடமிருந்து தகவல் கோரிக்கை விண்ணப்பங்கள் கிடைத்ததும் அவற்றுக்கு உரிய நேர காலத்திலும், போதிய தரத்துடனும் தகவல்களை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் தகவலுக்கான உரிமை என்றால் என்ன? என்று விளங்குவது மிகவும் பொருத்தமானதாகும். பொது நிறுவனங்களுக்கான குறிப்பாக அரச திணைக்களங்களில் உள்ள தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை உரிமையே தகவலிற்கான உரிமை எனப்படும். இந்த தகவலறியும் உரிமையை இரண்டு வகையாகப் பார்க்க முடியும் அடிப்படை உரிமை, சட்ட உரிமை இந்த தகவல் ஏன் அவசியமானது என்பது பற்றியும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜேம்ஸ் மடிசன் **(Jomes Madison)** அவர்கள் கூறும் போது 'அறிவு எப்பொழுதும் அறியாமையினையே ஆளுகின்றது மற்றும் தங்களை தாங்களே ஆள நினைப்பவர்கள் அறிவின் அதிகாரத்தினை தம் கைகளில் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்'என்கிறார்.

ஆள்பவருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையிலான சமூக ஒப்பந்தம் காணப்படுவதனாலும் பிரஜைகள் ஜனநாயகத்தின் பங்குதாரர்களாகவும் உள்ளார்கள். அதற்கான அதிகாரம் ஆளப்படுவோராலேயே வழங்கப்பட்டுள்ளது என்ற நம்பிக்கையில் நிலைத்திருப்பதற்கும் தாங்கள் தகவல்களை பெறுவதற்கு உரித்துடையவர்கள் இவ் தகவல்களை இலங்கையில் குடியுரிமை உடையவர்கள்.

இத்தகவல்களை இலங்கையில் குடியுரிமையுடையவர்கள் யாவரும் பெற முடியும். 18 வயதைப் பூர்த்தி அடைய வேண்டும் என்ற அவசியமில்லை.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடன உறுப்புரை 19 இல் 'கருத்துச் சுதந்திரத்துக்கும் பேச்சுச் சுதந்திரத்துக்கும் எவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையானது தலையீடின்றி கருத்துக்களை கொண்டிருத்தற்கும், எவ்வூடகம் மூலமும் எல்லைகளைப் பொருட்படுத்தாமலும் தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும் பெறுவதற்கும் பரப்புவதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கும்' என்று கூறுகிறது. அதோ போன்று சிவில் மற்றும் அரசியல் உரிமைக்கான சர்வதேச உடன்படிக்கையின் உறுப்புரிமை உறுப்புரை 19 இல் 'ஒவ்வொரு நபரும் எண்ணங்களை வெளியிடுவதற்கான உரித்துடையவர் இந்த உரிமையானது அனைத்து விதமான தகவல்கள் மற்றும் எண்ணங்களைத் தேடுவதையும், பெற்றுக்கொள்வதையும், உட்பதிப்பையும் உள்ளடக்கும். எல்லைகளைப் பொருட்படுத்தாமல் வாய் மூலமாகவோ அல்லது அச்சு பிரதியாகவோ எந்த வடிவமாகவோ அல்லது தன்னுடைய ஏதாவது ஊடகத் தெரிவின் மூலமாகவோ அமையலாம்' என்று கூறுகிறது.

நாங்கள் கோரும் தகவலானது தனது தனிப்பட்ட தேவையுடன் தொடர்புற்று இருத்தல் வேண்டும் என்ற அவசியமில்லை பொது விடயமாகவும் இருக்கலாம். அது எவ்வாறாகயிருந்தாலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை உரிய முறையில் தீர்த்து பயன்படுத்துவதற்கான தேவையான திறமை இன்னமும் மக்கள் பெறவில்லை என்பதால் அது தொடர்பில் பொது மக்களுக்கு வழிகாட்டுவதற்கு தொண்டர் அமைப்புக்கள் பல உள்ளன.

உதாரணமாக: (தகவலுக்கான உதவிப் பணியகம்) மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**(Centre for Policy Alternatives -CPA)**

இது ஒரு சிறந்த விடயமாகும். தகவல் கோரிக்கை விண்ணப்பமொன்றை பூரணம்படுத்துவதற்கு விஷேட ஆற்றல்கள் தேவையில்லை. எனினும் இதன் இறுதி இலக்காக இருக்க வேண்டியது அடிப்படை கல்வியை கற்று எழுதும் ஆற்றல் உள்ள எந்த ஒரு பிரஜையாலும் இந்த தகவல் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து இவற்றுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பை வழங்குவதேயாகும்.

தகவல்களைப் பெறலாம் என்று சொல்வதிலிருந்து எவ்வாறான தகவல்களை பெற முடியும் என்பதையும் பொது மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்த வகையில் எவ்வடிவிலுமான பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்புகள், அபிப்பிராயங்கள், மதியுரைகள், பத்திரிகை, மாதிரிகள், உறுபடிவம், கடிதத் தொடர்பு, குறிப்பறிக்கை, விரைவுச் சட்டவாக்கம், புத்தகம், திட்ட வரைவு, வரைவு, வரைபடம், பட அல்லது வரைபட வேலை, புகைப்படம், திரைப் படம், குறும்படம், ஒளிப்பதிவு, ஒளிநாடா, இயந்திரம் மூலம் வாசிக்கக்கூடிய பதிவுகள், கணினி பதிப்புகள், மற்றும் வேறு ஆவணப் பொருட்கள் உள்ளடங்கலாக அதனது

பௌதீக படிவம் பண்பு பொருள் படுத்தாமல் படிவத்திலான ஏதேனும் வேலைவாய்ப்பிற்கான வெற்றிடங்களை நிரப்ப பயன்படுத்தப்பட்ட நியமன அடிப்படையில் வேலை வாய்ப்பிற்கான நேர்முகப்பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகள், உங்கள் குழந்தைகளுக்கு பாடசாலை அனுமதி மறுக்கப்பட்ட காரணங்கள் உள்ளடக்குகிறது. இவ்வாறன தகவல்களை கோருவதற்கான காரணத்தை கூறுதல் கட்டாயமன்று.

இவ்வாறான தகவல்களை எங்கே பெறலாம். என்று பார்க்கும் போது பொது நிறுவனங்கள் என்று சொல்லப்படுகின்ற அரசியலமைப்பின் கீழ் அல்லது எழுத்துருவான சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஏதும் ஒரு அலுவலகம், நிறுவனம், திணைக்களம், அமைப்பு, மற்றும் அரச அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட அல்லது அரச செயற்பாடுகளை அல்லது சேவையை புரிகின்ற தனியார் அமைப்புகள் மற்றும் அதிகார சபைகள். உதாரணமாக

அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், பகிரங்க கூட்டுத்தாபனம், உள்ளூர் அதிகார சபைகள், போலீஸ், நீதிமன்றங்களும் நியாய சபைகளும், கம்பனிச் சட்டம் 2007க்கு அமைய ஆரம்பிக்கப்பட்டு அரச அல்லது தனியாரது அரசு மற்றும் தனியாரது 25 வீதத்திற்கும் மேற்பட்ட பங்குகளை கொண்டுள்ள கம்பனிகள் அரசினால் நிதி அளிக்கப்பட்டு இயங்கிவரும் உயர்கல்வி நிறுவனங்கள், அங்கீகாரம் அளிக்கப்பட்ட மற்றும் பகுதி அளவில் நிதி அளிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் தனது தகவல்களை பெற முடியும்.

எவ்வாறான தகவல்களை பெற முடியுமோ அதே போன்று சில தகவல்களையும் உங்களால் பெற முடியாமல் போகலாம் அது சில காரணங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பகிரங்க அக்கறையற்ற தனியாக விடயங்கள், தேசிய பாதுகாப்பையும் உறவையும் மட்டுப்படுத்தும் தகவல்கள், நாட்டின் பொருளாதாரத்தில் குந்தகம் விளைவிக்கும் தகவல்கள், இரகசியங்கள், தனியார் மருத்துவ விவரங்கள், பரஸ்பர உறவுகளுக்கிடையிலான இரகசியத் தகவல்கள், மூன்றாம் தரப்புடன் தொடர்புடைய தகவல்கள், நீதிமன்ற சுதந்திரத்தையும் நீதிமன்ற நடவடிக்கையையும் பாதிக்கும் தகவல்கள், சட்டத்தின் கீழாக வழங்கப்பட்டுள்ள பாராளுமன்ற, மாகாண சபைகளின் சிறப்புரிமை சார்ந்த தகவல்கள், பரீட்சையின் நேர்மைத்தன்மையை பாதிக்கும் தகவல்கள், தேர்தல் தொடர்பான ஒரு சில தகவல்கள், இறுதித் தீர்மானம் எட்டப்பட்ட மந்திரிசபை கலந்துரையாடல்கள் என்பனவாகும். சில சந்தர்ப்பங்களில் மேற்பட்ட தகவல்களை பொதுநலனானது விஞ்சியிருக்குமிடத்து பெற முடியும்.




ஒரு தகவலை அறிந்து கொள்ளும் செயல்முறையானது பின்வருமாறு அமைகின்றது. எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை பொது நிறுவனங்களில் உள்ள தகவல் அதிகாரியிடம் ஒப்படைத்து. நீங்கள் குறித்த தகவலைப் பெறவிரும்பும் வடிவத்தினையும், மொழியினையும் குறிப்பிட வேண்டும் பின்னர்

தகவலை பெறுவதற்கு கோரப்பட்ட தகவலின் தன்மைனைப் பொறுத்து கட்டணம் செலுத்தப்பட நேரலாம். கட்டணத்தின் அளவைத் தீர்மானிப்பது தகவலிற்கான ஆணைக்குழுவின் பொறுப்பாகும்

விண்ணப்பத்திற்கான பற்றுச்சீட்டை தகவலிற்கான அதிகாரியிடம் கோருவது உங்கள் கடமை தகவலை உடனடியாக பெற முடியுமாயின் தகவலிற்கான அதிகாரி அதனை உடனடியாகப் பெற்றுக்கொடுத்தல் அவசியமாகும். தகவலிற்கான அதிகாரி உங்கள் விண்ணப்பம் கிடைத்து 14 வேலை நாட்களிற்குள் அதனை வழங்க முடியுமா இல்லையா? என்ற முடிவினை கூறுதல் அவசியம். எனினும் வழங்க முடியும் என ஒப்புக் கொண்ட நாளில் இருந்து வேலையற்ற நாட்கள் உள்ளடங்கலாக 14 நாட்களிற்குள் அதனை வழங்குதல். தகவலானது எண்ணிக்கை அளவில் பெரிதாக இருக்குமிடத்து அல்லது பெறுவதில் காலதாமதம் நேருமிடத்து 21 நாட்கள் வழங்கப்படலாம்.

தகவலானது குடிமக்களது உயிருடன் அல்லது தனிப்பட்ட சுதந்திரத்துடன் தொடர்புற்று இருக்குமாயின் கோரிக்கை விடுவிக்கப்பட்டு 48 மணித்தியாலத்தினுள் வழங்கப்படுதல் அவசியம்.

வழங்கப்பட்ட தகவலானது சரியானது என்று எனக்காண்பது எவ்வாறு? என்றால் தகவல் ஒன்றிணைக்கோரும் போது அதனை உறுதிப்படுத்தித்தருமாறு கேட்க முடியும். தவறான தகவல்களை வழங்குவது தகவலிறகான உரிமைச் சட்டத்தின் உறுப்புரை-390)

**(a)**

கீழ் குற்றமாகும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் தகவலிற்கான ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்து அதற்காக வழக்கு தொடரவும் வேண்டுகோள் விடுக்கலாம். தகவலிற்கான உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் வேளை நீங்கள் செய்ய வேண்டியது. உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு 14 நாட்களிற்குள் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரியிடம் மேன்முறையீட்டை மேற்கொள்ளலாம்.

மேன்முறையீட்டிற்கான கால எல்லை உங்களை மீறிய சந்தர்ப்பங்களில் முடிவடைந்து இருப்பின் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரி அதனை கருத்தில் கொண்டு உங்கள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வர். மூன்று வார காலத்தினுள் மேன்முறையீட்டின் முடிவானது தெரிவிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு மேன்முறையீட்டின் முடிவானது நிராகரிக்கப்படின் அதற்கெதிரான 02 மாதத்தினுள் தகவலிற்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையிடலாம்.

ஆணைக்குழுவானது 30 நாட்களிற்குள் தகவல் அதிகாரியான அல்லது குறித்தொதுக்கப்பட்ட அதிகாரியின் முடிவினை ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க வேண்டும்.

ஆணைக்குழுவின் முடிவானது உங்களை திருப்திப்படுத்தாவிடின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய முடியும்.

ஏதேனும் சந்தர்ப்பத்தில் மீயூயர் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க முடியமா? எனின் தகவலிற்கான உரிமையானது அடிப்படை உரிமையாகும் என்பதால் அந்த உரிமையானது அதனுடன் தொடர்புடைய உரிமையுடன் கூறப்பட்டுள்ளதாக அல்லது மீறப்பட்டுள்ளதாக நீங்கள் கருதுமிடத்து மீயூயர் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க முடியும் என்பதை அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தகவலிற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் முறைப்பாடு ஒன்றினை மேற்கொள்ள முடியும் அந்த வகையில் கீழ் வரும் சந்தர்பங்களில் தகவலிற்கான ஆணைக்குழுவிடம் முறைப்பாட்டை மேற்கொள்ளலாம். தகவல் அதிகாரி அல்லது குறித்தொதுக்கப்பட்ட அதிகாரி

★உங்கள் விண்ணப்பத்தை ஏற்காவிடில்

★காரணமின்றி தகவலை வழங்க மறுக்கும் போது

★மேலதிக கட்டணங்களை அறவிடும் போது

★தகவலிற்கான விண்ணப்பத்திற்கான செயற்பாடுகளை தகவலிற்கான சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தாதிருக்கும் வேளை

★வேண்டுமென்றே மேல் முறையீட்டை சட்டத்திற்கு முரணாக நிராகரிக்கும் போது

★முறையான காரணமின்றி குறித்த காலத்தினுள் மேன்முறையீடு தொடர்பான சரியான தீரமானம் எடுக்காது விடும் போது ஆணைக் குழுவானது ஒழுக்காற்று குழுவிடம் அவ் அதிகாரிகளிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்குமாறு பணிக்கும். ஒழுக்காற்று குழுவானது 1 மாத காலத்தில் ஆணைக்குழுவிற்கு தனது அறிக்கையை வழங்கும்.

தகவலிற்கான சட்டத்தின் கீழ் ஒரு நபரை தண்டனைக்கு உட்படுத்தப்பட முடியும் ,இந்த சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட குற்றங்கள் எவராலும் புரியப்படின் அந்தக் குற்றவாளிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும். அவ்வாறு அவரது குற்றமானது நிருபிக்கப்படும் வேளை சுருக்கம் விசாரணை மூலம் குறித்த குற்றவாளிக்கு

★50,000.00 தண்டப்பணமோ

★2 வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ

★அல்லது தண்டப்பணமும் சிறைத் தண்டனையுமோ வழங்கப்படலாம். இது பின்வரும் குற்றங்களைச் செய்பவர்களுக்கு வழங்கப்படலாம்.

இவ்வாறான குற்றங்களாவன,

★வேண்டுமென்றே தகவலை வழங்காதிருத்தல்

★தவறான முழுமையற்ற பொருத்தமற்ற தகவலை வழங்குதல்.

★தகவலை அழித்தல், செயலற்றுப் போகச் செய்தல் ★தகவலை மாற்றியமைத்தல் அல்லது மறைத்து விடுதல்

★ஆணைக்குழுவின் முன் பிரசன்னமாக தவறுதல் ★ஆணைக்குழுவின் முன் பிரசன்னமாக ஆனால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதை மறுத்தல் அல்லது தகவல்களை வழங்காது இருத்தல்

★ஆணைக்குழுவின் செயற்பாடுகளிற்கு தடையாக இருத்தல்

★ஆணைக்குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த தவறுதல்

இதுவரையில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள அனேகமான மேன்முறையீடுகளில் தகவல் ஆணைக்குழு உத்தரவிட்டிருப்பது ஆரம்பத்தில் வெளியிட முடியாது என கூறப்பட்ட தகவல்களை குறித்த விண்ணப்பத்தாரிகளுக்கு உடனடியாக வழங்க வேண்டும் என்றேயாகும். இதன் பிரகாரம் தகவல் ஆணைக்குழு தகவல்களை வெளிப்படுத்துவதில் முன்னிற்பது தெளிவாகின்றது.

இதனிடையே தகவல் கோரிக்கையின் மூலம் வெற்றிகரமாகத் தகவல்களைப் பெற்றுக்கொண்ட அனேக மக்கள் அமைப்புக்கள் அதன் ஊடாகத் தனிப்பட்ட மற்றும் பொது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்ட அனேக சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இது தான்

மக்களுக்கு பயனளிக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் உண்மை நோக்கமாகும்.

தகவல்களை மறைப்பதில் நீண்ட கால வரலாற்றைக் கொண்ட எமது நாட்டில் சிறந்த ஆட்சியமைப்பை ஏற்படுத்துவது ஓரிரண்டு வருடங்களில் செய்து கொள்ளக்கூடியதல்ல . இது சவால் மிக்க விடயம். இச்சவாலை வெற்றி கொள்வதற்கு பொது மக்களும், வெளிப் படைத்தன்மைக்காக அர்ப்பணிப்புச் செய்வது அரச பொறிமுறையும் மிகவும் அவசியம். எனவே பொதுமக்களும், அரச நிறுவன அதிகாரிகளும் இணைந்து நமது நாட்டினை ஒரு வலுவான தேசமாக மாற்ற உண்மைத் தன்மையுடன் செயல்பட்டு தகவலை தரமாக வழங்கி மக்களின் உரிமைகளை போணுவோம்.

---

## அமைதியின்..

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

குறித்து இலங்கை பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களிடம் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விளக்கினர். அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களுடனான சந்திப்பின் போது முஸ்லிம் அமைச்சர்கள் கூட்டாக பதவி விலகியது பெரும்பான்மை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியதாகவும், அந்த கூட்டு பதவி விலகலை தவறானதொரு செயற்பாடாக அந்த மக்கள் பார்க்கும் நிலை உருவானதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மகாநாயக்க தேரர்கள் கூறியதாக, அமீர் அலி தெரிவித்திருந்தார்.

எனவேதான் இலங்கை முஸ்லிம்கள் குறிப்பாக பெரும்பான்மையினருக்குள் வாழ்ந்து வருகின்ற மக்கள் சிலவற்றை அடக்கிவாசிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குள் இருப்பதால் இனிவரும் நாட்கள் கசப்பானதாக இருக்கக் கூடாது என்பதற்காகவும், முஸ்லிம்களுக்கும் இந்நாடு சொந்தமானதுதான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவகையில் முஸ்லிம் தலைவர்களினது கருத்துக்கள் அமைய வேண்டும். அது மக்களையோ, நாட்டையோ பாதிக்கச் செய்யக் கூடாது என்பதுதான் நமது வேண்டுகோளாகும். சிந்திக்க வேண்டிய தருணம் இதுவென்பதையும் உணர்ந்து கொண்டால் எல்லாமே சுமூகம்தான்..!

# கிழக்கில் தமிழ்-முஸ்லிம் உறவு:

# ஓர் அரசியல் வரலாற்றுநிலைப் பார்வை

இக்கட்டுரை 21.04.2019 இல் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்கு முன்னர் எழுதப் பெற்றதாகும்.

தம்பியப்பா கோபாலகிருஷ்ணன்

அண்மைக் காலமாகக் கிழக்கிலுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் கிழக்கில் தமிழ்-முஸ்லிம் உறவு பற்றிச் சற்று உரத்து ஓதத் தொடங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. நியாயபுத்தி படைத்த எவரும் தமிழ்-முஸ்லிம் உறவின் முக்கியத்துவம் குறித்து எந்த மாற்றுக்கருத்தும் உரைக்கமாட்டார்கள். ஆனால் கிழக்கிலே தமிழ்-முஸ்லிம் உறவு என்பது ஒருவழிப்பாதையல்ல அது இருவழிப்பாதையாகும். மட்டுமல்ல அத்தகைய உறவு என்பது தமிழ்மக்களுடைய நியாயமான சமூக பொருளாதார அரசியல் அபிலாசைகளுக்கு முஸ்லிம்களும் முஸ்லிம்களின் நியாயமான சமூக பொருளாதார அரசியல் அபிலாசைகளுக்குத் தமிழர்களும் ஆதரவு அளிக்கின்ற ஒரு இருவழிப்பாதைக் கலாசாரத்தைக் கட்டி வளர்ப்பதினூடாகத்தான் மேற்கிளம்ப முடியுமே தவிர சிங்களவர்களுக்கு எதிரான மனோநிலையில் அத்தகைய உறவு ஏற்படுவது ஆரோக்கியமானதல்ல. கிழக்கிலே தமிழ்-முஸ்லிம் உறவு எத்தகைய முக்கியமானதோ அதே போல் தமிழ்-சிங்கள உறவும் முஸ்லிம்-சிங்கள உறவும் மொத்தத்தில் தமிழ்-முஸ்லிம்-சிங்கள முத்தரப்பு உறவும் முக்கியமானவை.

எது எப்படியிருப்பினும் இன்று கிழக்கிலே தமிழ்-முஸ்லிம் உறவு விரிசல் கண்டிருப்பது உண்மை. வரலாற்றில் இந்த விரிசலின் வேர்களைக் கண்டறிவதினூடாகத்தான் தமிழ்-முஸ்லிம் உறவை மீண்டும் ஒட்டவைக்க முடியுமே தவிர வாக்குப்பெட்டி அரசியல்வாதிகளின் எழுந்தமானமான ஊடக அறிக்கைகளினால் அல்ல. எனவே கிழக்கில் தமிழ்-முஸ்லிம் உறவு உடைந்து போன வரலாற்றை கூறுவதும் இக்கட்டுரையின் நோக்கங்களில் ஒன்று. நோயைக் கண்டறிந்தாலே சிகிச்சை அளிக்கலாம்.

போதனாமொழி தமிழைக் கொண்டிருந்த தமிழ் மொழி மூலப் பாடசாலைகளைத் தமிழ்ப்பாடசாலைகள் என்றும் முஸ்லிம்பாடசாலைகள் என்றும் தனித்தனியாக வகைப்படுத்துமுன்னர் ஒரே பாடசாலையில் தமிழ் மாணவர்களும் முஸ்லிம் மாணவர்களும் கல்வி கற்றுவந்த சூழ்நிலை தமிழ்-முஸ்லிம் உறவுக்கு நீர்ப்பாய்ச்சிக் கொண்டிருந்தது. இதனை இல்லாமல் செய்தவர்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளே.

1949 இல் இலங்கைத் தமிழரசுக்கட்சி எஸ்.ஜே.வி.செல்வநாயகம் (தந்தை செல்வா) தலைமையில் தோற்றம் பெற்ற பின் தமிழ்பேசும்மக்கள் எனும் வார்த்தைப் பிரயோகத்தினூடாக முஸ்லிம்களையும் தமிழர்களோடு சேர்த்துத் தங்கள் அரசியல் தேவைகளுக்காகத் தமிழர்களாக அடையாளப்படுத்தியமை அக்கட்சி இழைத்த மாபெரும் அரசியல் தவறு ஆகும். முஸ்லிம் அரசியல் தலைவர்களான ரி.பி.ஜயா காலத்திலிருந்து இன்றைய றவூப்ஹகீம் காலம் வரை எவருமே முஸ்லிம்களைத் தமிழர்களோடு அடையாளப்படுத்த விரும்பியிருக்காதபோது அவ்விருப்பத்திற்கு மாறாக முஸ்லிம்களை வில்லங்கமாகத் தமிழர்களோடு அடையாளப்படுத்தும் வகையில் தமிழ்பேசும்மக்கள் எனும் அடைமொழியை வைத்துக்கொண்டு அரசியல் செய்யப் புறப்பட்ட தமிழரசுக்கட்சியின் புத்திசாலித்தனமற்ற நடவடிக்கையே வரலாற்றில் தமிழ்-முஸ்லிம் உறவில் விரிசலுக்கு வித்திட்டது. அதனைப் பின்வரும் அரசியல் நிகழ்வுகளுக்கூடாக விளக்கலாம்.

1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இரு மாவட்டங்களும் பொத்துவில், கல்முனை, பட்டிருப்பு, மட்டக்களப்பு, கல்குடா, திருகோணமலை ஆகிய ஆறு தேர்தல் தொகுதிகளுமே நடைமுறையிலிருந்தன. இவற்றில் பொத்துவில் மற்றும் கல்முனை தொகுதிகளிலே முறையே எம்.எம்.முஸ்தபா மற்றும் எம்.எஸ்.காரியப்பர் ஆகியோரைத் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களாக நிறுத்தி தமிழர்களின் வாக்குகளின் மூலம் அவர்களை வெற்றி பெறவைத்தனர். இவர்கள் தமிழரசுக்கட்சியின் கொள்கைகளை மனதார ஏற்றுக்கொண்டு அல்லது தமிழ்த்தேசியத்தின் பால் உள்ள ஈர்ப்பினால் தமிழரசுக்கட்சியின் வேட்பாளர்களாக போட்டியிட்டவர்கள் அல்ல. தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைப் பெறும் ஒரே நோக்கத்துடன் மட்டும்தான் தமிழரசுக்கட்சியில் இணைந்து போட்டியிட்டடர்கள். இவர்களில் எம்.எஸ்.காரியப்பர் அவர்கள் 1947இல் நடைபெற்ற இலங்கையின் சோல்பரி அரசியலமைப்பின் கீழான முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கல்முனைத்தொகுதியில் ஐக்கியதேசியக் கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டிப் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா அரசில் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கிராமஅபிவிருத்தி பிரதிஅமைச்சராகப் பதவி வகித்தவர். மட்டுமல்லஇ அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியில் அமைந்திருந்த ‘பட்டிப்பளை’ ஆற்றுப்படுக்கைப் பிரதேசத்தில் வெளி மாவட்டங்களில் இருந்து சிங்களவர்கள் குடியேற்றப்படக் காரணமாகயிருந்த ‘கல்லோயா’ நீர்ப்பாசனத் திட்டத்தின் பிரதான கூறாகிய சேனநாயக்கா சமுத்திரத்தை உருவாக்கக் காரணமாயிருந்து இத்திட்ட நிறைவேற்றத்திற்குப் பாரிய பங்களிப்புச் செய்த வருமாவார். இப்படிப்பட்ட பின்னணியைக் கொண்ட எம்.எஸ்.காரியப்பரைத் தேடிப் பிடித்துத்தான் தமிழரசுக்கட்சி 1956இல் கல்முனைத் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தியது. இத் தேர்தலில் வெற்றிபெற்ற இவர் ஆறு மாதங்களின் பின்னர் பிரதமர் பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இணைந்து பிரதி நீதியமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டு தமிழர்களுக்குப் பாரபட்சமான பல செயற்பாடுகளையும் மேற்கொண்டார். இதற்கு முன்னர் 1952இல் நடைபெற்ற கல்முனை பட்டினசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று அதன் தலைவராகவும் பதவிவகித்து அப்பதவிக் காலத்திலும் கல்முனைப் பிரதேசத் தமிழர்களுக்குப் பாரபட்சமான பல செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தவராவார். தமிழரசுக்கட்சி யாரை வேட்பாளராக நிறுத்தினாலும் தமிழர்கள் கண்ணை மூடிக்கொண்டு கட்சியின் சின்னமான வீட்டுக்கே வாக்களிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள்.

‘தந்தை (செல்வா) சொல் மிக்க மந்திரமில்லை’ என்பதே அரசியலில் தமிழர்களின் தாரக மந்திரமாக இருந்தது.

மேலும், 1960இல் எம்.எஸ்.காரியப்பர் அகில இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணி எனும் அரசியல்கட்சியை நிறுவி 1960 யூலைப் பொதுத்தேர்தலில் கல்முனைத் தொகுதியில் அக்கட்சியில் போட்டியிட்டார். ஆனால் வெற்றிபெறவில்லை. அவர் கட்சி தொடங்கியதும் போட்டியிட்டதும் பிழையென்று கூறமுடியாது. ஆனால் அக்கட்சி வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தில்,

கடந்த பல வருடங்களாக முஸ்லிம்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்து வருகிறார்கள். எனினும் ஒத்திக்குடிசையில் வசிப்பது போன்றும், இரவல் வீட்டில் குடியிருப்பது போன்றும் தமிழர்களின் கட்சி நிழலிலும் சிங்களவர்களின் கட்சி நிழலிலும் வாக்குரிமை(வோட்)களை எடுத்துக் கொண்டு போய்இ குறித்த கட்சிகளுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து அக்கட்சித் தலைவர்களின் கட்டுப்பாடுகளுக்கு அமைந்தே கடமையாற்றி வந்துள்ளார்கள். இவ்விதம் அரசியல் அநாதைகளாக முஸ்லிம்களுக்கென ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சி இல்லாமையால் அதிகமான அவமானங்களுக்குள்ளாக்கப்பட்டார்கள். அதுமட்டுமா? சிங்களவர்களின் கட்சியிலிருப்போர்களைச் சிங்கள முஸ்லிம்கள் என்றும் தமிழர் கட்சியிலிருப்போர்களைத் தமிழ் முஸ்லிம்கள் என்றும் தமக்குள் வேற்றுமைகள் உண்டாக்கப்பட்டும் பிரித்துவிடும் சூழ்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் நமக்கென ஒரு அரசியல் கட்சி இல்லாதிருந்ததால் தமிழரசுக்கட்சி முஸ்லிம்கள் தங்கள் சாதியில் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள்தான் என்றும் மதத்தால் மட்டுமே வேறுபட்டிருக்கின்றோம் என்றும் பொய்ப்பிரச்சாரத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள்

என்று தொடரும் அறிக்கையின் இறுதிப்பகுதி பின்வருமாறு முடிகிறது.

..சிங்களவர்களுக்குச் சிங்கள நாடும் தமிழர்களுக்குத் தமிழ் நாடும் எனப் பிரிவினை ஏற்படின் இஸ்லாமிஸ்தான்; எனும் முஸ்லிம் இராட்சியம் ஒன்றைப் பிரித்தெடுத்து இங்குவாழ் ஏழுஇலட்சம் இஸ்லாமியர்களுக்கு ஒரு தாயகத்தை ஏற்படுத்திக் கொளல் இது கட்சியின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டும் இருந்தது.

1956ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் அப்போதைய பொத்துவில் தொகுதியில் தமிழரசுக்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வென்ற எம்.எம்.முஸ்தபாவும் பின்னர் அரசாங்கக் கட்சிக்கு மாறினார். திருக்கோவில் பிரதேசத்தில் தேர்தல் வெற்றியின் பின் அப்பகுதிக்கு வருகைதந்த எம்.எம்.முஸ்தபாவுக்குக் ‘காசுமாலை’ அணிவித்து வரவேற்ற அப்பிரதேசத் தமிழ்மக்கள் அவர் கட்சி மாறிய பின் அப்பிரதேசத்தில் அவரின் வாகனத்தை மறித்து அவரைப் பலாத்காரமாக இறக்கி அவருக்குச் செருப்புமாலை போட்ட நிகழ்வும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளதை மூத்தோரிடமிருந்து அறிய முடிகிறது. அதைச் சரியென்று நியாயப்படுத்துவது இப்பத்தியின் நோக்கமல்ல. ஆனால் அவர் தமிழரசுக்கட்சியில் வேட்பாளராக நின்று தமிழர்களின் வாக்குகளினால் வெற்றியீட்டிய பின் அரசாங்கக்கட்சிக்குத் தாவியதால் முஸ்லிம்களின் மீது தமிழர்கள் குரோதம் கொள்ளவும் பின்னர் அவரை மறித்துத் தமிழர்கள் அவருக்குச் செருப்புமாலை போட்டதால் தமிழர்கள் மீது முஸ்லிம்கள் குரோதம் கொள்ளவும் ஆன நிலை ஏற்பட்டது. இதற்கு மறைமுகமான காரணியாக இருந்தது தமிழரசுக்கட்சியின் அரசியல் ஆகும். இதே போன்று பின்னாளில் 1960 ஜுலை பொதுத்தேர்தலில் அப்போதைய கல்முனைத் தொகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டுத் தமிழர்களுடைய வாக்குகளால் வெற்றியீட்டிய எம்.சி.அகமட் அவர்களும் பின்னர் எம்.எஸ்.காரியப்பர் மற்றும் எம்.எம்.முஸ்தபா ஆகியோரைப் பின்பற்றி அரசாங்கக் கட்சிக்குத் தாவினார். முஸ்லிம் அரசியல்வாதிகளின் இச் சந்தர்ப்பவாத அரசியல் போக்கு முஸ்லிம் அரசியல்வாதிகளின் மீது தமிழர்களை ஆத்திரம்கொள்ள வைத்தது. கிழக்கிலே தமிழ்-முஸ்லிம் உறவின் விரிசலுக்கு அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியாகவிருந்ததும் பின்னாளில் அம்பாறை மாவட்டமாக உருவானதுமான பிரதேசத்தின் அரசியல் நிகழ்வுகளே அதிகம் பங்களித்தன. அதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

இலங்கையின் சோல்பரி அரசியலமைப்பின் கீழான முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் 1947 ஆகஸ்ட்ஃசெப்டம்பரில் நடைபெற்றது. சோல்பரி ஆணைக்குழுவின் சிபார்சுக்கமைய பாராளுமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக 1946 இல் இலங்கை 89 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப் பெற்றன. இத்தேர்தல் தொகுதிகளின் அடிப்படையிலேயே இலங்கையின் முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெற்றது. அப்போது அம்பாறை மாவட்டம் உருவாகி இருக்கவில்லை. தற்போதைய அம்பாறைமாவட்டம் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தினுள் அடங்கியிருந்தது. அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதி துண்டாடப்பெற்று 1962 இல் ‘அம்பாறை’என்றொரு புதிய மாவட்டம் தனியான நிருவாக மாவட்டமாக உருவாக்கப்படும் வரை தற்போதைய அம்பாறை மாவட்டமும் மட்டக்களப்பு மாவட்டமும் இணைந்த நிலப்பரப்பே முன்னைய‘மட்டக்களப்பு’ நிருவாக மாவட்டமாக இருந்தது. இதன் எல்லைகள் வடக்கே வெருகல்ஆறு, தெற்கே குமுக்கன்ஆறு, கிழக்கே வங்காள விரிகுடாக்கடல், மேற்கே வடமத்திய மற்றும் மத்திய ஊவா மாகாண எல்லைக் கோடுகள் ஆகும். மேற்கெல்லையைப் பொதுவாக ஊவாமலைக் குன்றுகள் எனவும் கூறலாம்.

அப்போதைய மட்டக்களப்பு மாவட்டமானது 1947 இல் நடந்த இலங்கையின் பாரளுமன்றப் பொதுத் தேர்தலின் போது கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில் ஆகிய ஐந்து தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியிருந்தது. அப்போது அம்பாறை என்றொரு தேர்தல் தொகுதி கூட உருவாகி இருக்கவில்லை.

1947க்கு முன்னர் சட்டசபைக்காலத்தில்(1931-1947) பட்டிருப்பு. கல்முனை, பொத்துவில் தேர்தல்தொகுதிகளை உள்ளடக்கிய முழுநிலப்பரப்பும் ‘மட்டக்களப்புத்தெற்கு’ என அழைக்கப் பெற்ற தனித்தேர்தல் தொகுதியாக இருந்தது. சட்டசபைக் காலத்தில் ‘மட்டக்களப்புத்தெற்கு’ தேர்தல்தொகுதியை முறையே ஜனாப் எச்.எம்.எம்.மாக்கான் மாக்கார(;1931); எஸ்.ஓ.கனகரட்ணம்1936), எஸ்.தர்மரட்ணம் (1938) வி.என்.நல்லையா(1943) ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

தொடரும்

---

## பேராயர்..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி



கோப்புப்படம்

பணிபுரிவார்கள்.

பேராயர் தோமஸ் குரே ஆண்டகைக்கு பின் அதி.வண.நிக்கலஸ் மாரக்கஸ் பெர்னாண்டோ, அதி.வண.ஒஸ்வல்ட் கோமிஸ் ஆகியோர் கொழும்பு மறை மாவட்டத்தின் பேராயர்களாக நியமிக்கப்பட்டிருந்தும், கருதினாலாக பதவி உயர்த்தப்படவில்லை. ஏனெனில்,நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமைகளால் வத்திக்கான் இந்த பணியை செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் இலங்கையின் இரண்டாவது கருதினாலாக பேராயர் அதி.வண.மல்க்கம் ரஞ்சித் ஆண்டகையை வத்திக்கான் நியமித்துள்ளது. தற்போதைய பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவு வத்திக்கானில் இடம்பெற்றபோதும் பேராயர் மல்க்கம் ரஞ்சித் அங்கு வந்த உலகின் கத்தோலிக்க கருதினால்களுடன் கலந்துகொண்டு வாக்களித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1965 இல் பதவிக்கு வந்த ஐ.தே.க.அரசும் கத்தோலிக்க,கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஒரு பேரினவாத சட்டத்தை கொண்டுவந்தது என்று கூறலாம். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை உலகில் பொதுவாக நடைமுறையில் உள்ளது .இலங்கையில் போயா தினத்தையும், அதற்கு முதல் நாள் பிறி போயா தினம் என்றும் சனி,ஞாயிறு தினங்களை அந்த அரசு மாற்றியமைத்தது. இதனை பௌத்த அமைப்புக்கள் வரவேற்றன. கிறிஸ்தவர்களான அரச தனியார் ஊழியர்களுக்கு, மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் மூன்று மணி நேரம் தேவாலயங்களுக்கு சென்றுவர விசேட அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால்,இந்த முறையால் நாட்டின் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டது. துறைமுகங்களில் பொருட்களை ஏற்றி, இறக்கும் பணிகளிலும் பிரச்சினைகள் ஏற்பட்டன.இதனையடுத்து சில காலத்தால் மீண்டும்,சனி,ஞாயிறு தினங்களை பழையபடி விடுமுறை தினங்களாக மாற்றப்பட்டன.கிறிஸ்தவர்களுக்கு தற்போது நத்தார் (கிறிஸ்மஸ்) தினம் மட்டுமே வருடத்தில் ஒரு பொது விடுமுறை தினமாகும்.முன்னர் பெரிய வெள்ளியும் ஒரு பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க மதத்துக்கு எதிரான ஒரு நடவடிக்கையை இங்கு குறிப்பிடவேண்டும். 2011 நவம்பர் 25 மொறட்டுவ பகுதியில் உள்ள அன்னை திரேசா ஆச்சிரமத்தில் குழந்தைகளை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதா ஒரு பொய் புகார் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பணிப்பாளர் அனோமா திசநாயக்காவால் பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டு,அங்குள்ள பொறுப்பான ஒரு அருட் சகோதரி கைது செய்யப்பட்டு,விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.இது வேண்டுமென்றே சிலரால் திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு பேரினவாத செயற்பாடு. அன்னை திரேசாவின் அருட் சகோதரிகள் உலகில் பல நாடுகளில் மனித நேயப்பணிகளை செய்கின்றனர்.அவர்கள்இங்கும் அதனையே செய்கின்றனர் இங்கு பெற்றோரை இழந்த,கைவிடப்பட்ட குழந்தைகளை பராமரிக்கும்போது பிள்ளை இல்லாத வெளிநாட்டவர்களுக்கு சட்டப்படி வழங்கினார்கள்.

வடக்கு,கிழக்கு யுத்த காலத்தில் தெற்கில் உள்ள ஆயர்களோ,பேராயரோ பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக குரல் கொடுக்கவில்லை என சிலர் கவலையடைந்தனர்.அவர்கள் பெரும்பான்மை இனத்தவர்களையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.அப்படி ஏதும் கூறினால் இனவாதி என பேரினவாதிகள் கூறிவிடுவார்கள். யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிங்கள,தமிழ் மக்களுக்கு,சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு கத்தோலிக்க திருச்சபையின் தொண்டு நிறுவனமான ★செடேக்★ பல்வேறு நிவாரண உதவிகளை இன மத பேதம் இன்றி செய்துள்ளது. இன்றும் பல மனிதநேய பணிகளை செய்து வருகிறது என்பதை நாடே அறியும்.வன்னி யுத்தம் முடிந்ததும் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றவேண்டும் என அன்று பேராயர் மல்க்கம் கூறிய போதும் சில அரசியல்வாதிகள் அவரை விமர்சித்தனர்.

பேராயர் கருதினால் மல்ககம் ரஞ்சித் ஆண்டகை கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழா திருப்பலியில் இந்த நாடு எப்படி இருக்கவேண்டும், எவ்வாறான தலைவர்கள் தேவை என்பதை தெளிவாக கூறியுள்ளார். ‘கடந்த காலங்களில் மனித உயிர்களை பலிகொடுத்து அரசியல் நடத்தப்பட்டது. எந்த வகையிலும் மனித உயிர்களை அழித்து அரசியல் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முயல்வது ஏற்கமுடியாது.நேர்மையான,துணிவுள்ள,குற்றம் செய்தவர்களை பாதுகாக்காத சிறந்த தலைவர்களை உருவாக்கவேண்டும்.போட்டி,பொறாமை,பழிவாங்கல் ஒழியவேண்டும்.சகலரும் அமைதி,சமாதானமாகவாழ வேண்டும்.மனித உயிர்களை அழிக்க மதங்களை பயன்படுத்தக்கூடாது.எந்த ஒரு மதமும் மனிதனை அடிமைப்படுத்த முடியாது’ என குறிப்பிட்டார்.

அவர் ,கடந்த கால வடக்கு,கிழக்கு யுத்தம்,காணமல் போனோர்,ஆட்கடத்தல்,ஆட்சி மாற்ற முயற்சி,ஊழல் மோசடிகள்,பதவி வெறி, போன்ற சம்பவங்களையும் மறைமுகமாக சுட்டிக் காட்டியதுடன் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத்தேர்தல்களில் மக்கள் எப்படியானவர்களை இனிமேல் தெரிவு செய்ய வேண்டும் என்பதையும் மறைமுகமாகவே சுட்டிக்காட்டியுள்ளார். இதனையும் சிலர் அவரை இனவாதி,மதவாதியாக கூறலாம்.

# மக்களின் துயர் துடைப்பார் யாரோ?

செ.தி.பெருமாள்
மஸ்கெலியா நிருபர்

அரச துறை முகாமைத் துவத்தின் கீழ் வரும் தோட்டங்கள் தொடர்ச்சியாவே தொழிலாளர்களுக்கு பாதகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின் றன. குறிப்பாக தொழிலாளர்களுக்குச் சட்டரீதியாகக் கிடைக்க வேண்;டிய உரிமைகள் மறுக்கப்படுவது ,ஊழியர் சேமலாப நிதி ,ஊழியர் நம்பிக்கை நிதி ,சே வைக்கால பணம் போன்ற கொடுப்பனவு வழங்கு வதில் அசிரத்தை என்று ஏகப்பட்ட புகார்கள் எழுந் துள்ளன.

பிரிதானியருககுச் சொந்தமான தோட்டங்களும் 1972 -1975 வரையிலான காலப் பகுதிக்குள் அர சுடைமையாக்கப்பட்டன. 1992 வரையில் அரச நிரிவாகத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்த இந்தப் பெருந்தோட்டங்கள், 22 பிராந்திய கம்பனிகள் வசம் கைமாற்றப்பட்டன. இவ்வாறு கையளிக்கப்பட்ட தோட்டங்களின் எண்ணிக்கை 449. அதேவேளை வருமானத்தை ஈட்டிக் கொண்டிருந்த 30தோட்டங்கள் தொடர்ந்தும் அரச நிறுவனங்களான அரசப் பெருந் தோட்டயாக்கம், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை, பின்னால் எல்கடுவ பிளான்டேஷன் என்பவற் றின் பொறுப்பில் வந்தன.

இவ்வாறு அரசின் நேரடி முகாமைத்துவத்தின் கீழ் பராமரிக்கப்படும் தோட்டங்களின் தொழிலாளர் நலனைப் பாதிக்கும் செயற்பாடுகள் பற்றி நீட்சியாக



விமர்சனங்கள் எழுப்பபட்டே வருகின்றன. தனியார் கம்பனிகளின் நிர்வாகத்துக்குட்பட்ட தோட்டங்களின் நிலைமையும் அரசு துறை சார்ந்த தோட்டங்களின் நிலைமையும் வேறுபட்டே காணப்படுகின்றன. குறிப்பாக அரசு முகாமைத்துவத்தின் கீழ் வரும் தோட்டங்களில் தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் தலைத்தூக்கியுள்ளன.

இத்தோட்ட காணிகளே அதிகமாக அரசாங்கத் தால் கையகப்பட்டு வருகின்றன. கிராமத்தவர்களுக்கு காணிப் பகிர்வு, நெடுஞ்சாலை விஸ்தரிப்பு, அரச கட்டட நிர்மானங்கள், இராணுவ முகாம்கள், விவசா யத் தேவைகள் என வகைத்தொகையின்றி கபளீகரம் செயற்பட வழிவகித்துள்ளது.

இத்தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் காரணம் காட்டி வெளியாருக்கு விற்கும் நடவ டிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. காணித் துண்டாடல்களாலும் தனியாருக்கு தாரைவார்ப்புகள் இடம்பெறுவதாலும் தொழிலாளர் வெளியேற்றமும் இடம்பெறவே செய்கின்றன. நாவலப்பிட்டி போவில தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு வெளி யேர பணிக்கப்படட்;தும். ஜனாதிபதி தலையீட்டின் பேரில் தற்காலிகமாக அந்நடவடிக்கை கைவிடப்பட் டிருப்பதும் இங்கு கவனத்திற்குரியது.

இத்துடன் இந்த அரச துறை முகமைத்துவத் தின் கீழ் வரும் தோட்டங்களைச் சார்ந்த தொழி லாளர்களுக்குச் சட்டபூர்வமாக கிட்ட வேண்டிய பல உரிமைகளும் மறுக்கப்பட்டே வருகின்றன. குறிப்பாக சுமார் 7000-10000 வரையிலான தொழி லாளர்களுக்கு வழங்கப்பட்ட வேண்டிய ஊழியர் சேமலாய நிதி , ஊழியர் நம்பிக்கை நிதியம், சே வைக்கால பணம் போன்ற கொடுப்பனவும் வழங் கப்படாமையானது பாரிய பிரச்சினையாக இனங் காப்பட்டுள்ளது.

இவ்வாறான கொடுப்பனவுகளே இம்மக்களின் இறுதிக் கால செலவினை சமாளிக்க எஞ்சியுள்ள சேமிப்பதகும். அந்த வகையில் இக்கொடுப்பனவு களைச் செலுத்தாமல் நழுவிக் கொள்வுத இம்மக்க ளின் சமூக பாதுகாப்பு வாழ்வாதாரத்தை மீறெலுமா கவே கணிக்கப்படுகின்றுத.

இவ்வாறான நிலைமைக்கு இன்று முகம் கொடுக்கும் தொழிலாளர்களுக்கான கொடுப்ப னவு தொகை 1800 மில்வியனாக கணக்கிடப்பட் டுள்ளது இ;து 2013 இற்கான கணிப்பு. அரசு நேரடி முகாமைத்துவத்தின் கீழ் வருமட தோட்டங்களின் பணியாற்றும் தோட்டச் சேவையாளர்களுக்கான கொடுப்பனவுகளும் இதில் அடங்கும். மேற்படி தோட்டங்கள் அதிகமாக கண்டி ,மாத்தளை மாவட் டங்களிடேயே அமைந்துள்ள

கடந்த 10 ஆண்டுகளாகவேதோட்ட தொழிலாளர் களின் சம்பளத்திலிருந்து மாதா மாதம் அறவிடப் பட்ட மேற்படி கொடுப்பனவு முறைப்படி மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியம் ஊழியர் நம் பிக்கை நிதியம் என்பவற்றில் இடப்படாதது கண்ட றியப்பட்டுள்ளது. இதேநேரம் ஓய்வு பெறும் தொழி லாளர்கள் இக்காலக்கட்டத்தில் சேவைக்கால பணம் பெற முடியாது அவதிப்படுகின்றனர்.

இது இவர்களின் உரிமையை மீறும் செயல் மட்டு மன்றி சட்டரீதியான பெறல் வாய்ப்பையும் மறுக்கும் விடயமாகவே காணப்படுகின்றன. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் அன்று ஆட்சியில் இருந்தவர் களால் பெருமையாகப் பேசப்பட்டது. ஆனால் அதன் காரனமாக மலையக சமூகம் எதிர்கொண்ட சங்க டங்கள் குறித்து எவருமே எண்ணிப்பார்கவில்லை.

இந்த துரித மகாவலி திட்டத்தால் கண்டி மாவட் டத்திலுள்ள பல தோட்டங்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின. புல மூடு விழா கண்டன.சிங்கள கிரா மத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. குறிப்பாக கண்டி பகுதிகளிலேயே பெறுமளவிலவான தேயிலை தோட்டங்கள் இவ்வாறு கபளீகரம் செய்யப்பட்டன.

இவ்வாறு பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட தரப் புகளின் கவனத்தில் கொண்டு வந்திருந்த போதும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. எனவே இது சம்பந்தமான முறைப்பாடு ஒன்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அவதானத்திற்கு உட்ப டுத்தப்பட்டது. அதன் பேரில் 1917.06.21 ஆம் திகதி விசாரணை இடம்பெறலானது.

மேற்படி ஆணைக்குழுவின் கெழும்பிலுள்ள தலைமை காரியாலயத்தில் இடம்பெற்ற விசாரணை யின் போது தொழிலாளர் ஒத்துழைப்பு சங்கம் ச ார்பாக அதன் தேசிய அமைப்பாளர் ஆர்.நடராஜா, தொழில் உறவு அதிகாரி ஏஸ்.ஜெயபால் ஆகியோர் பிரசனமாகியிருந்ததாக ஊடக தகவல்கள் தெரிவிக் கின்றன.

இவ்விசாரணைக்காக அரசப் பெருந்தோட்ட யாக்க தலைவர், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைத்தலைவர், எல்கடுவ பிளான்டேஷன் கம்பனி இயக்குனர், பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம், மத்திய வங்கி ஆளுனர் என்போர் அழைக் கப்பட்டிருந்தனர். தலைவி கலாநிதி தீபிகா உடகம, ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் விசாரணைக்கு தலைமை தாங்கினார்கள்.

வாதிகள் தமது வாதங்களை ஆணித்தரமாக முன்வைத்ததை அடுத்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடகம இப் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க வேண்டுமென சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு உத்தரவிட்டனர். இங்கு பிரதிவாதிகள் தற்போது தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகவும் பாரியதொரு நிதி நெருக்கடியை எதிர்நோக்குவதாகவும், தொழிலாளர்களுக்கான சம்பளத்தைக் கூட வழங்க நிதிப் பற்றாக்குறை நிலவு வதாகவும் குறிபிட்டனர். ஆணைக்குழுவின் தலைவி சட்டரீதியாக கொடுப்பனவுகளை வழங்குவதில் சட் டதுக்கு அடிபணிய வேண்டுமென வலியுறுத்தினார்.

இங்கு ஜனவசம தோட்டற்கள் குத்தகைக்கு அல்லது கிரையத்திற்கு வெளியார்களுக்கும் வெளி நாட்டவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளமை பற்றியும் வுடதிகள் தரப்பில் சுட்டிகாட்டப்பட்டது. 2001 -2012 இற்குட்பட்ட காலத்துக்கான கெடுப்பனவுகள் வைபில் இடப்படாத நிலையில் இதற்கான உரித்தா ளிகளில் சிலர் இறந்து விட்டமையும் இங்கு அவதா னத்திற்குட்பட்டது.

அத்துடன் பெருந்தோட்ட யாக்க தோட்டங்ககள் யாவும் அரசாங்கத்தின் பெறுப்பில் நிர்வகிக்கப்படு வதால் இங்கு தொழில் புரியும் தொழிலாளர்களே ஆவர்.

எனவே ஏனைய அரச றிறுவனங்கள் தமது பணியாளர்களுக்கு வழங்கும் சட்டரீதியாக சகல கொடுப்பனவுகளுக்கும் இவர்கள் உரித்தாளிகளாவர் எனிற நிலைப்பாட்டினை ஆணைக்குழு தலைவர் ; தீபிகா உடகம கொண்டிருந்கமை குறிப்பிடத்தக்கது. தோட்ட தொழிலாளர்களின் எதிர்கால நலன் சார்ந்த இவ்விவகாரம் தீர்வு காணப்படவேண்டியது முக்கி யம். மலையக பிரதிநிதிகளும் இது குறித்து ஆக்க பூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ள தோட்ட மக்களின் வாழ்



வாதாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வழிவகுக்க லாம் என்பதே சமூக ஆர்வலர்களின் கருத்தாக இருக் கின்றது. எனினும் பாதிக்கப்பட்ட ; பெருந்தோட்ட மக்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாகவே இன் னல்களை அனுபவித்து வருகின்ஙனர்.

இவர்களில் ஒரு தொகையினர் அன்னையில் வீதிப் போராட்டத்தில் குதித்திருந்தனர். கண்டி மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவில் மூடப்பட்ட தோட்டங்களில் ஒன்று அரங்கலை பெருந்தோட்டம். கீழ் கொத்மலை நீர்மின் திட்டம் அமுலுக்கு வந்த போது மேற்படி தோட்;ட காணிகள் சிங்கள மக்களுக்கு பகிர்தளிக் கப்பட்டன. இது போலவே மொச்சக்கொட்டை ,அக்கறைமலை போன்ற தோட்டங்கனில் இருந்தும் தோட்ட மக்கள் வெளியேற்றப்படலாயினர். இவ் வாறு வெளியேற்றப்பட்டவர்கள் லிந்துலை ,திஸ் பனை பகுதிகளில் மாடி வீட்டு லயங்களில் குடியேற் றப்பட்டனர்.

இவ்வாறு தோட்டங்கள் மூடப்படும் போர்வை யில் தோட்ட தொழிலாளர்கள் வெளியேற்றப்படலா யினர். துரித மகாவலி திட்டத்தினால் வாழ்விட்ங் கனை இழந்த சிங்கள கிராம மக்களே இவ்வாறு குடியேற்றம் வெய்யப்பட்டனர்.

இந்நிலைமைக்கு முகம் கொடுத்தவர்களின் ஒரு தொகையினரே மொச்சகொட்டை தோட்ட மக்கள்; இத்தோட்ட ஜனவசம் எனப்படும் (மக்கள் பெறுந் தோட்ட அபிவிருத்தி சபை) அரச துறைக்குச் செ ாந்தமானது. இங்கு 37 தமிழ்க் குடும்பங்கள் பகிர்ந் தளிக்கப்பட்ட சிறு தோட்ட வேளையையே நம்பி வாழ்ந்தன. நாடலாவிய தோட்ட தொழிலில் பரிச்ச யம் கொண்ட சிங்கள மக்கள் இவர்களை வேளைக்கு அழைப்பது இல்லை.

அதனால் வேலைவாய்ப்புகள் பறி போயின. சி ங்களவர்களுக்கு உரிமையாக்கப் பட்ட காணிகளில் அமைந்திருந்த லயங்களே இவர்களது உறவிடங்கள். ஆனால் இவர்கள் இந்த லயங்களில் வாழ்வதை இக் காணி உரிமையாளர்களான சிங்களவர்கள் விரும்ப வில்லை.

இதனால் இரு சாரார்களுக்கு இடையில் சில காரணமாகவே முருகல் நிலை காணப்படுவதாக தக வல்கள் தெரிவிக்கின்றனர். இதன் பின்னணியிலேயே மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். நாவலப் பிட்டி போவில தோட்ட தொழிலாளர் விடயத்தில் ஜனாதிபதியின் தலையீடாவது நடந்தது.

இந்த மொச்சகொட்டை தோட்ட மக்கள் விவ காரத்தின் உருப்படியாக ஏதாவது நடந்ததாக வேண் டும். இப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய பெறுப்பு மகாவலி அபிவிருத்திச் சபையைச் சார்ந்தாகவே இருக்கின்றது.

காணிகளை இழந்த சிங்கள சமூகத்துக்கு நியாய மான தீர்வினை வழங்கிய இச்சபை காணியை மட்டுமன்றி வாழ்விட வாழ்வாதார உரிமைகளையும் இழந்து நிற்கும் இத்தோட்ட மக்கள் பால் உரிய கரிச னையைக் காட்டவிலிலை

1987 ஆம் ஆண்டு இம்மக்களுக்கு காணி பெற் றுக் கொடுக்க வேண்டும் என்று காணி அமைச்சு உறுதியுரை தந்திருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் எம.திலகராஜ் கூறுகிறார்.

இக் காலப்பகுதியில் பெருற்தோட்டக்காணிகள் பறிக்போனதை பற்றி கவலைப்படாத இ.தொ.க. மாடி லயம் அமைத்து குடியேறியது வரலாற்று தவறா கும் என்கிறார் அவர். பெறும்தோட்ட மக்களது பிரச் சினைகள் என்று வரும் போது ஆளையாள் குற்றஞ்ச ாட்டுவது மலையக அரசியலில் சகஜமாகப் போய் விட்டது.

இதனையே தமக்கு பக்க பலமாகப் பயன்படுத்திக் கொள்கின்றது ஆளுதரப்பு. ஏற்கனவே பெறும்தோட் டத்துறை வாழ்வாதாரம் பாதிப்பினை நோக்கி நகர ஆரம்பித்து விட்டது. அன்றாடட வாழ்வியல் அச்சத் துக்குள்ளாகி வருகின்றது. ஒரு சமூகத்தின் வாழ்விட உரிமை என்பது தவிர்க்க முடியாதது. அதை மலினப் படுத்துவது மனித உரிமை மீறலாகும்.

இந்த மொச்சகொட்டை தோட்ட மக்களைப் போலவே இன்னும் பலர் போக்கிடமின்றி தவிக்கின் றனர். இன்னும் சொல்ல போனால் சிறு தோட்ட உட மையாளர்களின் தயவிலேயே வாழ வேண்டியுள்ளது. இது சிரந்தரமானது அல்ல.

இம்மக்கள் வாழும் இடங்களை மலையக வீட மைப்புத் திட்டங்கள் எட்டிப் பார்க்குமா என்பது கேள்விக்றியது;

இதனை மனதிற் கொண்டு மலையக வீடமைப் புத் திட்டம் விரிவுபடுத்த வேண்டும். அதில் நிர்வ கியான தோட்ட மக்களுக்கு தடையாக தனியார் தோட்ட நிர்வாகங்களோ அரசு பொறுப்பில் உள்ள தோட்ட நிர்வாகங்களோ இருப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாததே ஆகும்.



# முடிந்து போன பெருங்கனவு

ஜோர்ஜ் அந்தோணி

உண்மையைச் சொல்ல வேண்டுமானால் எதை சார்ந்து வாழ ஆரம்பிக்கிறோமோ பின்னாளில் நமக்கே தெரியாமல் அதை நாமே உருக்குலைத்து விடுகிறோம் என்பதுதான் உண்மை. அப்படி அவ்வளவாக சொல்லப்படாத பல நைஜீரிய தலைமுறைகளின் ஆயுளை முடித்த கச்சா எண்ணெய்யின் கதை இது.

'நமக்கு எது வசதி என்பதில் எது சரி என்பதை மறந்து விடுகிறோம் என்கிற பிரபலமான ஒரு வரி உண்டு. பின்விளைவுகள் குறித்து எந்தப் பார்வையும் இல்லாமல் தற்போதைக்குப் பிழைத்தால் போதும் என அப்போதைக்கு அங்கீகரித்த பல விஷயங்கள் பலருடைய எதிர்காலத்தையே திருப்பிப் போட்டிருக்கிறது. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் எதைச் சார்ந்து வாழ ஆரம்பிக்கிறோமோ பின்னாளில் நமக்கே தெரியாமல் அதை நாமே உருக்குலைத்து விடுகிறோம் என்பதுதான் உண்மை. அப்படி அவ்வளவாகச் சொல்லப்படாத பல நைஜீரியா தலைமுறைகளின் ஆயுளை முடித்த கச்சா எண்ணெய்யின் கதை இது.

நைஜீரியா இயற்கையாகவே கச்சா எண்ணெய் கிடைக்கிற நாடு. முக்கியத் தொழிலாக இப்போது இருப்பதும் கச்சா எண்ணெய்தான். ஆப்பிரிக்காவில் அதிக பெட்ரோல் உற்பத்தி செய்கிற நாடு நைஜீரியா. மீடிஞ்னுணு ஈனுடூஞச் பெட்ரோல் உற்பத்தியில் மிக முக்கியமான மாநிலம். நாட்டின் முக்கியமான ஆறு மீக்மீ. அலையாத்தி காடுகளுக்கு இடையே ஓடியது. அதைச் சுற்றி பல ஊர்கள் இருந்தன. 50 வருடங்களுக்கு முன்பு அதைச் சுற்றியுள்ளவர்களுக்கு அந்த ஆறுதான் எல்லாமே. மீன்பிடித்தொழில் அப்போது முக்கியத் தொழிலாக இருந்தது. 50 ஆண்டுகளுக்கு முன்பு கச்சா எண்ணெய்யை எடுக்கப் பல ஆயில் நிறுவனங்கள் நைஜீரியாவுக்குப் படையெடுத்தன. அதற்கு முன்பும் நிறுவனங்கள் இருந்தன. ஆனால், மிகப் பெரிய பாதிப்புகள் எதுவும் நிகழவில்லை. எல்லோருக்கும் வேலை கிடைக்கும் என்பதால் மக்களும் அரசும் அமோகமாக அவர்களை வரவேற்றார்கள். பல எண்ணெய் நிறுவனங்களும் தங்களுடைய தொழிலைத் தொடங்கினர். பைப் லைன்கள் அமைத்து தொழிற்சாலைக்கு கச்சா எண்ணெய்யைக் கொண்டு சென்றார்கள். மக்களை விபரீதத்தின் பக்கம் கொண்டு சென்றதில் இந்த பைப் லைன்களுக்கு மிகப் பெரிய பங்கிருக்கிறது. கொடூரமான பல பக்கங்கள் இங்கிருந்துதான் ஆரம்பித்தது.

பெட்ரோல் நல்ல விலைக்கு விற்கப்படுவதை மக்கள் அறிந்திருந்தார்கள். பெட்ரோலிய நாடு என்பதால் கச்சா எண்ணெய்யில் இருந்து எப்படி பெட்ரோலை பிரித்தெடுப்பது என்பதைப் பலரும் அறிந்திருந்தனர். இதற்கடுத்து நடந்த விபரீதத்தைத் தெரிந்துகொள்வதற்கு முன்பு அங்கிருக்கும் அலையாத்திக் காடுகளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். இங்குள்ள அலையாத்திக் காடுகள் பல வழிகளைக் கொண்டவை. சுமார் 1000 சதுர கிலோ மீட்டர் கொண்டவை. அந்த காடு ஒரு குழந்தையைப் போன்றது. யாரைக் கொண்டுசென்று விட்டாலும் காணாமல் போய்விடுகிற அளவுக்குப் பல வழிகளைக் கொண்டது. காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதுகூட சிரமமான பணியாகத்தான் இப்போது வரை இருக்கிறது. நன்கறிந்தவர்களைத் தவிர வேறு யார் சென்றாலும் சுற்றலில் விட்டு விடும் மாயபூமி அது. அதையொட்டிய பகுதியில்தான் எண்ணெய் நிறுவனங்கள் கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் பைப் லைன்களை அமைத்திருந்தனர்.

பெட்ரோலின் விலை, அதிக லாபம் என்கிற விஷயங்கள் மக்களை விபரீதத்தின் பக்கம் கொண்டுபோய் நிறுத்தியது. படகுகளில் பெரிய பெரிய பேரல்களை எடுத்துக்கொண்டு பைப் லைன் பக்கம் ஒதுக்கினார்கள். பைப் லைன்களை உடைத்து கச்சா எண்ணெய்களைப் பேரல்களில் நிரப்பினார்கள். ஒரு வகையில் இது ஆபத்தான வேலைதான், ஆனால் இதைவிட ஆபத்தான வேலையைச் செய்ய துணிந்தார்கள். அலையாத்திக் காடுகளில் பேரல்களைக் கொண்டுசென்று கச்சா எண்ணெய்களில் இருந்து பெட்ரோலை பிரித்தெடுக்க தொடங்கினார்கள். கச்சா எண்ணெய் முதல்தரமான எண்ணெய்யாக இருந்ததால் பெட்ரோலை பிரித்தெடுப்பது எளிதாக இருந்தது. கரணம் தப்பினால் மரணம் என்கிற வேலைதான். ஆனால் பணம், நினைத்ததைவிட அதிகம் கிடைக்கும் என்பதால் தீவிரமாக உழைத்தார்கள், கச்சா எண்ணெய்யை தீ மூட்டிக் கொதிக்க வைத்தார்கள். ஆறு மணி நேரம் கச்சா எண்ணெய்யைத் தீயில் கொதிக்க வைத்தார்கள். உடலில் எந்த உடையும் அணியாமல் மிகக் கவனமாக பெட்ரோலை பிரித்தெடுக்கத் தொடங்கினார்கள். பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் என மூன்று வகையான எரிபொருள்களும் கிடைத்தன.

20 லிட்டர் கச்சா எண்ணெய், 10 லிட்டர் பெட்ரோலை கொடுத்தது. அங்கு வேலை செய்தவர்களுக்கு ஒரு மணி நேரத்துக்கு 15 யூரோக்கள் சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. இது அவர்களின் மற்ற வேலைகளைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகம். இதைப் பார்த்த பலரும் விபரீத வேலைக்குப் படகை எடுத்துக்கொண்டு கிளம்பினார்கள். அலையாத்திக்காடுகளில் கச்சா எண்ணெய் தயாரிப்பது அவ்வளவாக வெளியே தெரியாத வண்ணம் செயல்பட்டார்கள். அதற்கு சூழலும் இயற்கையும் அவர்களுக்கு ஒத்துழைத்தது. அரசோ ராணுவமோ அவர்களின் இருப்பிடத்தைக் கண்டறிவது அவ்வளவு கடினமான வேலையாக இருந்தது. அப்படியே ராணுவத்திடம் சிக்கிக்கொண்டாலும் பணத்தையும், பெட்ரோல் பேரல்களையும் கொடுத்து அவர்களிடமிருந்து தப்பித்தார்கள். ஏனெனில். பெட்ரோலும் பத்தும் செய்யும்.

தயாரித்த டீசல் மற்றும் மண்ணெண்ணெய்யை உள்ளூரில் விற்பனை செய்தனர். பெட்ரோலுக்கு விலை அதிகம் என்பதால் பக்கத்து நாடான பெனின் நாட்டின் துறைமுக நகரமான போர்டோ நோவாவுக்கு கடத்திச் சென்று விற்பனை செய்தனர். பெட்ரோலை உற்பத்தி மட்டுமே செய்தவர்கள் கடத்தல்காரர்களாகவும் மாறினர். கடல் வழியாகவும், சாலை மார்க்கமாகவும் பெட்ரோலை கடத்தினர். பைக்கில் 700 லிட்டர் பெட்ரோலை 14 கேன்களில் நிரப்பித் தனி ஒருவராக எடுத்துச் சென்றனர். கொஞ்சம் சறுக்கினாலும் மரணம் தான். தவறி விழுந்து ஒரு தீப்பொறி கிளம்பினாலும் உயிருக்கு உத்தரவாதமில்லை. எல்லாம் தெரிந்தும் பெட்ரோல் கடத்தும் வேலையைச் செய்ய பலரும் முன் வந்தனர். பெட்ரோல் கடத்துவது ஒரு திறனாகப் பார்க்கப்பட்டது. தவறி விழுந்தவர்கள் இறந்தனர். எண்ணெய் நிறுவனங்களுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பினர். தனியார் பாதுகாவலர்களை நியமித்தார்கள். அரசுக்கு இது மிகப்பெரிய தலைவலியாக மாறியது. ராணுவம் பெட்ரோல் தயாரிக்கும் இடங்களையும், மனிதர்களையும் தேடி வேட்டையைத் தொடங்கியது. ஆனால், அது அவ்வளவு சுலபமில்லை. அலையாத்திக் காடுகள் அவர்களுக்கு மிகப்பெரிய சுமையாக இருந்தது.

பெட்ரோல் ஏற்றுமதியால் கடத்தல்காரர்களிடமும் மக்களிடமும் தாராளமாக பணம் புழங்க ஆரம்பித்தது, ஆயுதங்கள் வாங்கினார்கள், குரூரம் வளர்ந்தது, கொலைகள் நடந்தன. ஊரே ஆயில் மயமானது, உண்பது, உறங்குவது, வாழ்வது என எல்லாமே ஆயில் மயமானது. வீடுகளில் பெட்ரோலை பிரித்தெடுக்கத் தொடங்கினார்கள். பேரல்கள் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக பெட்ரோல் தயாரிக்க இடம் அதிகமாகத் தேவைப்பட்டது. தயாரித்த பெட்ரோலை பயன்படுத்தி காடுகளை அழித்தார்கள். பல ஏக்கர் காடுகளை தீயிட்டு கொளுத்தி அவர்களுக்கென ஒரு இடம் அமைத்துக்கொண்டார்கள். இப்படிப் பல கூடாரங்கள் அலையாத்திக்காடுகளுக்குள் அமைக்கப்பட்டன. 50 வருடங்களுக்கு முன்பு செழிப் போடும் பச்சை பசேல் என இருந்த ஆறுகளின் கதை உருமாறத் தொடங்கியது. பல வரலாறுகளில் குறிப்பிடப்பட்ட ஆறு முற்றிலும் அழிக்கப்பட்டது. ஆறுகளில் கச்சா எண்ணெய் முழுவதுமாகப் படர்ந்து கிடந்தது. பெட்ரோலைப் பிரித்து எடுத்துப்போக மீதிக் கழிவுகளும் ஆற்றில் கொட்டப்பட்டன. ஆறுகளில் முற்றிலும் மீன்கள் இல்லாமல் போயின.

20 லிட்டர் கச்சா எண்ணெய்யில் இருந்து 10 லிட்டர் பெட்ரோல் பெறப்பட்டது. மீதி கழிவாக ஆற்றில் கொட்டப்பட்டது. ஆறு அழிக்கப்பட்டது. மீன்கள் இறந்தன, மீனவனும் சட்ட விரோதமாக பெட்ரோல் தயாரிக்க கிளம்பினான். சட்ட விரோத செயல்கள் கண்காணிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டன. இருந்த இயற்கையையும் அழித்தாகி விட்டது. வேறு வழியில்லை, மனித இனம் ஒவ்வொரு இழப்புக்குப் பிறகும் ஒரு புதிய யோசனையைக் கையில் எடுக்கும். நைஜீரிய மக்கள் யோசனை மீண்டும் இயற்கை பக்கமே திரும்பியது. ஆறுதான் நாசமாகி இருந்தது, ஆனால் ஆற்றில் மணல் இருந்தது கண்களை உறுத்தியது. ஆற்று மணலை எடுத்து விற்பனை செய்ய ஆரம்பித்தார்கள், விலைக்கு வாங்க சிமென்ட் கம்பனிகள் முளைத்திருந்தன. ஆறோடு சேர்ந்து மணலும் போனது. ஒரு தலைமுறையின் வாழ்க்கையும் கனவும் இப்படித்தான் இல்லாமல் போனது. அரசு பெட்ரோல் தயாரிப்பவர்கள் மீதும், கிடங்குகள்மீதும் தாக்குதலை தொடுத்தது . பலருடைய உயிர் போனது. தீவிர நடவடிக்கை காரணமாக சட்ட விரோத பெட்ரோல் தயாரிப்பு கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்தப்பட்டது. 2016-ல் முற்றிலும் சட்ட விரோதமாக பெட்ரோல் தயாரிப்பது தடை செய்யப்பட்டது. ஆனால், காலம் மீண்டும் தன்னை சீரமைத்துக்கொள்ளும் என்கிற நம்பிக்கை பொய்யானது. மக்கள் மீண்டும் பழைய வாழ்க்கைக்குத் திரும்ப இயற்கை ஒத்துழைக்கவில்லை. இழப்புகளை எல்லாம் கடந்து எல்லா தவறுகளையும் சரிசெய்து மீண்டுவருவதற்குள் காலம் அடுத்த தலைமுறையை அம்மக்களின் கையில் கொடுத்திருக்கிறது.



மீண்டும் முதல் வரிக்குச் செல்லுங்கள் நமக்கு எது வசதி என்பதில் எது சரி என்பதை மறந்து விடுகிறோம்.

நன்றி: விகடன்

## அதிகரிக்கும்...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

வருடத்தின் ஆரம்பத்தில் பெற்றுக் கொண்டனர். தற்போது மண்ணுக்கு அருகில் உள்ள மக்கள் உழவு இயந்திரத்தின் மூலமாக ஒருபெட்டி ஆற்றுமணலை ரூபா 6000க்கு மேற்பட்ட தொகையினை செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அதே போன்று மூன்று கியூப் ஆற்று மணலை கடந்த ஆண்டின் இறுதியில் பத்தாயிரத்திற்கும் குறைவான விலையில் பெற்றவர்கள் இன்று இருபத்திரெண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பணத்தினை செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதன் மூலம் தம்பிரதேசத்தில் உள்ள வளங்களை கூட குறைந்த செலவில் அனுபவிக்க முடியாதவர்களாக இங்குள்ள மக்கள் இருந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறான திடீர் விலையேற்றத்திற்கு காரணம் என்ன? மண்ணைப் பெறுவதில் சிரமங்கள் இருக்கின்றதா? அவ்வாறாக இருப்பினும் செலவினங்கள் அதிகரிக்காமல் மண்ணுக்கான விலையை எவ்வாறு அதிகரிக்க முடியும். என்ற வினாவும் பலர் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றது. அரசாங்கத்திற்கான வரி, கூலியாட்கள், எரிபொருள் போன்றவைகளுக்காக செய்யப்படும் செலவினை விட வேறு செலவுகள் பெரிதளவில் மண்ணேற்றுவதற்காக செலவு செய்யப்படுவதில்லை எனக்கூறப்படுகின்றது. அதேவேளை இவற்றில் எவ்வித பெரிதளவான மாற்றமும் ஏற்படவுமில்லை எனவும் தெரியவருகின்றது. இவ்வாறு ஒருபுறம் இருக்கையில், குறித்த பிரதேசத்தில் மண்ணுக்கான விலை அதிகரித்துள்ளமை பொருத்தமற்றதாகவே பார்க்க தோன்றுவதாகவும் பலர் கூறுகின்றனர். இவ்வாறான செலவுகளையும் விட மேலதிகமான செலவுகளும் இடம்பெறுவதற்கு சாத்தியங்களும் இல்லை. அவ்வாறு இடம்பெறுமாயின் அது மறைமுகமான செலவுகளாவே இருக்க கூடும். எனவும் கருததோன்றுகின்றது.

மண்ணுக்கான விலை அதிகரித்திருக்கின்றதான நிலையில் மறுபுறம், சட்டவிரோத மண் அகழ்வு என்ற போர்வையில், வடக்கு மாகாணத்தில் ஒரு இளைஞர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரிதும் தலைதூக்கியிருக்கின்றது. வடக்கிலே ஆர்பாட்டங்களும், வீதி மறிப்பு போராட்டங்களும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேவேளை பொலிஸார் இவ்வதிகாரத்தினை பயன்படுத்தியமை தவறென்று மறுபுறம் கூறப்படுகின்றது. பருத்தித்துறை வல்லிபுரம் ஆலயத்திற்கு செல்லும் வீதியில் 6ஆம் கட்டைப்பகுதியில் வைத்தே துன்னாலையைச் சேர்ந்த இருபத்தினான்கு வயதினையுடைய யோகராசா தினேஸ் என்ற இளைஞன் சுடப்பட்டு உயிரிழந்துள்ளான். இவ்விடயம் அங்குள்ள மக்களுக்கு அதிர்வலையை ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்வாறான உயிரிழப்பு சம்பவங்களும் மண்ணுக்காக நல்லாட்சியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றமை கவலையளிப்பவையாகவே உள்ளது.

சட்டவிரோத மண் அகழ்வு போன்றே சட்டவிரோத கசிப்பு உற்பத்திகளும் மட்டக்களப்பு பகுதியில் இடம்பெற ஆரம்பித்திருக்கின்றது. அதிகமான மதுபானசாலைகளை கொண்ட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் கூறப்படுகின்ற நிலையிலும், சட்டவிரோத கசிப்பு உற்பத்திகளும் சமூகச் சீர்கேடுகளை உருவாக்கியிருக்கின்றன. இவற்றினையும் கட்டுப்படுத்த முடியாத அரசாங்கமாகவே நல்லாட்சி அரசு இருந்து கொண்டிருக்கின்றது.

நாட்டில் நல்லாட்சி நிலைநாட்டப்பட வேண்டுமென்று இடத்துக்கிடம் மார்தட்டிக் கொள்ளும் இன்றைய அரசாங்கம் நாட்டில் சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் அனைத்து நடவடிக்கைகளையும் குறிப்பாக மண் அகழ்வு, சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளை இனங்கண்டு அதனை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்காக விரைந்து செயற்பட வேண்டும்.

அதேவேளை பாதிக்கப்பட்ட பிரதேசத்து மக்களுக்காக மண்ணுக்கான நியாய விலையொன்றினை தீர்மானித்து, அவ்விலைக்கு மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும். இதற்காக நாட்களை கடத்துவது, அன்றாடம் கூலி வேலை செய்து வாழும் மக்களை இன்னும் வறுமைக்குள் தள்ளும் செயற்பாடாகவே அமையும். இவற்றினை தவிர்த்து விரைவாக திட்டங்களை தீட்டி சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அதேபோன்று இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் நல்லாட்சி நடப்பதாகக் கூறி வெறும் நாடகக்காரர்களாக மட்டும் மக்களுக்குத் தங்களை காட்டிக்கொள்ளாமல் நல்லாட்சி என்பதன் முழு அர்த்தத்தை மக்கள் அனைவரும் அனுபவிக்கும் பொருட்டு தமது செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்பதே மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

## வவுனியாவை...

08 ஆம் பக்கத் தொடர்ச்சி

சம்பந்தப்பட்டுள்ளன. குற்றமிழைப்பதில் பரிச்சயமாகிப் போனோரிடமிருந்து நல்லொழுக்கத்தையும் ஜீவகாருண்யத்தையும் நாம் எதிர்பார்க்க முடியாது. அதற்காக அரசாங்கம் இவ்விடயத்தில் உதாசீனமாக இருந்து விடவும் முடியாது.

இவற்றுக்கெல்லாம் அடுத்ததாக வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்துவதில் போக்குவரத்துப் பொலிஸார் கொண்டுள்ள கடமைப் பொறுப்பை இவ்விடத்தில் சுருக்கமாக ஆராய வேண்டியிருக்கிறது.

வீதிப் போக்குவரத்துக் கடமையில் ஈடுபடுகின்ற பொலிஸார் தொடர்பாக மக்கள் மத்தியில் பொதுவாக நல்லபிப்பிராயம் என்றுமே இருந்ததில்லை. அவர்களது கடமையில் நேர்மைத்தன்மை உண்டென்ற நம்பிக்கை மக்களிடம் கிடையாது. போக்குவரத்துப் பொலிஸ் பிரிவானது இலஞ்சத்தில் ஊறிப் போனதென்று மக்கள் பொதுவாக நினைக்கின்றனர். அதற்காக போக்குவரத்துப் பொலிஸ் பிரிவில் உள்ள அத்தனை பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேர்மையற்றவர்களெனக் கூறி விட முடியாது. கூடுதலானவர்கள் முறைகேடாக நடந்து கொள்வதனால், நேர்மையான உத்தியோகத்தர்களும் பாவத்தைச் சுமக்க வேண்டியுள்ளது.

போக்குவரத்துப் பொலிஸார் மீது இவ்வாறு களங்கம் பதிக்கப்பட்டிருப்பதனாலேயே சாரதிகள் துணிச்சலுடன் குற்றமிழைக்க முற்படுகின்றனர். எந்தவொரு குற்றத்தையும் இலஞ்சத்தின் மூலம் மூடிமறைத்து விடலாமென சாரதிகள் நினைக்கின்றனர். எனவே போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் மீதான களங்கம் அகற்றப்படுவது முக்கியம். உயரதிகாரிகள் இனிமேலாவது அதற்கான தீவிர நடவடிக்கைகளை முன்னெடுப்பது பிரதானம்.

நெடுஞ்சாலைகளிலும் சிறு வீதிகளிலும் எப்போதும் போக்குவரத்துக் குற்றங்கள் நடந்தபடியே உள்ளன. காதைப் பிளக்கும் பேரொலியுடனும், புகையைக் கக்கியபடியும் வாகனங்கள் செல்கின்றன. சில வாகனங்கள் எல்லை மீறிய வேகத்துடன் தறிகெட்டு ஓடுகின்றன. மஞ்சள் கோடு கடவையை அலட்சியப்படுத்தியபடி செல்கின்ற வாகனங்கள் ஏராளம். போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவித்தபடி, போட்டி போட்டபடி அசுர வேகத்தில் தனியார் பஸ்கள் செல்வதை நாம் தாராளமாகவே காண்கிறோம்.

ஆனால் இக்காட்சிகளெல்லாம் போக்குவரத்துப் பொலிஸாரின் கண்களுக்குத் தென்படுவதில்லை.

சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்ட சந்திகளில் எங்காவது மறைந்து நின்றபடி சிவப்பு விளக்கை அலட்சியம் செய்தவாறு வருகின்ற வாகனங்களைக் கண்டுபிடிப்பதில் மாத்திரமே இவர்களின் கடமைப் பொழுது கழிகின்றது. கொழும்பில் உள்ள சில சந்திகளில் ஒரே தடவையில் நான்கு பொலிஸார் இதற்காக நிற்பதுவும் சாதாரணமாகக் காணக்கூடிய காட்சி.

இவ்வாறான ஏராளமான குறைகளின் மத்தியிலேயே வீதி விபத்துகள் பெருகிச் செல்கின்றன. விபத்துகளுக்கான அடிப்படையை ஆராயாமல் அபராதத் தொகையை அதிகரிப்பது பலனைத் தருமென்று நம்ப முடியவில்லை. அநியாய மரணங்களைக் கட்டுப்படுத்துவதில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.




## ஓட்டமாவடி காளி கோயிலை உடைத்ததுக்கு எதிராக வியாழேந்திரன் பொலிஸில் முறைப்பாடு!!



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஓட்டமாவடியில் இருந்த காளி கோயிலை உடைத்து மீன் சந்தை கட்டிய குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட மூன்று குற்றச் சாட்டுக்களை முன் வைத்து முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக மட்டக்களப்பு பொலீசில் முறைப்பாடு ஒன்றினை பாராளுமன்ற உறுப்பினர் ச. வியாழேந்திரன் அவர்கள் பதிவு செய்துள்ளார்.

மட்டக்களப்பு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்கள் குறித்த முறைப்படினை பதிவு செய்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு கூறுகையில்;

நான் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளேன்.

ஒன்று ஓட்டமாவடியில் இருந்த தமிழ் மக்களுக்கு சொந்தமான காளிகோயிலை உடைத்து காளிகோயில் காணியில் ஹிஸ்புல்லா அவர்கள் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் பதவியை பாவித்து மீன் சந்தை கட்டியமை , தனக்குச் சார்பாக தீர்ப்பு சொல்லாத நீதி பதியை இடம் மாற்றி தனக்கு சார்பான நீதிபதியை நியமித்து தீர்ப்பை மாற்றி எழுதியமை,இலங்கையில் கடந்த ஏப்ரல் 21 குண்டு வெடிப்பு நடைபெற்ற மறுநாள் நாடு பூராகவும் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த நிலையில் பாசிக்குடா விடுதியில் இருந்த மூன்று அரேபியர்களை தனது அதிகாரத்தை பயன்படுத்தி நாட் டை விட்டு வெளியேற்றியமை அதில் ஒருவர் விசா இன்றி தங்கி இருந்தமை உள்ளிட்ட குற்ற சாட்டுக்களை முன்வைத்து முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதாகவும் இது குறித்து அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும் என தெரிவித்தார்.

## பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழை இணையத்தில் பெறுவதற்கான நடவடிக்கை

**மண்டூர் நிருபர்**

கல்விப் பொதுதராதர உயர் தரம், சாதாரண தரம் உள்ளிட்ட அனைத்துப் பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ்களை இணையதளம் ஊடாகப் பெற்றுக் கொள்ளவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித் அறிவித்துள்ளார்.

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் கல்விப் பொதுதராதர உயர் தரம், சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்களை பிரதான தபாலகங்களில் பெற்றுக்கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இதற்காக பரீட்சைகள் திணைக்களமும் தபால் திணைக்களமும் செய்து கொண்ட உடன்படிக்கை தொடர்பான வெளியீடு அண்மையில் கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

அதற்கு மேலதிகமாக இணையத்திலும் பெறுபேற்றுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான வசதி செய்யப்படவுள்ளது.

இதற்கான கண்டனத்தை பரீட்சாத்திகள் தமது கடனட்டை அல்லது டெபிட் அட்டைகளைப் பயன்படுத்திச் செலுத்த முடியும்.

அல்லது அருகிலுள்ள தபால் நிலையத்தில் அதற்கான கட்டணத்தை செலுத்தி, பற்றுச்சீட்டு இலக்கத்துடன், இணையத்தளத்தின் ஊடாக பரீட்சை பெறுபேற்று சான்றிதழுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதனையடுத்து, குறித்த சான்றிதழை விரைவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

எதிர்வரும் காலங்களில் வெளிநாட்டிலுள்ள இலங்கைக் குடிமகன் பரீட்சை பெறுபேற்று சான்றிதழை ஒன்லைன் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பரீட்சார்த்தி கொழும்பிலுள்ள பரீட்சைத் திணைக்களத்துக்கு வருகை தந்து சிரமப்படவேண்டிய தேவையேற்படாது என்று பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சமூர்த்தி பிரிவினரால் புகைத்தல் எதிர்ப்பு ஊர்வலம்







**பாண்டிருப்பு நிருபர்**

கல்முனை வடக்கு தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகப் பிரிவின் சமூர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவினரால் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் பிரதேச செயலாளர் தியாகராஜா அதிசயராஜ் தலைமையில் நடைபெற்றது.

சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ்.சிவம், சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் கே.தியாகராஜா, சமூர்த்தி உத்தியோகஸ்தர்கள், பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

புகைத்தல் எதிர்ப்பு ஊர்வலம் ஆரம்பமாவதற்கு முன்பு புகைத்தல் எதிர்ப்புக் கொடியினை சமூர்த்தி முகாமையாளர் எஸ்.சிவம் பிரதேசசெயலாளர் அதிசயராஜ்சிற்கு அணிவித்து நிகழ்வினை ஆரம்பித்துவைத்தார்.

இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள்
என்சுவாசம் மெல்லத்தேயும்,
மது வெறி என் தலைக்கு ஏறினால் நானும் என் குடும்பமும் தலை கீழாக மாறும்,
இளமை இனிமையானது, புதுமையானது மதுவினால் அதை இழந்து விடாதே,
நூன் விடும் புகை எனக்கே எமன் என்ற விழிப்புணர்வு பதாதைகளை தாங்கியிருந்தனர்.

குல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றலில் ஆரம்பித்த ஊர்வலம் கல்முனை பிரதான வீதிவரை சென்று பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.

## தலசீமியா நோய் தொடர்பான விழிப்புணர்வு





**புதுக்குடியிருப்பு நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்ற தொற்றா நோய்களுள் தலசீமியா நோயும் ஒன்றாகும். இந்நோய் தொடர்பாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுவருகின்றது.

இதனொரு அங்கமாக மட்டக்களப்பு பட்டிருப்புக் கல்வி வலயத்திற்குட்பட்ட குருமண்வெளி சிவசக்தி மகாவித்தியாலயத்தில் தலசீமியா நோய் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நடைபெற்றது. பாடசாலை அதிபர் மு.தருமரெத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் விஜி திருக்குமரன் கலந்து கொண்டு தலசீமியா நோய்தொடர்பான விளக்கங்களை மாணவர்களுக்கு வழங்கினார்;.

மட்டக்களப்ப மாவட்டத்தில் தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்ட 60 பேர் இனங் காணப்பட்டுள்ளனர். இது ஒரு பரம்பரையியல் நோயாகும். இரத்தத்தில் காணப்படும் செங்குருதிச் சிறு துணிக்கையில் உள்ள ஹிமோகுளோபின்கள் உரிய காலத்திற்கு முன்னர் அழிவடைவதால் இரத்தத்தில் ஒட்சிசன் காவும் திறன் குறைவடைகின்றது. இதனால் சாதாரண உடலியல் தொழிற்பாடுகளில் மாற்றம் ஏற்படுவதினால் இந்நோயின் அறிகுறிகள் உடலில் தென்படுகிறது.

தலசீமியா நோயில் அல்பா, பீற்றா என இருவகை உள்ளன. பொதுவாக இந்நோயுள்ள பிள்ளைகள் பிறந்து ஆறு மாதங்களின் பின்பே இந்நோய் அறிகுறிகள் தென்படும். குருதியில் காணப்படும் ஹிமோகுளோபின் அளவு குறைவடைவதால் ஏற்படும் விளைவுகளே நோயின் அறிகுறிகளுக்கான காரணமாகும்.

கண், நாக்கு, வெளிறிப்போதல், களைப்பு, மூச்சுவாங்குதல், சோர்வுத்தன்மை, உணவில் பிரியமின்மை போன்றவையும் தலசீமியா நோயின் அறிகுறிகளாகும் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் டாக்டர் விஜி திருக்குமரன் தெரிவித்தார்.

## கல்முனை தாழையடிக்குளம் விவசாயிகளின் முயற்சியினால் தூர்வாரப்படுகின்றது

**பாண்டிருப்பு நிருபர்**

அம்பாறை மாவட்டம் கல்முனை கரவாகுப்பற்று விவசாயக் கண்டத்திற்கு நீர் பாய்ச்சப்படுகின்ற கல்முனை தாழையடிக்குளத்தினை துர்வாரும் நடவடிக்கையில் அங்குள்ள விசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கல்முனை மாநகர சபையின் உறுப்பினர் க.சிவலிங்கம் நீர்பாசனத் திணைக்களத்திடம் விடுத்தவேண்டுகோளுக்கமைய கல்முனை நீர்பாசனத்திணைக்கள பொறியியலாளர் ராஜ்குமாரின் ஒத்துழைப்புடன் விவசாயிகளின் பங்களிப்புடனும்;; கல்முனை தாழையடிக்குளம் துர்;வாறப்படுகின்றது.

குறித்த தாழையடிக்குளத்தினூடாக வயல்நிலத்திற்குரிய வாய்க்கால் தோண்டப்பட்டப்பட்டு ஆழமாக்கும் பணிகள் நடைபெறுகின்றது. கல்முனை கரவாகுப்பற்று விவசாயக் கண்டம் கடந்த சில தினங்களாக இங்கு நிலவும் கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. இக்கண்டத்திலுள்ள 450 ஏக்கருக்கும் அதிகமான வயல்நிலங்கள் நீர் இன்றி வரண்டு போயுள்ளன.

இதனையடித்து கல்முனை தாழையடிக்குளத்தினை அடைத்துள்ள நீர்த்தாவரங்களும் அகற்றப்படுகின்றது. கரவாகுப்பற்றுக் கண்டத்திலுள்ள விவசாய நிலங்களுக்கு பயன்படும் தாழையடிக்குளமான சட்டவிரோத குடியிருப்பாளர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டுவருவதாகவும் இதனால் குளத்தின் பரப்பளவு சுருங்கிவிட்டதாகவும் எதிர்காலத்தில் இக்குளம் காணமல் போகும் வாய்ப்புள்ளதாகவும் கல்முனை மாநகர சபையின் உறுப்பினர் க.சிவில்ங்கம் தெரிவித்தார்.



கரவாகு கண்டத்திற்கு செல்லும் இக்குளக்கட்டு வீதியில் குப்பைகள் கொட்டப்படுவதினாலும் இங்குள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கின்றனர்

கல்முனை வுணீவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு உந்துசக்தியாக உள்ள தாழையடிக்குளத்தினை சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து பாதுகாக்க விவசாயத்திணைக்களம் மற்றும் கல்முனை மாநகரசபை ஆகியன நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## பெரியநீலாவணை சுனாமி வீடமைப்புத் திட்டத்தில் பெரும் சுகாதார சீர்கேடு நிலவுகின்றது

**பாண்டிருப்பு நிருபர்**



அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக் குடியமர்ந்து வசித்துவரும் பெரியநீலாவணை சுனாமி வீடமைப்பு திட்டத்தில் உள்ள மலசல கூட கழிவுக்குழிகள் நிரம்பி வழிவதினால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் சுகாதாரசீர்கேட்டிற்கும் பெரும் சிரமத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

இவ் சுனாமி வீடமைப்பு திட்டத்தில் 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். இங்குள்ள இஸ்லாமிய ரிலிப் மற்றும் கோப்பிரேசன் ஆகிய வீட்டுத்திட்டங்களில் வசிக்கும் மக்களே கழிவுநீரினால் நிரம்பி வழிகின்றன.

இங்கு நிரம்பிவழியும் மலசலகூடக் கழிவு நீர்; மக்கள் குடியிருப்பு பகுதிகளில் தேங்கி நிற்பதினால் சிறுவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், நோயாளிகள் உட்பட பலரும் உடல், உள தாக்கத்திற்குள்ளாகிவருகின்றனர். அத்துடன் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கழிவுகளை அகற்றும் முறையான செயற்திட்டம் நடைமுறைப்படுத் தப்படாமையினாலேய மலசலகூட கழிவுகள் தேங்கிநிற்கின்றன.

குறித்த வீட்டுத் திட்டத்திலுள்ள நீர் இணைப்பிற்கான குழாய்கள் கூட வெடித்து அதிலிருந்தும் வீட்டுக் கழிவு நீர் வடிந்தோடிவருகின்றது. சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட காலத்தில் இவ் வீட்டுத்திட்டத்தினை அவசர அவசரமாக முறையான திட்டமிடல் இன்றி அரசசார்பற்ற நிறுவனங்கள் அமைத்தமையே கழிவுநீர்கள் தேங்கி நிற்பதற்கு காரணமாகும்.

பெரியநீலாவணை சுனாமி வீடமைப்பு திட்டத்திற்குள் நுழைந்தவுடன் துர்நாற்றம் வீசுகின்றது. பிராதான வீதியின் அருகிலும் கழிவுகள் தேங்கியுள்ளது. இவ் வீட்டுத்திட்டத்தில் நிலவும் மலசலக்கூட கழிவுநீரை அகற்றி சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர சபை மற்றும் உள்ளூர் அரசியல் பிரமுகர்களுக்கு அறிவித்துள்ள போதிலும் எவரும் தன்னைக் கவனத்தில் கொள்ளவில்லை என அம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## பாண்டிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய திருக்குளிர்த்தி வைபவம்

**புதுக்குடியிருப்பு நிருபர்**

பாண்டிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் திருக்கதவு திறத்தல் நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிமாகியது எதிர்வரும் 17திங்கட்கிழமை நடைபெறும் திருக்குளிர்த்தி வைபவத்துடன் நிறைவடையவுள்ளது.

மகாபாரத இதிகாசக் கதையுடன் தொடர்புடைய பாண்டிருப்பு கிராமத்தின் மத்தியில் வீற்றிருந்து வேண்டும் அடியவர்களுக்கு வரமருளும் அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி உற்சவமானது 11 ஆம் திகததி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அம்மன் எழுந்தருளல் செய்யப்பட்டு பி.ப5 மணிக்கு நவமித் திதியும், உத்தர நட்சத்திரமும் கூடிய சபவேளையில் திருக்கதவு திறக்கப்ட்டது. தொடர்ந்து ஏழு தினங்கள் ஆலய பிரமத பூசகர் சிவத்திரு மு.வை.வரதராஜன் தலைமையில் நடைபெறும் உற்சவத்தில் நேற்று 15 ஆம் திகதி பி;ப.4.30 மணிக்கு பக்திப் பரவசமூட்டும் துலாக்காவடி வைபவம் இடம்பெற்று அம்மனின் திருவடியில் வைத்து அர்ச்சிக்கப்பட்ட புனித நூல் கட்டும் நிகழ்வும் இரவு 7மணிக்கு இரவுப்பூசையும் நடைபெற்றது.



இன்று 16 ஆம் திகதி அம்மனின் திருக்குளிர்த்திக் கால் வெட்டும் வைபவம் இடம்பெற்று இரவு 10 மணிக்கு அம்மனின் தவ நிலை வைபவமும் நடைபெறவுள்ளது. அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட சமய போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8மணிக்கு அம்மனின் விநாயகப்பானை எழுந்தருளலும், தொடர்ந்து ஆலயத்தில் வட்டுக்குத்துதல் இடம்பெற்று மாலை 4 மணிக்கு அம்மனின் திருக்குழந்தைகளை அழைத்துவருதலும் பின் சக்கரை அமுது வைபவமும் இரவு 6 மணிக்கு சிலம்பொலி உடுக்கை, மங்கள வாத்தியங்கள் முழங்க திருக்குளிர்த்தி பாடப்பட்டு அதன் பின் சமூத்திரத்தில் கும்பம் சொரிதலும் இறுதி நிகழ்வாக அம்மனுக்கு வாழிபாடுதலுடன் திருக்கதவு அடைத்து உற்சவம் இனிதே நிறைவுபெறவுள்ளது.

ஆலய உற்சவ காலங்களில் சமய் சொற்பொழிவுகளும், கூட்டுப்பிரார்த்தனைகளும் நடைபெறும். ஏதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆலயத்தில் எட்டாம் சடங்கு வைபவமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# குருமண்வெளி சிவசக்தி மகாவித்தியாலயத்திற்கு புதிய அதிபராக புஸ்பராஜா நியமிக்கப்பட்டுள்ளார்

**புதுக்குடியிருப்பு நிருபர்**

மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட குருமண்வெளி சிவசக்தி மகாவித்தியாலயத்திற்கு புதிய அதிபராக இலங்கை அதிபர் தரம் 2ஐச் சேர்ந்த செல்வநாயகம் புஸ்பராஜா நியமிக்கப்பட்டுள்ளார்

இவர் 1998 இல் ஆசிரியர் சேவைக்குள் நுழைந்தாவர் முதல் நியமனத்தை மட்டக்களப்பு பட்டிருப்பு வலயத்திலுள்ள அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டு கடமையாற்றினார். 2006 இல் நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை தரம் 2 இற்கான போட்டிப்பரீட்சையில் சித்திபெற்று 201ழ முதல் அதிபராக கடமையாற்றுகின்றார்.

மண்டூர் 14 சக்தி மகாவித்தியாலயத்தில் 2010 முதல் அதிபராக பொறுப்பேற்று 10 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். இவரது காலத்தில் அப்பாடசாலை பல்வேறு பௌதீக வளங்களையும், பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுக்கொண்டது. மண்டூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாகவும்ஈ தரம் ஒன்று தொடக்கம் தரம் ஒன்பது வரையான வகுப்புக்களுடன் இயங்கிவந்த பாடசாலையை மண்டூர் சக்தி மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தியதுடன் அங்கு வர்தகப்பிரிவு, கலைப்பிரிவினை ஆரமப்ணீத்து தரம் 1சீ பாடசாலையாகவும் தரம் உயர்த்தப்பாடுபட்டுள்ளார். அத்துடன் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளார். அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தில் ஏ தரத்தில் அப்பாடசாலை உள்வாங் கப்ட்டமை, மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகள் உட்பட் சகல வழிகளிலும் அவர் கடமையாற்றிய பாடசாலையின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டுள்ளார்.



அதிபர் புஸ்பராஜா பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரியாகவும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டமேல் கல்வி டிப்ளோமா தேசிய கல்வி நிறுவகத்தில் பாடசாலை முகாமைத்துவ கற்கை நெறியினையும்(டி.எஸ்.எம்) பூத்தி செய்துள்ளார். அத்துடன் தாய்லாந்தில் பாடசாலை முகாமைத்துவ கற்கை நெறியினை கற்றுள்ளார்.

சாரணர் கற்கை நெறியில் அவஸ்தை ஐந்து பூர்த்தி செய்துள்ளார். மாவட்ட சாரணர் தலைவராகவும் செயற்பட்டுவருகின்றார்.

மட்டக்களப்பு அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்றவர் தனது உயர் கல்வியை மட்டக்களப்பு செட்டிபாளையம் மகாவித்தியாலயத்தில் கற்றுள்ளார். சிறந்த விளையாட்டுவீரராக திகழ்ந்தவர் அம்பிளாந்துறை கதிரவன் விளையாட்டுக்கழகத்தின் தலைவராக இருந்து அக் கழகத்தினை விளையாட்டு ஊடாக எழுச்சிபெறச் செய்து பல உடற்கல்வி ஆசிரியர்களை உருவாக்கியுள்ளார்.

சிறந்த நிர்வாகியான அதிபர் செ.புஸ்பராஜா குருமண்வெளி சிவசக்திமகா வித்தியாலயத்தின் அதிபராக கடமையேற்றுள்ளார். இவரது சேவையினை பாடசாலைச்சமூகம் மகிழ்சியுடன் வரவேற்றுள்ளது.




# திருக்கோவில் ஸ்ரீ சீரடிசாய் கருணாலயத்தில் தினமும் அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஆரம்பம்

**புதுக்குடியிருப்பு நிருபர்**

தற்போது நாடெங்கிலும் இருந்து கதிர்காமம் முருகன் ஆலயத்திற்கான பாதயாத்திரை பக்தர்களினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. கதிர்காமம் கொடியேற்றம் எதிர்வரும் ஜீலை 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் கதிர்காமம் நோக்கி கால்நடையாகச் செல்லும் பக்தர்கள் தங்கி இளைப்பாறிச் செல்லும் திருக்கோவில் தாமரைக்குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ சீரடிசாய் கருணாலயத்தில் நாளை 17 ஆம் திகதியில் இருந்து ஜீலை 17 ஆம் திகதிவரை தினமும் அடியார்களுக்கு மூன்று வேளையும் அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளதாக சீரடிசாய் கருணாலயத்தின் ஸ்தாபகத்தலைவர் மாதாஜீ சீத்தா விவேக் தெரிவித்தார்.

திருக்கோவில் தாமரைக்குளம் ஸ்ரீ சீரடிசாய் கருணாலயம் ஊடாக பல்வேறு சமய, சமூக சேவைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இவ் கருணாலயமானது நோர்வேயில் வசிக்கும் சீரடிசாய் பகத்தரான சீத்தா விவேக்கின் குடும்ப உறுப்பினர்களால் நிர்மாணிக்கப்ட்டுவருகின்றது. புலத்தில் வாழும் ஏழை மாணவர்களினதும், மக்களினதும் முன்னேற்றத்துக்காக முழுக்க முழுக்க சேவையை நோக்கமாகக் கொண்டே சீரடிசாய் கருணாலயம் செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாவிதன்வெளியில் திருத்தப்படாத வீதியால் அவதியுறும் மாணவர்களும் பொதுமக்களும்

**அன்புவெளி நிருபர்**

நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட நாவிதன்வெளி அன்னமலையிலிருந்து மண்டூருக்கான பிரதான போக்குவரத்துப் பாதையாக காணப்படும் பழைய உகணை வீதி பல வருடங்களாக மீள்திருத்தப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

கடந்த 2002ம் ஆண்டு காலப்பகுதியில் இப்பாதைக்கு தார் இடப்பட்டது அதன் பின்னர் எதுவித திருத்தப் பணிகளும் மேற்கொள்ளப்படாது படிப்படியாக சேதமடைந்து தற்போது 17 வருடங்கள் கடந்த நிலையில் வீதி பயணம் செய்ய முடியாத நிலையில் படுமோசமாகக் காணப்படுகின்றது.

கல்முனையிலிருந்து மண்டூருக்கு செல்லும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான அரச பேருந்துகள் தனியார் பேருந்துகளும் மற்றும் 13ம் கிராமத்திற்குச் செல்லும் தனியார் பேருந்துகளும் இவ்வீதியினூடாகவே பயணிக்கின்றன. மேலும் அன்றாடம் முச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கரவண்டிகளும் இவ்வீதியினூடாக பயணிக்கின்றன.

நாவிதன்வெளி இலங்கை வங்கி சந்தியிலிருந்து 7ம் கிராமம் வரையான 1.5 ஒட் தூரமே இவ்வாறு முற்றாக சேதமடைந்து தாரின் கீழிருந்த கருங்கற்கள் சிதறி வீதியின் இருமருங்கிலும் காணப்படுவதுடன் நடுப்பகுதி குழிகளாகக் காணப்படுகின்றது. இதனால் வீதியின் இருபுறத்திலுமுள்ள மணற்பகுதியினூடாகவே வாகனங்கள் ஒருபுறம் சரிந்தவாறு ஆபத்தான நிலையில் பயணிக்கின்றன.



இதேவேளை நாவிதன்வெளி கோட்டத்திலுள்ள ஒரேயொரு 1அஆ பாடசாலையான கமு/சது/ நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயமும் இவ் வீதியிலேயே அமைந்துள்ளது. இப்பாடசாலைக்கு 7ம் கிராமம், 15ம் கிராமம், 13ம் கிராமம், வேப்பையடி மற்றும் தம்பலவத்தை ஆகிய கிராமங்களிலிருந்து மாணவர்கள் இவ்வீதியினூடாகவே துவிச்சக்கரவண்டிகளில் வருகை தருகின்றனர். இவர்களில் பலர் சிதறிய நிலையிலுள்ள கற்களில் சறுக்கி விழுந்து கற்களில் தலை அடிபட்டு காயங்கள் ஏற்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவங்களும் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன.

அவசர நிலைமைகளின் போதோ கர்ப்பிணித் தாய்மார்களையோ வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலைமைகளிலோ இவ்வீதியினூடாக பயணிக்க முடியாது பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தெரியப்படுத்திய போதிலும் இதுவரையில் திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்படவில்லையென இப்பகுதி பொதுநல அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

தேர்தல் காலங்களில் இவ்வீதி புனரமைக்கப்படுமென பல்வேறு அரசியல் தலைவர்களும் வாக்குறுதியளிக்கின்ற போதிலும் தேர்தல் முடிவுற்றதும் வாக்குறுதிகளை மறந்துவிடுகின்றனர். இதேவேளை இப்புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இவ்வீதியை மாத்திரம் கண்டுகொள்ளாதிருப்பது கவலைக்குரிய விடயமெனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு சிறிய ஒழுங்கைகள் கொங்கிறீட் இடப்படுகின்ற போதிலும் பழமையான அதுவும் அதிகளவு பொதுமக்களின் பிரதான வீதியாக காணப்படுகின்ற இவ்வீதியினுடைய புனரமைப்பு மட்டும் புறக்கணிக்கப்பட்டிருப்பது பெரும் வருத்தத்திற்குரியது எனக் கூறும் பொதுமக்கள், உரிய அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய அரசியல்வாதிகள் இதனைக் கவனத்தில் எடுத்து வெகுவிரைவாக இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# நாவிதன்வெளியில் வறட்சியால் வாடும் விவசாயிகளும், கருகும் வயல் நிலங்களும்



**அன்புவெளி நிருபர்**

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 20 கிராம சேவகர் பிரிவுகளும் அதிகரித்த வெப்பநிலை மற்றும் தொடர் மழையின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் மொத்தமாக 6981 குடும்பங்களைச் சேர்ந்த 22929 பேர் வசித்து வருகின்றனர் இவர்களில் பெரும்பாலானோர் தமது ஜீவனோபாயமாக விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்க்கை நடாத்தி வருகின்றனர், இந்நிலையில் தற்போதைய கொழுத்தும் வெயிலினால் இப்பிரதேசத்திலுள்ள சிறுகுளங்களில் நீர் முற்றாக வற்றியுள்ளதோடு சிறுபோக நெற்செய்கைக்காக வாய்க்கால்களில் வழங்கப்படும் நீரும் 15 நாட்கள் இடைவெளியிலேயே வழங்கப்படுவதால் பயிர் நிலங்கள் நீரின்றி கருகி வருகின்றன.

கடந்த மார்ச் மாதத்திற்குப் பின்னர் இதுவரையில் இப்பகுதியில் மழைவீழ்ச்சி கிடைக்காத நிலையில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் வெப்பத்தினால் நெற்செய்கை மற்றும் மரக்கறிச் செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு இப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வருகின்றது. அதிகளவில் நெற்பயிரின் வளர்ச்சிப் பருவம் கருகத் தொடங்கியிருப்பதனால் 15 நாட்களுக்கொருமுறை கிடைக்கும் சிறுபோக நீர்ப்பாசனத்தை பாய்ச்சினாலும் பயிர்கள் வளரத் தொடங்குமா என்பது சந்தேகமே, இதேவேளை இந்த வறட்சிநிலை நெற்பயிரின் குடலைப் பருவம் மற்றும் கதிர் உருவாகும் பருவத்திலும் தொடருமாயின் தாங்கள் சிறுபோக நெற்செய்கையை முற்றுமுழுதாக கைவிட வேண்டிய நிலை ஏற்படுமென இப்பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போதைய அதிகரித்த வெப்பம் மற்றும் மழையின்மையை கருத்தில் கொண்டு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளும் காணிகளில்கூட குறைவான நீர்ப்பாசனத்தின்கீழ் செய்கை பண்ணக்கூடிய மேட்டுநிலப் பயிர்களை செய்கை பண்ணிய போதிலும் அவற்றிற்குக் கூட நீரின்றிய நிலையில் பயிர்கள் வாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வீட்டுத் தோட்டங்களில் செய்கை பண்ணியுள்ள மரக்கறிப் பயிர்களையாவது காப்பாற்றி தமது அன்றாடத் உணவுத் தேவையையாவது பூர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காக குடிநீரைப் பெறும் ஆழமான கிணறுகளிலிருந்து நீர் இறைத்து பயிர்களுக்குப் பாய்ச்சி வருவதால் கிணறுகளின் நீர்மட்டமும் முற்றாக வற்றிய நிலையில் குடிநீரின்றியும், தமது அன்றாடத் தேவைகளுக்கான நீரின்றியும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

யாவருக்கும் உணவளிக்கும் விவசாயிகள் செய்வதறியாது கலங்கி இயற்கையை நம்பி மழைக்காக காத்து நிற்பதோடு தமக்கு வாய்க்கால்கள் மூலம் கிடைக்கும் சிறுபோக நீர்ப்பாசன நீரை குறைந்த இடைவெளியில் வழங்கினால் தாழ்நில நெற்பயிர்களை யாவது காப்பாற்றிக் கொள்வதோடு வாய்க்கால் நீரூற்று மூலம் கிணறுகளில் நீர் முற்றாக வற்றாத நிலையில் குடிநீர்த் தேவையை ஓரளவாவது பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமென அதிகாரிகளிடம் வினயமாக வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மாணவர்களின் வளர்ச்சியில் பாடசாலையின் பங்கு அளப்பரியது

**துரைவந்தியமேடு நிருபர்**

பாடசாலையின் கவின் நிலை என்பது பரீட்சை அடைவு மட்டத்தில் பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றது. கற்றல் செயற்பாடுகளுக்கு உள் நுழைகின்ற பிள்ளையின் மன நிலையில் மாற்றத்தினைக் கொண்டு வருவதில் முக்கிய பங்கு பாடசாலை ஒன்றின் கவின் நிலையில் தங்கியுள்ளது.

இவ்வாறு பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக களப் பயணத்தினை மேற்கொண்டு கல்வி நடவடிக்கைள் தொடர்பாக ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கும் போதே பட்டிருப்பு கல்வி வலயத்தின் நிருவாக விடயங்களுக்குப் பொறுப்பாக இருக்கின்ற பிரதிக் கல்வி;ப் பணிப்பாளர் எஸ்.மகேந்திர மூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பாடசாலையின் அபிவிருத்தியில் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோரின் பங்குபற்றல் அவசியமானது கல்வி நடவடிக்கையினை சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய பொறுப்புக்கள் பாடசாலை நிருவாகத்துக்குரியது.பாடசாலையில் மாதத்திற்கு ஒரு தடவையாவது சிரமதானம் மேற்கொள்வது அவசியமானது.ஒருவரைப் பிழை கூறுவதனால் மாத்திரம் சிறப்பான கல்விச் செயற்பாட்டினை முன்னெடுக்க முடியாது.

பாடசாலைக்குள் உள் நுழைகின்ற அனைத்து மாணவர்களினதும் கல்வி நடவடிக்கைகளுக்கு வகை கூறுகின்ற கடமைப்பாடு அதிபர் ஆசிரியர்களுக்குரியது அதிலிருந்து ஒரு போதும் தப்பித்து விட முடியாது.வலயத்தில் கடந்த கால பரீட்சைப் பெறுகளின் அடிப்படையில் முதன்மை பெற்றுவந்த பாடசாலையின் கௌரவத்தினை ஒரு போதும் பின் நோக்கி நகர்த்த முடியாது.முடிந்தவரைக்கும் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு பாடசாலைச் சமூகம் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டியது தார்மீக பொறுப்பாகும்.உதயபுரம் பாடசாலையின் ஆளணி மற்றும் பௌதீக வளத் தேவையினை நிறைவேற்றுவதில் வலயக் கல்வி அலுவலகம் எதிர் காலத்தில் உறுதுணையாகச் செயற்படும். அனைவரும் ஒரு இனங்கப்பாட்டுடன் செயற்பட்டு கல்வி நடவடிக்கையினை முன்னேற்றுவதற்கு தியாகம் செய்ய வேண்டிய கடமைப்பாட்டுடன் செயற்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

# கும்பாபிஷேக குடமுழுக்கு

**துரைவந்தியமேடு நிருபர்**

கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது முழுமையாக சேதமடைந்த நிலையில் தற்போது புனர்த்தானம் செய்யப்பட்ட கிழக்கிலங்கை பெரிய நீலாவணை ஆலையடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன பஞ்ச குண்ட மஹா கும்பாபிசேக குடமுழுக்கு பெருஞ்சாந்தி பெரு விழா விஞ்ஞாபனம் எதிர்வரும் 22ம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஆரம்பமாகி 25 இ26 திகதி ஆகிய இரு தினங்களிலும் எண்ணெய்க் காப்பு வைக்கும் நிகழ்வும் 27ம் திகதி வியாழக்கிழமை கும்பாபிசேகம் நடைபெற்று எதிர்வரும் ஆடி மாதம் 19ம் திகதி சங்காபிசேக கிரியைகள் நடைபெறவுள்ளது.

கிரியைகள் யாவும் சிவஸ்ரீ கா நீதிநாதக் குருக்கள் சிவஸ்ரீ ச.தனபாலசிங்கம் குருக்கள் ஆகியோரின் அருள் ஆசியுடன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ த.விஜயவர்மர்மக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

# பற்றைக் காட்டுக்குள், கவனிப்பாரற்று கைவிடப்பட்ட கூட்டுறவுச்சங்கம்

**துறைநீலாவணை நிருபர்**



நாவிதன்வெளி பிரதேச செயலக சபைக் குட்பட்ட வேம்படித் தோட்டம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், பற்றைகள் மண்டி பாழடைந்த நிலையில் கிடப்பதாக சமூக மட்டக் குழுக்களைச் சேர்ந்தவர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டு முறையாக இயங்கிய இக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 1990 ஆம் ஆண்டு யுத்த வன்செயலுக்குப் பின்னரான காலத்திலிருந்து இயங்காத நிலையில் பாழடைந்து, புற்புதர்கள் வளர்ந்து சுவர்களில் வெடிப்புகள் ஏற்பட்டு கூரைகள் அற்று கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுவதாக நுகர்வோர்களால் தெரிவிக் கப்படுகிறது.



இக்கட்டடம் கதவுகள், யன்னல்கள் இன்றி காணப்படுவதனுடன் இச்சுற்றுச் சூழல் பற்றைகள் மண்டி அடர்ந்த நிலையில் டெங்கு நுளம்புகள் மற்றும் விஷ ஜந்துக்கள் பெருகும் இடமுமாக மாறியுள்ளதனால் அருகில் வசிக்கும் பொதுமக்கள் டெங்குக் காய்ச்சல், விஷ ஜந்து தீண்டுதல் உட்பட பல்வேறு சவால்களுக்குள்ளாவதாக தெரியவருகிறது.

இரவு வேளைகளில் சமூக விரோத செயற்பாட்டாளர்கள் உட்பட பல்வேறு நபர்களால் குறித்த கட்டிடம் ஆக்கிரமிக்கப்படுவதனால் தேவையற்ற அசம்பாவிதங்களும் சமூக விரோத செயற்பாடுகளும் கலாசார சீரழிவுகளும் இடம்பெற்று வருவதாக சமூகமட்டக் குழுக்களால் தெரிவிக் கப்படுகிறது.

குறித்த அரச கட்டடத்தினது அத்தியவசிய தேவையறிந்தும் பொதுமக்களினது சவால்களை அறிந்தும் சங்க கட்டட வளாகத்தினை முறையாக துப்பரவு செய்து

புனரமைத்து பொதுத் தேவைகளுக்கு பயன்படுத்த ஆவன செய்யுமாறு, பிரதேச வாழ் பொது மக்கள் மற்றும் சமூக மட்ட குழுக்கள் கோரிக்கை விடுக்கின்றன.




## உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு


மக்கள் வங்கியின் அம்பாறை பிராந்திய முகாமையாளர் டி.எம். கபில திஷாநாயக்க

அவர்களின் பணிப்புரைக்கமைய குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று மக்கள் வங்கி கிளை முகாமையாளர் எம்.வி.எம். அன்வர் தலைமையில் பிராந்திய முகாமையாளரின் பங்குபற்றுதலுடன் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் உதவி பிராந்திய முகாமையாளர் எச்.எம்.எம்.சுபையிர் மற்றும் வங்கியின் மூவினத்தை சேர்ந்த தமிழ், சிங்கள முஸ்லிம் வாடிக்கையாளர்களும் வங்கி உத்தியோகத்தர்கள்; உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## சம்மாந்துறையில் 86 பேர் குரங்குக் கடிக்குள்ளாகி சிகிச்சை

### வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அ.இஸ்ஸதீன்

**துறைநீலாவணை நிருபர்**

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

காட்டுப்பகுதிகளில் வாழ்ந்த குரங்குகள் ,நகருக்குள் உட்புகுந்து சேனைப்பயிர்ச் செய்கைகளையும் வீட்டுத் தோட்டங்களையும் அழிப்பதுடன் வீடுகளுக்குள் உட்புகுந்து உணவுகளை நாசம் செய்து, சிறு குழுந்தைகளுக்கு காயங்களை ஏற்படுத்துவதாகவும் தெரியவருகிறது.

சம்மாந்துறை மத்திய மகாவித்தியாலய பிரதேச வளாகத்தில் (தேசிய பாடசாலை) நாளாந்தம்

குரங்குகளின் தொல்லை அதிகரிப்பதாகவும் மாணவர்கள் குரங்குக் கடிக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவதாகவும் அதிபரால் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை வேளைகளில் வகுப்பறைகளை அலங்கோலப்படுத்தி நாசம் செய்து கற்றலுக்கு இடையூறு விளைவிப்பதுடன் எந்த பொருட்களையும் பாதுகாத்து வைக்க முடியாத நிலையும் காணப்படுகின்றதென ஆசிரியர்களும் மாணவர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதான பாதை முழுவதும் குரங்குகள் நிறைந்து நிற்பதனால் பாடசாலைக்கு சமூகமளிக்கும் மாணவர்கள் உட்பட சிறுவர்கள், கற்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பெரும் பீதியுடனே பயணிப்பதாகவும் குரங்குகளின் தொல்லைகளுக்கு பல தடவை ஆளாகியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அ.இஸ்ஸதீனிடம் கேட்டபோது, கடந்த தை மாதத்திலிருந்து யூன் மாத நடுப்பகுதி வரை செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிகளிலிருந்து 86 பேர் குரங்குக் கடிக்குள்ளாகி அதி தீவிர சிகிச்சை பெற்றுள்ளதாகவும் கூடுதலாக குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் ஆகியோர்களையே தாக்கி காயப்படுத்துவதாகவும் மேலும்



குரங்கு கடித்தவுடன் வீட்டிலிருக்காமல் உடனே அருகிலுள்ள வைத்தியசாலையை அணுகுமாறும் தெரிவித்தார்.

குரங்குகளின் தொகை அதிகரிப்பதனால் குரங்குத் தொல்லைகளை கட்டுப்படுத்த குறித்த இடங்களில் உரிய அதிகாரிகளை கடமைக்கு அமர்த்துவதுடன் வனவள அதிகாரிகள் இதற்குரிய

நடவடிக்கைகளை பெற்றுத்தர வேண்டுமென பொதுமக்களாலும் சமூகமட்டக் குழுக்களாலும் கோரிக்கை விடுக்கப்படுகிறது.

## செவிப்புலனற்ற பாடசாலை மாணவர்களுக்கான அனுமதி

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை இலிங்கநகரில் அமைந்துள்ள செவிப்புலனற்றோர் பாடசாலையில் மாணவர்களுக்கான அனுமதிகள் இடம்பெற்று வருகின்றன.

எனவே, விடுதியில் தங்கி இருந்து கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு உணவுடன் தங்குமிட வசதியும் இலவசமாக வழங்கப்படும் என பாடசாலையின் அதிபர் திருமதி. ஆர்.பாலசிங்கம் தெரிவித்தார்.

## டெங்கு நோய்த் தாக்கம், ஜனவரி முதல் மே மாதம் வரை நாடளாவிய ரீதியில் 20 பேர் மரணம், 18,760 பேர் பாதிப்பு

2019 ஜனவரி - மே மாதம் வரையான ஐந்து மாதங்களில் நாடளாவிய ரீதியில் மொத்தம் 18,760 பேர் கொடிய டெங்கு நோய்த் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இக்காலப்பகுதியில் சுமார் 20 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தகவல் தெரிவிக்கின்றது.

குறித்த ஐந்து மாத காலப் பகுதியில், முதலாவது அதி கூடிய 4,066 பேர் கொழும்பு மாவட்டத்திலும், இரண்டாவது தொகையான 2,480 பேர் கம்பஹா மாவட்டத்திலும், மூன்றாவது 1,887 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபைப் பிரிவில் மாத்திரம் 799 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்; சுகாதார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

டெங்கு நோய் தொடர்பில் பொதுமக்கள் அவதானம், முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என வைத்தியர்கள் வலியுறுத்தியுள்ளனர். காய்ச்சல் ஏற்பட்டவுடன் தாமதியாது, அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் அல்லது தரமான வைத்தியரிடம் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். சிகிச்சை பெற்றும் காய்ச்சல் குணமடையாது நீடிக்குமானால் முறையான இரத்தப்பரிசோதனை அவசியமெனவும்; வலியுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக கர்ப்பிணித் தாய்மார்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்துவதுடன், காய்ச்சல் அறிகுறி கண்டவுடன் வீட்டு வைத்தியம் வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வீடுகள், அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் சுற்றுப்புறச் சூழலை, சுத்தம், சுகாதாரமாகப்; பராமரிக்க வேண்டும் எனவும் சுகாதாரத்துறை அதிகாரிகள்பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

## சமுர்த்தி உரித்து வழங்கும் வைபவம்

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமுர்த்தி பயனாளிகளுக்கு உரித்து வழங்கும் வைபவம் திருகோணமலையில் இடம் பெற்றுள்ளது.

திருகோணணலை மாவட்ட நிகழ்வு கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் வியாழக்கிழமை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

புதிதாக சிந்திப்போம் தன்னம்பிக்கையோடு முன்னேறுவோம் எனும் தொனிப் பொருளில் இடம் பெற்ற இவ் நிகழ்வில் ஆறு இலட்சம் பயனாளிகளுக்கு சமுர்த்தி நிவாரண உரித்து வழங்கல் தேசிய நிகழ்வின் ஒரு பகுதி திருகோணமலையில் இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சுமார் 5000 பயனாளிகளுக்கு சமுர்த்தி உரித்து இதன் போது வழங்கப்பட்டன .

ஆரம்ப கைத்தொழில் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயாகமகே விசேடமாக கலந்து கொண்டு குறித்த பயனாளிகளுக்கான சமுர்த்தி உரிமத்தை வழங்கி வைத்தார்.



குறித்த நிகழ்வில் அமைச்சர் தயாகமகே, வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளத்துறை பதில் அமைச்சர் அனோமாகமகே, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்துல்லா மஃறூப், இரா.சம்மந்தன், எம்.எஸ்.தௌபீக், இம்ரான் மஹரூப்,சந்திப் சமரசிங்க, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஷ்பகுமார உட்பட பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், சமுர்த்தி திணைக்கள உயரதிகாரிகள், சமுர்த்தி பயனாளிகள் என பலர் கலந்து கொண்டார்கள்.

## இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் நிர்வாகத் தெரிவு

**சாய்ந்தமருது நிருபர்**

இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் நான்காவது வருடாந்த பொதுக்கூட்டம் புதன்கிழமை அதன் சாய்ந்தமருது அலுவலகத்தில் அமைப்பின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்றது. இதன்போது புதிய நிருவாகத் தெரிவும் இடம் பெற்றது.

சட்டத்தரணி எம்.எஸ். அப்துல் ரஸ்ஸாக் அமைப்பின் போஷகராகவும் முபாறக் அப்துல் மஜீத் மீண்டும் தலைவராகவும் கலைஞர் மருதூர் ஏ.எல்.அன்ஸார் மீண்டும் செயலாளராகவும் ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் பொருளாளராக எம்.எம். இப்றாஹிம், உப பொருளாளராக எம்.எச். எம்.ரஜாய், இணை ஊடகப் பேச்சாளராக எம்.எச்.எம்.கரீம், தேசிய அமைப்பாளராக எம்.ஐ.எம்.ஜிப்ரி, உப தலைவராக ஏ.எம்.பறக்கத், உப செயலாளராக எம்.எம்.பஷில், ஊடக இணைப்பாளர்களாக எம்.ஏ.றமீஸ், எஸ்.அஸ்ரப்கான், கணக்காய்வாளராக எம்.ஏ.அஸீஸ் ஆகி



யோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் அமைப்பின் ஆலோசகர்களாக பாலமுனை பாறுக், அஸ்வான் ஷக்காப் மௌலானா, எம்.எச்.நாஸர், கே.எம்.ஏ.அஸிஸ் ஆகியோரும் இணைப்பாளர்களாக எம்.எம்.நிஸ்ரின், ஏ.எல். றியாத், கே.எல்.றிஸ்கான், எம்.எம். ஜுஹையிர், ஜலீல் ஜீ, எழுகவி ஜெலில், எம்.அனஸ், பாலமுனை முஹா, எம்.ஏ.நஸிர், எம்.ஹம்தான் ஆகியோருடன் மகளிர் பிரிவு தலைவியாக திருமதி நிஸ்ரின், செயலாளராக ஸப்னா அமீன், பொருளாளராக கவிஞர் சுல்பிகா ஷெரிப் ஆகியோரும் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டனர்.

## விசாரணைகளை துரிதப்படுத்தி அப்பாவி மக்களை விடுவிப்பதற்கான பொறிமுறை அவசியம்

**சாய்ந்தமருது நிருபர்**

அரசியல் தலைமைகள் மீதான குற்றச்சாட்டுக்களை தெளிவுபடுத்துவதற்காக காட்டப்படும் அக்கறை போலவே அப்பாவி முஸ்லிம்கள் விடயத்திலும் உடனடி அவதானமும் அக்கறையும் காட்டப்படுதல் வேண்டும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சிறிய சிறிய காரணங்களுக்காகவும் வெறும் சந்தேகங்களின் அடிப்படையிலும் கைது செய்யப்பட்டு நூற்றுக்கணக்கான அப்பாவி முஸ்லிம்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்தி, குற்றமற்றவர்கள் அனைவரையும் மிக அவசரமாக விடுதலை செய்வதற்கான விஷேட பொறிமுறை ஒன்று அமைக்கப்பட வேண்டும். இதனை முக்கிய வேண்டுகோளாக அரசியல் தலைமைகள் வலியுறுத்தி, அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஏப்ரல் 21ம் திகதிய பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலானது, ஒட்டுமொத்த நாட்டு மக்களையும்,குறிப்பாக முஸ்லிம் மக்களை கடுமையாக பாதித்திருக்கிறது. அதுமட்டுமன்றி தேசிய அரசியலிலும் கொந்தளிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நிலமை இந்நாட்டு முஸ்லிம் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பலவாறான நெருக்குவாரங்களையும், அச்சுறுத்தல்களையும் உருவாக்கியிருக்கிறது. பயங்கரவாதிகள் விட்டுச்சென்றிருந்த இடத்திலிருந்து இனவாதிகள் மற்றுமொரு அடக்குமுறை கலாச்சாரத்தினை இந்நாட்களில் அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றனர். இதனால் சாதாராண அப்பாவி முஸ்லிம்கள் பிரதானமாக இரண்டு அபாயங்களுக்கு ஏக காலத்தில் முகம் கொடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அதிலொன்றுதான் திட்டமிடப்பட்ட வகையில் முஸ்லிம் மக்களின் மீதும், அவர்களின் பொருளாதாரத்தின் மீதும் நடத்தப்பட்டுவருகின்ற இனவாத அச்சுறுத்தல்களும் வன்முறைகளுமாகும். இன்னுமொன்று, ஆதாரங்களேதுமின்றி வெறும் சந்தேகத்தின் பேரில் நடைபெறும் கைதுகளாகும்.

இவை இரண்டுமே சமாந்தரமான ஒரு உளவியல் யுத்தத்தினை முஸ்லிம்கள் மீது கடுமையாக தொடுத்து வருகின்றன.

குருணாகல், குளியாபிட்டிய, மினுவாங்கொட பிரதேசங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளைத் தொடர்ந்து ,ஆளுனர் அசாத்சாலி, ஹிஸ்புள்ளாஹ் உட்பட அமைச்சர் ரிசாட் பதியுத்தீன் ஆகியோர் பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கையுடன் ரத்ன தேரரின் தொடர் உண்ணா விரதப்போராட்டம் தலதா மாளிகைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. குறித்த நாட்களில் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஒரு பயங்கரமான ஒரு பதட்ட நிலமையினை நாட்டில் தோற்றுவித்து, அதன் மூலமாக கண்டி உட்பட நாட்டின் பல பாகங்களிலும் கலவரங்களை தோற்றுவிப்பதற்கான சகல முயற்சிகளையும் இனவாத சக்திகள் மேற்கொண்டன. இந்த இடத்தில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து தங்களது பதவிகளை ராஜினாமாச் செய்தது உண்மையில் பாராட்டத்தக்கது. அது இந்நாட்டில் திட்டமிட்டு அரங்கேற்றப்படவிருந்த இனவாத அழிவுகளை தோல்வியடையச்செய்தது.

அதன் பின்னரான தேசிய அரசியல் களம் முற்றிலும் மாறுபட்டதாக இப்பொழுது மாறியிருக்கிறது. அமைச்சர்களின் ஒட்டுமொத்த இராஜினாமா முழு உலகின் கவனத்தினையும் ஈர்த்துள்ளது. இதனால் இலங்கை அரசு நாளுக்கு நாள் பல கண்டனங்களுக்கும், அழுத்தங்களுக்கும் ஆட்பட்டு வருகின்றது. இந்த நிலமையினை தவிர்க்கும் முகமாக இப்பொழுது அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் மீள தமது பதவிகளில் இணைந்து கொள்ளுமாறு, மஹாநாயக்க தேரர்கள் உட்பட பலரும் அழைப்பு விடுத்து வருகின்றனர்.

அதேசமயம் அரசாங்கத்தின் பணிப்புரைக்கு அமைவாக உடனடியாக விசாரனைகளை மேற்கொண்டு, குற்றம் சாட்டப்பட்டுள்ள அரசியல் தலைமைகளின் விவகாரங்களை கையாள, விசேட குழுக்களும் நியமிக்கப்பட்டு விசாரணைகளும் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. 'ஒரு மாத காலத்திற்குள் அனைத்தும் தெளிவுபடுத்தப்பட்டு, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டும்' என முஸ்லிம் அரசியல் தலைவர்களால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதுவும் உண்மையில் வரவேற்கத்தக்க ஒரு விடமேயாகும்.

தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்று சுமார் ஒன்றரை மாதம் கடந்துள்ள நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்ட பலரும் இதுவரை எது வித முறையான விசாரணைகளுமின்றி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் சாதாரணமாக குர்ஆன் பிரதிகளை வைத்திருந்ததற்காகவும், சமையலுக்கு பயன்படுத்தும் கத்திகளை வைத்திருந்ததற்காகவும் கல்வி நடவடிக்கைகளுக்காக உலகவரைபடம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டிலும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அது மாத்திரமன்றி இவ்வாறு கைது செய்யப்படுகின்றவர்களை உடனடி பிணையில் விடுவிக்க முடியாதவாறும், அவர்கள் தொடர்பான விடயங்களில் மஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களில் பிணை பெற முடியாதவாறும் பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் ஐஇஇகீ சட்டங்களுக்கு கீழால் அவர்களுக்கான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனால் இவ்வாறான கைதுகளை எப்படிக் கையாள்வது? இது தொடர்பான முறைப்பாடுகளை யாரிடம் தெரிவிப்பது? இவர்கள் தரப்பு நியாயங்களை எப்படி நிரூபிப்பது? இவர்களை எப்படி விடுவிப்பது? என திக்குத்தெரியாத நிலையில் இன்று கைது செய்யப்பட்டவர்களின் குடும்பங்கள் நாள்தோறும் நீதிமன்ற வளாகங்களுக்கும் பொலீஸ் நிலையங்களுக்குமாக அலைந்து திரிவதை அவதானிக்க முடிகின்றது. புனித ரமழான் மாதத்திலும் கூட பல ஏழைத்தாய்மார்கள் இவ்வாறு தங்களது குழந்தைகளுடன் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்த காட்சி அனைவரையும் கண்கலங்கச் செய்திருந்தது. எனினும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சனைகளை உடனடியாக தீர்க்கும் வகையில் இதுவரை எவ்வித காத்திரமான முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டதாக தெரியவில்லை.

இன்று முஸ்லிம் அரசியல் தலைமைகளுடைய விடயங்களை விரைவாக முடிவிற்கு கொண்டுவரும் வகையில் இவ்வாறு விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்துவருவது போலவே, அரசாங்கம் மக்களுடைய விடயங்களையும் விரைவாக கையாளவும் விஷேட குழுக்களை அமைக்க வேண்டும். இதனை மிக முக்கிய நிபந்தனையாக எமது அரசியல் பிரதிநிதிகள் முன்வைப்பதோடு இது தொடர்பான தொடர் அழுத்தங்களையும் சாத்தியமான அனைத்து வழிகளிலும் கொடுக்க வேண்டும்.

அரசும், அரசியல் தலைமைகளும் மக்களுக்காகவே பணியாற்றுகின்றன. மக்களுக்காகவே நிர்மாளிக்கப்படுகின்றன. மக்களுடைய பிரச்சனைகளை தீர்க்காது அரசியல் தலைமைகளுடைய பிரச்சனைகளை மாத்திரம் தீர்ப்பதனால் எதிர்பார்க்கின்ற அமைதியை நாட்டில் ஏற்படுத்த முடியாது.

இது குறித்த அவசர வேண்டுகோள் ஒன்றினை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பதோடு சர்வதேச இராஜ தந்திரிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளிடமும் வலியுறுத்தி அவர்களின் ஒத்துழைப்புகளையும் பெறுவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சேனையூர் வீரபத்திர சுவாமியின் வருடாந்த பெருவிழா - பரிகலவேள்வி

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை, மூதூர் கிழக்கு - சேனையூர் அருள்மிகு ஸ்ரீ வீரபத்திர சுவாமியின் வருடாந்த பெருவிழா பரிகல வேள்வி 16-06-2019 ஞாயிற்றுக்கிழமை மாலை சுபவேளையில் சேனையூர் ஸ்ரீ வருணகுல விநாயகர் ஆலயத்தில் இருந்து பாரம்பரிய கிரியைகளுடன் மடைப் பெட்டி தூக்கும் நிகழ்வு பக்திபூர்வமாக இடம் பெற்று வீரபத்திரர் ஆலயத்தை சென்றடையும். அதன்பின் கன்னிக்கால் வெட்டும் உன்னதநிகழ்வும் மந்திர உட்சாடண மேளதாள வாத்தியங்களுடன் கூடாரக்கால் நாட்டப்பட்டு ஏனைய சகலபூசை நிகழ்வுகளும் தொடர்ந்து இடம்பெறும் .மறு நாள் 17 -06 -2019 திங்கட்கிழமை அதிகாலை பரிகல அழைப்பு, கன்னிமார் பூஜை, சுற்றுப்பூஜை நிகழ்வுகளுடன் தீபாராதனைகள் காலையில் இடம்பெறும்.

உச்சநிகழ்வான பரிகல தேவதைகளுக்கு அரிசி எறியும் நிகழ்வு மேற்கொள்ளப்படும் இவ்வேளை அகவல், காவியம், கும்மி பாராயணக்களுடன் ஆடல்களும் இடம்பெற்று வேள்வி நிறைவடையும். வருடா வருடம் இச் சம்பிரதாய சடங்கு நிகழ்வுகள் மூதூர் கிழக்கு - சேனையூரில் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.




# போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்பு கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம்.எம்.நஸீர்




**பெரியநீலாவணை நிருபர்**

பயங்கரவாத செயற்பாட்டால் ஏற்படும் அழிவை விட போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் அழிவு அபரிதமானதாகும். என கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம்.எம்.நஸீர் தெரிவித்தார்.

மருதமுனை - நற்பிட்டிமுனை சமூர்த்தி வங்கி வலயக் காரியாலயம் ஏற்பாடு செய்த சர்வதேச புகைத்தல் - மது எதிர்ப்பு வேலைத்திட்டம் ஒரு வார காலத்திற்கு மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் வங்கி முகாமையாளரும் சட்டத்தரணியுமான எம்.எம்.எம் முபீன் தலைமையில் நடைபெற்று வருகின்றது. ஆரம்ப நாள் நிகழ்வில் (10) பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதேச செயலாளர் இவ்வாறு தெரிவித்தார் தொடர்ந்து உரையாற்றும் போது,

இன்று சமூகத்தில் நடைபெறுகின்ற அனியாயங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் அடிப்படையாக அமைவது போதைப் பொருள் பாவனைதான். போதைப் பொருளோடு சம்மந்தப்பட்டவர்கள் ஆண்கள் தானே ஏன்? எங்களை அழைத்து இதனைச் சொல்கிறார்கள் என்று பெண்கள் கேட்கிறார்கள். ஆண்களை விட இன்று பெண்கள் அதிகளவில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அது ஒரு மிகவும் அபாயகரமான நோயாகும் படிப்படியாக முழு குடும்பத்தையும் அழித்து விடுகிறது. பயங்கரவாத செயற்பாட்டால் ஏற்படும் அழிவை விட போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் அழிவு அபரிதமானதாகும்.

ஒவ்வொரு பெண்களும் திருமணத்தில் மனமக்களை தேர்தெடுக்கும் போது தனக்கு வரவிருக்கும் கணவர் போதைப் பொருள் பாவிப்பவரா? இல்லையா? என்பதை அறிந்து கொண்டு திருமனம் செய்ய வேண்டும். இந்த நிலையை சமூகத்தில் பெண்கள் உருவாக்க வேண்டும்.

தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் புகைத்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டிருக்க முடியாது. புகைப்பவர்கள் அல்லது போதைப் பொருள் பாவிப்பவர்கள் இல்லாவிட்டால் இதனை தொடர்ந்து செய்யவேண்டிய தேவை கிடையாது இதற்கான கொடி விற்பனையும் செய்ய வேண்டியது கிடையாது. நாம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் போதைப் போருள் பாவனையிலிருந்து விடுபட வேண்டும்.

போதைப் போருள் பாவனையோடு சம்மந்தப்பட்ட குடும்பத்தினரது சமூர்த்தி கொடுப்பனவு நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு அடுத்ததாக புகைத்தல் ஒழிப்பு, சூழல் பாதுகாப்பு போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றன. புகைத்தல் ஒழிப்பு மாதமாக இந்த மாதம் மே-31 தொடக்கம் ஜூன் 30 வரை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இது மிக முக்கியமான மாதமாகும். அது போன்றுதான் சமூர்த்தித் திட்டமும் முக்கியமான தாகும். இது வறியவர்களின் பொருளாதரத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். ஆனால் வசதி படைத்தவர்களும் தமக்கு சமூர்த்தி கிடைக்கவில்லை என்று வருகின்றனர்.

வசதி படைத்தவர்கள் தங்களது சமூர்த்தி அட்டையை வறியவர்களுக்கு வழங்க முன்வர வேண்டும். இது வறியவர்களை செல்வந்தவர்களாக மாற்றும் திட்டமாகும்.

மதுபோதை வறுமையில் இருந்து சிறுவர்களை பாதுகாக்க வேண்டும். முதியோர்கள் இதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.ஏ.நஜீம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.நௌசாத், உதவி முகாமையாளர் எம்.ஐ.எம்.முஜீப், பிரிவு உத்தியோகத்தர் எஸ்.சய்புத்தீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வறிய குடுக்களுக்கு வாழ்வாதர உதவி வழங்க நடவடிக்கை




**சாய்ந்தமருது நிருபர்**

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மோன்பாடு, இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டனியின் தலைவருமான மனோ கணேசனின் ஏற்பாட்டில் அமைச்சு நிதி ஒதுக்கீட்டின் மூலம் அம்பாறை மாவட்டத்தின் நாவிதான்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சவளக்கடை பிரதேசத்தில் வாழும் வறிய குடும்பங்களுக்கு வாழ்வதர உதவிகளை வழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை அமைச்சரின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் ஸ்மாட் ஒப் ஸ்ரீலங்கா சமூக சேவைகள் அமைப்பின் தலைவருமான கே.ஆர்.றிஸ்கான் முகம்மட் மேற்கொண்டு வருகின்றார்.

இது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று வியாழக்கிழமை (13) சவளக்கடை பல்தேவை கட்டிடத்தில் நடைபெற்றது. இதன்போது குறித்த பிரதேசத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தவர்களின் சுயதொழில் வாய்ப்புகளுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டதுடன் வாழ்வாதார உதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களும் அவரால் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது எதிர்காலத்தில் அமைச்சர் மனோ கணேசன் ஊடாக இப்பிரதேசத்தில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக றிஸ்கான் முகம்மட் தெரிவித்தார்.

# திருகோணமலையில் நூல் வெளியீட்டு விழா

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஊடக கோவைகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழாவானது திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் அரசரெத்தினம் அச்சுதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இக் குறித்த நூல் வெளியீட்டு நிகழ்வானது 22.06.2019 ம் திகதி அன்று சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் வரவேற்புரையை சங்கத்தின் செயலாளர் ஆர்.ஜீ.தர்மதாச நிகழ்த்துவார்.நூல் பற்றிய அறிமுகத்தை சுயாதீன ஊடகவியலாளர் வடமலை ராஜ்குமார் நிகழ்த்த நூல் பற்றிய பார்வையை சுயாதீன ஊடகவியலாளர் லக்மால் பதுகே நிகழ்த்துவதுடன், சிறப்பு கவிதையினை சங்கத்தின் பொருளாளர் ஏ.ஜே.எம்.சாலி நிகழ்த்துவார் இறுதியாக நன்றியுரையினை சங்கத்தின் சிரேஷ்ட உபதலைவர் ஏ.எல்.றபாய்தீன் பாபு முன்வைப்பார்.

ஊடக சங்கத்தின் இக் குறித்த மீடியா டிரக்டரி நூலில் மாவட்ட பதிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சங்க உறுப்பினர்களின் புகைப்படத்துடன் கூடிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய முக்கிய அரச நிறுவனங்களின் தொலைபேசி அடங்கிய விபரங்களும் திரட்டப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள ஏனைய மாவட்டங்களை விடவும் மூவினத்தையும் உள்ளடக்கிய ஒரே சங்க உறுப்பினர்களை கொண்ட ஊடகவியலாளர் சங்கமாக திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் செயற்பட்டு வருகிறது.

இவ் நிகழ்வில் முதன்மை அதிதிகளாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், சுசந்த புஞ்சிநிலமே, எம்.எஸ்.தௌபீக் உள்ளிட்ட மாவட்ட ஊடகவியலாளர்கள் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

# திருகோணமலை ஸ்ரீ முருகன் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் கதிர்காம யாத்திரை

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினரால் வருடா வருடம் மேற்கொள்ளப்பட்டு வரும் கதிர்காம யாத்திரை இவ்வருடமும் எதிர்வரும் 05 -07 -2019 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பமாகி கதிர்காமம் முருகனை தரிசித்து ,மீண்டும் 08-07-2019 அன்று கதிர்காமத்திலிருந்து திருகோணமலை நோக்கித் திரும்புவர்.

மேற்படி யாத்திரையில் இணைந்து கொள்ள விரும்பும் அடியார்கள் திருகோணமலை வில்லூன்றி ஸ்ரீ முருகன் தொண்டர் சபையில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய முடியும் என ஸ்ரீ முருகன் தொண்டர் சபை அறிவித்துள்ளது.

தொடர்புகளுக்கு - அலுவலகம், 026,2220952

தலைவர் - 0775212766

துணைச்செயலாளர்- 0773137443

# மட்டக்களப்பில் அனர்த்த குறைப்பு தொடர்பான கலந்துரையாடல்

**சீலாமுனை நிருபர் துஷாரா**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட ஐந்து பிரதேச செயலக பிரிவுகளில் அனர்த்த குறைப்பு, அனர்த்தத்திற்கு தயார்படுத்தல் மற்றும் அனர்த்த முன்னெச்சரிக்கை போன்ற பணிகளுக்கு ஆசிய அனர்த்த தயார்படுத்தல் நிலையம் முன்னாயர்த்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அரச திணைக்கள மற்றும் அலுவலக அதிகாரிகளை தயார் நிலையில் வைத்துக்கொள்ளும் நடவடிக்கைக்கான கலந்துரையாடல் உதவி மாவட்ட செயலாளர் எ.நவேஸ்வரன் தலைமையில் மட்டக்களப்பில் நடைபெற்றது.




இதில் ஆசிய அனர்த்த தயார்படுத்தல் நிலையத்தின் பணிப்பாளர் அனோமா டயஸ், அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிள்ளை, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் எம்.எ.சியாத் , மட்டக்களப்பு மாவட்ட அரச திணைக்கள அதிகாரிகள் அனர்த்த முகாமைத்துவ திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச நிர்வாக கிராம சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது, ஆசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம், நீர்ப்பாசன திணைக்களம், அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம், கட்டிட ஆய்வு நிலையம், வானிலை அவதான நிலையம் ஆகியன அனர்த்தத்திற்கு முன்னர், அனர்த்த வேலை, பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்கள், மக்களை பாதுகாக்கின்ற செயற்பாடுகள் போன்ற விடயங்கள் பற்றி மிக விவான கலந்துரையாடலும் இடம்பெற்றது.





**மாகாண விவசாயத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்டங்களில் ஒன்றான பழப் பயிர்ச் செய்கை திட்டத்திற்கு அமைவாக பப்பாசிச் செய்கை அறுவடை விழா அம்பாறை மாவட்ட காரைதீவு விவசாயப் போதாசிரியர் திருமதி எ.எல்.ரதீனா பேகம் அவர்களின் ஏற்பாட்டில் காரைதீவு 03பிரிவில் ஜ.செல்வராசா எனும் விவசாயின் தோட்டத்தில் அறுபடைவிழா இடம்பெற்றது.**

**படம்: காரைதீவு நிருபர்**

# சரியான தீர்மானம் எடுக்காவிடின் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பிரதேச வாசிகளுடன் நானும் இணைந்து வீதிக்கு இறங்க வேண்டிய நிலைமை ஏற்படும்

**பைஷல் இஸ்மாயில்**

இறக்காமம் அமிர் அலி புரத்தில் காபட் வீதி புணரமைப்பு பணியை ஆரம்பித்தவர்கள் அதை நிறைவு செய்யமால் இருக்கின்றனர். இவ்விடயத்தைப்பற்றி நான் பல தடவைகள் எடுத்துக்கூறியும் அதை யாரும் கண்டுகொள்ளாமல் இருந்து வருகின்றார்கள் என்றும் இதற்கான உடனடித் தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்று இறக்கமாம் பிரதேச சபையின் உறுப்பினரும் இறக்காமம் பிரதேச செயலக பிரிவின் ஜனாதிபதி மக்கள் தொடர்பாடல் அதிகாரியுமான எம்.எல்.சுல்பிக்கார் தெரிவித்தார்.

இறக்காமம் பிரதேச சபையின் 15வது அமர்வு தவிசாளர் ஜே.கே.றஹ்மான் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு அவர் ஒரு பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கைவிடப்பட நிலையில் காணப்படுகின்ற இந்த வீதி ஒரு பிரதான வீதியாகும். அவ்வீதியால்தான் சகல வாகனங்களும் பயணிக்கின்றது. அவ்வாறு பயணிக்கும் வாகங்களினால் வீசப்படுகின்ற கிறவல் மண், தூசி, புழுதிகள் யாவும் அமிர் அலி வித்தியாலய வகுப்பறைக்குள் செல்கின்றன. அதனால் 450 மாணவர்களினதும் 30 ஆசிரியர்களினதும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் முழுமையாக பாதிப்படைந்து காணப்படுகின்றது. அது மாத்திரமல்லாமல் அம்மாணவர்களின் சுகாதார நடவடிக்கைகளும் வெகுவாக பாதிப்படைய செய்கின்றது.

இதனால் பாடசாலை மாணவர்கள் மாத்திரமல்லாமல் ஆசிரியர்கள் எல்லோரையும் வைத்தியசாலையில் அனுமதிக்கவேண்டிய ஒரு துர்பாக்கிய நிலைமைக்கு ஆளாகிக் காணப்படுகின்றார்கள். இந்த நிலைமை அந்த வீதியோரங்களிலுள்ள அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. முதலில் பாடசாலை மாணவ்களை பாதுகாப்பதற்கான உடனடி நடவடிக்கையினை நாம் முன்னெடுக்க வேண்டும்.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக, வீதியின் காபட் பணிகள் முடியும் வரை பாடசாலை வளாகத்தைச் சுற்றியதாக கிறவல் மணல், புழுதி, தூசிகள் உட்செல்லா வகையில் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் பாடசாலை மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளையும், சுகாதார விடயங்களையும் நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்.

அவ்வாறு தவறும் பட்சத்தில் நான் உட்பட மாணவர்களும், பெற்றோர்களும் ஊர் வாசிகளும் இணைந்து பாடசாலையை மூடிவிட்டு வீதிக்கு இறங்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை இந்த சபையில் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது நாடு இப்போது இருக்கின்ற சூழ்நிலையை வைத்துக்கொண்டு யாரும் அரசியல் செய்ய முனையக்கூடாது. எமது சமூகத்தில் ஒரு ஒற்றுமையை நாம் ஏற்படுத்தவேண்டும். அதை விட்டுவிட்டு நாம் இருக்கின்ற அரசியல் தலைமைகளை ஒரு பிழையான பாதைக்கு இட்டுச் செல்வதற்கான அறிவுருத்தல்களை வழங்கி எமது பிரதேசத்தில் நடக்கின்ற, நடக்கப்போகின்ற அபிவிருத்திகளை தடுக்கக்கூடாது.

அவ்வாறு செய்வதன் மூலம் நாமும், எமது பிரதேசமும், எமது குடும்பங்களும், எமது பிள்ளைகளும் தான் அதில் பாதிப்படைகின்றார்கள் என்பதை ஏன் புரியாதவர்களாக இருக்கின்றோம்.



எமது மக்களுக்காக முன்னெடுக்கப்படுகின்ற நல்ல விடயங்களுக்கு எமது உறுப்பினர்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஆதரவு வழங்கி எமது சமூகத்தையும், சமூக விழுமியங்களையும் ஏற்படுத்தும் வகையில் இளைஞர்களுக்குள் ஒரு ஒற்றுமைத் தன்மையை எற்படுத்த முன்வரவேண்டும். அப்போதுதான் எமது சமூகத்தின் ஒற்றுமையை கட்டிக்காக்க முடியும் என்றார்.

இதனை சபை ஏற்றுக்கொண்டு, குறித்த கபட் வீதியை மேற்கொண்ட ஒப்பந்தக்காரரை உடனடியாக இடைநிறுத்தி புதிய ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்குவதாகற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் இதேவேளை பாடசாலையை சுற்றிய வீதிக்கு

இடைக்காலமாக நீர் ஊற்றி கிறவல் மண், தூசி, புழுதிகள் போன்றன பாடசாலைக்குள் உட்செல்லா வகையில் அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் மேற்கொள்வதாக தீர்மானம் எடுக்கப்பட்டது.

# மருதமுனை ஸம் ஸம் வீதி கொங்ரிட் வீதியாக புனர்நிர்மாணம்

**மருதமுனை நிருபர், றாசிக் நபாயிஸ்**

பாரளுமன்றம் உறுப்பினர் கலாநிதி,எஸ்.எம்.எம். முகம்மது இஸ்மாயில் அவர்களின் கம்பெரலிய நிதி ஒதுக்கீட்டில், மருதமுனை மத்தியகுழுவின் வேண்டுகோளுக்கு இணங்க மருதமுனை, ஸம் ஸம் வீதி 02 மில்லியன் ரூபா செலவில் கொங்ரிட் வீதியாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.






## மக்களின் எதிர்ப்பால் தொலைத் தொடர்புக்கோபுரம் அமைக்கும் பணிகள் இடை நிறுத்தம்

**வவுனியா க.மதி**



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், மயானத்திற்கு அருகில் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட தொலைத் தொடர்புக் கோபுரம் (ரவர்) மக்களின் கடும் எதிர்ப்புக்காரணமாக இடம்பெற்ற பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா இறம்பைக்குளம் மயானத்திற்கு அருகில் தனியார் நிறுவனம் ஒன்றினால் வீதிக்கு அருகில் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதையறிந்த அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து குடியிருப்பு, பாடசாலை, ஆலயம், மயானத்திற்கு அருகில் அமைக்கப்படும் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிக்கு தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளதுடன் கட்டட ஒப்பந்தப்பணியாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பின்னர் நகரசபையின் கவனத்திற்குக் இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டு தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகளை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

நகரில் பல்வேறு பகுதிகளில் இவ்வாறான கோபுரங்களை அமைத்து எதிர்காலத்தில் அவற்றை தொலைத் தொடர்புக் கோபுரம் போன்று பாவிப்பதற்கு குறித்த நிறுவனம் முயற்சித்துள்ளதாக மக்கள் குற்றச்சாட்டினை முன்வைத்து தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர்.

கோபுரத்தை அமைப்பதற்காக நகரசபையில் அனுமதிக்கான விண்ணப்பம் குறித்த தனியார் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள போதும் அனுமதி பெற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நிலத்திற்கு மேல் 19அடி உயரமும், நிலத்திற்கு கீழ் 15அடி அகலத்திலும் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வந்துள்ளது. இதையடுத்து அப்பகுதி மக்களின் எதிர்ப்புக் காரணமாக நகரசபையினால் இப்பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆவண வரியை அறிமுகம் செய்யும் நிகழ்வு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது





ஆவண வரியை அறிமுகம் செய்யும் நிகழ்வு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து ஆவண வரியை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை கரைச்சி பிரதேச சபையினால் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த ஆவண வரியை பெற்றுக் கொள்வதற்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதை அடுத்து, ஆவண வரியை அறிவிடுவதற்கான ஆரம்ப நிகழ்வு கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் முன்னால் வடமாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராஜா, வை.தவநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்புாது வரி அறவீட்டிற்கான விண்ணப்ப படிவங்கள் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் குறிப்பிடுகையில்,

வரி வருமானத்தின் ஊடாக எமது பிரதேச சபையின் எல்லையில் உள்ள பல பகுதிகளையும் முன்னேற்றத்திற்கு கொண்டு வர முடியும் என தெரிவித்தார். பிரதேச சபைகளினால் அறவிடப்பட்டும் வரியானது திறைசேரிக்குச் செல்லாது, அவை இங்கேயே மக்களின் நலனிற்காக செலவு செய்யப்படும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டிருந்தார். இதேவேளை இங்குள்ள மக்கள் பல்வேறு கனவுகளுடன் வாழ்கின்றனர். எமது பிரதேசம் இவ்வாறு இருக்க வேண்டும் என பல்வேறு ஆசைகள் உள்ளது. அதற்கான நிதிகளை பெற்றுக் கொள்வதற்கே இவ்வாறான வரிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் முன்னால் வட மாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராஜா கருத்து தெரிவிக்கையில்,

எமது மக்கள் அரச சட்ட திட்டங்களிற்கு இணங்க பழகிக்கொண்டவர்கள். குறிப்பிபாக யாழ் தேவி புகையிரதமே இலங்கையில் அதிக வருமானத்தை கொண்டதாக அரச புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. இதற்கு காரணம் எமது மக்கள் புகையிரத்தில் பணம் கட்டி பயணிக்கின்றனர் என்பதே ஆகும் என அவர் தெரிவித்தார்.

வரி வருமானங்களை மக்கள் அவ்வந்த காலப்பகுதிகளில் செலுத்தினால் பிரதேச சபை யாரிடமும் கையேந்த வேண்டியதில்லை எனவும், இப்பகுதி அபிவிருத்தி அடையம் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டிருந்தார்.

நிகழ்வில் கருத்துத் தெரிவித்த முன்னால் வடமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் கருத்து தெரிவிக்கையில்,

கரைச்சி பிரதேச சபையினால்இவ்வாறான வரி திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்போது, அவை மக்களிற்கு உரிய முறயைில் செலவு செய்யப்படுகின்றதா என்பதை அவதானிக்க வேண்டும் என தெரிவித்தார். சில பகுதிகளில் கழிவகற்றல்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை. ஆகையால் இவ்வாறு மக்களிடமிருந்து பெறப்படும் வரிகளின் ஊடாக மக்களிற்கு பிரதேச சபையினால் அர்ப்பணிப்புடனான சேவைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## வகுப்பறை திறப்பு விழா

**வவுனியா க.மதி**

வவுனியா கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறப்பு விழா நிகழ்வுகள் பாடசாலையின் அதிபர் ச.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.



வவுனியா மாவட்டத்தில் முதல் தடவையாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதனால் நாடா வெட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களிற்கு நவீன கற்றல் முறை வகுப்பறை வசதி



கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களிற்கு நவீன கற்றல் முறை வகுப்பறை வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகூடிய மாணவர் தொகை கொண்ட கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்களின் கற்றல் வசதியை மேம்படுத்தும் நொக்குடன் குறித் நவீன கற்றல் வகுப்பறை இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு பாடசாலை முதல்வர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. பாடசாலை மாணவர்களின் கல்விதிறனை மேம்படுத்தும் நோக்குடன் கல்வி அமைச்சினால் 26 லட்சம் பெறுமதியான 40 ரப்கள் மற்றும், சிமாட் போட் ஆகியன கையளிக்கப்பட்டது.

நாடு முழுவதும் சர்வதேச கல்வி முறைமைக்கமைய மாற்றும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டு வரும் கல்வி முறை மாற்றத்திற்கமைய குறித்த நவீன கணித வகுப்பறை கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களிற்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அவர்கள் கலந்து கொண்டதுடன், கிளிநொச்சி வலய கல்வி பணிப்பாளர்எஸ்.ஜோன் குயின்ஸ்ரன் அவர்களால் நாடா வெட்டி திறந்து வைத்தார்.

## வவுனியாவில் நீர் வழங்கல் சபையின் அசண்டையீனத்தினால் நீர் வீண் விரயம்

**வவுனியா க.மதி**



வவுனியா பசார் வீதி சந்திக்கு அண்மித்த பகுதியில் இன்று காலையிலிருந்து வீதியோரமாக நீர் வீண் விரையமாக வெளியேறி வருகின்றது. சம்பவம் குறித்து நீர் வழங்கல் சபையினருக்கு தகவல் வழங்கப்பட்டும் நீண்ட நேரமாக அங்கு சமூகளிக்கவில்லை இதனால் நீர் வீண் விரையமாகி வெளியேறி வருவதாக வர்த்தகர்கள்,முச்சக்கரவண்டி சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா பசார் வீதியும் கந்தசாமி கோவில் வீதிக்குச் செல்லும் சந்திக்கு அருகில் வீதியிலிருந்து நீர் வீண் விரையமாகி வெளியேறி வருகின்றதையடுத்து வவுனியா நீர் வழங்கல் சபையினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. 10.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு சென்றது மட்டுமே. இந்நிலையில் மாலை 5மணி வரையும் நீர் வீண்விரயமாதலை தடுக்க முன்வரவில்லை நீர் வீண்விரயமாகிய வண்ணமே உள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

நீர் வழங்கல் சபையினரின் அசண்டையீனத்தினால் காலையிலிருந்து நீர் வீண் விரையமாகி வெளியேறி வருகின்றதாக பிரதேசத்திலுள்ள வர்த்தகர்கள், முச்சக்கரவண்டிச்சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

## வன்னி பிரதேசத்தில் இடம்பெறும் வேலைத்திட்டங்கள் மக்களை திசை திருப்புவதற்காகவே

**வவுனியா க.மதி**

வன்னி பிரதேசத்தில் தற்போது நடைபெற்று வரும் வீட்டுத்திட்டங்கள் அவசர அவசரமாக இடம்பெற்று வருகின்றது. ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கடைசி வருடங்களில் மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்குவதற்கான போலி நடைமுறைகளை அமைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பினரும்இ பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களை திசை திருப்ப நினைக்கின்றனர் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த நான்கு வருடங்களாக எவ்விதமான வீட்டுத்திட்டங்களையும் முன்னெடுக்காமல் இன்று அவசரஅவசரமாக வீட்டுத்திட்டங்களுக்கு வன்னி பிரதேசத்தில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பினரும்இ மஸ்தான் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் போலியான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இவர்களால் ஒரு போதும் மக்களுக்கான வீட்டுத்திட்டத்தை முன்னெடுக்க முடியாது. இவர்கள் நினைத்திருந்தால் கடந்த நான்கு வருடங்களில் பல வீட்டுத்திட்டங்களை முன்னெடுத்திருக்கலாம். இருப்பினும் இவ்வீட்டுத்திட்டத்திற்கான முழுமையான நிதி இன்னும் ஆறு மாதத்தில் மாற்றம் அடையும். எதிர்வரும் அரசாங்கத்தினால் தான் முழுமையான முறையிலே வீட்டுத் திட்டஙகளை முன்னெடுக்க முடியும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இவர்களில் இந்த அவசர செயல்பாடுகளை மக்கள் புரிந்து கொண்டு பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். அமையப்போகும் அரசாங்கத்தின் ஊடாக குறைந்தபட்சம் பதினைந்து இலட்ச ரூபாவை வீட்டுத்திட்டத்திற்காக அரசாங்கத்தின் ஊடாக நான் பெற்றுக் கொடுப்பேன். இன்று கம்பெரலிய ஊடாக அவசர அவசரமாக பிழையான முறையில் பாதைகள் போடப்படுகின்றது. இதனை செய்யும் தனியார் நிறுவனங்களுக்கு ஒரு போதும் எதிர்வரும் அரசாங்கம் நிதியினை ஒதுக்கப்போவதில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதுவே இன்றைய நிலைப்பாடாக இருக்கின்றது.

கடந்த அரசாங்கத்தில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திகளை வன்னி பிரதேச மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று நடைபெறும் அபிவிருத்திகள் பிழையான முறையில் நடைபெறுகின்றது என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றனது. எமது மக்கள் இன்னும் பொறுமையுடன் ஆறு மாதங்கள் காத்திருப்பார்களேயானால் அவர்களுக்கான முழுமையான பதினைந்து இலட்ச ரூபாய் வீட்டுத் திட்டத்தை நான் நடைமுறைப்படுத்துவேன். அது மட்டுமின்றி பாதைகள் தரமான முறையிலே செப்பணிடுவதற்கு ஆவண செய்வேன். இன்று கம்பெரலிய திட்டத்தின் ஊடாக இடம்பெறும் திட்டத்தில் பாரிய ஊழல் இடம் பெற்று தரமற்ற பாதைகள் இடம்பெறுவதாக அறியக் கூடியதாக இருக்கின்றது.

இதனை தகர்த்து சரியான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நேர்மையான ஊழலற்ற முறையிலே நான் வன்னி மாவட்ட மக்களுக்கு சேவையினை ஆற்ற தயார்படுத்தியுள்ளேன். வன்னி மாவட்ட மக்கள் எனது செய்தியினை மனதில் கொண்டு ஜனநாயக மக்கள் காங்கிரஸின் கரங்களை பலப்படுத்த வேண்டும். அதே போல் எமது ஜனநாயக மக்கள் காங்கிரஸின் அமைப்பாளர்கள் வன்னி மாவட்ட அனைத்து பிரதேசத்திற்கும் சென்று மக்களை சந்தித்து மக்கள் குறைகளை கேட்டுக் கொண்டிருககின்றார்கள். இவர்களின் ஊடாக எனது நேரடி தொடர்பின் ஊடாக எதிர்கால வன்னி மாவட்ட மக்களின் அனைத்து பாதை, வீட்டுத்திட்டம்இ பாடசாலை அபிவிருத்தி, சுகாதார பிரச்சினை, குடிநீர் பிரச்சினை, விவசாயிகளின் பிரச்சினைஇ இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்பு, சமுர்த்தி பிரச்சினை, பெண் தலைமைத்துவ உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி, புனர்வாழ்வு பெற்ற விடுதலைப் புலிகளின் தேவை உட்பட அனைத்து விடயங்களுக்கும் எமது ஜனநாயக மக்கள் காங்கிரஸ் முழுமையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்.

வன்னி பிரதேச மக்கள் முழுமையான முறையிலே இன்று எங்களை புரிந்து கொண்டிருக்கின்றார்கள். வவுனியா மாவட்டம், முல்லைத்தீவு, மாவட்டம், மன்னார் மாவட்டம் அனைத்து மக்களும் இன்று எம்முடன் கைகோர்த்து நிற்கின்றார்கள். அவர்களுக்கான நிலையான அபிவிருத்தியினை முன்னெடுப்பதில் நாம் திடமாக இருக்கின்றோம். ஏனைய தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமின்றி மாற்று இனத்திற்கு வாக்களிக்கும் தமிழ் மக்கள் அனைவரும் எம்முடன் கைகோர்த்திருப்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. அதுவே எனது வெற்றியல்ல. எமது மக்களின் வெற்றி என்று அவர் தெரிவித்தார்.

## வவுனியாவில் படையினரின் சோதனை நடவடிக்கையால் வர்த்தகர்கள் பாதிப்பு

**வவுனியா க.மதி**

நாட்டில் கடந்த ஈஸ்டர் தாக்குதல் காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையிலிருந்து மெல்ல மெல்ல திரும்பி வரும் நிலையில் வவுனியாவின் பல பகுதிகளிலுள்ள படையினரின் சோதனை நடவடிக்கை காரணமாக வர்த்தகர்கள், பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

வவுனியா வைத்திய சாலையிலுள்ள படையினர் அப்பகுதியில் வாகனங்களை நிறுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டு வருகின்றன. இதனால் நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் உறவினர்கள் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தலைக்கவசத்தையும் வெளியே வைத்துவிட்டு செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

நகர பள்ளி வாசலுக்கு முன்பாக உள்ள படையினரால் பள்ளிவாசலுக்கு முன்பாக உள்ள வியாபார நிலையத்திற்கு முன்னால் வாகனங்களை நிறுத்தவதற்கு தடை விதித்து வருகின்றனர் இதனால் குறித்த வியாபார நிலையங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பொதுமக்களின் வருகையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்கொலைத் தாக்குதல் நடைபெற்று இரண்டு மாதங்கள் ஆகின்ற நிலையிலும் வவுனியா நகரில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் குறைவடையவில்லை வைத்தியசாலை, நகர பள்ளி வாசலுக்கு முன்பாக வீதியிலுள்ள படையினரால் வர்த்தகர்கள், பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் கடந்த சில நாட்களாக கடும்காற்று: 2 வீடுகள் சேதம்

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் கடந்த சில நாட்களாக வீசி வரும் கடும் காற்று காரணமாக இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் காற்றின் தாக்கம் குறித்து கேட்ட போதே மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் இவ்வாறு தெரிவித்தது. அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் கடந்த சில நாட்களாக கடும் காற்று வீசி வருகின்றது. இக் காற்றின் தாக்கத்தால் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மகாமகிழங்குளம் மற்றும் பிரப்பமடு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இரண்டு வீடுகளின் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ளது.

மகாமகிழங்குளம் பகுதியில் ஒரு வீட்டின் கூரை காற்றினால் தூக்கு வீசப்பட்டுள்ளது. இதனால் அவ் வீட்டில் வசித்து வந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பேரும், பிரப்பமடுவில் ஒரு வீட்டின் சீற் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டமையால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும் பாதிப்படைந்துள்ளனர்.

## இந்தியத் தேர்தல் முடிவும் தெற்காசிய அரசியலில் அதன் தாக்கமும் - விசேட கலந்துரையாடல்

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இந்தியத் தேர்தல் முடிவும் தெற்காசிய அரசியலில் அதன் தாக்கமும் என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை (பௌர்ணமி தினம்) பி.ப 4 மணியளவில் இல. 62, கே.கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் பிரதான உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல்த் துறையின் சிரேஸ்ர விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் அவர்கள் ஆற்றவுள்ளார்.

இவ் உரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

## வவுனியாவில் முதியவரை காணவில்லை: பொலிசில் முறைப்பாடு

**வவுனியா நிருபர்**

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவரை காணவில்லை என வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த இ.தேவராஜா (வயது 74) என்பவர் கடந்த சனிக்கிழமை மதியம் வீட்டில் இருந்து சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார்.

அவர் தொடர்பில் பல்வேறு இடங்களிலும் அவரது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் தேடிய நிலையில் அவரை கண்டு பிடிக்காமையால் வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர். இது தொடர்பில் பொலிசார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வருடாந்தம் 6 பில்லியன் அமெரிக்க டொலர் அன்னியச் செலாவணி கிடைக்கின்றது

**வவுனியா நிருபர்**

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வருடாந்தம் 6 பில்லியன் அமெரிக்க டொலர் அன்னியச் செலாவணி கிடைப்பதாகவும் தற்போது அதில் பாதிப்பு ஏற்பட்டுனள்ளதாகவும் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தீவிரவாத தாக்குதலின் பின்னர் இஸ்லாமிய சமூகம் இஸ்லாமியர்களாக கடைப்பிடிக்கும் சில விடயங்களுக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக நிகாப், புர்கா போன்றவற்றால் முகம் மூடுவது உடனடியாகவே நிறுத்தப்பட்டுள்ளது. சில கடும்போக்காளர்கள் எமது பள்ளிகளில் சொல்லப்படும் பாங்கு நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்து வந்தது. மதரஸா மூடவேண்டும் என பல பிரச்சனைகளை எமது சமூகம் நேரடியாக முகம் கொடுக்கின்றது. தேசிய ஜமாத் போன்ற அமைப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளது. இருந்தாலும் அவசரகால சட்டத்தின் ஊடாக தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என பல கைதுகள் இடம் பெற்றுள்ளது. அதில் பல அப்பாவிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வருகின்றது. இவ்வாறான பாரிய பிரச்சனைகளை எமது சமூகம் முகம் கொடுக்கின்றது.

தீவிரவாத தாக்குதல் மற்றும் வன்முறைகளால் உல்லாசத்துறை பாதிப்படைந்துள்ளது. இவற்றை மீள கட்டியெழுப்ப ஒரு வருடம் செல்லும். முஸ்லிம் நாடுகளில் இருந்து வந்த உல்லாசப் பயணிகளில் பெரும்பாலானவர்கள் புர்கா, நிகாப் போன்றவற்றை அணிபவர்கள். அப்படியான பெண்கள் இங்கு வராவிட்டால் அவர்களது குடும்பம் இங்கு வராது. அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளில் 6 பில்லியன் அமெரிக்க டொலர் அன்னிய செலாவணியாக இந்த நாட்டிற்கு வருடாந்தம் கிடைக்கிறது. அதிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. தீவிரவாத தாக்குதல்கள் மற்றும் வன்முறையாளர்களை விரைவாக பிடித்ததன் மூலம் இந்த நாடு தற்போது பாதுகாப்பாகவுள்ளது.

அத்துடன் வவுனியாவில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் விடயத்தை மனிதாபிமானம் என்று பார்க்கும் போது எங்கிருந்தாலும் அகதிகளை ஏற்க வேண்டும். அதற்கு பொருத்தமான இடம் வேண்டும். முன்னர் இங்கு முகாம் இருந்ததையிட்டு பொருத்தமான இடம் இருக்கும் என்ற அடிப்படையில் இங்கு கொண்டு வந்துள்ளார்கள். ஆனால் தென்பகுதியில் பொருத்தமான இடம் இருந்தால் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து அந்த இடத்தில் இருந்துமாறு கூறலாம். எமது நாட்டை சேர்ந்தவர்கள் இந்தியாவில் கூட அகதிகளாக உள்ளனர். ஆகவே மனிதாபிமானமாக சிந்திக்க வேண்டும். அவர்களை விரைவில் இங்கிருந்து கொண்டு சென்று விடுவார்கள் என நம்புகின்றேன் என்றார்.




# கடற் படையினரின் அச்சுறுத்தல் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு தீவிர விசாரணை

**வவுனியா க.மதி**

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சித்திரை மாதம் 7ம் திகதி நடைபெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உடைய போராட்டத்தின் போது செல்வபுரம் பகுதியில் பேருந்து தரிப்பிடத்தில் ஒளிந்திருந்து புகைப்படம் வீடியோ எடுத்து அச்சுறுத்திய கடற்படை வீரர் தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகள் இடம்பெற்றது

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சித்திரை மாதம் 7 ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தங்களுடைய பிள்ளைகளை இராணுவத்திடம் கையளித்த இடமான வட்டுவாகல் பாலம் வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தார்கள்.

இதன்போது செல்வபுரம் பகுதியில் பேருந்து தரிப்பிடத்தில் ஒளித்து நின்ற சிவில் உடையில் இருந்த ஒருவர் குறித்த போராட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் வகையில் புகைப்படம் எடுத்தவாறு இருந்தால் இதனை உறுதிப்படுத்துவதற்காக குறித்த இடத்திற்கு சென்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களோடு ஊடகவியலாளர்களும் சென்றிருந்தனர். இந்நிலையில் குறித்த நபர் பல்வேறு பொய்யான தகவல்களை கூறியதோடு அந்த இடத்தில் இருந்து தப்பிச் செல்ல முற்பட்ட போது அங்கு நின்றவர்கள் பிடிக்கப்பட்டு விசாரித்தபோதுதான் கடற்படையைச் சேர்ந்தவர் என தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த நபரை பொலிசாரிடம் கையளிப்பதற்காக பொலிசார் குறித்த இடத்திற்கு அழைத்தபோது பொலிசார் குறித்த இடத்திற்கு வர தாமதமான காரணத்தினால் குறித்த நபரை போராட்டம் நிறைவடையும் இடத்தில் இருந்த பொலிஸாரிடம் கையளிப்பதற்காக அழைத்துச் சென்றனர்.

குறித்த இடத்தில் கடற்படை முகாமில் குறித்த நபர் கடற்படையைச் சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்தி அங்கு நின்ற பொலிசாரிடம் அவர்கள் கையளித்திருந்தனர். இருப்பினும் அந்த இடத்தில் பொலிசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்காது அவரை விடுவித்து இருந்ததோடு குறித்த கடற்படை சிப்பாய் வைத்தியசாலையில் சென்று ஊடகவியலாளர் தவசீலன் தன்னை தாக்கியதாக தெரிவித்து முறைப்பாடு பதிவு செய்திருக்கிறார். இந்நிலையில் ஊடகவியலாளர் தவசீலன் அவர்களை முல்லைத்தீவு பொலிசார் விசாரணைக்கு அழைத்து வந்தது ஊடகவியலாளர் குறித்த நபரை தாக்கியதாக தெரிவித்து ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் அவர்களுக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று இருப்பதோடு அடுத்த வழக்கு தவணையாக ஒன்பதாம் மாதம் பத்தாம் திகதி இடம்பெற இருக்கின்றது.

இந்நிலையில் குறித்த நபரின் அச்சுறுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் அவர்களும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக் அமைவாக குறித்த முறைப்பாட்டில் உடைய விசாரணைகள் இடம் பெற்றது.

இதன்போது முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் முல்லைத்தீவு கோத்தபாய கடற்படை முகாமை சேர்ந்த அதிகாரிகள் கடற்படை அதிகாரிகள் சார்பாக சட்டத்தரணி ஒருவர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர், மரியசுரேஷ் ஈஸ்வரி ,ஊடகவியலாளர் தவசீலன் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி சட்டத்தரணி லீனஸ் வசந்தராஜா அவர்களுடைய தலைமையிலே இந்த விசாரணைகள் இடம் பெற்றது இந்த விசாரணைகளின் போது கடற்படையினர் குறித்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு தங்களால் எந்தவிதமான அச்சுறுத்தலும் இனிவரும் காலங்களில் வழங்கப்படாது என தெரிவித்த உறுதிமொழியை அடுத்து அவர்களுடைய அந்த பிரச்சனை சுமூகமாக இரண்டு தரப்பினராலும் தீர்க்கப்பட்டு இருந்தாலும் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் அவர்களுடைய முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த முறைப்பாட்டில் பொலிசார் திட்டமிட்டு அநீதி விளைத்து இருப்பதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பான அனைத்து சாட்சியங்களையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும் அது தொடர்பாக தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுப்பதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறார்கள்.

# இன நல்லிணக்கத்தை பாதுகாக்க அரசு அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும்

**வவுனியா நிருபர்**

இனநல்லிணக்கத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் இன முரண்பாடுகள் மேலும் வலுப்பெற்று மக்கள் மிகவும் நெருக்கடியான ஒரு சூழலுக்குள் தள்ளப்படுவதை தவிர்க்கமுடியாது போய்விடும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



வவுனியா மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாக செயலாளர்கள் மற்றும் ஆதரவாளர்களைச் சந்தித்து கலந்தரையாடினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

எமது கட்சியின் நிலைப்பாடு என்பது பெரும் சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் எக்காலத்திலும் இன நல்லிணக்கத்தை வளர்த்தெடுப்பதிலும் அதனை பாதுகாப்பதற்காகவுமே ஓயாது உழைத்துவருகின்றோம்.

அதுமாத்திரமன்று இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையிலும் நாம் நிதானமாக செயற்படுவது மட்டுமன்றி எமது கட்சியின் கொள்கை மற்றும் நிலைப்பாடுகளை ஏனைய சக அரசியல் கட்சிகளுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்தி வருகினறோம். வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரையில் மூவின மக்கள் வாழ்ந்துவருகின்றார்கள். அது மட்டுமன்றி பல சமயங்களை பின்பற்றுகின்ற மக்களும் வாழ்ந்துவருகின்றார்கள். எனவே இம்மாவட்டத்தில் நல்லிணக்கத்தை பாதுகாத்து வளர்த்தெடுக்கவேண்டியது இன்றைய காலச்சூழலில் மிகவும் அவசியமானது.

இதனை புரிந்துகொண்டு அரசாங்கம் இன நல்லிணக்கத்திற்கும் ஒற்றுமைக்கும் பாதகம் ஏற்படாத வகையிலும் உரிய முறையில் சகல மக்களுக்கும் ஏற்றவகையிலும் அவரவர்களது சமய அனுஷ்டானங்களை பின்பற்றுவதற்கும் அவர்களது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை பின்பற்றி பாதுகாக்கும் வகையிலும் முறையான நடவடிக்கைகளை வகுத்து அவற்றை நிதானமாக செயற்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் இன நல்லிணக்கத்திற்கு பாதகம் ஏற்படும் வகையில் சூழல்கள் அமையும் என்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எமது கட்சியின் கொள்கை நிலைப்பபாட்டுக்கு ஏற்றவாறு இன நல்லிணக்கத்தை பாதுகாக்கவும் வளர்த்தெடுக்கவும் நாம் எக்காலமும் அர்ப்பணிப்புடன் உழைத்துவருகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே நேரம் கிளிநொச்சி மாவட்டத்திலும் கட்சியின் நிர்வாக செயலாளர்கள் மற்றும் ஆதரவாளர்களை சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக தெளிவுபடுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியா கணேசபுரம், சமயபுரம் மக்கள் வீட்டுத்திட்டம் கோரி போராட்டம்



**வவுனியா க.மதி**

வவுனியா கணேசபுரம், சமயபுரம் கிராமத்திலுள்ள மக்கள் ஒன்றிணைந்து வவுனியா மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரபையின் அலுவலகத்திற்கு முன்பாக தமக்கு வீட்டுத்திட்டம் வழங்குமாறு கோரி 20ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போராட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

நீண்டகாலமாக வீட்டுத்திட்டம் வழங்குவதாக தெரிவிக்கப்பட்டு தமக்கான வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை எனவும் பிரதேச செயலாளர் சிபாரிசு வழங்கினாலும் மாவட்ட வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் நிராகரித்துள்ளதாகவும் கடந்த இரண்டு வருடகாலமாக வீட்டுத்திட்டம் வழங்குவதாக தெரிவித்து தம்மை சிராமத்திற்குள்ளாக்குவதாகவும் தமக்கான பெயர் பட்டியலில் தமது பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை நிராகரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தே இம் மக்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை இந்தியாவிலிருந்து அகதியாகச் சென்று மீண்டும் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டவர்கள் மீண்டும் அகதியாகவே வாழ்ந்து வருவதாகவும் தமக்கான வீட்டுத்திட்டம் வழங்க எவ்வித மான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எமது கிராமத்திற்கு சிலருக்கு வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டுள்ளது. தமக்கான தீர்வினைப் பெற்றுத்தருமாறும் அடிப்படை வசதியற்ற வீட்டில் வசித்து வருவதாகவும் தெரிவித்த அம் மக்கள் தற்போது குடியிருக்கும் வீட்டில் புகைப்படங்களைத் தாங்கியவாறு போராட்டத்தை மேற்கொண்டனர்.

சற்று நேரத்தில் அவ்விடத்திற்கு சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளருமான கே. காதர் மஸ்தான் போராட்டம் மேற்கொள்வதற்கான காரணத்தைக் கேட்டறிந்து கொண்டார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரபையின் மாவட்ட முகாமையாளர் முருகனூர் கிராமத்தில் அடிக்கல் நாட்டு நிகழ்வில் கலந்து கொண்டுள்ளதால் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கணேசபுரம்இ சமயபுரம் கிராமப்பகுதி மக்களின் வீட்டுத்திட்டம் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

அப்பகுதி மக்களின் போராட்டம் குறித்தும் நிலைமைகளை எடுத்துக்கூறி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளரிடம் கட்சி பேதம் இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டத்தினைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இவ்விடயம் குறித்து மாவட்ட அரசாங்க அதிபருக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் இருப்பதாகத் தெரிவித்து மாவட்ட திட்டப்பணிப்பாளரை போராட்ட இடத்திற்கு அரசாங்க அதிபர் அனுப்பிவைத்துள்ளார். மாவட்ட திட்டப்பணிப்பாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அலுவலர்கள்இ குறித்த கிராம்த்திற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரை மக்களின் போராட்ட இடத்திற்கு அழைத்து விரிவான கலந்துரையாடலை மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாதிக்கப்பட்ட மற்றும் வீட்டுத்திட்டத்தில் பெயர் விடுபட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டத்தினை கேட்டறிந்து நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்து வீட்டுத்திட்டங்களை வழங்க இன்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர்களிடம் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானின் வாக்குறுதியைடுத்து போராட்டம் மேற்கொண்டவர்கள் ஒருமணித்தியாலயம் மேற்கொண்ட தமது போராட்டத்தினைக் கைவிட்டு அவ்விடத்திலிருந்து சென்றுள்ளனர்.

இதேவேளை சமயபுரம் கிராமத்திலுள்ள ஒரு பகுதிக்கு வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே அப்பகுதியிலுள்ள விடுபட்ட மக்கள் தமக்கான வீட்டுத்திட்டம் வழங்கவேண்டும் என்று கோரி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்திற்கு முன்பாக போராட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

# படையினர் பாடசாலை வாசலில் நிற்பது பாதுகாப்பை உறுதிப்படுத்தாது!

**வவுனியா க.மதி**

பாதுகாப்பை நாங்கள் தான் உறுதிப்படுத்த வேண்டும். பொலிஸோ, இராணுவமோ பாடசாலை வாசலில் நிற்பது பாதுகாப்பை உர்ஜிதப்படுத்தாது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறப்பு விழா நிகழ்வில் நேற்று 14.06 கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து மேலும் கருத்துரைக்கையில்,

நாங்கள் எத்தனையோ போராட்டங்களை பார்த்தவர்கள். எங்களுடைய போராட்டம் என்பது இனரீதியான போராட்டமாகத்தான் பார்க்கப்பட்டது. ஆனால் இன்று போராட்டம் என்ற ரீதியிலே மிகவும் பயங்கரமான ஒரு பயங்கரவாத நிகழ்வு கூடுதலாக எங்களுடைய மக்கள் யார் இருந்தாலும், எந்த சமூகம் இருந்தாலும், மக்கள் தொகை மரிக்கின்ற எண்ணிக்கையை வைத்து கொண்டு ஒரு முஸ்லீம் தீவிரவாதம், பயங்கரவாதம் என்று கூறி தங்களுடைய நாடு.

இந்த உலகம் முழுதும் தங்களுக்கு வர வேண்டும். தங்களுடைய நாடாக மாற வேண்டும் என்ற சிந்தனையிலே செயற்படுகின்ற ஒரு நிகழ்வாக நாங்கள் அயல் நாடுகளிலே பார்த்திருக்கின்றோம். இப்பொழுது எங்களுடைய நாட்டிலே அது உருவெடுத்திருக்கிறது.

ஆகவே மக்களுடைய எண்ணிக்கை அதுவும் கூடுதலாக இந்த சம்பவங்களை வைத்து பார்க்கும் போது தமிழர்கள் தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே எண்ணிக்கை என்பது மக்களுடைய பிணங்களை எண்ணி கணக்குப் பார்த்து சந்தோசப்படுகின்றது தான் இந்த தீவிரவாதத்தின் எண்ணம். ஆகவே நாங்கள் எங்களுடைய பாதுகாப்பை நாங்கள் தான் பார்க்க வேண்டும். அந்த விடயத்திலே நாங்கள் எல்லோரும் கவனமாக போகும் வழிகளில் பிள்ளைகளை, எல்லோரையும் கவனமாக நாங்கள் தான் பார்க்க வேண்டும்.

இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்கின்ற நாங்கள் இவ்வளவு இழப்புகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு நாங்கள் இந்த வாழ்க்கையை நடத்துகிறோம் என்றால் எங்கள் கடவுள் ஏதோ ஒரு வகையில் எங்களை விட்டிருக்கிறார் என்று சொன்னால் நாங்கள் நல்லதை செய்ய வேண்டும் என்பதற்காகவே.

எங்களுடைய இலட்சிய போராட்டம் என்பது, அதற்கான எல்லைகள் என்பது அல்லது கவனம் என்பது இன்றைக்கு பார்த்தவங்க இருந்தால் எவ்வளவு பிரச்சனை. ஆகவே சமூக ஒற்றுமை என்பது கட்டாயம் தேவை. எங்களுடைய மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும்.

ஆகவே பாதுகாப்பை நீங்கள் உறுதிப்படுத்துகின்ற செயற்பாட்டிலேயே அது பொலிஸ் பார்த்துக்கொள்ளும், இராணுவம் பார்த்துக்கொள்ளும் எங்களை சோதனை செய்யும்போது அது ஒரு விருப்பம் இல்லாமல் இருக்கின்ற ஒரு சூழல். ஆனால் எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்கின்ற ஒரு கட்டாய நிலைக்கு நாங்கள் வந்திருக்கின்றோம்.

ஆகவே எங்களுடைய தேசத்திலே இன்றைக்கு பல பிரச்சனைகளை எங்களுடைய தமிழ் சமூகம் சந்தித்திருக்கிறது. இவ்வாறானவைகளிலிருந்து மீண்டு நாங்கள் எங்களுடைய செயற்பாட்டை செய்ய வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியாவில் போராட்டம்!



**வவுனியா நிருபர்**

வவுனியாவில் 843 நாட்களாக தொடர்ச்சியாக சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஆதரவுடன் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தாயகத்தில் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா தலைமையில் சகாயமாதபுரம் மாதா ஆலயத்தில் ஈஸ்ரர் ஞாயிறு தினத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட பொது மக்களின் 50 வது நினைவு நாளை முன்னிட்டு ஆத்மா சாந்தி வேண்டி மெழுகுவர்த்தி ஏற்றி வழிபாட்டில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்ட்டவர்களின் உறவுகள் பதாதைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக உண்ணாவிரதக் கொட்டகையை வந்தடைந்தனர்.

ஜனாதிபதிக்கு எதிரான வசனங்களுடன் பதாதைகளை தாங்கியவாறு அமைதியான முறையில் காணாமல் ஆக்கப்ட்டவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

காணாமல் போன எமது பிள்ளைகள் ஜனாதிபதியுடன் இருக்கும் ஆதாரத்தை நாங்கள் சமர்ப்பித்தும் எமது பிள்ளைகள் விடுவிக்கப்டவில்லை. ஜனாதிபதியின் பதவிக்காலம் முடியும் முன்னர் எமது பிள்ளைகள் விடுவிக்கப்பட வேண்டும் என இதன்போது அவர்கள் தெரிவித்தனர்.




# கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் போது மோதல்; 6 பேர் விளக்கமறியலில்

**க.கிஷாந்தன்**

அட்டன் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட டிக்கோயா, தரவளை விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் போது இரு குழுக்களுக்கு இடையில் கடந்த 9 ஆம் திகதி மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர்கள் 6 பேரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனைய 5 சிறுவர்களை, சிறுவர் சீர்திருத்த பள்ளியில் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை வைக்குமாறும் அட்டன் நீதிமன்ற நீதவான் ஜயராமன் டொர்க்சி உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த உத்தரவு கடந்த புதன்கிழமை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் போது இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாய் தர்க்கம் மோதலாக மாறியதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இது தொடர்பான காணொளி அட்டன், சாஞ்சிமலை பிரதான வீதியின் தரவளை பகுதியில் வீடு ஒன்றில் பொருத்தபட்டிருந்த சிசிரிவி கெமராவில் பதிவாகியுள்ளது.

இந்த மோதல் சம்பவத்தில் காயமடைந்த 3 பேரில் ஒருவர் கண்டி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு சிகிச்சை பெற்று வருவதோடு, மேலும் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் 2 பேர் சிகிச்சை பெற்று வருவதாக அட்டன் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.

# தலவாக்கலையில் போலி சான்றிதழுடன் தனியார் வைத்தியசாலையை நடாத்தியவர் கைது

**சுஜீவன் தலவாக்கலை**



தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை நகரில் கடந்த பல மாதங்களாக போலியான வைத்திய சான்றிதழுடன் வைத்தியர் ஒருவர் தனியார் மருத்துவமனை ஒன்றினை நடாத்தி வந்த வைத்தியர் ஜூன் 13 பிற்பகல் 1 மணியளவில் தலவாக்கலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த வைத்திய அதிகாரி அண்மைக்காலமாக விசாரணைக்கு உட்பட்டு இருந்ததாகவும் தெரியவருகின்றது. மேலும் இவ் வைத்திய அதிகாரியை உறுதிப்படுத்தக்க வகையிலான வைத்திய சான்றிதழினை காட்சிப்படுத்துமாறும் காட்டுமாறும் பொது சுகாதார பரிசோதகர் மற்றும் தலவாக்கலை லிந்துலை நகர சபை தலைவர் அசோக சேபாள உட்பட பலரும் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் அவர் அவற்றை காட்டுவதற்கு தொடர்ச்சியாக மறுப்பு தெரிவித்து வந்துள்ளார்.

அந்த வகையில் அன்றைய தினம் காலை குறித்த தனியார் மருத்துவமனை அமைந்திருக்கும் கட்டிடத்திற்கு சென்ற தலவாக்கலை லிந்துலை நகர சபை தலைவர் உட்பட உறுப்பினர்கள் சிலர் அவரிடம் மீண்டும் தனது வைத்திய சான்றிதழை கேட்டபோது அவர் தர மறுததுள்ளார். இவ்விடயம் தொடர்பாக தலவாக்கலை பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. அதனை அடுத்து தலவாக்கலை பொலிஸார் மற்றும் தலவாக்கலை பிரதேசத்திற்கு பொறுப்பான பொது சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் வருகை தந்து குறித்த வைத்தியரின் வைத்திய சான்றிதழை பரிசோதித்த போது அவர் வைத்திருந்த சான்றிதழ் போலியானது என்றும் இவ்வளவு காலமும் போலியான வைத்திய சான்றிதழை வைத்துக்கொண்டு மருத்துவமனையை முன்னெடுத்துச் சென்று ள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து குறித்த நபர் தலவாக்கலை போலீசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவ் வைத்தியர் சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த முகமட் இஸ்மாயில் என்பவர் ஆவார் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து குறித்த நபர் ஜூன் 14 ஆம் திகதி நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். அதற்கமைய வைத்திய சான்றிதழையும் வியாபார சான்றிதழையும் உறுதிப்படுத்த தவறிய சந்தேக நபரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் பிரமோதய ஜெயசேகர வத்தரவிட்டுள்ளார்.

# கிளங்கன் வைத்தியசாலையில் கண் பிரிவு நோயாளர்களுக்கு குளவிகளால் அச்சுறுத்தல்

**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**



டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் உள்ள கண் சிகிச்சை பிரிவு மற்றும் இன்னும் சில நோயாளர் பிரிவுகளுக்கு குளவிகளின் அச்சுறுத்தல் காணப்படுவதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கண் சிகிச்சை பிரிவிலிருந்து சுமார் 200 அடி தூரத்தில் உள்ள மரத்திலும் கட்டடத்திலும் பாரிய மூன்று குளவி கூடுகள் காணப்படுகின்றன.

இந்த குளவி கூடுகளில் உள்ள குளவிகள் இரவு வேளையில் மின் ஒளி காரணமாக இப்பிரிவுக்கு வருகை தருவதாகவும் இதனால் நோயாளர்கள் அச்சத்தில் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த குளவிகளின் வருகை காரணமாக பல நோயாளர்கள் வெளியில் செல்வதற்க்கு கூட பயப்படுகின்றனர்.

இந்த குளவிகள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் கலையுமேயானால் கண் சிகிச்சை பிரிவு நோயாளர்கள் மற்றும் ஏனைய பல பிரிவுகளின் நோயாளர்கள் பாதிக்கக்கூடும் என பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது குறித்து வைத்தியசாலை நிர்வாகம் இதனுடன் தொடர்புடையவர்களுக்கு அறிவித்திருந்த போதிலும் சம்பந்தபட்டவர்கள் இது வரை சரியான தீர்வினை பெற்றுக்கொடுக்க தவிறியிருப்பதாக பலர் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் மலையகப் பகுதிகளில் பல இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது குளவிகளின் தாக்குலுக்கு ஆளாகி பலர் உயிரிழந்திருப்பதும் பலர் காயமுற்ற வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# தலவாக்கலை பெயர்பீல்ட் தோட்டத்தில் வீடு ஒன்றில் திடீர் தீ பரவலால் 07 பேர் நிர்கதி

**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**



லிந்துல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லிந்துல பெயர்வெல் தோட்டத்திற்கு சொந்தமான பெயர்பீல்ட் தோட்டத்தில் ஏற்பட்ட தீடீர் தீயினால் குறித்த வீடு முற்றாக எரிந்து நாசமாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் உறுப்பினர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போதே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தெய்வாதினமாக எவருக்கும் உயிராபத்தோ காயங்களோ ஏற்படவில்லை. எனினும் வீட்டில் இருந்த அத்தியவசிய ஆவனங்கள்,உடுதுனிகள்,தளபாடங்கள்,இலத்திரனியல் உபகரணங்கள் உட்பட அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

இந்த தீயினால் பாதிக்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சுமார் ஏழு பேர் உறவினர்களின் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு கிராம சேவகர் ஊடாக சமைத்த உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

குறித்த வீட்டில் தீ ஏற்படுவதற்கான காரணங்கள் இதுவரை உறுதி செய்யப்படாத போதிலும் விளக்கு தவறி விழுந்து தீ பிடித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீட்டிலிருந்து இரவு புகை எழுவதை கண்ட அயலவர்கள் கூச்சலிடவே அவர்கள் எழுந்து வெளியில் ஓடிவந்து, அயலவர்களுடன் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்துள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் மொழிக்கு உரிய இடத்தை பெற்று கொடுப்பார்களா புதிய உறுப்பினர்கள்?

**சுஜீவன்**

நாட்டின் அரச கரும மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழியும் காணப்படுகின்ற நிலையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தமிழ்மொழி தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றன . இது தொடர்பில் பல சந்தர்ப்பங்களிலும் பல அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது . இருந்த போதிலும் அதற்கான நிரந்தர தீர்வு இன்று வரை கிட்டவில்லை. அத்தோடு அரசகரும மொழிகளுக்கென தனியான அமைச்சர் ஒருவர் இருக்கின்ற போதிலும் தமிழ் மொழிக்கான அந்தஸ்து இதுவரை கிடைக்காமை வேதனைக்குரிய விடயமே . பல இன மக்கள் வாழும் இலங்கை நாட்டில் அரச கரும மொழியாக சிங்களம் மற்றும் தமிழ் மொழி இருக்க வேண்டும் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் நடைமுறையில் அவ்வாறு இல்லை என்பதே நிதர்சனம்.

தமிழர்கள் செறிந்து வாழும் மலையகம் மற்றும் வடக்கு கிழக்கு ஆகிய மாகாணங்களில் தமிழ் மொழி பிரதானமாக பயன்பாட்டில் இருக்க வேண்டும் அல்லவா ?ஆனாலும் மலையகத்தில் தமிழ்மொழியானது தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. அரசு அலுவலகங்களில் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக செல்லும் எம்மவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு இன்னல்களுக்கும் தொடர்ந்தும் முகம் கொடுத்து வருகின்றனர்.

மேலும் இதற்கு சிறந்த உதாரணமாக இம் மாதம் 8ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஒரு தேர்தல் நடைபெற்றது. அதாவது அதிபர்கள் ஆசிரியர்கள் கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் கல்வி சமூகத்திலுள்ள புத்திஜீவிகள் அங்கத்துவம் வகிக்கும் உஈஇகு என்ற கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் அது ..இத்தேர்தலானது வலய மட்டத்தில் நாடளாவிய ரீதியில் 8 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 4. 30 மணி வரை நடைபெற்றது . இத்தேர்தலில் பல்வேறு தனிப்பட்ட நபர்கள் தொழிற்சங்கங்கள் ரீதியாகவும் அரசியல் கட்சிகள் ரீதியாகவும் போட்டியில் இறங்கினர் . இவர்களில் பலரது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இதற்கு காரணம் என்ன?

நுவரெலியா கல்வி வலயத்தில் குறித்த தேர்தலுக்காக 16 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன . இருந்த போதிலும் அவற்றில் 8 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதோடு 8 பேர் மாத்திரமே தேர்தலில் போட்டியிடுவதற்கு முழுமையான தகுதியை பெற்றிருந்தனர் . ..அவர்களில் இருந்து நான்கு பேர் உஈஇகு அமைப்பின் நிர்வாக குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் நால்வரும் தமிழர்கள் என்பது விசேட அம்சமாகும். அதற்கமைய இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் ஊடாக போட்டியிட்ட திரு விஸ்வநாதன் 262 வாக்குகளையும் திரு . ஈ.கு. சுரேன் 260 வாக்குகளையும் பெற்று முதல் இரண்டு இடங்களையும் தமதாக்கிக் கொண்டனர். அதேபோல் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னனியின் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் போட்டியிட்டு மூன்றாம் நான்காம் இடங்களை பெற்றுக் கொண்ட திரு சிவானந்தன் ( 257) அவர்களும் திரு தங்கராஜ் (249) அவர்களும் வெற்றி பெற்றுள்ளனர் .அதேபோல் ஹட்டன் கல்வி வலயத்தின் ஐந்து தமிழர்கள் வெற்றி பெற்றுள்ளனர். நுவரெலியா மற்றும் ஹட்டன் ஆகிய கல்வி நிலையங்களில் இவ்வெற்றியானது வரலாற்று சாதனை புத்தகத்தில் பதியப்பட வேண்டிய தொன்றாகும். எது எவ்வாறாக இருந்தாலும் வெவ்வேறான குழுக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் ஒட்டுமொத்த தமிழ் கல்வி சமூகத்தின் நலனுக்காக ஒன்றாக பயணிக்க வேண்டிய கட்டாய நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் வாக்களிப்பு நடைபெற்றபோது நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்கள் வருகை தந்திருந்த போது இவ்வாறான ஒரு ஒற்றுமையை காணக்கூடியதாக இருந்தது. எனவே இதனை சரியான வகையில் பயன்படுத்தி குறித்த கூட்டுறவு சங்கத்தின் ஊடாக கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட அநீதிகளை நிறுத்தி ஒட்டுமொத்த கல்வி சமூகத்திற்கு பயன் அளிக்கக் கூடிய வகையிலான திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள நுவரெலியா கிளை அலுவலகத்தில் தமிழ் அதிகாரிகள் இன்மையின் காரணமாக பல்வேறு சிரமங்களுக்கு நுவரெலியா மாவட்ட கல்வி சார் கல்விசாரா ஊழியர்கள் முகம் கொடுத்து வருவதாக குற்றம் சுமத்துகின்றனர் ..இவ்விடயம் தொடர்பில் பல்வேறு முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதோடு இது தொடர்பில் உயர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ள போதிலும் எவ்வித ஆக்கபூர்வமான செயற்பாடுகளோ இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் விளைவாகவே இம் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் நுவரெலியா வளையத்தில் போட்டியிடவிருந்த எட்டு பேரின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டன ஏனெனில் இவர்கள் தமிழ் மொழியில் அச்சிடப்பட்டிருந்த விண்ணபத்திலேயே பூரணப்படுத்தி சமர்ப்பித்தனர் இருப்பினும் சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டு இருந்த விண்ணப்பபடிவத்தில் மொழிபெயர்ப்பில் ஏற்பட்டிருந்த ஒரு சிக்கல் நிலை தோன்றி இருந்தது. இதன் விளைவாகவே தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு இருந்தன என குற்றஞ் சாட்டப்பட்டது. இதற்கு காரணம் தமிழ் அதிகாரிகள் இன்மையும் தமிழில் உரிய முறையில் மொழிபெயர்க்காததும் ஆகும். அத்தோடு தமிழ் பேசும் அதிகாரிகள் இன்மையினால் தினமும் பல்வேறு வகையான நிர்வாக சிக்கல்களுக்கும் எமது கல்வி சமூகம் முகம் கொடுத்து வருகின்றது அத்தோடு கடன்களை வழங்குவதில் கூட பாராபட்ச நிலைமையே இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த அலுவலகத்திற்கு செல்லும் அதிபர் ஆசிரியர்கள் முறையாக நடாத்துவதில் கூட அங்கு இருக்கும் உத்தியோகத்தர்கள் சிலர் அலட்சியமாக செயற்படுகின்றமை காணக்கூடியதாக இருக்கின்றது.


இவ்வாறான நிலைமையின் கீழ் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் எவ்வித பேதமும் வேறுபாடுகளும் இன்றி ஒரே அணியாக சேர்ந்து அங்கு இடம்பெறும் பொதுக்கூட்டங்களில் குரல் கொடுக்க வேண்டும் . அத்தோடு தமிழ் மொழிக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக இவர்கள் செயற்பட வேண்டும் . இக்கூட்டத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள சகல அங்கத்தவர்களையும் ஒரே மாதிரி வழி நடத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை கொண்டு வந்து அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கும் இவர்கள் செயற்பட வேண்டும். சுமார் 10 ஆயிரம் கோடி சொத்துக்களை கொண்ட இக் கூட்டுறவு சங்கத்தில் பெரும்பாலான அதிபர் ஆசிரியர்கள் கல்வி அதிகாரிகள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் என பலரும் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். இவர்களின் மாதாந்த சந்தா கொடுப்பனவு மற்றும் பங்கு முதலைக் கொண்டே கூட்டுறவுச் சங்கம் வெற்றிகரமாக இயங்கி வருகின்றது .ஆசியா கண்டத்தில் இருக்கும் கூட்டுறவு சங்கங்களில் வலிமைமிக்க ஒரு கூட்டுறவு சங்கம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. பல கோடி ரூபாய் சொத்துக்களை இருப்பில் வைத்திருக்கும் இச்சங்கத்தில் தமது அங்கத்தவர்களுக்கு வழங்கவேண்டிய கடன்களை முழுமையாக ஒரே தடவையில் வழங்காது அதனை இரண்டு கட்டங்களாக பிரித்து வழங்குகின்றமை ஒரு ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடாகும்.

நாடளாவிய ரீதியிலிருந்து இச் சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுவது வழக்கம். அந்த வகையிலேயே இம்முறையும் ஜனநாயகரீதியில் தேர்தல்களை குறித்த சங்கம் நடத்தியது. இதற்கு முன் இரு தடவைகள் ஜனநாயக ரீதியில் சங்கத்தின் தேர்தல்கள் நடைபெற்று அதன் ஆட்சிப் பொறுப்பை இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தன் வசப்படுத்தி இருந்தது. இதன்போது சங்கத்தின் உறுப்பினர்களுக்கு பல்வேறு வகையான நலன்களை ஏற்படுத்தி இருந்தமையும் குறிப்பிட்டாகவேண்டும். அதன்படி 50 ஆயிரம் ரூபாவாக இருந்த கடன் தொகையானது இன்று ஒரு மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதோடு கடன் வட்டி வீதமும் 5%மாக தற்போது குறைக்கப்பட்டுள்ளது. அத்தோடு பல்வேறு வகையான சிறு கடன்களையும் சலுகைகளையும் புலமைப்பரிசில் களையும் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அவர் சார்ந்த குடும்பங்களுக்கும் வழங்கி வருகின்றது.

ஆனால் தற்போது நடைபெற்ற தேர்தல் முடிவின் படி இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் 178 ஆசனங்களையும் பொதுஜன முன்னணி 183 ஆசனங்களையும் சுயேட்சைக்குழுக்கள் 10 ஆசனங்களையும் ஏனைய இரு கட்சிகள் தலா ஒரு ஆசனங்களையும் பெற்றுள்ளன. இந்நிலையில் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கான நிர்வாக பொறுப்பினை ஏற்பதில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்திற்கு பல்வேறு சவால்கள் எழுந்துள்ள நிலையில் சரியான நியாயமான நிர்வாகத்தை நடாத்துவதில் அதிக ஆசனங்களை பெற்றுள்ள அமைப்பு எவ்வாறு செயற்படப் போகின்றது என்பது புரியாத புதிராகவே காணப்படுகின்றது.

ஏனெனில் பல கோடி ரூபா சொத்துக்களையும் அதேபோல் பணத்தையும் கொண்டு தினமும் இயங்கும் இச்சங்கத்தில் இருந்து கடந்த காலங்களில் எமது நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்கள் பல கோடி ரூபா பணத்தை சூறையாடிய சம்பவங்களும் பதிவாகியுள்ளன . எனவே .ஒட்டுமொத்த கல்வி சமூகத்தின் மாதாந்த அங்கத்துவ பணத்தை கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இச் சங்கத்தில் இருந்து அவரவர் சொந்த தேவைக்காக முன்னாள் அரசியல் தலைவர்கள் பலரும் இங்கிருந்து பணத்தை கொள்ளையடித்துள்ளனர். இதற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முஸ்தீபுகள் தற்போது நடைபெற்று கொண்டிருந்தவேளையிலேயே இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்திற்கு ஒரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது . இந்நிலையில் எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் இச்சங்கத்தில் உள்ள சொத்துக்கள் அனைத்திற்கும் என்ன நடக்கப் போகிறது என்பதை அனைவரும் விழிப்போடு பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்..

எனவே இக் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகத்தை நியாயமாக இயங்கக்கூடிய ஒரு தரப்பினரிடம் கையளிக்க வேண்டிய கட்டாய நிலைக்கு கல்வி சமூகம் தள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய ஏற்கனவே இச்சங்கத்தின் உள்ள சொத்துக்களை கொள்ளையடித்து அவர்களிடம் மீண்டும் கையளித்து விடாது ஒரு இணக்கப்பாட்டின் அடிப்படையில் சகல கல்வி சமூகத்தில் இருந்து தெரிவான உறுப்பினர்கள் உண்மையாக நேர்மையாக இதயசுத்தியுடன் செயற்பட்டு ஒரு நல்ல நிர்வாகத்தை கொண்டு வருவதற்கான முன்னேற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென பலரும் கோரிக்கை விடுக்கின்றனர் இல்லையேல் மீண்டும் ஆசிரியர் சமூகம் அதிபர் சமூகம் மற்றும் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைவரினதும் சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றன யாராலும் தடுக்க முடியாத அவல நிலைக்கு தள்ளப்படுவது உறுதியாகி உள்ளது அதை உணர்ந்து இச்சங்கத்தில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள அவர்கள் ஒவ்வொருவரும் உணர்வோடு செயல்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.



# உயிர் காக்க...

# உதிரம் கொடுப்போம்!

உலகில் இது வரை குருதிக்கு இணையான எந்த ஒரு திரவமும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை எனவே குருதிக்கு இணையானது குருதி மட்டுமே ,அவசர உலகத்தில் அறுவைச் சிகிச்சையும் விபத்தும் நோயும் மலிந்து விட்டன விபத்தில் அடிபட்டு இரத்தம் தேவப்படுவோர் ஏராளம் ஏராளம்.எதிர்பாராத விபத்து மகப்பேறு, அறுவை சிகிச்சை, நோய் பலவீனம் ஆகியவற்றின்போது பாதிக்கப்பட்டவருக்கு இரத்தம் தேவைப்படுகிறது.

உலகளவில் இரத்தத்தின் தேவை ஆண்டுதோறும் அதிகரிக்கிறது. தேவைப்படும் இரத்தத்தை இன்னொருவர் தானம் செய்தவன் மூலம் மட்டுமே தேவைப்பாட்டை ஓரளவாவது பூர்த்தி செய்ய முடியும்..

முகமும் முகவரியும் தெரியாத இவர்களுக்கு நம்மால் எப்போதும் செய்ய முடிகிற கொடுத்தாலும் குறையாத தானம். இரத்ததானம் என்பதை இத்தினத்தில் பலமுறை மீண்டிப் பார்ப்போம்.

உலகளாவிய ரீதியில் ஆண்டுதோறும் ஜுன் மாதம் 14ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புடன் உலக சுகாதார நிறுவனத்தால் சர்வதேச இரத்த தான தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

இரத்தப் பிரிவுகளான A, B, O ஆகிய பிரிவு

**என்.ஹரன்**

களைக் கண்டுபிடித்த கார்ல் லென்டினரின் (Karl Landsteiner) பிறந்த தினத்திலே இத்தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது..

உலக ரீதியில் இத்தினத்தை அனுஷ்டிப்பதற்கான முக்கிய நோக்கம் இரத்த தானம் வழங்குபவர்களை கௌரவப்படுத்துவதும் இரத்ததானம் செய்வதனை ஊக்குவிக்கவுமே ஆகும்

இரத்ததானம் என்பது இன்னொருவருக்கு ஏற்றுவதற்காக இரத்தத்தை வழங்குவதை பொருள்படுத்தி நிற்கின்றது. இந்த தானத்தின் மூலம் சகல இரத்த வழங்குநரும், பெறுநரும் இதன் பிரதிபலன்களை அவர்களுடைய வாழ்நாளிலேயே அனுபவிக்கிறார்கள். அத்துடன் அனைவருக்கும் பொதுவான இரத்த தானத்தின் மூலம் இன, மத, மொழி, நிற, பேதங்களை மறந்து அனைத்து மக்களுக்கும் ஒருவருக்கொருவர் உதவ முடியும்.

ஒருவரினால் வழங்கப்படும் இரத்தத்தின் மூலம் தலசீமியா, ஹிமோபிலியா, டெங்கு போன்ற இரத்தம் சம்பந்தமான நோயாளிகளும், சத்திர சிகிச்சைகளுக்கு உட்படுவோர், மகப்பேறு அடையும் தாய்மார், அவசர விபத்துக்குள்ளாவோர் என உலகம் முழுவதுமுள்ள இலட்சக் கணக்கான மக்கள் தமது உயிரை மீளப் பெறுகின்றனர். இத்தினம் இலவச இரத்த தானம் செய்வதன் முக்கியத்துவத்தினை உணர்த்துவதோடு இலவச இரத்த தானம் வழங்குவோரை பாராட்டுவதாகவும் அமைகின்றது. இத்தினத்தினை பரவலாக அனுஷ்டிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இரத்தானம் செய்வோரை ஊக்குவிக்கும் நல்லதொரு வாய்ப்பாகவும் இது அமைகின்றது.

உலகில் நவீன தொழில்நுட்பங்கள் எவ்வளவு தூரம் முன்னேறிய போதிலும் இரத்தத்துக்கு மாற்றீடாக வேறு எந்த ஆக்கக்கூறுகளும் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்பது இக்கால விஞ்ஞான உலகிற்கு சவாலான ஒன்றே என்பது உண்மை.

ஒவ்வொரு மனிதருக்கும் என்றோ ஒருநாள் இரத்தத்தின் மூலம் சிகிச்சைச் செய்ய தேவை ஏற்படலாம் என்ற அடிப்படையில் இந்த வேலைத் திட்டம் மிகவும் பயபக்தியுடன் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது

உலக சுகாதார நிறுவன அறிக்கையின் பிரகாரம் உலக சனத்தொகையில் ஒரு வீதத்துக்கும் குறைவானவர்களே இரத்த தானத்தை வழங்குவதாக பதிவேடுகள் தெரிவிக்கப்படுகிறது.

வருடாவருடம் பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் 81 மில்லியனுக்கும் கூடிய அலகுகளை இரத்த தானமாக வழங்கி வருகின்றனர். உலக மக்கள் வழங்கும் ரத்த தானம் ஆண்டுதோறும் 81 மில்லியன் அலகுகளுக்கும் அதிகமாக இருந்த போதிலும் இதில் 38 வீதமான பங்களிப்பினையே வளர்முக நாடுகளில் வழங்கப்படுகின்றது. ஆனால்இ உலக சனத்தொகையின் 82 வீதமானோர் வளர்முக நாடுகளில் வாழ்கின்றனர்.

இரத்த தானம் செய்வதன் மூலம் ஒருவருடைய உயிர் காப்பற்றப்படுகிறது. இன்னொருவருக்கு இரத்த தானம் செய்ய வழிகாட்டியாக அமைகிறது. இன்று நீங்கள் இரத்த தானம் செய்தால்இ அது நாளை உங்களுக்கு கூட பயன்படலாம். இரத்த தானம் செய்வது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஜூன் 14 ஆம் திகதி உலக இரத்த தானம் செய்வோர் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

அக்டோபர் 01ஆம் திகதி தேசிய இரத்த தான தினமாக இலங்கையில் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் '=மாவட்ட இரத்த தான அமைப்பு அருங் குருதியாளர் அமைப்பு '=ஆகியன இயங்கி வருகின்றன. அருங் குருதி வகையைச் சேர்ந்தோர் தங்களை இந்த அமைப்பில் இணைத்துக் கொள்வதானது அவசர அருங் குருதித் தேவைப்பாட்டை நிறைவு செய்து உயிர் காப்பாற்றஉதவும்.

**சர்வதேச இரத்த தான தினம் ஜூன் 14**

ஒவ்வொருவரும் தத்தமது இரத்தவகை என்ன? என்பதைத் தெரிந்து வைத்திருப்பதோடு இது பற்றிய விபரங்களைச் சொல்லும் அட்டை யையும் தங்களுடனேயே எங்கு செல்லும்போதும் வைத்திருக்க வேண்டும்.

சாரதி அனுமதிப் பத்திரத்தில் இது பற்றிய விபரம் இருக்கிறது. நமது நாட்டில் பொதுவாக ஆண்களே சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்கிறார்கள். கூடுதலான பெண்களும் சிறுவர்களும் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பதில்லை.

அதுமட்டுமின்றி இவர்களுக்கும் ஆண்களில் சிலருக்கும் தங்களது இரத்த வகை தெரியாதிருப்பதுடன் இரத்த வகை விபர அட்டை எதனையும் வைத்திருப்பது மில்லை என்பது கவலைதரும் விடையமே.

ஒருவருக்கு இரத்த தானம் செய்யும்போது அல்லது விபத்திற்குள்ளாகி இரத்தம் தேவப்படும்போது காலதாமதத்தைக் குறைத்து உடனடியாக இரத்தம் ஏற்றுவதற்கு இந்த அட்டை பயன்படுகிறது.

குடும்பமொன்றிலுள்ள ஒவ்வொருவரும் தங்களுடன் இந்த அட்டையை எந்நேரமும் வைத்திருக்க வேண்டும். பிரயாணம் செய்யும்போது தன்னுடன இந்த அட்டை இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக மாணவர்கள் பாடசாலை செல்லும்போதும் பாடசாலை விட்டு வரும்போதும் தங்களுடன் இந்த அட்டையை வைத்திருப்பதுடன் தங்களது பதிவுப்புத்தகத்தில் குறித்தும் வைத்திருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இரத்த தானம் செய்வோர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்

உடல் ஆரோக்கியம் இருக்க வேண்டும்.

வயது 18 முதல் 60 வரை இருக்க வேண்டும்.

உடலின் நிறை 50 கிலோவுக்கு மேல் இருக்க வேண்டும்.

உடலின் வெப்பநிலை 37.5 டிகிரி செல்சியசுக்கு கூடாமல் இருக்க வேண்டும்.

நான்கு மாதத்துக்கு ஒரு முறை இரத்த தானம் செய்யலாம்

சாதாரணமாக 350 மி..லீ இரத்தம் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படும்.

சாதாரண எடையுள்ள ஒரு ஆரோக்கியமான மனிதனின் உடலில் 5 முதல் 6 லிட்டர் இரத்தம் உள்ளது. அதில், இருந்து வெறும் 300 முதல் 350 மில்லிலீட்டர் (ஒரு யூனிட்) இரத்தம் மட்டுமே தானத்தின் போது பெறப்படும். அவ்வாறு கொடுத்த இரத்தத்தின் அளவு இரண்டே வாரங்களில் நாம் உண்ணும் சாதாரண உணவிலேயே மீண்டும் உற்பத்தியாகி விடும். 3 மாதங்களுக்கு ஒரு முறை எந்தவித பாதிப்பும் இன்றி இரத்த தானம் செய்யலாம். இரத்த தானம் செய்வதற்கு 5, 10 நிமிடங்கள் போதும். பொதுவாக 17 - 60 வயதுக்கிடைப்பட்ட சுகதேகிகளால் இரத்ததானம் செய்ய முடியும். இரத்த தானம் செய்ய முற்படும் ஒருவர் 50 கிலோ கிராம் எடையிலும் அதிகமாக இருக்க வேண்டும்.

இரத்த தானம் அளிப்பதால் நமது உடலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. சொல்லப்போனால் நமது உடலில் புதிய இரத்தம் உற்பத்தியாகும். அது உடலுக்கு நன்மையாகத்தான் அமையும். தானமாக அளித்த இரத்த அளவை, நமது உடல் 24 முதல் 48 மணி நேரத்திற்குள் மீண்டும் உற்பத்தி செய்து விடும். இரத்த தானத்தின் போது நாம் இழக்கும் சிவப்பணுக்களின் எண்ணிக்கை 56 நாட்களிலேயே சீராகி விடும். இரத்த தானம் அளிப்பதற்கு எந்தவிதமான உணவுக் கட்டுப்பாடோ, மருந்தோ தேவையில்லை. உடலில் இருந்து இரத்தம் எடுக்க 5 அல்லது 10 நிமிடங்கள் மட்டுமே ஆகும். ஆனால் இரத்த தானம் அளித்த பிறகு 10, 15 நிமிடங்கள் ஓய்வெடுக்கச் சொல்லி பிறகுதான் அங்கிருந்து அனுப்புவார்கள். எனவே மொத்தமாகவே இரத்த தானம் அளிக்க 30 நிமிடங்கள் போதும்.

இரண்டு நாட்களில் இழந்த இரத்தத்தை மீட்டு விடலாம். இரண்டு மாதங்களில் சிவப்பணுக்களின் எண்ணிக்கைஇ சரியான அளவுக்கு வந்து விடும்.

இரத்தம் வழங்குவதால் மற்றவர் பயன்பெற்றாலும் தானம் செய்பவர்களுக்கும் பலன் அளிக்கிறது. புதிதாக இரத்தத்தை உருவாக்கும் முயற்சியாகவும் இதைக் கருதலாம். இதனால் தானம் செய்த இரத்தத்தை இழந்ததாகக் கருத வேண்டியதில்லை. இரத்தத்தில் இரும்புச் சத்தை சரியான அளவில் வைத்துக் கொள்ள தானம் உதவுகிறது.



இரத்தத்தில் அதிகப்படியாகவுள்ள கொழுப்பும் தானம் செய்யும் போது சீரடைகிறது. ஓர் அலகு இரத்தத்தை மூன்று பகுதியாக பிரித்துஇ இரத்த சிவப்பணுக்கள் பிளாஸ்மா பிளேட்ளெட் என பயன்படுத்த முடியும். இதனால் மூன்று பேர் உயிரை ஒருவரால் காப்பாற்ற முடிகிறது. தினமும் நூற்றுக்கணக்கான பேருக்கு எதாவது ஒரு விதத்தில் இரத்தம் தேவைப்படுகிறது. பெரும்பாலான நேரங்களில் உறவினர்கள்இ நண்பர்கள் மூலமே இரத்த தானம் செய்யப்படுகிறது. ஒவ்வொருவரும் தானாக முன்வந்து இரத்தானம் செய்தால் மட்டுமே தேவையான இரத்தத்தைப் பெற முடியும்.

இரத்த தானம் அளிப்பதால் நமது உடலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. சொல்லப்போனால் நமது உடலில் புதிய இரத்தம் உற்பத்தியாகும். அது உடலுக்கு நன்மையாகத்தான் அமையும். தானமாக அளித்த இரத்த அளவைஇ நமது உடல் 24 முதல் 48 மணி நேரத்திற்குள் மீண்டும் உற்பத்தி செய்து விடும். இரத்த தானத்தின் போது நாம் இழக்கும் சிவப்பணுக்களின் எண்ணிக்கை 56 நாட்களிலேயே சீராகிவிடும். இரத்த தானம் அளிப்பதற்கு எந்தவிதமான உணவுக் கட்டுப்பாடோஇ மருந்தோ தேவையில்லை.

இதேவேளை இரத்த தானம் செய்வதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு வரை எந்த போதைப் பொருளையும் எடுத்திருக்கக் கூடாது. சர்க்கரை நோய்இ கசரோகம்இ எய்ட்ஸ் போன்று இரத்தத்தின் மூலம் பரவக்கூடிய நோய்கள் இருக்கக் கூடாது. மேலும் 3 ஆண்டுகளில் மஞ்சள் காமாலை நோய் தாக்கியிருக்கக் கூடாது.

ஐக்கிய இராச்சியத்தில் பொதுமக்கள் பெருந்தன்மையுடன் ரத்த தானம் செய்கின்றார்கள் என்று அறிக்கைகள் கூறுகின்றன. இங்கிலாந்திலும்இ பிரேசிலிலும் நிச்சயிக்கப்பட்ட நோயாளிகளின் சிகிச்சைக்காக தேசிய இரத்த சேவை நிறுவனம் தினமும் 9000 இரத்த அலகுகளை சேகரிக்கின்றது என்றும்இ 2008 ஆம் ஆண்டு 1.3 மில்லியன் மக்களிடமிருந்து 2.3 மில்லியன் இரத்த அலகுகளை சேகரித்து வழங்கியமையினால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன என்றும் அற்றிக்கைகளில் குறிப்பிடுகின்றது.

உலக இரத்தான தினத்தின் பிரதான குறிக்கோள்கள்

எந்தவொரு வெகுமதியோ அல்லது ஊதியமோ இன்றி ரத்த தானத்தை வழங்குவோருக்கு நன்றி செலுத்துதல்.

நெருக்கடியான சூழ்நிலையில் உயிர்காக்கும் விலைமதிப்பற்ற வளத்தினை ஒழுங்காக வழங்கும் அற்புதமான விசேடமான தொண்டர் அணியைச் சேர்ந்தவர் என்ற மனநிலையை ரத்த தானம் புரிவோருக்கு ஏற்படுத்துதல்.

சுகதேகியாக உள்ள நண்பர்களையும்இ உறவினர்களையும் எவ்வித வெகுமதியோ அல்லது ஊதியமோ இன்றி இரத்தான நடவடிக்கைகளில் பங்கேற்க ஊக்கமளித்தல்.

ஒரு குடும்ப அங்கத்தவருக்கு இரத்தம் தேவைப்பட்ட சந்தர்ப்பத்தில் ரத்த தானம் செய்தவரை தொடர்ந்தும் இத்தகைய தொண்டர் பணியில் ஈடுபட ஊக்குவித்தல்.

இரத்த தானம் செய்வோருக்கு எவ்வாறு சுகமான வாழ்வினை மேற்கொள்ள முடியும் எவ்வாறு தமது இரத்தத்தை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்பது பற்றி அறிவுறுத்துதல்.

உலக ரத்த தான இயற்கை நிகழ்ச்சிகள் பற்றிய ஆர்வத்தைத் தூண்டுதல்.

எனவே இரத்த தானம் என்பது நாங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.இரத்த தானம் என்பது ஒரு உயிரைக் காக்க நாங்கள் வழங்கும் பங்களிப்பு. இந்த உணர்வினை இத்தினத்தில் உறுதியாக எமது மனங்களில் பதித்துக் கொள்வோம்.



# பெற்றோரே... இது உங்களுக்கு!

ஒவ்வொரு நாளும் பிள்ளைகளை பள்ளிக்குத் தயார் செய்வதே பெரும் வேலையாகிவிடும் பெற்றோருக்கு. பிள்ளைகள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே வாசலில் வேன் வந்து நின்றுவிடும். அதன்பிறகு நடப்பவை எல்லாம் ஜெட் வேகத்தில்தான். அப்படியான சூழல்களில் சில விஷயங்களில் கவனம் செலுத்த முடியாமல் போய்விடும். அதனால், பிள்ளைகள் பள்ளிக்குச் சென்று சிரமப்படுவர். அதனால் ஒரு செக் லிஸ்ட் வைத்து செக் பண்ணலாமே. அதில் இடம்பெற வேண்டிய 10 விஷயங்கள் இதோ:

1. புத்தகங்கள்: அன்றைய தினத்தின் டைம் டேபிளின்படி புத்தகங்களை ஸ்கூல் பேக்கில் சரியாக எடுத்து வைத்திருக்கிறார்களா எனச் சோதிப்பதே முதல் வேலை. ஏனெனில் முந்தைய தினம் பள்ளியிலிருந்து வந்ததும் படிப்பதற்கு அல்லது ஹோம் வொர்க் செய்வதற்கு என எடுத்த புத்தகங்களை மேஜை மீதே வைத்திருக்க வாய்ப்பு உண்டு.

2. ஹோம் வொர்க் நோட்: இது மிகவும் முக்கியம். உங்கள் பிள்ளை, சிரமப்பட்டு செய்த ஹோம் வொர்க்கை ஆசிரியரிடம் காட்ட, அந்த நோட்டைப் பள்ளிக்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும் அல்லவா. அதனால் ஹோம் வொர்க் நோட் இருக்கிறதா என்றும் ஹோம் வொர்க் முழுமையாக செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் செக் பண்ண மறக்க வேண்டாம்.



3. லஞ்ச் பாக்ஸ்: லஞ்ச் பாக்ஸை எடுத்து வைத்திருப்பார்கள். ஆனால், சரியாக மூடாமல் விட்டிருப்பார்கள். ஸ்நாக்ஸ் பாக்ஸை மறந்திருப்பார்கள். மறக்காமல் தண்ணீர் பாட்டிலையும் எடுத்து வையுங்கள். நீர் கசிந்து விடாமல் நன்கு மூடவும். பிள்ளையின் உணவு விஷயம் என்பதால் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும்.

4. ஷூ: நேரமாகி விட்டதே என அவசரம் அவசரமாக ஷூவை அணிந்துகொள்வார்கள். ஆனால், அதனுள் பூச்சிகள் ஏதேனும் இருக்கின்றனவா எனச் சோதிப்பது பல வீடுகளில் கிடையாது. ஒருவேளை ஷூவினுள் பூச்சிகள் இருக்கும்பட்சத்தில் பிள்ளைகள்தாம் கடுமையான வலியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதனால் ஷூ அணிவதற்குமுன் அவசியம் செக் பண்ணவும்.

5. கடிதம்: உங்களின் பிள்ளை, பள்ளியிலிருந்து முந்தைய

29 ஆம் பக்கம் பார்க்க....

# பெண்களைப் போற்றும் 'நேர்கொண்ட பார்வை'



அஜித் நடிப்பில் உருவாகியுள்ள நேர்கொண்ட பார்வை படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி மிகச் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் விஸ்வாசம் எனும் மெஹாஹிட் படத்தைக் கொடுத்த அஜித் அடுத்த ஏழு மாதத்தில் நேர்கொண்ட பார்வைப் படத்தை ரிலிஸ் செய்ய இருக்கிறார். அஜித்தின் 59 ஆவது படமான 'நேர் கொண்ட பார்வை' திரைப்படம் சுதந்திர தினத்தை முன்னிட்டு வரும் ஆகஸ்ட் 10ஆம் தேதி வெளியாகவுள்ளது.

இந்த படத்தில் அஜித்தோடு வித்யா பாலன், ஸ்ரத்தா ஸ்ரீநாத், ஆதிக் ரவிச்சந்திரன், டெல்லி கணேஷ், ரங்கராஜ் பாண்டே ஆகியோர் நடித்துள்ளனர். யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ள இப்படத்தினை மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் தயாரித்துள்ளார். இந்தப் படத்தின் டிரைலர் நேற்று வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்நிலையில் படத்தின் இயக்குனர் படம்பற்றியும் அஜித் பற்றியும் சிலத் தகவல்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார். அதில் அஜித்திடம் இந்த படத்தை ஒரு பெண் இயக்குனர் இயக்கினால் சிறப்பாக இருக்கும் என்று கூறினார். ஆனால் அஜித்தோ அதை மறுத்துவிட்டார். ஒரு பெண் இயக்கினால் நடுநிலையோடு இயக்க முடியாது. மேலும் இது பெண்களுக்கானப் படம் இல்லை. இது ஆண்களுக்கானப் படம். பசங்கதான் பொண்ணுங்கள பத்தி தெரிஞ்சிக்கணும் என்று அவர் கூறினார். எனக் கூறியுள்ளார்.

நேர்கொ...
நே...

நெ...
பார்வை ...
ரிலீஸ் ஆ...
யாகியிரு...
தல ...
'நேர்கொ...
இயக்கிய...
இந்நி...
டீசரும் ...
கும் இந்...
பரவலா...
வில்லை...
இரண்...
கின்றன...
ஆகஸ்ட்...
பெரிய ...
தின் மீது...
திரைப்ப...
லாம் எ...

## காதோடு... காதாக...

இளம் நடிகை ஒருவர் புதுப்படத்தில் நடிக்க கன்டிஷன் போடுகிறாராம். அழகான நடிகை அவர். தமிழ், தெலுங்கு, மலையாள படங்களில் நடித்து வருகிறார். தமிழில் வேகமாக வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவராக உள்ளார். முக்கியமாக ஹீரோக்களுக்கு பிடித்த நடிகையாக இருக்கிறார். படத்தில் கவர்ச்சி காட்டச் சொன்னால் அதிர்ச்சி அடைவது இல்லை, முடியாது என்று அடம்பிடித்து இயக்குநரை கதற விடுவது இல்லை. கதைக்கு தேவையாக இருக்கா சரார், நடிக்கிறேன் என்று கூறி தாராளமாக நடித்துக் கொடுக்கிறார். செட்டில் ஹீரோக்களுடன் ஜாலியாக சிரித்துப் பேசுகிறார். தன் ஷாட் முடிந்ததும் அம்மாவுடன் போய் தனியாக உட்காராமல் தங்களுடன் கடலை போடுவதால் ஹீரோக்களுக்கு அம்மணியை பிடித்துள்ளது. அம்மணியின் நல்ல குணத்தால் அவரை தங்களின் படங்களில் நடிக்க வைக்க இயக்குநர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். அதனால் அவரைத் தேடி பட வாய்ப்புகள் வந்து குவிகின்றன. மேலும் விளம்பர படங்களிலும் நடிக்கத் துவங்கியுள்ளார். பெரிய இடத்து விளம்பரங்களில் நடிக்கும் வாய்ப்புகள் வருகின்றது. அவர் போலீஸ்காரர் ஜோடியாக நடித்த படத்தில் அவரின் நடிப்பை யாருமே கண்டுகொள்ளவில்லை. இதையடுத்து போலீஸ்கார் ஜோடியாக நடிக்க மாட்டேன் என்று அடம்பிடிக்கிறாராம். ஹீரோவுக்குத் தான் முக்கியத்துவம் என்றாலும் என்னை அழகாக காட்டினால் நிச்சயம் நடிக்கிறேன் என்கிறாராம் அம்மணி. அழகாக காட்டுவது பெரிய விஷயமா ஜமாய்ச்சுடுவோம் என்கிறார்களாம் இயக்குநர்கள். பிற நடிகைகள் ஏதேதோ கன்டிஷன் போட்டு இயக்குநர்களை கடுப்பேற்றும் நிலையில் இந்த அம்மணி போடும் கன்டிஷன்கள் எல்லாம் ஒன்றுமே இல்லை. அவரின் மார்க்கெட் தற்போது தான் சூடுபிடிக்கத் துவங்கியுள்ளது. கொஞ்சம் வளர்ந்த பிறகு சம்பள விஷயத்தில் கன்டிஷன் போடுவார் என்று எதிர்பார்க்கலாம். அந்த கன்டிஷன் போடும் போது தான் தயாரிப்பாளருக்கு கடுப்பேறும் என்பது குறிப்பிடத்தக்கது.

★★★★★

கணவரை பிரிந்த நடிகைக்கு மீண்டும் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார்களாம் பெற்றோர். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி படங்களில் நடித்து வருபவர் அந்த நடிகை. அவர் வாழ்வில் திருமண வாழ்க்கை துவங்கிய வேகத்தில் முடிந்து விட்டது. திருமண வாழ்க்கை விவாகரத்தில் முடிந்ததற்கு நடிகை தான் காரணம் என்று பேசப்பட்டது. விவாகரத்திற்கு பிறகு நடிகை உலகம் சுற்றும் பெண்ணாக மாறியுள்ளார். நேரம் கிடைக்கும்போது எல்லாம் ஊர் சுற்றுகிறார். படங்களில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறார். கதைக்கு தேவைப்பட்டால் கூடுதல் கவர்ச்சி காட்டவும் அவர் தயங்குவது இல்லை. அவர் நடித்து முடித்துள்ள ஒரு படத்தில் அவர் அணிந்த உடையை பார்த்து வியக்காதவர்களே இல்லை. எந்த கோலிவுட் நடிகையும் இந்த அளவுக்கு துணிந்தது இல்லை என்று பேசப்பட்டது. மேலும் அம்மணியின் பெயர் அவ்வப்போது வேறு மாதிரியும் அடிபட்டது. இந்நிலையில் அவருக்கு மறுமணம் செய்து வைக்க பெற்றோர் ஆசைப்படுகிறார்களாம். நடிகையை ஒருவரின் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டால் அவர் தன் சேட்டைகளை குறைத்துக் கொள்வார் என்பது அவர்களின் கணக்காம். சுதந்திரத்தை முழுமையாக அனுபவித்துக் கொண்டிருக்கும் நடிகையோ திருமண பேச்சை எடுத்தாலே நைசாக நழுவி விடுகிறாராம். கல்யாணத்திற்கு இப்போ என்ன அவசரம், பின்னால் பார்க்கலாம் என்று சொல்கிறாராம். நடிகையிடம் பேசிப் பேசி ஓய்ந்த பெற்றோர் தற்போது உறவினர்களின் உதவியை நாடியுள்ளார்களாம். பெற்றோர் சொல்லியே கேட்காதவர் உறவினர்களின் பேச்சையும் காதில் வாங்குவது இல்லையாம்.




## மீண்டும் 'ராஜராஜ சோழன்'

தஞ்சை பெரிய கோவிலை கட்டியதற்காக கூட ராஜராஜ சோழனின் பெயர் இவ்வளவு பரபரப்பாக செய்தி வந்திருக்காது. ஆனால் கடந்த சில நாட்களுக்கு முன் இயக்குனர் ரஞ்சித் பற்ற வைத்த ராஜராஜ சோழன் குறித்த சர்ச்சைக்குரிய நெருப்பு தற்போது இணையதளங்களில் பற்றி எரிகிறது. எந்த பிரச்சனையையும் அரசியலாக்கும் நம்மவர்கள் இதையும் அரசியலாக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் திடீரென ராஜராஜ சோழனின் பெயர் பரபரப்பாக பேசப்படுவதால் சிவாஜி கணேசன் நடித்த 'ராஜராஜ சோழன்' திரைப்படத்தை மீண்டும் ரிலீஸ் செய்ய இந்த படத்தின் உரிமையை வைத்திருக்கும் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளது.

கடந்த 1973ஆம் ஆண்டு வெளிவந்த 'ராஜராஜ சோழன்'படத்திற்கு ஒருசில பெருமைகள் உண்டு. இந்த படம் தான் தமிழில் முதல்முதலில் வந்த சினிமாஸ்கோப் படம் ஆகும். அதே போல் இந்த படத்தில் சிவாஜி கணேசன் ஒரு பாடலை பாடியுள்ளார். அவர் இதற்கு முன்னும், இந்த படத்திற்கு பின்னும் பாடல்களை பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.'தென்றலோடு உடன்பிறந்தாள் செந்தமிழ்ப்பெண்' என்ற பாடலை சிவாஜி கணேசன், டி.ஆர்.மகாலிங்கத்துடன் இணைந்து பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த படத்திற்காக படப்பிடிப்பு நடத்த தஞ்சை பெரிய கோவிலில் அனுமதி மறுக்கப்பட்டதால் தஞ்சை பெரிய கோவிலை செட் போட்டு படமாக்கினர்

ராஜராஜ சோழன் குறித்து பரபரப்பாக செய்திகள் வந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்த படம் ரிலீஸ் ஆனால் ஓரளவு வசூலைப்பெறும் என்ற எதிர்பார்ப்பில் விரைவில் இந்த படத்தை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது



## சென்சாரில் சிக்கிய 'ஆடை'



அமலாபால் நடிப்பில் ரத்னகுமார் இயக்கியுள்ள படம் ஆடை. இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆடைக்கு பதிலாக பேப்பரைச் சுற்றிக் கொண்டு ஆபாசமான வகையில் அமலா பால் போஸ் தரும் காட்சி இடம்பெற்றிருந்தது. இந்நிலையில் படத்தினை சென்சார் போர்டுக்கு அனுப்பியதாகவும் அங்கு படத்துக்கு பெரிதும் எதிர்ப்பு கிளம்பியதாகவும் கூறப்படுகிறது.

படத்தில் ஆபாச காட்சிகள் இருப்பதாலும் குறிப்பிட்ட சில வசனங்களுக்காகவும் ஏ சான்றிதழ் தான் தர முடியும் என சென்சார் போர்டு கூறியிருக்கிறது. யுஏ சான்றிதழ் பெற தயாரிப்பு தரப்பு முயன்று வருவதாக கூறப்படுகிறது. ஆனால் படத்திற்கு ஏ சான்றுதான் கிடைக்கும் என தெரிகிறது.

## சண்முகபாண்டியனி... அடுத்த படம்



நடிகர் விஜயகாந்தின் மகன் சண்முக பாண்டியன் முதன்முறையாக போலீஸ் கெட் அப்பில் நடிக்கும் புதிய திரைப்படம் விரைவில் தொடங்க இருக்கிறது.

தமிழ் சினிமாவில் வாரிசு நடிகர்கள் காலோச்சியிருக்கும் காலம் இது. முரளி மகன் அதர்வா, கார்த்தி மகன் கௌதம் கார்த்திக் என பல நாயகர்களின் வாரி... கள் திரையில் தங்கள் முத்திரைகளை பதித்து வருகின்றனர். தமிழ் சினிமாவில் தனக்கென தனி முத்திரை... பதித்தவர், கேப்டன் என்ற வார்த்தையை கேட்டாலே... நினைவில் வருபவர் விஜயகாந்த்.

அவரது மகனான சௌந்திரபாண்டியன் அவரளவுக்கு திரைப்படங்களில் புகழ் பெற முடியவில்லை என்ற நிலை இருந்து வருகிறது. கடைசியாக இவர் நடித்த 'மதுர வீரன்'திரைப்படம் பெரிய வெற்றியை பெறவில்லை என்றாலும் ஓரளவு நடித்திருந்தார் என்ற... பெயரை கொடுத்தது.

இந்நிலையில் ஒரு புதிய போலீஸ் படம் நடிக்க தயாராகி வருகிறார் சண்முக பாண்டியன். இயக்குனர் சிவாவிடம் உதவி இயக்குனராக பணிபுரிந்த பூபாலன் இந்த திரைப்படத்தை இயக்குகிறார். இது குறித்து அவர் இது பக்காவான போலீஸ் என்டர்டெ...னர் படம். இதற்கு சண்முக பாண்டியன்தான் சரியாக இருப்பார் என்பதால் நான் வேறு ஆப்சன் யோசிக்கவே இல்லை. போலீஸ் திரைப்படம் என்று சொன்னாலே நம் நினைவுக்கு வருபவர் விஜயகாந்த் தான். அவரை பெருமைபடுத்தும் விதமாக சண்முக பாண்டி...யனுக்கு இந்த படம் இருக்கும்.

இந்த படத்திற்கான ஷூட்டிங் பணிகள் காஞ்சிபுரத்தில் நடக்க உள்ளது. இந்த படத்தின் தலைப்பை சஸ்பென்சாக வைத்துள்ளோம். விரைவில் விஜயாகாந்த் அவர்களே அந்த தலைப்பை வெளியிடுவார் எ... தெரிவித்துள்ளார்.

## ஜீ.வி.யின் தங்கையும் திரையுலகில்



நடிகர் விஜய் சேதுபதி நடிக்கவிருக்கும் திரைப்படத்தில் நடிகர் மற்றும் இசைப்பாளர் ஜி.வி.பிரகாஷின் தங்கை பவானி ஸ்ரீ நடிக்கவுள்ளார்.

விஜய் சேதுபதி நடிக்கவிருக்கும் க/பெ/ரணசிங்கம் என்ற திரைப்படத்தில்,ஜி.வி.பிரகாஷின் தங்கை நடிக்கவுள்ளார் என்ற செய்தி ரசிகர்களுக்கு பெரும் எதிபார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் விஜய் சேதுபதியின் நடிப்புக்கு பவானி ஸ்ரீயால் ஈடுகொடுக்கமுடியுமா என்று ரசிகர்களிடம் ஒரு பேச்சு எடுபடுகிறது.

பவானி ஸ்ரீ, இதற்கு முன் High Pries-ess என்ற வெப் சீரீஸில் நடித்திருந்தாலும், தற்போது கோலிவுட்டில் ஒரு நடிகையாக மக்கள் மனதில் இடம்பிடிப்பாரா என்று பொருத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

மேலும் க/பெ ரணசிங்கம் திரைப்படத்தில் பவானி ஸ்ரீ, முக்கியமான கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளார் என அப்படக்குழுவினர் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சூர்யாவின் படத்தில் தெலுங்கு நடிகர்

பிரபல நடிகர் சூர்யா நடிக்கவிருக்கும் திரைப்படத்தில், முன்னணி தெலுங்கு நடிகர் ஒருவர் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது

சூர்யா நடித்து அண்மையில் வெளியான திரைப்படம் என்.ஜி.கே. அந்த திரைப்படத்தை இயக்கியவர் செல்வராகவன்.

செல்வராகவனும் சூர்யாவும் இணைந்து பணியாற்றிய திரைப்படம் என்பதால் என்.ஜி.கே திரைப்படத்திற்கு, ரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்பில் இருந்தனர்.

ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு சரியாக போகவில்லை. இதனையடுத்து தற்போது இயக்குனர் சுதா கொங்காரா இயக்கத்தில் சூரரை போற்று என்ற திரைப்படத்தில் நடிக்கிறார்.

இந்நிலையில் சூரரை போற்று திரைப்படத்தில் தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகரான மோகன் பாபு இணையவுள்ளதாக கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மோகன் பாபு தெலுங்கு சினிமா உலகில் 1970-களிலிருந்து பல வெற்றி படங்களில் நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ...ாண்ட பார்வையோடு ...மாதும் சாஹோ

...டுநாளாக அஜித் ரசிகர்கள் ஆர்வமாய் காத்திருந்த நேர்கொண்ட ... திரைப்படத்தின் ட்ரெய்லர் நேற்று மாலை 6 மணியளவில் ...ூனது. அந்த பரபரப்பின் இடையே சத்தமேயில்லாமல் வெளி ...க்கிறது பிரபாஸ் நடிக்கும் சாஹோ திரைப்படத்தின் டீஸர்.

...அஜித் நடித்து விரைவில் வெளியாகவிருக்கும் திரைப்படம் ...ாண்ட பார்வை'. சதுரங்க வேட்டை, தீரன் திரைப்படங்களை ... வினோத் இந்த படத்தை இயக்கியிருக்கிறார்.

...லையில் பிரபாஸ் நடித்துள்ள 'சாஹோ' திரைப்படத்தின் ...வெளியாகியுள்ளது. ஷ்ரதா கபூர், பிரபாஸ் ஜோடியாக நடிக் ...த படத்தை சுஜித் என்பவர் இயக்கியுள்ளார். இதன் டிரைலர் ...ன கவனத்தை பெற்றாலும் அதிக பார்வையாளர்களை பெற ...

...ண்டு திரைப்படங்களின் ரிலீஸும் கிட்டதட்ட அருகருகே இருக் ... நேர்கொண்ட பார்வை ஆகஸ்ட் 10ம் தேதியும், சாஹோ ... 15 சுதந்திர தினத்தன்றும் வெளியாகின்றன. பாகுபலி போன்ற ...பட்ஜெட் படங்களில் நடித்தவர் பிரபாஸ் என்பதால் இந்த படத் ...ும் ரசிகர்களுக்கு எதிர்பார்ப்பு இருக்கிறது. எனவே இரண்டு ...டங்களும் பாக்ஸ் ஆபீஸ் வசூலில் போட்டி போட்டு கொள்ள ...ன எதிர்பார்க்கப்படுகிறது.



## அனுபமாவின் விளக்கம்

கடந்த சில நாட்களாக தென்னிந்திய சினிமாவில் பிரபல நடிகையான அனுபமா பரமேஸ்வரன் இந்திய கிரிக்கெட் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரிட் பும்ராவை காதலிப்பதாக செய்திகள் வெளியாகி வைரலாக பேசப்பட்டது.

நடிகை அனுபமா பரமேஸ்வரன் பிரேமம் படம் மூலம் மலையாள சினிமா உலகில் அறிமுகமானவர். பிரேமம் படத்தின் பிரமாண்ட வெற்றி அவரை மக்களிடையே பிரபலப்படுத்தியது. இதைத்தொடர்ந்து நடிகர் தனுஷின் கொடி படத்தின் மூலம் தென்னிந்திய படங்களில் நடிக்கத் தொடங்கினார்.

குறுகிய காலத்தில் அடுத்தடுத்து வெற்றிப்படங்களில் நடித்து பெயர்பெற்ற இவர் தொடர்ச்சியாக தெலுங்கு, கன்னட படங்களில் தலை காட்ட அரபித்து வந்தார். ஆனால் திடீரென நடிப்புக்கு முழுக்கு போட்டார். சமுக வலைதளங்களில் ஆக்ட்டீவாக செயல்பட்டு தொடர்சியான பதிவுக, டப்மாஸ் என ரசிகர்களுடன் நெருக்கமாக உரையாடி வந்தார்.

இதற்கிடையில் தான் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் மலையாள மீடியா உலகில் அனுபமா இந்திய கிரிக்கெட் வீரர் பும்ராவை காதலிப்பதாக செய்திகள் பரவியது. இந்திய கிரிக்கெட் வீரரான பும்ரா தற்போது உலகக்கோப்பை போட்டிகளில் விளையாடி வருகிறார். பும்ரா தன் டிவிட்டர் பக்கத்தில் 25 பேரை மட்டுமே ஃபாலோ செய்கிறார். அதில் பெரும்பாலனவர்கள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் சம்பந்தமான பிரபலங்கள் அப்படியிருக்க பும்ரா ஃபாலோ செய்யும் ஒரே ஹிரோயின் அனுபமா பரமேஸ்வரன் மட்டுமே.

அனுபமா எப்போதும் அவரின் ட்விட்டர் கணக்கை ஆராய்வதே வேலையாக வைத்திருந்திருக்கிறார். துரும்பு கிடைத்தும் சும்மா விடுவார்களா ரசிகர்கள், ஏன் சம்பந்தமே இல்லாமல் அந்த கிரிக்கெட் வீரரின் ட்வீட்டுகளை ரீட்வீட் செய்கிறீர் என்று நெட்டிசன்கள் கேள்வி எழுப்ப கப்சிப்னு அமைதியாகிட்டார்.

இது உணமையா? வெறும் கிசுகிசு மட்டும் தானா என குழப்பத்தில் இருந்துவந்த ரசிகர்களுக்கு தற்போது விளக்கத்தை கொடுத்துள்ளார் அனுபமா, பும்ரா ஒரு இந்திய கிரிக்கெட் வீரர் என்பது மட்டுமே எனக்கு தெரியும். இதுவரை நான் அவரை சந்தித்ததே இல்லை. நான் அவரை காதலிப்பதாக பரவும் செய்தி பொய்யானது. இப்படி எந்த ஒரு அடித்தளமும் இல்லாமல் ஒரு பெண்ணை பற்றி சமூக வலைதளத்தில் வதந்தி பரவியது மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்று கூறியுள்ளார்.

## மீண்டும் இயக்குநராகும் ராஜூ சுந்தரம்



'செம்பருத்தி' படத்தின் மூலம் நடன இயக்குநராக அறிமுகமான ராஜூ சுந்தரம், 200 படங்களுக்கு மேல் நடன இயக்குநராக பணியாற்றியுள்ளார். தவிர, ஜீன்ஸ், 123, எங்கேயும் காதல் உள்ளிட்ட பல படங்களில் சின்ன கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறார். இவருடைய அண்ணன் பிரபுதேவா படங்கள் இயக்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து, இவரும் கதை எழுதி 'ஏகன்' என்ற படத்தை இயக்கினார். அதில் அஜித், நயன்தாரா, ஜெயராம் உள்ளிட்டோர் நடித்திருந்தினர். அதற்கு பிறகு, படம் இயக்காமல் நடனத்தில் மட்டும் கவனம் செலுத்தி வந்தார், ராஜூ சுந்தரம்.



இந்நிலையில், பதினொரு ஆண்டுகள் கழித்து, மீண்டும் படம் ஒன்றை இயக்கவிருக்கிறார். தெலுங்கில் உருவாகும் இப்படத்தில் ஷர்வானந்த் கதாநாயகனாக நடிக்கிறார். இப்போது அவர் '96' படத்தின் தெலுங்கு வெர்ஷனில் ஹீரோவாக நடித்து வருகிறார். இதனை முடித்துவிட்டு இந்தப் படத்தில் இணைவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வருட இறுதியில் துவங்க இருக்கும் இதன் ஆரம்பக்கட்ட பணிகள் விரைவில் தொடங்கவிருக்கிறது. தவிர, ஷர்வானந்த் - காஜல் அகர்வால் நடிக்கும் 'ரணரங்கம்' படம் ஆகஸ்ட் மாதம் திரைக்கு வரவிருக்கிறது.

## சிம்புவின் திருவிளையாடல் ஆரம்பம்



சினிமா உலகில் சொன்ன நேரத்துக்கு சரியாக படப்பிடிப்புக்கு வந்துவிடும் தொழில் பக்தி சிலபேருக்கு மட்டுமே இருக்கும். முன்பு சிவாஜி கணேசன், இப்போது ரஜினிகாந்த். புதுப்படத்தின் ஷூட்டிங் நேரத்தை முன்கூட்டியே சொல்லியும் ஆஜராகாமல் டிமிக்கி கொடுப்பது பலபேருக்கு இருக்கிறது அப்போது கார்த்திக், இப்போது சிம்பு.

மைக்கேல் ராயப்பன் தயாரித்த அன்பானவன், அசராதவன், அடங்காதவன் படப்பிடிப்பு வராமல் டிமிக்கிக் கொடுத்த சிம்பு, மணிரத்னம் இயக்கிய செக்கச் சிவந்த வானம் ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு சொன்ன நேரத்துக்கு ஆஜரானதைப் பார்த்து சினிமா உலகமே அண்ணாந்து பார்த்தது.

சுரேஷ் காமாட்சி தயாரிப்பில் வெங்கட்பிரபு இயக்கும் திரைப்படம் மாநாடு படத்தின் ஷூட்டிங்கை பலமுறை திட்டமிட்டு தயாரித்தனர். அப்போது எல்லாம் சிம்பு அந்தந்த தேதிகளில் வர இயலாது என்று சொல்லிவிட்டார். இறுதியாக நான் நிச்சயம் ஷூட்டிங் வந்துவிடுவேன் என்று சூடத்தில் சத்தியம் செய்யாத குறையாக சூளூரத்தார் .அதன்பிறகே ஜூன் 23-ம் தேதி மலேசியாவில் மாநாடு படப்பிடிப்பு துவங்கும் வேலையில் பரபரப்பாக இறங்கினர்.

இப்போ மத்த ஆர்டிஸ்டுகளை வெச்சு ஷூட்டிங் நடத்துங்க அப்புறமா நான் கலந்துக்கறேன் என்று சிம்பு தடாலடி பல்டி அடிக்க தயாரிப்பாளரும் டைரக்டரும் செய்வதறியாது திகைத்துபோய் நிற்பதாக வந்த செய்தியை கேள்விப்பட்டு மாநாடு தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சியிடம் பேசினோம்.

மலேசியாவுல ஷூட்டிங் நடக்கப்போறது உண்மை, சிம்பு வரமாட்டார்னு சொல்றது பொய். எப்போ மாநாடு பட அறிவிப்பை வெளியிட்டோமோ அப்போது இருந்தே தப்புத் தப்பா செய்தியை ஏன்தான் கிளப்பிவிடறாங்கன்னே தெரியலை. சிம்புவோடு பாரதிராஜா சார், எஸ்.பி.பாலசுப்ரமணியம் சார், கல்யாணி, கருணாகரன்னு ஏகப்பட்ட நட்சத்திரங்கள் நடிக்கறாங்க,என்றார்.




பாலிவுட் சினிமாவில் முன்னணி நடிகையாக இருந்து வரும் நடிகை திஷா பதானி தோனி' படத்தின் மூலம் மிகவும் பிரபலமானார். அதனை தொடர்ந்து பாலிவுட்டின் முன்னணி ஹீரோக்கள் படங்களில் நடித்து வரும் அவர் படுமோசமான கவர்ச்சி புகைப்படங்களை வெளியிட்டு ரசிகர்களுக்கு ஷாக் கொடுத்து வருகிறார்.

ஒல்லி பெல்லி தோற்றத்தை வைத்துக்கொண்டு வயிற்று பகுதியை பலகை போன்று தட்டையாக மெருக்கேற்றி கவர்ச்சிக்கு கொஞ்சமும் குறைவைக்காமல் தாராளம் காட்டிவரும் திஷா பதானி வாஷ் போர்டு ஆப்ஸ் எனப்படும் தட்டையான வயிற்றை பெற கடுமையான உடற்பயிற்சியை மேற்கொண்டு உடலை மெருக்கேற்றி ஸ்லிம் பியூட்டி ஹீரோயினாக வலம் வந்துகொண்டிருக்கிறார்.

சமூகவலைத்தளங்களில் அவ்வப்போது படுகவர்ச்சி போட்டோஷூட்களை நடத்தி கவர்ச்சி புகைப்படங்களை பதிவிட்டு ரசிகர்களை கிறங்கடித்து வருவதையே முழுநேர வேலையாக வைத்துள்ள அம்மணி தற்போது மீண்டும் உள்ளாடை அணிந்து ப்டுக்கையறையில் மோசமான கவர்ச்சியை வெளிப்படுத்தி போஸ் கொடுத்துள்ளார். இந்த புகைப்படத்தை பார்த்த ரசிகர்கள் என்ன இவளவு அழகாக இருக்கிறீர்கள் என வர்ணித்து வருகின்றனர்.

## அன்பே நிலைக்கும்



விக்னேஷ் சிவனுடன் ஓய்வு எடுக்க வெளிநாட்டிற்கு சென்ற நயன் சென்னை: நயன்தாரா இயக்குநர் விக்னேஷ் சிவனை காதலிக்க இது தான் காரணமாக இருக்குமோ? நயன்தாராவும், இயக்குநர் விக்னேஷ் சிவனும் காதலிப்பது அனைவருக்கும் தெரியும். படப்பிடிப்பு இல்லாத நேரத்தில் நயன்தாரா விக்னேஷ் சிவனுடன் வெளிநாட்டிற்கு சென்றுவிடுகிறார். தற்போது கூட அவர்கள் இருவரும் கிரேக்க தீவுக்கு சென்று ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு எடுக்கும் புகைப்படங்களை விக்னேஷ் சிவன் இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

நயன்தாரா விக்னேஷ் சிவன் நயன்தாராவுடன் இருக்கும் புகைப்படங்களை பார்க்கும் நெட்டிசன்கள் இவருக்கு வந்த வாழ்வை பாரேன், இவருக்கு எப்படி லேடி சூப்பர் ஸ்டார் செட்டானார் என்று கேள்வி எழுப்புகிறார்கள். அழகு என்பது முகத்தில் மட்டும் இல்லை அகத்திலும் உள்ளது என்பதை நயன்தாரா நன்கு புரிந்து கொண்டிருக்கிறார் என்பது அவர் விக்னேஷ் சிவனை தேர்வு செய்ததில் இருந்தே தெரிகிறது.

விக்னேஷ் சிவன் இதுவரை போடா போடி, நானும் ரவுடி தான், தானா சேர்ந்த கூட்டம் ஆகிய மூன்று படங்களை மட்டுமே இயக்கியுள்ளார். அடுத்ததாக சிவகார்த்திகேயனை வைத்து படம் ஒன்றை இயக்குகிறார். அந்த படத்தில் பாலிவுட் நடிகை கியாரா அத்வானியை சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடிக்க வைக்க உள்ளார்.

வெறும் 3 படமே இயக்கியிருந்தாலும் பிற இயக்குநர்களையும், அவர்களின் படைப்புகளையும் மனதார பாராட்ட தவறுவது இல்லை விக்னேஷ் சிவன். மற்ற இயக்குநர்களின் படங்களுக்கு சமூக வலைதளங்களில் விளம்பரம் தேடிக் கொடுக்கிறார். சக இயக்குநர்களை பாராட்டுவதில் கஞ்சத்தனமே காட்டாதவர் விக்னேஷ் சிவன். இப்படி அடுத்தவர்களின் வெற்றியை பார்த்து பாராட்ட, மகிழ்ச்சி அடைய அனைவராலும் முடியாது. காதல் விக்னேஷ் சிவனின் இந்த நல்ல மனதை பார்த்து தான் நயன்தாரா அவர் மீது ஆசைப்பட்டிருப்பார். அழகு இன்று இருக்கும், நாளை இருக்காது. ஆனால் நல்ல மனமும், குணமும் என்றுமே நிலைத்து நிற்கும். வாழ்க்கைத் துணையாக ஒரு நல்லவர் தான் வேண்டும் என விரும்பி விக்னேஷ் சிவனை தேர்வு செய்திருக்கிறார் நயன்தாரா.

விக்னேஷ் சிவன் நயன்தாராவை அதிகாரம் செய்வது இல்லை. மாறாக தங்கம், வைரம் என்று தலையில் வைத்து கொண்டாடுகிறார். எந்த பெண்ணுக்குமே இது போன்ற ஆணை தான் பிடிக்கும். அதற்கு நயன்தாரா மட்டும் விதிவிலக்கா என்ன?

கடந்த 2015 ஆம் ஆண்டு அல்போன்சு புத்திரன் இயக்கத்தில் மலையாளத்தில் வெளியான திரைப்படம் பிரேமம். இப்படத்தின் மலர் என்ற கதாப்பாத்திரம் மூலம் சினிமாவில் அறிமுகமாகி மக்களின் மனதில் இடம் பிடித்தவர் தான் நடிகை சாய்பல்லவி.

இந்நிலையில் நான் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று கூறியுள்ளார். மேலும், நான் திருமணம் செய்துகொண்டால் என் அப்பா, அம்மாவை பார்த்துக்கொள்ள முடியாது அதனால் நான் எப்போதும் திருமணம் செய்ய மாட்டேன் என்று கூறியுள்ளார்.




நடிகை ராய் லட்சுமி அவ்வப்போது படுகவர்ச்சியான புகைப்படத்தை வெளியிட்டு ஷாக் கொடுப்பதையே வழக்கமாக வைத்துள்ளார்.

தமிழில் நடிகர் விக்ராந்த் நடித்த 'கற்க கசடற'என்ற படத்தில் அறிமுகமானார் நடிகை ராய் லட்சுமி. அதன்பிறகு ஜெயம்ரவி நடிப்பில் வெளியான தாம் தூம் திரைப்படம் மூலம் தமிழ் ரசிகர்களின் பேராதரவை பெற்றார். அதன் பின்னர் தமிழ், தெலுங்கு,மலையாளம் என பல மொழி படங்களில் நடித்து வந்தார் ராய் லட்சுமி.

பிறகு அம்மணிக்கு அரண்மனை, காஞ்சனா, மங்காத்தா என தொடர்ச்சியாக லக் அடித்தது. இடைவிடாது அடுத்தடுத்து பல திரைப்படங்களில் நடித்து புகழ்பெற்றார். இருந்தாலும் இவரால் முன்னணி நடிகைகளில் ஒருவராக வரமுடியவில்லை. பிறகு நீண்ட நாட்களுக்கு பிறகு நடிகர் ஸ்ரீகாந்துடன் இணைந்து சவுகார்பேட்டை திரைப்படத்தில் நடித்தார் ஆனால் அந்த படமும் சரியாக ஓடாததால் உடல் எடையை குறைத்து பாலிவுட் பக்கம் தாவிவிட்டார்.

இந்தி சினிமாவிற்கு சென்றால் எல்லாம் ஓபன் தான் என்பது தென்னிந்திய சினிமா நடிகைகள் அறிந்த ஒன்று தான். அந்த வகையில் தமிழ் சினிமாவில் கவர்ச்சி நடிகையாக வலம் வந்த நடிகை ராய் லட்சுமி இந்தி சினிமாவிற்கு சென்றதும் கவர்ச்சிக்கு பஞ்சம் காட்டாமல் தாராளமாக இருந்து வருகிறார். இறுதியாக இவரது நடிப்பில் வெளியான 'நீயா 2' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற தவறினாலும் அப்படத்தில் ராய் லட்சுமியின் நடிப்பு பலராலும் பாராட்டபட்டது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக தனது கவர்ச்சியான புகைப்படங்களை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு அதிர்ச்சி கொடுத்துவரும் இவர் தற்போது மீண்டும் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கவர்ச்சியின் உச்சத்தை தொட்டு சிகப்பு நிற நீச்சல் உடையில் ஓய்யாரமாக போஸ் கொடுத்துள்ள புகைப்படத்தை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



# வலிகள் நீங்க சில வழிகள்

மூட்டுபிடிப்புகளும் தசை பலகீனமும் ஏற்பட்டு வலிகள் உண்டாகிறது. நமது உடம்பில் 360 எலும்பு இணைப்புகளும் 639 தசைகளும் 206 எலும்புகளும் உள்ளன. மனிதன் ஒரு அடி எடுத்துவைக்கும் போது 140 தசைகள் இயங்குகிறது.

மூட்டுகளில் கால்மூட்டு, கணுக்கால் மூட்டு, இடுப்பு, கழுத்து மற்றும் தோள்பட்டை மூட்டுகளையே அதிகமாக பயன்படுத்துகிறோம். ஆனால் இந்த மூட்டுகளை முறையாக அசைத்து பயிற்சி செய்ய எளிய வழிகள் உள்ளன. படுக்கை பயிற்சியாக இரவில் படுக்கும்போது உணவுக்கு பின் ஒரு மணி நேரத்திற்கு பிறகு படுக்கையில் மல்லாந்து படுத்த நிலையில் கால் விரல்களில் தொடங்கி கணுக்கால், முழங்கால், இடுப்பு, கழுத்து, கைகளை ஒரு மூட்டுக்கு 10 என்ற எண்ணிக்கையில் முழு அளவும் அசைத்துவிட்டு உறங்கலாம்.

அப்படியே எழும்போது அசைத்துவிட்டு எழும்புவது நல்லது. மூட்டுகளை தொடர்ந்து அசைப்பதனால் தசைகள் வலுப்பெறும் நரம்புகள் புத்துணர்ச்சி பெறும். மூட்டுகளில் பசைத்தன்மை குறையாமல் மூட்டுத்தேய்மானம் தடுக்கப்படும். வாரத்திற்கு இரு முறையேனும் மிதமான நடைபயிற்சி செய்வதும் மோட்டார் சைக்கிளில் செல்வதை நிறுத்திவிட்டு சைக்கிள் ஓட்டுவதும் சிறந்த பயிற்சியாகும்.

இன்றைய சூழலில் அனேக மக்கள் குதிகால் வலியினால் அவதிப்படுகிறார்கள். கெண்டைக்கால் தசைகள் தொகுப்பாக மாறி குதிகால் எலும்பில் போய் முடிவடைகிற இடத்தில் ஒருசிறு எலும்பு வளர்ச்சி உண்டாகி தசைகளை அழுத்தும்போது குதிகால் வலி ஏற்படுகிறது. இதற்கு 'கல்கேனியல் ஸ்பர்' என்று சொல்லப்படுகிறது.

காலையில் எழுந்தவுடன் ஒரு அடிகூட தரையில் கால் வைக்கமுடியாத அளவிற்கு வலி ஏற்படும். வலியை பொறுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தவுடன் வலியின் தன்மை குறைந்துவிடும். இதற்கு காலையில் எழுந்தவுடன் நடப்பதற்கு முன்பாக ஒரு மசாஜ் செய்து பிடித்து விட்டு கொண்டு கால்விரல்கள் மற்றும் கணுக்கால்களை முன்னும் பின்னும் அசைத்து நன்கு பயிற்சி செய்தபிறகு சிறிதளவு மிதவெப்பமான வென்னீரில் ஒரு 10 நிமிடம் காலை வைத்திருந்தால் காலில் ரத்த ஓட்டம் அதிகமாகி வலி குறைந்துவிடும்.

பிறகு நடக்க ஆரம்பிக்கலாம். மிருதுவான ரப்பர் செருப்புகள் எம்.சி.ஆர் செருப்புகளை அணிந்து நடந்தால் நாளடைவில் வலி குறைந்துவிடும். மணற்பகுதிகளில் வெறும் காலில் நடப்பதும் சைக்கிள் ஓட்டுவதும் நல்ல பயிற்சியாகும். பெண்கள் ஹைகீல்ஸ் செருப்புகளை தவிர்ப்பது நல்லது. இது மூட்டுகளில் தேவையற்ற அழுத்தத்தை உண்டு பண்ணி உங்களுக்கு தெரியாமல் உடம்பில் பல மூட்டுகளில் வலிகளை கொண்டுவந்துவிடும்.

அடுத்து முழங்கால் மிகவும் முக்கியமானது. உடம்பின் எடையை தாங்கவும் உதவுகிறது. உடல் பருமன் உள்ளவர்கள் அதிக நேரம் நின்று கொண்டு பணி செய்பவர்கள் மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் உடற்பயிற்சி செய்யாதோர்களுக்கெல்லாம் மூட்டு முழங்கால் வலி ஏற்படும். உடல்பருமன் குறைய உணவுக்கட்டுப்பாடும் கொழுப்புள்ள உணவினையும் தவிர்க்கவும். கால்சியம் சத்து நிறைந்த பால், பசலைக்கீரை, முருங்கைக்கீரை, பிரண்டைத் துவையல், அத்திப்பழம், பாதாம் உணவில் சேர்த்துக் கொள்வதும் மாமிச உணவு, புகைப்பிடித்தல் போன்றவற்றை தவிர்ப்பதும் எலும்பின் நலனுக்கு இன்றியமையாதது.

எளிய பயிற்சிகளை அதாவது படுக்கையில் ஒருபுறம் சாய்ந்து படுத்துக்கொண்டு முழங்கால் மூட்டுகளை முன்னும் பின்னும் அசைப்பதும் குப்புற படுத்துக்கொண்டு முழங்கால் மடக்கி நீட்டுவதும் நல்ல பயிற்சியாகும். தற்போது 40 வயது வந்தவுடன் முழங்காலில் தேய்மானம் ஆரம்பித்து விடுகிறது. ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ் என்று அழைக்கப்படும் முழங்கால் மூட்டுத் தேய்மானத்தால் உலகெங்கும் 630 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இந்தியாவில் 10 மில்லியன் மக்கள் வருடந்தோறும் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்றும் உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. அடிப்பட்ட வீக்கத்திற்கு உடனே ஐஸ் ஒத்தடம் கொடுப்பது நல்லது. உடல்பருமனால் முழங்காலில்




வலி உள்ளவர்கள் உடல்எடையை குறைப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

முழங்கால் உறைகளை அணிய வேண்டும். ஆரம்பநிலையில் முழங்கால் வலி உள்ளவர்கள் வீட்டிலேயே உள்ள அருமையான மருத்துவம் வென்னீர் ஒத்தடம் வென்னீரில் ஒரு கைபிடி அளவு கல்உப்பு போட்டு கதர் துணிக்கொண்டு ஒத்தடம் கொடுக்க எல்லா தசைகளிலும் வலி குறைந்துவிடும். தொடை தசைகள் பலவீனமானால் முழங்கால் வலி வந்துவிடும். தொடைதசை வலுப்படுத்த மல்லாந்து படுத்த நிலையில் முழங்காலில் பின்புறம் மெல்லிய தலையணையை வைத்து முழங்காலில் 50 முறை விட்டு விட்டு அழுத்தவேண்டும். மேலும் அதேநிலையில் காலை நீட்டியவாறே முழங்காலையும் தூக்கி பிறகு சமநிலைக்கு கொண்டுவரும் பயிற்சி ஒரு காலிற்கு 10 முறை என்ற அளவில் செய்வதும் சிறந்தது. உடம்பின் மொத்த எடையும் கூடும் இடம் இடுப்பு பகுதியாகும்.

முதுகெலும்பின் அடிபகுதியில் தான் தேய்மானம் ஏற்பட்டு வலி ஏற்படுகிறது. நீண்டதூர இருசக்கர வாகன பயணம் போன்றவை இடுப்பு வலிக்கு காரணம். குப்புற படுத்துக்கொண்டு இரண்டு கால்களையும் சிறிதளவு முட்டியை மடக்காமல் தூக்கி பிறகு தளர்த்தும்படி 10 முறை செய்வது இடுப்பு தசையை வலுப்பெறச் செய்யும். முதுகுவலி உள்ளவர் படுக்கையிலிருந்து எழும்பும் போது ஒரு பக்கமாக சாய்ந்து எழும்புவதும் முழங்கால்களை மடக்கிக்கொண்டு தரையில் உள்ள பொருட்களை எடுப்பதும் முதுகுவலியை குறைக்கும் வழியாகும்.

கழுத்துவலி நீங்க மருத்துவம் சொல்லும் தலையணை மந்திரம் என்னவென்றால் பெரிய உயரமான தலையணைகளை தவிர்க்கவேண்டும். டெயிலர் தொழில் செய்பவர் எழுத்து பணியாளர்கள் ஓட்டுனர்களுக்கு அதிகமாக கழுத்து வலி ஏற்படுவதுண்டு. ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்பவர்கள் கழுத்தினை 4 மணி நேரத்திற்கு ஒரு முறை பக்கவாட்டிலும் முன்னும் பின்னும் அசைத்து பயிற்சி செய்வதன் மூலம் கழுத்து வலியை குறைக்கலாம். இரண்டு கைகளையும் தலைக்கு மேலே கீழே பக்கவாட்டில் என வட்டம் போடுவதால் 5 லிருந்து 10 முறை செய்வதும் நல்ல பயிற்சியாகும்.

தாய்மார்கள் ஆட்டுக்கல்லையும் அம்மிக்கல்லையும் வாரம் ஒரு முறையேனும் பயன்படுத்துவதும் குனிந்து நிமிர்ந்து கோலம்போடுவதும் குடும்பத்தலைவர்கள் கார்களை பயன்படுத்துவதை தவிர்த்து கால்களை பயன்படுத்தி நடைபயிற்சி சைக்கிள் ஓட்டுதல், நீச்சல் அடித்தல் போன்றவை செய்வதும் வலிகளை நீக்க சிறந்த பயிற்சிகளாகும். எனவே உடம்பிற்கு பயிற்சிசெய்து வலிகளை நீக்கி ஆரோக்கியமாக வாழ்வோம்.

# கொழுப்புக் கட்டியால் பிரச்சனை வருமா?

கொழுப்பு செல்களின் அதிகப்படியான வளர்ச்சியே கொழுப்புக் கட்டிகள். இந்தக் கட்டிகள் மென்மையாக உருண்டையாக, நகரக் கூடியதாக இருக்கும். கை விரலால் அழுத்தும்போது, நகர்வது போல தெரியும். வலி இருக்காது.

தசை மற்றும் தோலுக்கு இடைப்பட்ட பகுதியில் ஏற்படும். உடலில் எங்கு வேண்டுமானாலும் கொழுப்புக் கட்டிகள் வரலாம். பெரும்பாலும் கழுத்து, மேல் கை, தோள்கள், முதுகு, அடிவயிறு, தொடை, தலை, நெற்றி போன்ற இடங்களில் ஏற்படும். சிலருக்கு மூளை, சிறுநீரகம், மார்பகம் போன்ற உள் உறுப்புக்களில்கூட ஏற்படலாம். ஒரு கட்டி தான் வளரும் என்று இல்லை. பல கட்டிகள் கூட வரலாம்.

கொழுப்புக் கட்டிகள் ஏன் ஏற்படுகின்றன என்பதற்கு தெளிவான காரணங்கள் இல்லை. இருப்பினும், உடல் பருமன், சர்க்கரை அளவு கட்டுக்குள் இல்லாதது, மது அருந்துதல், மரபியல் ரீதியான காரணங்களால் இது ஏற்படலாம்.

இந்த வயதினருக்குதான் கொழுப்புக்கட்டி வரும் எனக் குறிப்பிட்டு சொல்ல முடியாது. பெரும்பாலும் 25 முதல் 50 வயதில் இந்தக் கட்டிகள் ஏற்படலாம். கொழுப்புக் கட்டிகள் புற்றுநோயாக மாற வாய்ப்பு இல்லை.

எனினும் கட்டி வளர்கிறதா, வலி இருக்கிறதா, சருமத்தின் நிறம் மாறுகிறதா என்று கவனிக்க வேண்டும். ஒருமுறை கட்டி வந்துவிட்டதை அறிந்தால், அது கொழுப்புக் கட்டிதானா என உரிய பரிசோதனைகள் செய்து உறுதிப்படுத்திக் கொண்டு, டாக்டர்களின் ஆலோசனைப்படி செயல்பட வேண்டும்.

கட்டி உள்ள பகுதியில் வலி, எரிச்சல், கட்டி மேல் தொற்று, துர்நாற்றம், கட்டியின் வளர்ச்சி அதிகரித்தல், தோற்றத்தைக் கெடுப்பது போன்ற காரணங்கள் இருந்தால் அறுவை சிகிச்சை செய்து அகற்ற வேண்டும். உடலுக்குத் தொந்தரவு தராத ஒன்றை, தேவை இன்றி அறுவை சிகிச்சை செய்து அகற்ற வேண்டாம். சிலருக்கு கட்டியை அகற்றினாலும் கூட மீண்டும் உருவாக வாய்ப்பு உண்டு. இது அவரவர் உடல்வாகுக்கு ஏற்ப மாறுபடும்.

# வெற்றிலையின் மகத்துவம்

சித்தா மற்றும் ஆயுர்வேதத்தின்படி மனிதர்களுக்கு நோய் வரக்காரணம் மனித உடலில் உள்ள வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் சரியான விகிதத்தில் இல்லாமல் இருப்பதே ஆகும். அவை கூடும் போதோ அல்லது குறையும் போதோ நோய் வருகிறது.

வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் சமநிலையில் வைத்து ஆரோக்கியத்தை பேணுவதில் வெற்றிலை முக்கிய பங்கு வகிக்கிறது. அதாவது பாக்கு, சுண்ணாம்பு சேர்த்து வெற்றிலை போடுவதால் இந்த நன்மை கிட்டுகிறது.

மருத்துவ மூலிகையான வெற்றிலையில் பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்திருக்கிறது. நோய்



எதிர்ப்பு சக்தி மிகுந்துள்ளதால் நச்சை முறிக்கும், ஜீரண சக்தியை தூண்டும், உடலுக்கு உற்சாகத்தை ஊட்டும். இப்படி பல்வேறு நன்மைகள் அதில் உள்ளன.

வெற்றிலையிலும் ஆண், பெண் பேதம் உள்ளது. கருகருவென கரும்பச்சை நிறத்தில் இருக்கும் வெற்றிலைகள் ஆண்வெற்றிலைகள் என்றும் இளம்பச்சை வெற்றிலைகள் பெண்வெற்றிலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

வெற்றிலையில் நீர்ச்சத்து, புரதச்சத்து, இரும்பு சத்து, கால்சியம், கரோட்டின், தயமின், வைட்டமின் சி மற்றும் வீரியமிக்க நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட சவிக்கால் என்னும் பொருளும் உள்ளது.

வெற்றிலை போடும் போது வெற்றிலையில் உள்ள உரைப்பு கபத்தை நீக்கி விடும். பாக்கில் இருந்து கிடைக்கும் துவர்ப்பு சுவை பித்தத்தை கட்டுப்படுத்தும். சுண்ணாம்பில் உள்ள காரச் சுவை வாதத்தை கட்டுப்படுத்தும். இதனால் உடலில் வாதம், பித்தம், கபம் ஆகியன சம நிலையில் இருந்து நோய் வராமல் காக்கும்.

அதனால்தான் நமது கலாச்சாரத்தில் தாம்பூலம் தரித்தல் எனும் வெற்றிலை போடும் பழக்கம் காலம் காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அந்த காலத்தில் நம் முன்னோர்கள் சாப்பிட்டதும் வெற்றிலை போடுவார்கள். அது ஜீரண சக்தியை மேம்படுத்தும். மேலும் சாப்பாட்டில் ஒவ்வாமை இருந்தாலும் அதனை போக்கும். இப்போது அந்த பழக்கம் வெகுவாக குறைந்து விட்டது. பண்டிகை, திருமணம் போன்ற விழாக்களின் போதே பெரியவர்கள், சிறியவர்கள் என அனைவரும் வெற்றிலை போடுகின்றனர். மற்ற நாட்களில் கடைப்பிடிப்பதில்லை.

வெற்றிலையுடன் புகையிலை சேர்த்து மெல்லும் பழக்கம் ஏற்பட்ட பின்னரே வெற்றிலை போடுவது கெட்ட பழக்கம் என்ற கருத்து மக்கள் மத்தியில் ஏற்பட்டது இதற்கு முக்கிய காரணமாகும். புகையிலை இல்லாமல் பாக்கு, சுண்ணாம்பு சேர்த்து வெற்றிலை போடுவது உடல்நலத்திற்கு உகந்ததே. வெற்றிலை போடும் போது முதல் இரண்டு முறை சுரக்கும் உமிழ்நீரை உமிந்துவிட வேண்டும். அதுதான் நல்லது.

நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் கட்டாயம் வெற்றிலை போடுவது அவர்களின் உடல் நலத்திற்கு நல்லது. ஏன்னெனில் அவர்களின் ஜீரண சக்தி குறைந்திருக்கும். வெற்றிலை போடுவதால் சாப்பிட்ட உணவு எளிதில் ஜீரணமாகும்.

இன்றைய காலக்கட்டத்தில் சின்னஞ் சிறார் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் எலும்பு தேய்மானம், மூட்டுவலி பிரச்சினை உள்ளது. கீழே விழுந்து லேசான அடிபட்டாலும் எலும்பு முறிவு ஏற்பட்டு அவதிப்படுகிறார்கள். இதற்கு காரணம் கால்சியம் சத்து குறைபாடே. சுண்ணாம்பில் கால்சியம் அதிக அளவு உள்ளது. வெற்றிலை போடும் போது நமக்கு கால்சியம் சத்து கிடைக்கிறது.

பண்டைய காலத்தில் அனைவரும் வெற்றிலை போடும் பழக்கம் இருந்ததால் அவர்கள் கால்சியம் சத்து அதிகம் கிடைக்கப் பெற்று வயதானாலும் எலும்பு தேய்மானம், மூட்டுவலி பிரச்சினையின்றி திடமாக இருந்தார்கள்.

வெற்றிலை மிகச்சிறந்த மூலிகை என்பதால் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவருக்கும் பல்வேறு நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது.

குழந்தை பெற்ற பின்னர் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஓமக்களி, சுக்கு களி, பூண்டுகளி ஆகிய லேகியங்கள் இரவில் சாப்பிட கொடுப்பார்கள். அது செரிமானமாகவும் பால் சுரப்பை அதிகமாக்கவும் அவர்களுக்கு வெற்றிலையை மெல்ல கொடுப்பார்கள். அது மட்டும் அல்லாமல் வெற்றிலையை விளக்கெண்ணையில் வதக்கி மார்பில் வைத்துக் கட்டுவார்கள். இவ்வாறு செய்வதால் பால் சுரப்பது அதிகரிக்கும்.

குழந்தைகளுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டால் வெற்றிலை காம்பை விளக்கெண்ணையில் தடவி ஆசன வாயில் செலுத்த மலம் உடனே வெளிவரும்.

வெற்றிலையுடன் துளசி இலை சேர்த்து சாப்பிட சளி மறையும். சிறு குழந்தைகளாக இருக்கும் போது அவித்து அதனை வடிகட்டி ஒரு சங்கு கொடுக்க சளி, இருமல், மூச்சு திணறல் குணமாகும். அனலில் வாட்டிய வெற்றிலையை மார்பிலும் பற்றாகப் போட சளி குறையும்.

சிறுவர்களுக்கு அஜீரணத்தைப் போக்கி பசியைத் தூண்ட வெற்றிலையோடு மிளகு சேர்த்து கஷாயம் செய்து கொடுத்து வரலாம். சுக்கு, மிளகு, திப்பிலி சம அளவு கலந்த திரிகடுக சூரணத்துடன் வெற்றிலைச் சாறு தேன் கலந்து சாப்பிட ஆஸ்துமா குணமாகும். வாயில் துர்நாற்றம் வீசும் பிரச்சினை உடையவர்கள் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, ஏலம், கிராம்பு, ஜாதிபத்தரி போன்றவைகள் சேர்த்து மெல்லும் போது வாயில் உள்ள கிருமிகளை அழித்து துர்நாற்றத்தை நீக்கும்.

தேங்காய் எண்ணெயில் வெற்றிலையை போட்டு காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு சொரி, சிரங்கு, படைக்கு தடவி வந்தால் நல்ல குணம் கிடைக்கும்.

வெற்றிலையில் சிறிது ஆமணக்கு எண்ணெய் தடவி லேசாக வாட்டி கட்டிகளின் மேல் வைத்துக்கட்டி வர கட்டிகள் உடைந்து சீழ் வெளிப்படும். வெற்றிலையின் வேரை சிறுதளவு எடுத்து வாயிலிட்டு மென்று வர குரல் வளம் உண்டாகும். எனவே இசைக்கலைஞர்கள் இதனை அதிகம் பயன்படுத்துகிறார்கள்.

நுரையீரல் சம்பந்தமான நோய்களுக்கு வெற்றிலைச் சாறும், இஞ்சிச் சாறும் சம அளவு கலந்து அருந்திவர நன்மை ஏற்படும். வெற்றிலைச் சாறுடன் சுண்ணாம்பு கலந்து தொண்டையில் தடவினால் தொண்டைக்கட்டு நீங்கும். தீப்புண் குணமாக வெற்றிலையில் நெய் தடவி லேசாக வதக்கிப் புண்ணின் மீது பற்றாகப் போட விரைவில் குணமாகும்.

வெற்றிலை விஷக்கடியை குணமாக்க வல்லது. சாதாரணமான வண்டு கடி, பூச்சிக்கடி இருந்தால் வெற்றிலையில் நல்ல மிளகு வைத்து மென்று தின்றால் விஷம் எளிதில் இறங்கும்.

# பப்பாளியின் மகிமை

எங்கும் எளிதில் கிடைக்கும் பழங்களில் மிக முக்கியமானது பப்பாளி பழம். விலையும் மிக குறைவுதான். இந்த பப்பாளி பழத்தின் மருத்துவ குணங்கள் மனிதனுக்கு மிகவும் இன்றியமையாதவையாக உள்ளது. எனவே, பப்பாளி பழம் மூலம் என்ன என்ன நன்மைகள் என பார்க்கலாம்.

பப்பாளிப் பாலை குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் தொடர்ந்து பூசி வந்தால் புண்கள் ஆறும்.

பப்பாளி விதைகளை அரைத்து பாலில் கலந்து சாப்பிட்டால், நாக்குப்பூச்சிகள் அழிந்து போகும்.

பப்பாளிக் காயின் பாலை வாய்ப்புண், புண்கள் மேல் பூசினால் புண்கள் உடனே ஆறும்.

பப்பாளிப் பாலை, பசும்பாலுடன் கலந்து சேற்றுப் புண்கள் மேல் தடவி வந்தால் புண்கள் விரைவில் ஆறும்.

பப்பாளி இலைகளை அரைத்து கட்டி மேல் போட்டு வர கட்டி உடையும்.

பப்பாளி இலைகளை பிழிந்து எடுத்து வீக்கங்கள் இருந்தால் அதன்மேல் பூசி வந்தால் வீக்கம் விரைவில் கரைவதை பார்க்கலாம்.


பப்பாளி விதைகளை அரைத்து தேள் கொட்டிய இடத்தில் பூசினால், வலியும், விஷமும் இறங்கும் என்பது உறுதி.

பப்பாளிக் காய் குழம்பை, பிரசவித்த பெண்கள் உணவில் சேர்த்து வந்தால், பால் நன்றாக சுரக்கும்.

பப்பாளி பழத்தை குழந்தைகளுக்கு அடிக்கடி கொடுத்து வந்தால், உடல் வளர்ச்சி விரைவாக இருக்கும். எலும்பு வளர்ச்சி, பல் உறுதி ஏற்படும்.

பப்பாளிக் காயை கூட்டாக செய்து உண்டு வர குண்டான உடல் படிப்படியாக மெலியும்.

பப்பாளிப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கல்லீரல் வீக்கம் குறையும் வாய்ப்பு உள்ளது.



பப்பாளிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டு வந்தால், நரம்புத் தளர்ச்சி நோய் விரைவில் குணமாகும்.

நன்கு பழுத்த பழத்தை கூழாக பிசைந்து தேன் கலந்து முகத்தில் பூசி, ஊறிய பின் சுடுநீரால் கழுவி வர முகச்சுருக்கம் மாறி, முகம் அழகு பெறும்.

எனவே, மிக எளிதில் கிடைக்கும் இந்த பப்பாளி பழத்தை உபயோகப்படுத்தி பயன்பெறலாம்.

# நோய் தொற்றுகளை சமாளிக்கும் பஞ்சாமிர்தம்

இன்றைய உடல் சிக்கல்களை தீர்க்கவல்லது என போகர் அருளிய பழனி பஞ்சாமிர்தத்தை கூறலாம். இதனை வெறும் பூஜைப் பொருளாக பார்ப்பது முறையா?

வாழ்வியல் மாற்றங்கள், அதிகப்படியான குளிர்சாதனப் பயன்பாடு, உணவுமுறை மாற்றங்கள் என அனைத்தும் பல உடல் கோளாறுகள் ஏற்படக் காரணிகளாகின்றன. இவையே அதிகப்படியான உடல் சோர்வு, தொடர்ச்சியான சளி, காய்ச்சல், தைராய்டு என பல உடல் சிக்கல்களை தோற்றுவிக்க அடிப்படை காரணம்.

மழைக்காலங்களில் ஏற்படும் சளி, இருமல், காய்ச்சல் ஆகியவை இன்று கிட்டத்தட்ட அனைத்து வீடுகளிலும் பொதுவானதாக ஆகிவிட்டது. இவற்றை மிக எளிமையாக கையாளும் வழிமுறையினை நம் முன்னோர்கள் வகுத்து வைத்துள்ளனர். பழனியில் நவபாஷான சிலையை நிறுவிய போகர் ஒரு மிகச்சிறந்த அருமருந்தினையும் நமக்கு அளித்துள்ளார். ஆம், மலை வாழை, சுத்தமான நெய், நல்ல தேன் ஆகியவற்றால் செய்யப்படும் பஞ்சாமிர்தம் தான் அது. பக்தி, உணவு என அனைத்தும் அன்று வாழ்வியல் சிக்கல்களை தீர்க்கவே இருந்தது என்பதற்கு பஞ்சாமிர்தம் மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

காலையிலும் மாலையிலும் சிறிதளவு பஞ்சாமிர்தம் எடுத்துக் கொண்டால் போதும், உடலின் எதிர்ப்பு சக்தி அதிகரித்து நோய் தொற்றுக்களை சமாளிக்கும் அளவு உடல் ஆரோக்கியப்படும்.

காய்ச்சல் சூட்டினைக் கூட கட்டுக்குள் கொண்டு வரும் ஆற்றல் கொண்டது நம் பாரம்பரிய பஞ்சாமிர்தம். இவ்வளவு உறுதியாக பஞ்சாமிர்தத்தை பற்றி கூறக் காரணம் இன்றும் பழனியைச் சுற்றியுள்ள கிராமங்களில் பங்குனி மாதம் விழா எடுத்து பஞ்சாமிர்தம் செய்து ஊரில் உள்ள அனைவருக்கும் வழங்கும் பழக்கம் இருந்து வருகிறது. இது பல்லாயிரம் ஆண்டு பாரம்பரியம்.

இவ்வளவு அரிய பண்டமான பஞ்சாமிர்தம் பற்றி நாம் அனைவரும் அறிந்தாலும் சுத்தமான பஞ்சாமிர்தம் கிடைப்பதில்தான் இன்று சிக்கல். தேவை அதிகரித்ததற்கு ஈடாக மலை வாழை கிடைப்பதில்லை என்பதால் வேறு பழங்கள் வைத்து செய்யப்படுகின்றன. அதனால் 15 நாட்களில் இவை கெட்டு விடுகிறது. மேலும் தனது மருத்துவ குணங்களையும் இழந்து விடுகிறது. ஆனால் மலை வாழையில் செய்த பஞ்சாமிர்தம் குறைந்தது ஆறு மாதம் தன்னிலை மாறாமல் இருக்குமாம். இதற்கு காரணம் மலை வாழையில் தண்ணீர் பதம் அறவே இல்லாததுதான்.

# ஹூவாயின் சொந்த இயங்கு தளம் அறிமுகமாகிறது

கூகுள் நிறுவனம் ஹூவாயுடனான வியாபார உறவுகளை முறித்துக் கொள்வதாக கடந்த மாதம் அறிவித்தது. இதனால் கூகுள் சேவைகள் மற்றும் பிளே ஸ்டோர் உள்ளிட்டவற்றை ஹூவாய் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஹூவாய் நிறுவனம் சொந்தமாக இயங்குதளத்தை உருவாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. தற்சமயம் வெளியாகி இருக்கும் தகவல்களில் ஹூவாயின் புதிய இயங்குதளம் ஓக் ஒ.எஸ். **(Oak OS)** என அழைக்கப்படலாம் என்றும் இது ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாத வாக்கில் அறிமுகம் செய்யப்படலாம் என கூறப்படுகிறது.

ஹூவாயின் சொந்த இயங்குதளம் சீனாவில் ஹாங்மெங் ஒ.எஸ். என்ற பெயரிலும் சர்வதேச சந்தையில் ஓக் ஒ.எஸ். என்ற பெயரில் அறிமுகம் செய்யப்படும் என தெரிகிறது. முன்னதாக வெளியான தகவல்களில் ஹூவாயின் சொந்த இயங்குதளம் ஆர்க் ஒ.எஸ். என அழைக்கப்படலாம் என கூறப்பட்டது.

ஐரோப்பிய யூனியன் மற்றும் இதர அலுவலகங்களில் ஹூவாய் ஆர்க் ஒ.எஸ். பெயரை பதிவு செய்திருந்தது. எனினும், தற்சமயம் வெளியாகி இருக்கும் புதிய தகவல்களில் ஹூவாய் நிறுவனம் ஹாங் மெங் ஒ.எஸ். / ஓக் ஒ.எஸ். இயங்குதளத்தை தீவிரமாக சோதனை செய்ய துவங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

ஹூவாய் நிறுவனம் ஆண்ட்ராய்டு இயங்குதளத்தை அதிகாரப்பூர்வமாக பயன்படுத்தும் உரிமை, பிளே ஸ்டோர் மற்றும் இதர சேவைகளுக்கான அப்டேட்கள் ஆகஸ்டு மாத இறுதியில் நிறைவடைகிறது. இதன் பின் ஹூவாய் நிறுவனம் ஆண்ட்ராய்டு இயங்குதளத்தை ஆண்ட்ராய்டு ஓபன் சோர்ஸ் பிராஜக்ட் (**AOSP**) முறையில் மட்டுமே பயன்படுத்த முடியும்.




## ஹூவாய் ஸ்மார்ட்போன்களில் ஃபேஸ்புக் இல்லை

ஹூவாய் நிறுவன ஸ்மார்ட்போன்களில் இனி ஃபேஸ்புக் செயலிகள் பிரீ-இன்ஸ்டால் செய்யப்படாது என ஃபேஸ்புக் தெரிவித்துள்ளது. ஏற்கனவே ஹூவாய் ஸ்மார்ட்போன்களை பயன்படுத்துவோர் தொடர்ந்து ஃபேஸ்புக் மற்றும் இதர சேவைகளை பயன்படுத்த முடியும். இந்த செயலிகளுக்கான அப்டேட்களும் தொடர்ந்து வழங்கப்படும்.


எனினும், இனி வெளியாகும் ஹூவாய் ஸ்மார்ட்போன்களில் ஃபேஸ்புக், வாட்ஸ்அப் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற செயலிகள் பிரீ-இன்ஸ்டால் செய்யப்படாது என ஃபேஸ்புக் அறிவித்துள்ளது. சில ஸ்மார்ட்போன் நிறுவனங்கள் ஃபேஸ்புக் போன்று பிரபலமாக இருக்கும் செயலிகளை தங்களது சாதனங்களில் பிரீ-இன்ஸ்டால் செய்வதை வாடிக்கையாக கொண்டிருக்கின்றன.

பல்வேறு நாடுகளில் ஹூவாய் நிறுவன ஸ்மார்ட்போன்களில் ட்விட்டர் மற்றும் புக்கிங்.காம் போன்ற செயலிகள் பிரீ-இன்ஸ்டால் செய்து வழங்கப்படுகின்றன. இது குறித்து ட்விட்டர் மற்றும் புக்கிங் ஹோல்டிங்ஸ் சார்பில் எவ்வித தகவலும் வழங்கப்படவில்லை.

ஃபேஸ்புக்கின் புதிய முடிவு ஹூவாய் நிறுவன விற்பனைக்கு பின்னடைவாக இருக்கும் என கூறப்படுகிறது. கடந்த ஆண்டு ஐரோப்பா மற்றும் ஆசியாவில் ஹூவாய் நிறுவன சாதனங்கள் அதிகளவு விற்பனையை பதிவு செய்த நிலையில், ஃபேஸ்புக்கின் புதிய அறிவிப்பு அந்நிறுவன வியாபாரத்தை பாதிக்கும் என கூறப்படுகிறது.

ஃபேஸ்புக் நிறுவன நடவடிக்கைக்கு ஹூவாய் சார்பில் இதுவரை எவ்வித தகவலும் வழங்கப்படவில்லை.

# இன்ஸ்டாகிராம் செயலியில் புதிய அறிமுகம்




ஃபேஸ்புக்கின் இன்ஸ்டாகிராம் செயலியில் புதிய அம்சங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. சமீபத்தில் மேம்பட்ட கேமரா யு.ஐ., புதிய ஸ்டிக்கர்கள், ஸ்டோரிக்களில் ஷாப்பிங் செய்யும் வசதி மற்றும் பல்வேறு அம்சங்கள் சேர்க்கப்பட்டன.

அந்த வரிசையில் தற்சமயம் புதிதாக டேட்டா சேவர் அம்சம் ஒன்றை இன்ஸ்டாகிராம் தனது பயனர்களுக்கு அறிமுகம் செய்துள்ளது. முதற்கட்டமாக இந்த அம்சம் இன்ஸ்டாகிராம் ஆண்ட்ராய்டு தளத்தில் மட்டும் வழங்கப்படுகிறது.

இன்ஸ்டாகிராமின் புதிய டேட்டா சேவர் அம்சம் பயனர் தேர்வு செய்யும் வரை புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பிரீ-லோடு மற்றும் டவுன்லோடு செய்யாது. பயனர் க்ளிக் செய்த பின் மட்டுமே அதிக ரெசல்யூஷன் கொண்ட வீடியோக்களை இன்ஸ்டாகிராம் டவுன்லோடு செய்யும்.

இதன் மூலம் பயனர்கள் பார்க்க விரும்பும் மீடியாக்களை அவர்களே தேர்வு செய்யும் வசதியை அவர்களுக்கு வழங்குகிறது. இவ்வாறு செய்யும் போது பயனர் டேட்டாவும் சேமிக்கப்படுகிறது. இதுதவிர இந்த அம்சத்தை ஆன் செய்ததும், மீடியா எதுவும் டவுன்லோடு ஆகாது என்பதால் புகைப்படங்கள் வேகமாக லோடு ஆகும்.

புதிய டேட்டா சேவர் அம்சத்தை இயக்க இன்ஸ்டாகிராம் செயலியின் செட்டிங்ஸ் -- அக்கவுண்ட் -- மொபைல் டேட்டா யூஸ் -- நெவர், வைபை ஒன்லி, செல்லுலார் + வைபை உள்ளிட்ட ஆப்ஷன்களில் நீங்கள் விரும்புவதை தேர்வு செய்யலாம்.

இணைய வேகம் குறைவாக இருக்கும் நாடுகளை குறிவைத்து புதிய அம்சம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. புதிய அம்சம் சர்வதேச அளவில் இன்ஸ்டாகிராம் வழங்க துவங்கி இருக்கும் நிலையில், வரும் நாட்களில் இந்த அம்சம் அனைவருக்கும் கிடைக்கும் என தெரிகிறது.

# மாற்றங்களுடன் வாட்ஸ்அப்

வாட்ஸ்அப் ஐ.ஓ.எஸ். பீட்டா பதிப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. வாட்ஸ்அப் 2.16.60.26 பதிப்பின் புதிய மாற்றங்கள் அடுத்த அதிகாரப்பூர்வ அப்டேட்டில் அனைவருக்கும் வழங்கப்படுகிறது. இந்த அப்டேட் 2.16.60 என அழைக்கப்படுகிறது.

புதிய ஐ.ஓ.எஸ். பதிப்பில் வாட்ஸ்அப் பயனர்கள் மற்றவர்களின் ப்ரோஃபைல் புகைப்படத்தை தரவிறக்கம் செய்ய முடியாதது குறிப்பிடத்தக்க மாற்றமாக இருக்கும். ஏற்கனவே வாட்ஸ்அப் ஆண்ட்ராய்டு பீட்டாவில் இந்த அம்சம் வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகவே தற்சமயம் ஐ.ஓ.எஸ். பதிப்பில் இந்த வசதி நீக்கப்பட்டு இருக்கிறது.

புதிய மாற்றங்களுக்கு பயனரின் தனியுரிமை தவிர வேறு ஏதும் காரணம் இருப்பதாக தெரியவில்லை. தற்சமயம் வாட்ஸ்அப் க்ரூப்களில் மற்றவர்களின் ப்ரோஃபைல் புகைப்படத்தை தரவிறக்கம் செய்யும் வசதி வழங்கப்படுகிறது. இதுதவிர வாட்ஸ்அப் தனது போட்டோ ஆல்பம் தோற்றத்தை உருமாற்றம் செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. அதன்படி புதிய தோற்றத்தில் போட்டோ ஆல்பம் அதன் மொத்த டவுன்லோடு அளவுடன் இடம்பெற்றிருக்கும். புதிய அப்டேட்டிற்கு பின் பயனர்கள் தங்களது அக்கவுண்ட்டை அழிக்க முற்படும் போது தங்களின் மொபைல் நம்பரை மாற்ற வாட்ஸ்அப் பரிந்துரைக்கிறது. பெரும்பாலான பயனர்கள் புதிய நம்பர் கிடைத்ததும், பழைய அக்கவுண்ட்டை அழிக்க முற்படுவதால் வாட்ஸ்அப் இவ்வாறு செய்கிறது. இதுமட்டுமின்றி, வாய்ஸ் மெசேஜ்கள், வாய்ஸ் கால் உள்ளிட்ட அம்சங்களிலும் வாட்ஸ்அப் மாற்றங்களை மேற்கொண்டு வருகிறது. எதிர்கால அப்டேட்களில் இன்டராக்டிவ் பட்டன்களை சேர்க்கவும் டெவலப்பர்கள் பணியாற்றி வருகின்றனர். பெரும்பாலும் இந்த அம்சம் அனுப்பப்படும் மீடியா அல்லது குறுந்தகவல்களை சார்ந்து இயங்கும் என தெரிகிறது.

# புதிய அம்சங்களை அறிமுகம் செய்யும் கூகுள்




கூகுள் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் தனியுரிமையை பாதுகாக்க புதிய அம்சங்களை அறிமுகம் செய்வதில் தொடர்ந்து கவனம் செலுத்த இருப்பதாக அறிவித்துள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்களது ஆன்லைன் அனுபவத்தை தொடர்ந்து கட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும்.

தனியுரிமை ஆடம்பரமாக இருக்கக் கூடாது, அது உலகம் முழுக்க அனைவருக்கும் சமமாக கிடைக்கப்பட வேண்டும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில் இணையத்தில் பயனர்களின் தனியுரிமை பாதுகாப்புக்கு அதிகளவு அச்சுறுத்தல் இருந்து வருகிறது.

இந்நிலையில், கூகுளின் பரவலான சேவைகளில் சிறப்பான பிரைவசி செட்டிங் மற்றும் கண்ட்ரோல்களை அறிமுகம் செய்ய தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். இதனை சரியாக செயல்படுத்தும் நோக்கில் சரியான வகையில் முதலீடு செய்து வருகிறோம். தொடர்ந்து எங்களது சேவைகளில் புதுமை மற்றும் பயனர்களின் ஆன்லைன் அனுபவத்தை கட்டுக்குள் வைத்துக் கொள்ள மேம்பட்ட அம்சங்களை வழங்குவோம், என கூகுள் நிறுவனத்தின் தலைமை பாதுகாப்பு அலுவலர் கெய்த் என்ரைட் தெரிவித்தார்.

உலகம் முழுக்க இருக்கும் எங்களது வாடிக்கையாளர்கள் கூகுளின் இலவச மற்றும் கட்டண சேவைகளை பயன்படுத்துவோர் சமளவில் தனியுரிமையை பெற வேண்டும், கூகுள் இதனை சரியாக வழங்கவே முயற்சிக்கிறது,

புதிய அம்சங்களில் பல்வேறு சேவைகள் மற்றும் பொருட்களில் கூகுள் அக்கவுண்ட் பயன்படுத்தும் போது ஒரே க்ளிக் செய்து அவற்றை இயக்கும் வசதி, சர்ச் மற்றும் மேப்ஸ் என பல்வேறு சேவைகளில் இன்காக்னிட்டோ மோட் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வந்துவிட்டது ஹோலோகிராம் கணினி



புதிய பொருட்களை வடிவமைப்பது முதல், கணினி விளையாட்டுகள் வரை பலவற்றுக்கும், இப்போது ஹோலோகிராம் எனப்படும்முப்பரிமாண பிம்பத் தொழில்நுட்பம் பயன்படத்துவங்கி உள்ளது.

இந்நிலையில், லுக்கிங் கிளாஸ் பேக்டரி என்ற நிறுவனம் முதல் முறையாக ஹோலோகிராம் திரை கொண்ட பிரத்யேக கணினியை அண்மையில் அறிமுகப்படுத்தி உள்ளது. லுக்கிங் கிளாஸ் புரோ மருத்துவம், பொறியியல் வடிவமைப்பு, கணினி விளையாட்டு உள்ளிட்ட பல துறையினருக்கு, இப்படி ஒரு கணினி மிகவும் தேவையாக இருப்பதாக, இதை வெளியிட்ட அந்நிறுவனத்தின் அதிகாரிகள் ஊடகங்களிடம் தெரிவித்து உள்ளனர்.

இன்டெல் என்.யு.சி.,சில்லை அடிப்படையாகக் கொண்ட லுக்கிங் கிளாஸ் புரோ கணினியில், ஒரு பெரிய திரையும், பக்கவாட்டுத் திரையும் உள்ளன. திரையில் முப்பரிமாணத்தில் தெரியும் ஹோலோகிராம் உருவங்களை, 360 டிகிரி கோணத்திலும் சுழற்றிப் பார்ப்பது போன்ற கட்டுப்பாடுகளை, பக்கவாட்டில் உள்ள சிறிய திரை மூலம் செய்ய முடியும்.இவை தவிர, ஹோலோகிராம் வடிவங்களைக் கொண்ட பலவிதசெயலிகளையும், மென்பொருள்களையும் இந்தக் கணினியில் பயன்படுத்தலாம்.

# சாம்சங் கலக்ஸி நோட் 10



சாம்சங் நிறுவனம் தனது கேலக்ஸி நோட் 10 ஸ்மார்ட்போனினை ஆகஸ்டு 10 ஆம் தேதி அறிமுகம் செய்யலாம் என தகவல் வெளியாகியுள்ளது. தென் கொரியாவில் இருந்து வெளியாகும் தகவல்களின் படி சாம்சங் தனது புதிய ஃபிளாக்ஷிப் ஸ்மார்ட்போனினை இரு மாதங்களில் வெளியிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் கேலக்ஸி நோட் 10 ஸ்மார்ட்போனின் ரென்டர்கள் இணையத்தில் வெளியாகின. இதுதவிர சாம்சங் தனது கேலக்ஸி ஃபோல்டு ஸ்மார்ட்போனினை ஜூலை மாதத்தில் மீண்டும் வெளியிடலாம் என கூறப்படுகிறது. இதற்கென சாம்சங் தனி நிகழ்வுக்கு ஏற்பாடு செய்வதாக கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு கேலக்ஸி நோட் 9 ஸ்மார்ட்போன் ஆகஸ்டு 9 ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டு, ஆகஸ்டு 24 ஆம் தேதி விற்பனைக்கு வந்தது. இந்நிலையில், இந்த ஆண்டு கேலக்ஸி நோட் 10 ஸ்மார்ட்போன் ஆகஸ்டு 10 ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டு இதன் விற்பனை ஆகஸ்டு 25 ஆம் தேதி துவங்கும் என கூறப்படுகிறது.

இம்முறை கேலக்ஸி நோட் 10 ஸ்மார்ட்போன் இரண்டு வேரியண்ட்களில் அறிமுகம் செய்யப்படும் என கூறப்படுகிறது. இதன் ப்ரோ வேரியண்ட் பட்டன்கள் நீக்கப்பட்டு பிரெஷர் சென்சிட்டிவ் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் என தெரிகிறது. கேலக்ஸி நோட் 10 ஸ்மார்ட்போனின் இரு வேரியண்ட்களிலும் பிக்ஸ்பி பட்டன் நீக்கப்படும் என கூறப்படுகிறது.

# ஐபேட்களுக்கான பிரத்யேக இயங்குதளம்



அப்பிள் நிறுவனம் தனது ஐபேட் சாதனங்களுக்கென பிரத்யேகமாக ஐபேட் ஒ.எஸ். இயங்குதளத்தை அறிமுகம் செய்துள்ளது. ஐபேட் ஒ.எஸ். இயங்குதளத்தில் புதிய ஹோம் ஸ்கிரீன், மல்டி-டாஸ்கிங் ஜெஸ்ட்யூர்கள், மேம்பட்ட ஃபைல்ஸ் ஆப், சிறப்பான டெக்ஸ்ட் எடிட்டிங் அனுபவம் மற்றும் பல்வேறு வசதிகளை கொண்டிருக்கிறது.

சஃபாரியில் டெஸ்க்டாப் தர பிரவுசரிங் அனுபவம் ஐபேட் ஒ.எஸ். இயங்குதளத்தின் மற்றொரு சிறப்பம்சமாக இருக்கிறது. இவற்றுடன் டார்க் மோட், கஸ்டம் ஃபாண்ட்கள், ஃபுளோட்டிங் கீபோர்டு, ஸ்வைப் சார்ந்த டைப்பிங் உள்ளிட்டவையும் புதிய இயங்குதளத்தில் வழங்கப்பட்டுள்ளது.

ஐபேட் ஒ.எஸ். இன் ஹோம் ஸ்கிரீனில் விட்ஜெட்களை சேர்க்கும் வசதியுடன் அவற்றில் இருந்து விவரங்களை பார்க்கும் வசதியும் வழங்கப்படுகிறது. புதிய அம்சங்களுடன் டெக்ஸ்ட் எடிட்டிங் ஜெஸ்ட்யூர்கள் வழங்கப்பட்டுள்ளன. புதிய இயங்குதளத்தை பயன்படுத்தும் போது ஐபேடில் செயலிகளிடையே மாற இனி ஸ்லைடு ஓவர் செய்தாலே போதுமானது.

அப்பிள் பென்சில் மூலம் திரையின் மேல்புறம் ஸ்வைப் செய்தால் இணைய பக்கங்கள், தரவுகள் மற்றும் மின்னஞ்சல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும். புதிய ஐபேட் ஒ.எஸ். ஆப்பிள் பென்சில் சாதனத்திற்கு பல்வேறு புதிய வசதிகளை வழங்குகிறது.

ஐபேட் ஒ.எஸ். இயங்குதளத்தில் டார்க் மோட், கஸ்டம் ஃபாண்ட் சப்போர்ட், புதிய வடிவமைப்பில் போட்டோஸ் ஆப், மேம்பட்ட ஆப்பிள் மேப்ஸ், வேகமான ஃபேஸ் ஐ.டி. மற்றும் சிறிதளவு அப்டேட் பேக்கேஜ்கள் உள்ளிட்டவை வழங்கப்படுகிறது. புதிய ஐபேட் ஒ.எஸ். இயங்குதளத்தின் பீட்டா பதிப்பு அடுத்த மாதம் வெளியாக இருக்கிறது.

# பிரியாவிடை கொடுக்கும் பிளக்பெரி மெசஞ்சர்




பிளாக்பெரி நிறுவனத்தின் பி.பி.எம். (பிளாக்பெரி மெசஞ்சர்) சேவை இன்றுடன் (மே 31) நிறுத்தப்படுகிறது. இன்று நள்ளிரவு 11.59 மணிக்கு பின் பிளாக்பெரி மெசஞ்சர் செயலிக்கான வசதி முற்றிலும் நிறுத்தப்பட இருக்கிறது.

இன்று வரை நாங்கள் உருவாக்கியவைக்காக நாங்கள் பெருமை கொள்கிறோம். தொழில்நுட்ப துறை மிகவும் போட்டி நிறைந்ததாக இருக்கிறது. எங்களின் விடா முயற்சியிலும் பயனர்கள் மற்ற தளங்கள் வழங்கும் சேவைகளை பயன்படுத்த துவங்கிவிட்டனர். இதன் காரணமாக புதிய வாடிக்கையாளர்களை பெறுவது கடினமான ஒன்றாகிவிட்டது.

பிளாக்பெரி மெசஞ்சர் சேவைக்கு பிரியாவிடை கொடுப்பது எங்களுக்கு வருத்தமாக இருந்தாலும், இதனை கடந்து முன்னேற வேண்டிய நிலையில் இருக்கிறோம் என பிளாக்பெரி தனது அதிகாரப்பூர்வ வலைதளத்தில் பதிவிட்டுள்ளது.

பி.பி.எம்.இ. என அழைக்கப்படும் என்டர்பிரைஸ் எடிஷனை பயன்படுத்துவோர் தொடர்ந்து சேவையை இயக்க முடியும். இனியும் பி.பி.எம். சேவையை பயன்படுத்த விரும்புவோர் ஆண்ட்ராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ். தளங்களில் இருந்து என்டர்பிரைஸ் எடிஷனை டவுன்லோடு செய்து ஆறு மாதங்களுக்கு 2.50 டாலர்கள் கட்டணம் செலுத்தி பயன்படுத்தலாம்.

பி.பி.எம்.இ. சேவையிலும் முழுமையான என்க்ரிப்ஷன் வழங்கப்படுகிறது. இத்துடன் குறுந்தகவல்களை எடிட் செய்யும் வசதி, அனுப்பிய குறுந்தகவல்களை திரும்பப்பெறும் வசதி உள்ளிட்டவை வழங்கப்படுகிறது.

# மகிழ்ச்சியான தாய்மை!



### கர்ப்பத்துக்குத் தயாராதல்

பொதுவாக, பெண்ணின் உடலில் உள்ள கருமுட்டைகள், இயல்பான மாதவிலக்கு உள்ளவர்களுக்கு மாதவிலக்கு சுழற்சி நின்ற இரண்டாவது வாரத்தில் முதிர்ச்சி அடைகின்றன. மாதவிலக்கு சுழற்சி நின்ற முதல் ஐந்தாறு நாட்களும் மீண்டும் சுழற்சி ஏற்படுவதற்கு முன்பான ஐந்தாறு நாட்களும் உறவுகொள்ளும்போது கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது. ஆனால் இரண்டாவது வாரத்தில், குறிப்பாக மாதவிலக்கு சுழற்சி நின்ற 12ம் நாளில் தொடங்கி 18வது நாளுக்குள் உறவு கொள்ளும்போது கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது.

### உணவுமுறை

கர்ப்பம் தரிப்பதற்கு ஆரோக்கியமான உணவுப் பழக்கமும் வாழ்க்கைமுறையும் மிகவும் அவசியம். கார்போஹைட்ரேட், கொழுப்புச்சத்து, நார்ச்சத்து, நீர்ச்சத்து, வைட்டமின்கள், இரும்புச்சத்து உள்ளிட்ட தாதுஉப்புகள், நுண்ணூட்டச்சத்துகள், நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் என அனைத்தும் நிறைந்த சமச்சீர் உணவுகளை சரிவிகிதத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

காலை உணவை எந்தக் காரணத்தை முன்னிட்டும் தவிர்க்கக் கூடாது. இரவு முழுதும் உண்ணாமல் இருப்பதால், பசி உருவாகி உணவைச் செரிப்பதற்கான அமிலங்கள் தயார் நிலையில் இருக்கும். காலை உணவை தவிர்க்கும்போது, இவை செரிமானத்தை பாதிக்கும். அதே போல ஒவ்வொரு வேளை உணவையும் குறித்த நேரத்தில் உண்ண வேண்டியது அவசியம். அவசியம் எனில் ஓர் உணவியல் நிபுணரை ஆலோசித்து உங்களுக்கான பிரத்யேகமான டயட்டை சார்ட் ஒன்றை தயாரித்துக்கொண்டு அதைப் பின்பற்றலாம்.

### வாழ்க்கைமுறை

ஆரோக்கியமான வாழ்க்கைமுறையே சிக்கலற்ற குழந்தைப் பேறுக்கு அஸ்திவாரம். உடலை ஃபிட்டாக வைத்துக்கொள்ள நடைப்பயிற்சி, உடற்பயிற்சி, ஜாக்கிங் போன்றவற்றில் ஈடுபடலாம். தினமும் காலையில் எழுந்து அரை மணி நேரம் நடைப்பயிற்சி செய்யும்போது ஓசோனைஸ்டு காற்று உடலுக்குக் கிடைக்கிறது. இது மனதையும் உடலையும் உற்சாகமாக வைத்துக்கொள்ள உதவும். மேலும் சூரிய ஒளியில் உள்ள வைட்டமின் டி எலும்புகளை வலுவாக்கும்.

டென்ஷன், பதற்றம், மனச்சோர்வற்ற மனநிலை மிகவும் முக்கியம். மனதுக்கு இனிமையான விஷயங்களைப் பேசுவது, கேட்பது மனதை உற்சாகமாக வைத்துக்கொள்வது முக்கியம். டி.வி. சீரியல் பார்ப்பது, ஃபேஸ்புக் உள்ளிட்ட சமூக வளைத்தளங்களில் எந்நேரமும் உழன்றுகொண்டிருப்பது போன்ற மனதைப் பாதிக்கும் விஷயங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. நல்ல புத்தகங்களை வாசிப்பது, இசை கேட்பது போன்றவை மனதை ரிலாக்ஸாக வைத்துக்கொள்ள உதவும். மேலும், இரவு உணவு உண்டதும் சிறிது நேரம் கழித்து

### படுக்கைக்குச் செல்வது நல்லது.

படுக்கைக்குச் செல்லும் ஒரு மணி நேரத்துக்கு முன்பே டி.வி, கம்ப்யூட்டர், மொபைல் உள்ளிட்ட அனைத்து வகையான எலெக்ட்ரானிக் ஒளிர்திரைகள் பயன்படுத்துவதையும் தவிர்த்துவிடுங்கள். இவை கண் நரம்புகளைப் பாதித்து ஆழமான தூக்கத்தைக் கெடுக்கின்றன. ஆழ்ந்த உறக்கத்தில்தான் மெலட்டோனின் என்ற உடலுக்கு முக்கியமான ஹார்மோன் சுரக்கிறது. மேலும், உடலின் வளர்சிதைமாற்றப் பணிகள் நடப்பதும் உறக்கத்தில்தான். உறக்கம் கெடும்போது உடல் நலமும் கெடுகிறது. எனவே, உறக்கத்தைக் கெடுக்கும் விஷயங்களைத் தவிர்க்க வேண்டியது மிகவும் அவசியம். தினமும் பகலில் ஒரு மணி நேரத் தூக்கமும் இரவில் எட்டு மணி நேரத் தூக்கமும் அவசியம்.

### ஃபோலிக் ஆசிட்

கர்ப்பத்துக்குத் திட்டமிடும் பெண்கள் மகப்பேறு மருத்துவரை அணுகி, ஃபோலிக் ஆசிட் மாத்திரைகளையும் இரும்புச்சத்து மாத்திரைகளையும் எடுத்துக்கொள்வது மிகவும் அவசியம். இன்று பல பெண்களுக்கு வைட்டமின் பி குறைவாக உள்ளது. இதனால், உடல் பலவீனம், ரத்தசோகை ஏற்படுவதோடு, மகப்பேறு பிரச்னைகளும் உருவாகின்றன. குறிப்பாக, கரு உண்டாவதில் பிரச்னை, கருத் தங்கலில் பிரச்னை, குழந்தை வளர்ச்சியின்மை, குறைபாடுடைய குழந்தை பிறப்பு போன்ற சிக்கல்களை பல பெண்கள் எதிர்கொள்கிறார்கள்.

இந்தப் பிரச்னைகளை தவிர்க்கவே, மருத்துவர்கள் வைட்டமின் பி9 நிறைந்த ஃபோலிக் ஆசிட் மாத்திரைகளை கருவுற்ற பெண்களுக்கும், கருவுறப்போகும் பெண்களுக்கும் பரிந்துரைக்கிறார்கள். பொதுவாக, ஃபோலிக் ஆசிட் மாத்திரைகளை கர்ப்ப காலத்தில்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால், திருமணம் நிச்சயமான உடனேயே ஃபோலிக் ஆசிட் மாத்திரைகளை எடுத்துக்கொள்வது மிகவும் நல்லது. திருமணம் ஆன உடன் குழந்தை பெறும் திட்டம் இல்லை என்றால், குழந்தைப்பேறுக்குத் திட்டமிடத் தொடங்கும்போது எடுத்துக்கொள்ளத் தொடங்கலாம்.

### ஃபோலிக் ஆசிட் உள்ள உணவுகள்

பசலைக் கீரை, முருங்கைக் கீரை போன்ற அடர்பச்சைக் கீரைகள், பீன்ஸ், கேரட், பிரக்கோலி, எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி போன்ற சிட்ரஸ் பழங்கள், அவகடோ, திராட்சை, வேர்க்கடலை, பாதாம் போன்ற உணவுகளில் ஃபோலிக் அமிலம் நிறைந்துள்ளது.

# தலைக்கு எண்ணெய் அவசியமா?



எண்ணெய் தேய்ப்பதால் ஆகப்போவது ஒன்றும் இல்லை என்றும், எண்ணெய் தேய்ப்பது கூந்தல் வளர்ச்சிக்கு நல்லது என்றும் மாறுபட்ட கருத்துகள் உண்டு. இந்தக் குழப்பமெல்லாம் தேவையே இல்லை. எண்ணெய் தேய்ப்பது அவசியமே என்பதற்கான காரணங்களை அடுக்குகிறார் சருமநல மருத்துவரான ருக்மணி.

★ முடி உலர்வதைத் தவிர்த்து, பாதுகாப்பு கொடுத்து முடியை பலப்படுத்துகிறது எண்ணெய்.

★ தலையில் எண்ணெய் தேய்க்கும் பழக்கம் நம்மிடையே தொன்று தொட்டு இருந்து வருகிறது. பல ஆயிரம் ஆண்டுக்கு முன்பு இருந்த மொஹஞ்சதாரோ நாகரிகம் தொட்டு தலைக்கும், உடம்புக்கும் எண்ணெய் தேய்க்கும் பழக்கம் இருந்ததற்கான வரலாறு உள்ளது.

★ அன்றைய பெண்கள் கடுகு, பீலு எண்ணெய் தேய்த்ததாக கூறப்படுகிறது. தமிழகத்தில் பொதுவாக எல்லோரும் பயன்படுத்துவது தேங்காய் எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் ஆகும். இரண்டு எண்ணெய்களுமே தலைக்கு தேய்ப்பதற்கு சிறந்தவை என்பது நாம் பெருமைகொள்ளத்தக்க ஒன்று.




★ நல்லெண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய்களிலும் கால்சியம், மக்னீசியம், பொட்டாசியம் மற்றும் இரும்புச்சத்து உள்ளது. நல்லெண்ணெயில் உள்ள விட்டமின் E முடி சிதைவைத் தடுக்கிறது.

★ முடி செம்பட்டையாக உள்ளவர்கள் நல்லெண்ணெய் தேய்த்தால் செம்பட்டை குறைய வாய்ப்பு உள்ளது. தலை உலர்ந்து பொடுகு

உள்ளவர்களுக்கு எண்ணெய் தேய்த்தால் அரிப்பு குறையும்.

★ குளிப்பதற்கு முன் எண்ணெய் தேய்க்கும் பழக்கத்தை வாரம் ஒரு முறையும், குளித்த பிறகு எண்ணெய் தேய்க்கும் பழக்கத்தை அன்றாடமும் கடைபிடிக்கலாம்.

★ தலை முழுக்க எண்ணெய் படும்படி மட்டும் தேய்த்தால் போதும்; நனையும் அளவுக்கு அதிகம் தேய்க்க தேவையில்லை.

★ எண்ணெய் ஒவ்வாமை உள்ளவர்களும் தலையில் இயற்கையாக அதிக எண்ணெய் உள்ளவர்களும், எண்ணெய் தேய்ப்பதைத் தவிர்க்கலாம்.

★ இயற்கையாக கிடைக்கக்கூடிய நல்லெண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெயை பயன்படுத்தினாலே போதும். ஆலிவ் எண்ணெய் மற்றும் வெளிநாட்டு எண்ணெய்களை பயன்படுத்துவது தேவையில்லை.

★ செயற்கை ஹேர் ஆயில்களை மருத்துவர்களின் ஆலோசனைப்படி மட்டும்தான் பயன்படுத்த வேண்டும். விளம்பரத்தை பார்த்து வாங்கி பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

# வறண்ட சருமத்தை பாதுகாக்கும் ஆரஞ்சு



வறண்ட சருமத்தினர் தண்ணீர் அருந்துவது ஒரு வகையில் பலனளிக்கும் என்றாலும், ஆரஞ்சு மற்றும் தேன் ஆகியவை புரியும் மாய ஜாலம் அற்புதமானவை என்கிறார்கள் நிபுணர்கள்.

பலருக்கு உடம்பு முழுவதுமே வறண்டு காணப்படும். அதிலும் இயற்கையிலேயே வறண்ட சருமம் உடையவர்களுக்கு கேட்கவே வேண்டாம்.. முகம் அதிக அளவில் வறண்டு போய்விடுவதால், ஒருவித அசௌகரியத்தை அவர்கள் உணர்வார்கள்.

இத்தகையவர்களுக்காகவே கைகொடுக்கிறது ஆரஞ்சு பழமும், தேனும். வறண்ட சருமம் உடையவர்கள் மட்டுமல்லாது எண்ணெய் வடியும் முகத்தை கொண்டவர்களுக்கும் இந்த இரண்டும் அற்புத மாற்றத்தை ஏற்படுத்திவிடும்.

வைட்டமின் ஏ மற்றும் சி சத்துக்கள் அதிகம் நிறைந்த ஆரஞ்சு பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், மேனி மினு மினுப்படைவது உத்தரவாதமான ஒன்று என்கிறார்கள் அழகுக்கலை நிபுணர்களும், டயட்டீசன்களும்.

பொதுவாக மேனி வறண்டுபோகாமல் இருக்க வழக்கமாக கூறப்படும் ஆலோசனை, அதிக அளவில் தண்ணீர் அருந்துவது. அது ஒரு வகையில் பலனளிக்கும் என்றாலும், ஆரஞ்சு மற்றும் தேன் ஆகியவை புரியும் மாயஜாலம் அதி அற்புதமானவை என்கிறார்கள் நிபுணர்கள்.

ஆரஞ்சு பழ சுளைகளை உண்டுவிட்டு அதன் தோலை தூக்கி எறிந்துவிடாமல், அதனை காய வைத்து பவுடராக்கி தண்ணீருடன் குழைத்து முகம் மற்றும் கைகளில் தடவி, சிறிது நேரம் கழித்து கழுவினால் வறண்ட சருமம் போயே போச்!

அதேப்போன்று அரை மூடி எழுமிச்சை பழச்சாறில் ஒரு டம்ளர் சுடு நீரை கலந்து, அதனுடன் ஓரிரு ஸ்பூன் தேனை கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், மேனி மினு மினுப்படைவதோடு, உடம்பில் உள்ள தேவையற்ற சதைகள் குறைந்து உடம்பும் 'சிக்' கென்று இருக்கும்.

# பிரசவத்திற்கு பிறகு பெண்களிடம் ஏற்படும் மாற்றங்கள்

பெண்கள் வெளிப்படையாக பேசாதிருக்கும் விஷயங்கள் பல இருக்கின்றன. குழந்தை பிறந்த பிறகு தற்காலிகமாக மாதவிடாய் சுழற்சியில் சில மாற்றங்கள் தென்படலாம்.

குழந்தை பிறந்த பிறகு பெண்கள் வெளிப்படையாக பேசாதிருக்கும் விஷயங்கள் பலவன இருக்கின்றன. அதில், மாதவிடாயும் ஒன்று. குழந்தை பிறந்த பிறகு தற்காலிகமாக மாதவிடாய் சுழற்சியில் சில மாற்றங்கள் தென்படலாம்.

ஓரிரு மாதத்தில் இது சரியாகிவிடும். இல்லை என்றால் நீங்கள் மகப்பேறு மருத்துவரிடம் பரிசோதனை செய்துக் கொள்ள வேண்டியது அவசியம். கர்ப்பமான பிறகும், குழந்தை பிறந்த பிறகும் பெண்களின் உடலில் ஹார்மோன் மாற்றங்கள் ஏற்படும். இதனால், மாதவிடாய் சுழற்சியில் மற்றம் ஏற்பட வாய்புகள் உண்டு.

கர்ப்பம் தரித்த பிறகு மாதவிடாய் நிற்க வேண்டும் ஆயினும், 25% பெண்கள் மத்தியில் பெண்ணுறுப்பு வழியாக இரத்தப்போக்கு ஏற்படுகிறது. இது, கர்ப்பக் காலத்தின் ஆரம்பக் கட்டதிலும், இறுதிக் கட்டத்திலும் சிலருக்கு ஏற்படுகிறது.

கர்ப்பத்தின் முதல் 13 வாரங்களுக்குள் கர்ப்பப்பை வாய் மூலமாக இரத்தப்போக்கு ஏற்படுலாம். இது ஒருவேளை கருச்சிதைவு என்ற அச்சம் அளிக்கலாம். இல்லையேல் கருச்சிதைவாக கூட இருக்கலாம். இது 15 - 20% கருச்சிதைவிற்கான வாய்ப்பாக அமையலாம். எனவே, நீங்கள் ஆரம்பத்திலேயே மகப்பேறு மருத்துவரிடம் பரிசோதனை செய்துக் கொள்ளுங்கள்.

குழந்தை பிறந்த பிறகு தாய்பால் ஊட்டும் தாய்மார்களுக்கு, மாதவிடாய் சுழற்சியில் சில மாற்றங்கள், நாட்கள் தள்ளி போவது ஏற்படலாம். தாய் பால் ஊட்டும் ஆறு மாதங்கள் வரை இது இருக்கலாம். இதற்கு காரணம் அதிக அளவில் சுரக்கும் புரோலேக்ட்டின் எனும் ஹார்மோன் என கூறப்படுகிறது. இந்த புரோலேக்ட்டின் ஹார்மோன் தான் தாய் பால் சுரக்க காரணமாகும்.

தாய் பால் ஊட்டினாலும், ஊட்டாவிட்டாலும் இந்த மாதவிடாய் பிரச்சனை 4 - 8 வாரங்களுக்கு இருக்க தான் செய்யும். மேலும், தாய் பால் ஊட்டாமல் இருப்பது குழந்தையின் ஆரோக்கியத்திற்கு பாதகமாக அமையும்.

வெளிப்படையாக கூற வேண்டும் எனில், பிரசவத்திற்கு பிறகு மாதவிடாய் தள்ளி போவது அல்லது, ஓர் மாதம் வராமல் இருப்பது சாதாரணம். பிரசவத்திற்கு பிறகு மூன்று மாதங்கள் கழித்தும் மாதவிடாய் வராவிடில் மகப்பேறு மருத்துவரிடம் பரிசோதனை செய்துக் கொள்ளுங்கள்.

பிரசவம் முடிந்த 6 வாரங்கள் கழித்தும் இரத்தப்போக்கு ஏற்படுவது, இரத்தப்போக்கில் அடர்த்தியான கட்டிகள் போன்று வெளிப்படுவது போன்றவை ஏற்பட்டால் உடனே மருத்துவரை காண்பித்து சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

# கைக்குழந்தையுடன் பயணமா? கவனிக்க வேண்டியவை!



குழந்தை வளர்ப்பில் பெற்றோர் மிகக் கவனமாக இருக்க வேண்டும். குழந்தையுடன் உற்சாகமாகப் பயணத்தை அனுபவிக்க இந்த விஷயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

குடும்பமாக வெகேஷன் செல்ல பிளான் போடும்போது, அந்த வீட்டில் கைக்குழந்தை இருந்தால், திட்டம் தள்ளிவைக்கப்படும். அல்லது, குழந்தையுடன் சேர்த்து தாயும் அந்த லிஸ்டிலிருந்து நீக்கப்படுவார்கள். காரணம், குழந்தையுடன் சென்றால் ட்ரிப் சரியாக அமையாது; குழந்தையின் கம்ஃபர்ட் குறைந்துவிடும் என்ற அச்சம். உண்மையில் அது அவ்வளவு கடினமான காரியமே அல்ல. சில முன்னேற்பாடுகளைச் செய்தால், கைக்குழந்தையுடன் வெகேஷனை என்ஜாய் செய்யலாம். அதற்கான சில டிப்ஸ்...

1. வெகேஷன் ட்ரிப்பை கடைசி நிமிடத்தில் திட்டமிடாமல், ஒரு மாதத்துக்கு முன்பே திட்டமிடுங்கள். எங்கே செல்லப் போகிறோம்? எப்போது செல்லப்போகிறோம் என்று முடிவுசெய்து, டூர் செல்லும் இடங்களில் தங்குவதற்கான அறைகளை புக் செய்யுங்கள். ரயில் மற்றும் பேருந்துகளை முன்பதிவு செய்யுங்கள். குழந்தைக்கு ஏற்ற வகையில் முன்வரிசை இருக்கைகளாக இருக்கட்டும். காரில் செல்வதாக இருந்தால், செல்லும் வழியில் எங்கெல்லாம் குழந்தைக்கான பால் மற்றும் உணவை வாங்குவது என்று முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

2. டிராவல் செய்வதால் ஏற்படும் பருவ மாற்றங்கள் மற்றும் சூழல் மாற்றங்களினாலும் குழந்தைக்கு பாதிப்பு ஏற்படலாம். உதாரணமாக, சாப்பிடும் நேரம் மாறுபடும். முன்கூட்டியோ அல்லது தாமதமாகவோ பசி எடுக்கும். அதேபோல தூங்கும் நேரமும் மாறலாம். இவற்றை உணர்ந்து குழந்தையைக் கவனியுங்கள். உணவைத் திணிக்காமல் சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப செயல்படுங்கள்.

3. எப்போதும் பொம்மைகள் குழந்தைகளின் விருப்பம். குழந்தைகளைச் சமாளிக்க அவை பெரிதும் உதவும். எனவே, செல்லும் இடங்களில் புதிதாகப் பொம்மை வாங்குவதைவிட வீட்டில் குழந்தை விளையாடு பழக்கப்பட்ட பொம்மைகளை எடுத்துசெல்வது நல்லது.

4. எப்போதும் இரண்டு செட் டிரஸ் கூடுதலாக இருப்பது அவசியம். ஏனெனில், சூழ்நிலையைப் பொருத்து ஆடையை அடிக்கடி மாற்ற வேண்டியதிருக்கும். இரவு ஆடைகள், லைட் வெயிட் ஆடைகளைக் கூடுதலாக எடுத்துக்கொள்வது சிறப்பு.


5. டூர் செல்லும் இடத்தைக் குழந்தையின் உடல்நிலையைக் கருத்தில்கொண்டு முடிவு செய்ய வேண்டும். ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப்பிரதேசங்கள் குழந்தையின் உடலில் உடனடியாக மாற்றஹ்ட்தை ஏற்படுத்திவிடலாம். அதனால், குடும்ப மருத்துவரிடம் ஆலோசனை பெற்று தேவையான மருந்துகளை எடுத்துச் செல்லவும்.

6. கைக்குழந்தையுடன் பயணம் செய்யும்போது, லக்கேஜ் அதிகமாக இருப்பது இயல்பு. எனவே, கூடுதலாகப் பைகள் வைத்திருப்பது எமர்ஜென்ஸி நேரங்களில் உதவும். குழந்தைக்குத் தேவையான பொருள்களைத் தனியாக பேக்கிங் செய்வதன் மூலம் தேவையற்ற பதற்றத்தைத் தவிர்க்கலாம்.

7. புதிய இடத்தில் குழந்தைகள் இயல்பைவிட அதிகமாகக் கண் விழித்துச் சுற்றி நடக்கும் விஷயங்களைக் கவனிக்கும். இதனால், தூங்கும் நேரம் குறைந்து விரைவிலேயே சோர்ந்துவிடலாம். குழந்தையின் தூங்கும் நேரத்துக்கு ஏற்ப திட்டமிட்டு வெளியே செல்லுங்கள். சரியான நேரத்தில் அறைக்குத் திரும்பி தூங்கவையுங்கள்.

8. எந்த டூராக இருந்தாலும் செக் லிஸ்ட் மிகவும் அவசியமானது. பரபரப்பில் முக்கியமான பொருள்களை தவறவிடுவது இயல்பு. இதைத் தவிர்க்க, செக்லிஸ்ட் ஒன்றை தயாரியுங்கள். ஒவ்வோர் இடத்தைவிட்டுக் கிளம்பும் முன்பு அந்த லிஸ்ட்டைப் பார்த்து குழந்தைகளுக்குத் தேவையானவை (டயபர், ஃபீடிங் பாட்டில், டிஷ்யூ...) உள்ளனவா என சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

# நீர்க்கரடியைத் தெரியுமா?



நம்மால் 150 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் உயிர் வாழ முடியுமா? முடியவே முடியாது. கோடை காலத்தில் 40 டிகிரி செல்சியஸ் வெப்பத்தையே நம்மால் தாங்க முடிவதில்லை. ஆனால், ஒரு உயிரி 150 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் மிகச் சாதாரணமாக வாழ்கிறது. அது என்ன உயிரி?

நம்மால் ஜீரோ டிகிரி செல்சியஸுக்குக் கீழ் உள்ள குளிரைத் தாக்கு பிடிக்க முடியுமா? முடியவே முடியாது. உறைந்து போய்விடுவோம். ஆனால், ஒரு உயிரி மைனஸ் 200 டிகிரி செல்சியஸ் குட்டிக்கரணம் போட்டு விளையாடுகிறது. இது எந்த உயிரி?

அணு உலைக் கழிவு விபத்து ஏற்பட்டால் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமா? பத்து யூனிட் கதிரியக்கம் உடலில் பட்டாலே மரணம்தான். ஆனால், ஒரு உயிரி 5,000 யூனிட் கதிரியக்கத்தைக்கூட அசால்ட்டாக கடந்துசெல்கிறது. இது என்ன உயிரி?



வான் வெளியில் காற்றே இல்லாத இடத்தில் நம்மைக் கொண்டு போய் விட்டால் என்ன ஆகும்? சிறகடித்துப் பறக்க முடியுமா? சிறகொடிந்து விழுந்து விடுவோம். ஆனால் ஒரு உயிரி வான் வெளியில் காற்றே இல்லாத இடத்தில் பத்து நாட்கள் பயணம் செய்துவிட்டுப் பத்திரமாகத் திரும்பி வந்துவிட்டது. அட அப்படியா! இது என்ன உயிரி?

இது எல்லாமே ஒரே உயிரிதான், அதன் பெயர் நீர்க்கரடி. செல்லமாக 'பாசி பன்றிக்குட்டி' என்று சொல்வார்கள். உடனே அந்த உயிரியைப் பார்க்க வேண்டும் என்று ஆசையா? அப்படியெல்லாம் உடனே பார்க்க முடியாது. ஏனென்றால் அது ஒரு நுண்ணுயிரி. மைக்ரோஸ்கோப் உதவியுடன்தான் அந்த நீர்க்கரடியைப் பார்க்க முடியும். அரை மில்லி மீட்டர் அளவுக்குத்தான் வளரும். விதி விலக்காகச் சில நீர்க்கரடிகள் ஒன்றரை மில்லி மீட்டர் வரைகூட வளரும். அப்போதும் அதை வெறும் கண்களால் பார்க்க முடியாது.

1773-ம் ஆண்டு ஜெர்மன் நாட்டு விலங்கியல் அறிஞர் ஜோகன் ஆகஸ்ட் என்பவர் இந்த உயிரியைக் கண்டுபிடித்தார். 3 ஆண்டு கழித்து இத்தாலிய நாட்டைச் சேர்ந்த விலங்கியல் அறிஞர் 'லாசரே ஸ்பால்லன்ஸானி' இது நடந்து வருகிற அழகைப் பார்த்து விட்டு இதற்கு 'டார்டி கிரேட்' (ஞுச்ஞு ஞீடி ஞ்ஞுரச்ஞீனு) என்று பெயர் சூட்டினார். டார்டி கிரேட் என்றால் மெல்ல நடப்பவர் என்று அர்த்தம்

வெயில், மழை, பனி, புயல் மட்டுமல்ல தகிக்கும் எரிமலைகள், பனிபடர்ந்த மலைகள், ஆழ்கடல்கள், காற்றே இல்லா வான் வெளி என எல்லா இடங்களிலும் வாழும் தகவமைப்பை பெற்றது இந்த நீர்க்கரடி. உலகம் முழுவதும் இந்த நீர்க்கரடிகள் காணப்படுகின்றன. நம் நாட்டின் இமயமலையில் 6,000 மீட்டர் உயரத்தில் பனி உறைந்த பிரதேசத்தில் இவற்றால் நிம்மதியாக வாழ முடிகிறது.

இதே போல் ஆழ்கடலில் 4,000 மீட்டர் ஆழத்தில் இவை வாழ்கின்றன. ஒரு முறை ஓர் ஆராய்ச்சிக்காகச் சில நீர்க்கரடிகள் வான் வெளியில் வைத்துப் பார்த்தார்கள். பத்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் அந்த நீர்க்கரடிகளைப் பூமிக்கு எடுத்து வந்தபோது ஒரு நீர்க்கரடி கூட சாகவில்லை. இதனால்தான் இதற்கு 'வான் கரடி' என்ற பெயரும் வந்தது. இவற்றுக்கு 8 கால்கள், ஒவ்வொரு கால்களிலும் நான்கு முதல் எட்டு நகங்கள் வரை இருக்கும். இந்தக் கால்களைக் கொண்டு இது நடந்து வரும் காட்சி கரடி நடப்பது போலவே இருக்கும். அதனால்தான் பெயருடன் கரடியையும் ஒட்ட வைத்துவிட்டார்கள்.

இதன் சுவாசத்துக்கெனத் தனி உறுப்புகள் எதுவும் இல்லை. தன் உடல் அமைப்பு முறையையே இது சுவாசத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறது. இதன் உடலின் சில பகுதிகளில் உள்ள ரத்தக் குழிகளைப் பயன்படுத்திச் சுவாசம் எடுத்துக்கொள்கிறது. தன் உடம்பில் உள்ள நீரைப் பயன்படுத்தித் தன் உடலை விரிவடையவும் சுருங்கவும் செய்கிறது. பாசிகள் மீதும், சிறு சிறு நுண்ணுயிரிகள் மீதும் தன் உடம்பில் இருந்து சுரக்கும் திரவத்தைப் பரப்பி அதனை உணவாக்கிக் கொள்கிறது (இதனால் பாசி பன்றிக்குட்டி என்றும் அழைக்கிறார்கள்). உணவும் தண்ணீரும் இல்லாமல் 30 ஆண்டுகள் வரை இவற்றால் உயிர்வாழ முடியும். நீர்ச்சத்து ஒரு சதவீதத்திற்குக் கீழ் குறையும்போதுதான் அது மரணத்தைத் தழுவுகிறது.

எல்லாம் சரி, அது எப்படி எரிமலை, பனி பிரதேசங்கள் என எல்லா இடங்களிலும் வாழ முடிகிறது? உண்மையில் அறிவியல் அதிசயம்தான் இது.

அதிக வெப்பமான காலங்களில் இதன் உடலில் நீர்ச்சத்து 3 சதவீதத்துக்குக் கீழ் குறைந்துவிடும். அப்போதுகூட சுற்றுப் புறத்தில் இருந்து ஈரப்பதத்தை உறிஞ்சுக்கொள்ளும் அளவுக்கு இதன் செல்கள் சக்தி பெற்றிருக்கின்றன (நன்றாக வளர்ந்த நீர்க்கரடி யில் 40,000 செல்கள் வரை இருக்கும்). இந்த நீர்ச்சத்தைக் கொண்டு நீர்க்கரடிகள் மரணத்திலிருந்து தப்பி பிழைக்கின்றன.

கடும் வறட்சி, கடும் குளிர் என இரண்டு நிலைகளிலும் இது உயிர் வாழ மிக முக்கியமாக இரண்டு காரணங்கள் உள்ளன. நீர்க்கரடிகள் உட்கொள்ளும் பூஞ்சைகளில் இருந்து இரட்டைச் சர்க்கரை கிடைக்கிறது. இந்த இரட்டைச் சர்க்கரை நீர்க்கரடிகளின் சவ்வுகளைப் பத்திரமாகப் பாதுகாக்கிறது.

இந்த டிரெஹெலோஸ் (trehalose) இரட்டைச் சர்க்கரை உயிரினங்களில் மிக அரிதான விஷயம். நீர்க்கரடிகளில் மட்டுமே இதைப் பார்க்க முடியும். கதிரியக்கத்திலிருந்து நீர்க்கரடிகளைக் காப்பாற்றுவது அதன் மரபணு. நீர்க்கரடியின் மரபணுவில் மட்டும் டி-சப் (ஈ குக்க) என்ற விசேஷப் புரோட்டீன் உள்ளது. இந்தப் புரோட்டீன்தான் கதிரியக்கத்திலிருந்து கரடியைக் காப்பாற்றும் காவலன்.

என்ன ஒரு வித்தியாசமான உயிரி!

# மூளையில் சின்ன சின்ன மடிப்புகள் இருப்பது ஏன்?

மனித மூளையின் மேல் பகுதியில், ஏன் அத்தனை மடிப்புகள் இருக்கின்றன? இந்தக் கேள்வி, மூளை ஆராய்ச்சியாளர்களுக்கு பல ஆண்டு புதிராக இருந்தது. ஏன்? குழந்தை பிறக்கும்போது, மூளை மொழுக்கென்று, அதன் கன்னத்தைப் போல தான் இருக்கும். 20வது வாரத்தில் தான், மெல்ல மெல்ல மடிப்புகள் விழ ஆரம்பிக்கும்.



இந்த மடிப்புகள் விழுவது ஒன்றரை ஆண்டு வரை நீடிக்கும். சிறிய மண்டை ஓட்டுக்குள், அதிகளவு திறனுள்ள மூளையை வளர்க்க, இயற்கை செய்த ஏற்பாடு இது என்கின்றனர் விஞ்ஞானிகள். மூளையின் மேல் பரப்பளவு அதிகமாக இருந்தால், அதில் நியூரான்கள் என்ற தகவல் பதிவு அணுக்கள் அதிகமாக இருக்கும். இவை அதிகமாக இருந்தால், அறிவுத்திறனும், தகவல்களை அலசும் திறனும் அதிகமாக இருக்கும் என்று, விஞ்ஞானிகள் பல ஆண்டுகளுக்கு முன் கண்டறிந்தனர்.

கடந்த சில மாதங்களாக, ஹார்வர்டு பல்கலைக்கழக ஆய்வாளர்களும், பிரான்ஸ் மற்றும் பின்லாந்து ஆய்வாளர்களும், மூளை மடிப்பு விழும் விதத்தை, முப்பரிமாணத்தில் பதிவு செய்ய ஆரம்பித்தனர். அதற்கு, பிறந்த குழந்தையின் மூளையை சி.டி., ஸ்கேன் செய்து, பின் அந்த ஸ்கேனை, முப்பரிமாண அச்சு இயந்திரத்தில் கொடுத்து, குழந்தையின் மூளையை, முப்பரிமாண பிரதியாய் வார்த்து எடுத்தனர். இப்படியே வாரக்கணக்கில் செய்த போது, மடிப்புகள் படிப்படியாக அதிகரிப்பதை, அவர்களால் பதிவு செய்ய முடிந்தது. பின் அந்த, 3டி மாடலின் மேல், 'ஜெல்' போன்ற ஒரு பொருளை பூசி, அதை ஒரு திரவத்தில் போட்ட போது, மேலும் சில மடிப்புகள் உருவாகின.

'மிக எளிய இயற்பியல் விதி முறை மூலம் தான், மூளையின் மேற்பரப்பில் மடிப்புகள் விழுகின்றன என்ற முடிவுக்கு நாங்கள் வந்திருக்கிறோம்' என்கிறார், இந்த ஆய்வுக் குழுவைச் சேர்ந்தவரான லட்சுமிநாராயணன் மகாதேவன். இவர்களது ஆய்வு, மூளை சார்ந்த நோய்கள் உள்ளவர்களுக்கு பயன்படும்.




# பனிக்கட்டி வீடுகள்



சூரிய ஒளி பட்டவுடன் பனிக்கட்டி உருகும். அப்படி இருக்க, துருவப் பகுதிகளில் கட்டப்படும் பனி வீடுகள் மட்டும் எப்படி நீடிக்கின்றன? அதை நம்பி மனிதன் எப்படி தைரியமாக குடியிருக்கிறான்?

சூரியனின் கதிர்கள் பூமியின் மத்திய பகுதியை எட்டும்போது வெப்பம் அதிகமாக இருக்கும். ஆனால், சூரியக் கதிர்கள் சாய்வான கோணத்தில் துருவப் பகுதிகளை எட்டும்போது வெப்பம் இருப்பதில்லை. இதனால் தான் இரு துருவங்களும் உறை பனிப் பிரதேசங்களாகவே இருக்கின்றன. ஆனால், துருவத்தை எட்டும் சூரியக் கதிர்களின் பிரகாசத்திற்கு குறைச்சல் இல்லை. எங்கும் வெண் பனியாக இருக்கும் போது, அங்கு படும் சூரிய ஒளியின், 'பளீர்' பிரதிபலிப்பு கண்களை கூச வைக்கும். கறுப்புக் கண்ணாடி அணியாமல் எதையும் பார்க்க முடியாத நிலைகூட வருவதுண்டு.

பனி வீடுகளை, 'இக்லூ' என்று எஸ்கிமோக்கள் அழைக்கின்றனர். பனியை செங்கல் போல இறுக்கமாக வார்த்து எடுத்து, அடுக்கி, இக்லூவை உருவாக்குகின்றனர். அரைக்கோளம் போல இருக்கும் இக்லூவின் கூரை, கடும் பனிப் புயலையும் தாங்கும் தன்மை கொண்டது. அந்த வடிவத்திற்கு அத்தனை சக்தி உண்டு.

இக்லூவின் சுவர்கள் பனிக்கட்டியால் ஆனது என்றாலும், அது திடமாக இருப்பதால் வெளியே உள்ள குளிர், உள்ளே வராமல் தடுத்துவிடும். உள்ளே மனிதர்கள் இருக்கும்போது அவர்களது உடலின் உஷ்ணமும் வெளியே போகாது.

இதனால், எப்போதும் இக்லூவுக்குள், 32 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையை தக்க வைக்க முடியும். தொடர்ந்து பல நாட்கள் பனிப்புயல் வீசும்போது, இக்லூவுக்குள் போதிய உணவு இருந்தால், எந்தவித பாதிப்பும் இல்லாமல் தப்பிக்கலாம். புயல் நின்றதும் வெளியே வந்து, சூரியனுக்கு, 'ஹாய்' சொல்ல எஸ்கிமோக்களால் முடியும்.

இக்லூக்களுக்கு யாரும் பட்டா கேட்பதில்லை. ஏனெனில் அவை தற்காலிக வசிப்பிடங்களே. தவிர, வேட்டைத் தொழில் புரியும் எஸ்கிமோக்களில் பெரும்பாலானோர் நாடோடிகள்.

# நிலவில் விநோத உலோகம்!

பூமியைப் போலவே சந்திரனிலும், நிறைய உலோகங்கள் தாதுக்கள் உள்ளன. இதனால்தான், நிலாவில் சுரங்கத் தொழில் செய்ய, இப்போதே பல விண்வெளி அமைப்புகள் திட்டமிட்டு வருகின்றன.

நிலாவின் தென் துருவப் பகுதியில், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன், விண்கல் தாக்கியதால், 2,500 கி.மீ அளவுக்கு பெரும் பள்ளம் உள்ளது. இந்தப் பள்ளத்தாக்கில் ஒரு விநோதமான உலோகம் இருப்பதை விஞ்ஞானிகள் அண்மையில் கண்டறிந்துள்ளனர்.

நான்கு பில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலாவைத் தாக்கிய விண்கல்லின் மிச்சம் மீதி, நிலாவிற்குள் சில நூறு மைல்கள் வரை புதைந்திருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஒரு சில விஞ்ஞானிகள், அந்த விநோத உலோகத் திட்டு, இரும்பு-நிக்கல் கலவையாக இருக்கலாம் என்று கூறியுள்ளனர். வேறு சிலரோ, அவை ஆக்சைடு திட்டுக்கள் என்கின்றனர். நிலாவின் பரப்பில், ஈர்ப்பு விசை வேறுபாடுகளை வைத்து அமெரிக்க விஞ்ஞானிகள் இந்த உலோகத் தாது இருப்பதை கண்டுபிடித்துள்ளனர்.




# காற்றில்லாத சக்கரம் தயாராகிறது!

பிரபல டயர் நிறுவனமான மிச்செலின், ஜெனரல் மோட்டார்சி,ன் 'செவர்லே போல்ட்' என்ற மின்சார காருக்கு, புதிய வகை சக்கரங்களை அறிமுகப்படுத்தவுள்ளது.

வழக்கமான சக்கரத்திற்கு பயன்படும் ரப்பரில் தயாராகும் இந்த டயருக்கு, 'அப்டிஸ்'என்று மிச்செலின் பெயரிட்டுள்ளது. 'யுனீக் பங்க்சர்லெஸ் டயர் சிஸ்டம்' என்ற ஆங்கில வாக்கியத்தின் சுருக்கம்தான் 'அப்டிஸ்'. ஆனால், ரப்பரின் பயன்பாடு இதில் குறைவு. தவிர, வண்டி ஓடும்போதே டயர் வெடிக்கும் ஆபத்து இருக்காது. வண்டிகளில் ஸ்டெப்னி மாட்டத் தேவையில்லை என்பதால், வாகனத்தின் எடையும் சில கிலோக்கள் குறையும்.

# நன்கு மூச்சுவிட நினைவூட்டும் சாதனம்

தினமும் எட்டு மணி நேரம் அலுவலகத்திலும், அதற்கு இணையான நேரம் வாகனத்திலும், வீட்டிலும் நாம் உட்கார்ந்தே கிடக்கிறோம். அதுவும் சரியாக உட்காருகிறோமா என்றால் இல்லை. கூன் போட்டு உட்காருவது, உடலை நத்தை போல சுருக்கிக்கொள்வது என்று பல தவறுகளை நம்மையும் அறியாமல் செய்கிறோம். இப்படி உட்காருவதால் நமது உதரவிதானம் (டயப்ரம்) மற்றும் நுரையீரல், வயிறு போன்ற சுவாசத்திற்கு உதவும் உறுப்புகள் இயல்பாக விரிவடைந்து இயங்க முடிவதில்லை.

வகுப்பில், 'நிமிர்ந்து உட்கார்' என்று வாத்தியார் சொல்வதுபோல, அலுவலகத்தில் சொல்ல ஆளில்லை. இந்த இடத்தில்தான் வருகிறது 'பிராணா.' சிறிய வட்டு வடிவில் இருக்கும் இந்த சாதனத்தை இடுப்பில் கிளிப் போல மாட்டிக்கொண்டால், அது, நாம் உட்கார்ந்திருக்கும் தோரணை சரியில்லை என்றால் உடனே மொபைலுக்கு குறுஞ்செய்தி அனுப்பி நிமிர்ந்து உட்காரச் சொல்லும்.

நாம் நடக்கிறோம் என்றால் அதையும் உணர்ந்து, எவ்வளவு தூரம் நடக்கிறோம் என்பதை குறித்துக்கொள்ளும். இந்த தகவல்கள் தினமும் இதற்கென உள்ள செயலியில் பதிவாகி, நாம் ஒரு நாளைக்கு எத்தனை முறை நன்கு சுவாசித்தோம், நல்ல நிலையில் உட்கார்ந்திருந்தோம் என்பதை

பிராணாவும், அதன் செயலியும் நமக்கு தெரிவிக்கும்.பிராணாவை அணிந்துகொண்டால், மனம் அமைதியாகும் என்கிறார், அந்த நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் பால் ஆப்ரகாம்சன்.

காரணமறியாத பதற்றம், நாள்பட்ட வலிகள், இதய படபடப்பு போன்ற பலவற்றை நல்ல சுவாசத்தின் மூலம் வெல்லலாம் என்கிறது பிராணா. இதன் விலை, 10,150 ரூபாய். விலைதான் சற்று படபடப்பை தருகிறது. இப்போதைக்கு இன்டிகோகோ இணையதளத்தில், 6,000 ரூபாய்க்கு தள்ளுபடியில் விற்கின்றனர்.



## பெற்றோரே...

23 ஆம் பக்கத் தொடர்ச்சி

தினம் வரும்போது ஆசிரியர் ஏதேனும் கடிதம் கொடுத்தனுப்பிருக்கலாம் அல்லது டைரியில் குறித்துக்கொடுத்திருக்கலாம். அதில் குறிப்பிட்டுள்ளவற்றை நிவர்த்திச் செய்திருக்கிறீர்களா என்பதை செக் பண்ணுங்கள். ஒருவேளை உங்களின் பிள்ளை மறதியினால்கூட அதை உங்களிடம் காட்டாமல் இருந்திருக்கலாம். எனவே கவனம் தேவை.

6. பாத்ரூம்: பிள்ளையை நன்றாக சாப்பிட வைப்பதுபோலவே காலைக் கடன்களைக் கழித்திருக்கிறாரா என்பதையும் கவனிக்க வேண்டும். ஹோம் வொர்க் செய்யும் டென்ஷனில் அல்லது விளையாடிக்கொண்டோ பாத்ரூம் செல்லாமல் பள்ளிக்குப் புறப்பட்டு விட்டிருப்பார்கள். இது தவறு. எனவே பாத்ரூம் சென்றதை உறுதிப் படுத்திக்கொள்ள வெட்கப்படக் கூடாது.

7. மருந்து: உடலுக்குச் சரியில்லாமல் இருப்பது அல்லது தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்ளும் குழந்தை எனில் ஒருமுறைக்கு இருமுறை மருந்து எடுத்துக்கொண்டாரா என்று கேட்டு உறுதி செய்து கொள்ளவும். பள்ளிக்கு மருந்து எடுத்துச் செல்லும் நிலையில் இருந்தால் மறக்காமல் எடுத்து வைக்கவும்.

8. ஐடி கார்டு: பெரும்பாலான பிள்ளைகள் பள்ளியில் தலைகுனிந்து நிற்க ஐடி கார்டை மறந்துவிட்டு வருவதே காரணமாக இருக்கிறது. அதனால், ஐ.டி கார்டை மறக்காமல் எடுத்து வைக்கவும்.

9. பாக்கெட் மணி: பாக்கெட் மணி என்றவுடன் செலவுக்குப் பணம் கொடுப்பது அவ்வளவு முக்கியமா என நினைக்க வேண்டாம். பள்ளியில் சக மாணவர்கள் ஏதேனும் வாங்கிச் சாப்பிடும்போது உங்கள் பிள்ளை ஏக்கத்தோடு பார்க்கும் நிலை ஏற்படும். அதைத் தவிர்க்க அவசியம் குறைவான தொகை என்றாலும் மறக்காமல் கொடுங்கள்.

10. நேரம்: மேலே சொல்லியவற்றை எல்லாம் சரியான நேரத்தில் முடிப்பது எல்லாவற்றையும்விட முக்கியம். ஏனெனில் நேரம் தாமதமானால் எதையும் செக் பண்ணாமல் ஸ்கூல் வேனில் ஏற்றிவிட்டுவிடுவோம். அதன்பின் ஒவ்வொன்றுக்கும் உங்கள் பிள்ளை சிரமப்படுவர். எனவே சரியான நேரத்தில் பிள்ளை பள்ளிக்குத் தயார் செய்யும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வதே நல்லது.

பள்ளி விட்டு வரும் குழந்தைகளிடம் அன்றைய தினம் என்னவெல்லாம் நடந்தன என்பதைக் கேட்பதையும் ஒரு வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

## இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




இவ்வாரம் தர்ம, புண்ணிய பாவத்தில் புதன், ரவி, சனி, வெள்ளி சஞ்சாரம் செய்வதால் தர்ம, புண்ணிய கர்மங்களில் ஈடுபாடு, நோன்பு, விரதம், கோவில் தரிசனம் உண்டாகும். பிதா வழி உதவி, அனுகூலம் ஏற்படும். இல்லறம் நல்லறமாகும். புருஷன், மனைவி ஐக்கியம், புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். மாணவர் கல்வியில், ஊக்கமும் விடாமுயற்சியும் அடைவர்.




இவ்வாரம் அஷ்டமத்தில் புதன், ரவி, சனி, வெள்ளி சஞ்சரிப்பதால் ஆயுட் பலம் உண்டு. சத்துரு ஜெயம் ரோக நிவர்த்தி உண்டு. உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புது முதலீடுகளை தொடங்கலாம். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு நடைபெறும். மாணவர்கள் கல்வி, விளையாட்டுத்துறைகளில் புதிய உத்வேகம் கொள்வர். குடும்ப பெண்களின் இல்லறம் நல்லறமாகும்.




சப்தம , களத்திர பாவத்தில் சுபர் சஞ்சாரம் செய்வதால் நன்மையளிக்கும். களத்திர சுகம், இல்லறம் நல்லமாகும். புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். தொழில் விருத்தி, உயர்வு, வங்கி வசதிகள் உண்டாகும். ஈடுபடும் கருமகாரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு இவ்வாரம் ஏற்றம் உண்டு. பஞ்ச குரு சஞ்சாரத்தால் வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு கூடும்.




இவ்வாரம் சத்துரு பாவத்தில் சுபர்கள் சஞ்சரிப்பதால் சத்துரு வெற்றி, ரோக நிவர்த்தி, சிவில் வழக்கு விடயங்களில் வெற்றி ஏற்படும். கரும, காரியங்கள் யாவும் அனுகூலமாகும். தொழில் உயர்வு, விருத்தி உண்டு. உத்தியோகத்தர் சக ஊழியர்களின் உதவி, ஒத்துழைப்புகளைப் பெறுவதனால் வேலைப்பழு குறையும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றம் பெறுவர். விவசாயிகள் பண்ணைகளாலும் விலைப் பொருட்களை சந்தைப் படுத்தலாம்.




இவ்வாரம் உத்தியோகத்தர்க்கு சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். வேலைப்பழு குறையும். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் புது உத்வேகம் அடைந்து , எதிலும் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும், கொள் முதல்களையும் மட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணைகளில் கூலியாட்களின் மேலதிக உதவி, ஒத்துழைப்புகளை பெறுவர். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் சிரமத்தின் மத்தியில் நடைபெறும்.




தன பாவத்தில் குரு குஜன் சஞ்சாரத்தால் தன லாபம், பொருள் வரவுண்டு. வெளிநாட்டு நிதி வந்து சேரும். அந்நிய நாட்டு செய்திகள் நன்மையளிக்கும். வியாபாரிகளுக்கு வங்கி வசதிகள் மன நிறைவைத் தரும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கூட்டு வாணிபத்தையும் தொடங்கலாம். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் புத்திரர் உதவியுடன் நன்கு நடைபெறும் . ஆசிரியர் , மாணவர், உறவு வளரும்.




ஜென்மத்துச் செவ்வாய் உஷ்ண ரோகத்தை உண்டாக்கும். தேகாபிமானம் அவசியம். அல்லாவிடின் வைத்தியச் செலவுண்டாகும். வாகன, குடும்ப விருத்திகள் உண்டாகும். உத்தியோகப் பெண்கள் தம் பணிகளில் புது உத்வேகம் கொண்டு ஏற்றம் காண்பர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய இலாபமடைவர். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேலையில் கிடைக்கும். ஆசிரியர் மாணவர் உறவு வளரும்.




இவ்வாரம் ஏழரை நடுக்கூறு முடிந்து கடைக்கூறு ஆரம்பமாகின்றது. விரய வியாழ தோஷமும் உண்டு. குரு, சனிக்கு வாரம் தோறும் கிரக தோஷ நிவர்த்தி செய்தல் வேண்டும். வியாபாரிகள் புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு அரச மாணியம் கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் சிரமத்தின் மத்தியில் நடைபெறும். இவ்வாரம் ஆசிரியர், மாணவர்உறவு சீராக இருக்கும்.




இவ்வாரம் ஜென்ம ரவி சஞ்சாரம் செய்வதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. செய்தொழில் விருத்தி, இலாப சேமிப்பு ஏற்படும். உத்தியோகத்தர்க்கு சக ஊழியர்களின் உதவி, அனுகூலம் உண்டு. விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டுச்சி புழுக்களின் தொல்லைகளின் இருந்து பயிர் பாதுகாப்புகளை மேற்கொள்ளலாம். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயம் அளித்து இந்த வாரமும் திருமணப் பேச்சுக்கள் தொடரும்.




இவ்வாரம் ஜீவன பாவத்தில் குஜன், குரு சஞ்சாரம் செய்வதால் தொழில் மேன்மை, உயர்வு, விருத்தி உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமையும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு கூடும். விவசாயிகளுக்கு நவின முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளைப் பெருக்கலாம். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.




இவ்வாரம் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகனம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டு நற்செய்திகள் நன்மையளிக்கும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு அடைவர். உத்தியோக செல்வாக்கு உண்டாகும். வியாபாரிகள் விவசாயிகள் தத்தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர். பெண்கள் , மாணவர் இவ்வாரம் செளபாக்கியம் பெறுவர். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு நடைபெறும்.




அஷ்டமத்துக் குரு , குஜன் தோஷம் இவ்வாரம் உண்டு. ஜீவன , கர்ம ஸ்தானத்தில் ரவி இருப்பதால் தொழிலால் மேன்மை, உயர்வு விருத்தி கிட்டும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்டையும் ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற இலாப அடைவர். விவசாயப் பண்ணைகளின் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் சுமூகமாக இடம்பெறும். மாணவர் கல்வி , விளையாட்டுக்களில் சிறப்படைவர்.



## அரசமரத்தடி விநாயகரை வணங்குவது ஏன்?

அரசமரத்தடி நிழல் படிந்த நீரில் குளிப்பது உடல் நலத்திற்கு நல்லது. பெண்கள் அரச மரத்தை சுற்றி வரும் போது கிடைக்கும் காற்று பெண்களின் கர்ப்பப்பை குறைபாடுகளை நீக்கக் கூடியது.

எனவே கிராமங்களில் குளத்தங்கரையில் அரச மரத்தடியில் பிள்ளையார் வைத்திருக்கிறார்கள். கிராமத்தில் இருப்பவர்கள் குளத்தில் குளித்து விட்டு அரசமரத்தை சுற்றி பிள்ளையாரை வணங்கி செல்வதால் அவர்களுக்கு கர்ப்பப்பை குறைபாடுகள் பெரும்பாலும் வருவதில்லை.


## விநாயகர் உருவத்தின் விளக்கம்

யானைத்தலை, கழுத்துக்குக் கீழே மனித உடல், மிகப் பெரிய வயிறு, இடது பக்கம் நீண்ட தந்தம், வலது பக்கம் சிறிய தந்தம் ஆகியவை உள்ளன.

நீண்ட தந்தம் ஆண் தன்மையையும், சிறிய தந்தம் பெண் தன்மையையும் குறிக்கும். அதாவது ஆண், பெண் ஜீவராசிகள் அவருள் அடக்கம்.

யானை அக்திணைப் பொருள். மனிதர் உயர்திணை. ஆக, அக்திணை, உயர்திணை அனைத்தும் கலந்தவர்.

பெரும் வயிறை கொண்டதால் பூதங்களை உள்ளடக்கியவர். அவரே அனைத்தும் என்பதே இந்த தத்துவம்.




## மனமாற்றம் நிறைவான மகிழ்ச்சியை தரும்

ஜெபமும், நற்செயல்களும் இணைந்தால் நமது மனித வாழ்வு சிறக்கும். ஜெபியுங்கள் நீங்கள் கடவுளிடம் செல்வீர்கள். நற்செயல் செய்யுங்கள். கடவுள் உங்களை தேடி வருவார் என்றார் அன்னை தெரசா.

தீமையிலிருந்து விலகி நல்லவராம் கடவுளை நோக்கி திரும்புவதையும், ஒருவனின் நடத்தையிலும் முழு மனிதனில் உண்டாகும் மனமாற்றத்தை குறிக்கின்றது. இயேசுவின் பொதுப்பணி தொடக்கமே மனமாற்றத்தின் அழைப்பும், கடவுளின் அரசின் வருகையை பற்றியதாகதான் இருக்கின்றது. (மாற்கு 1,15)

அந்த மனமாற்றத்தை செயலில் காட்டிய விவிலிய மனிதர்களில் சக்கேயு என்பவரும் ஒருவர். அவரிடம் பதவி, புகழ், பணம், அரசியல், செல்வாக்கு அனைத்தும் இருந்தன. ஆனால் அவருக்குள் மகிழ்ச்சி இல்லை. உறவு என்று சொல்ல ஒருவரும் இல்லை. உள்ளத்தில் எப்போதும் ஒரு விரக்தியை உணர்ந்தார். ஆனால் இவரின் மனமாற்றமே இயேசுவை இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று என அறிவிக்க செய்தது.

மனம் மாறுகிறவர்களுக்கு மன்னிப்பும், மீட்பும் உண்டு என்பதையும், நிறைவான மனமாற்றம் நிலையான மகிழ்ச்சியை தருகிறது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. ஆனால் மனமாற்றம் என்பது செயலில் வெளிப்பட வேண்டும். ஜெபியுங்கள் நீங்கள் கடவுளிடம் செல்வீர்கள். நற்செயல் செய்யுங்கள். கடவுள் உங்களை தேடி வருவார் என்றார் அன்னை தெரசா.

ஜெபமும், நற்செயல்களும் இணைந்தால் நமது மனித வாழ்வு சிறக்கும். கடவுளின் இரக்கம் சிறப்பாக நம்மை தேடி வரும். தவக்காலத்தில் நமது வாழ்வை ஜெபத்தினாலும், நற்செயல்களினாலும் நிரப்புவோம். என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும், உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன் (யோவான் 15:11). எனவே தவக்காலத்தில் மனமாற்றம் பெற்று, பிறருக்கு செய்யும் நற்செயல்களால் இறை ஆசீர்பெறுவோம்.

## இன்ஷா அல்லாஹ் என்ற சொல்லின் பொருள்



'இன்ஷா அல்லாஹ்'- இறைவன் நாடினால் என்ற வார்த்தை இறைவன் மீது பெரும் நம்பிக்கை வைத்துச் சொல்லப்படுகிற பொருள் பொதிந்த வார்த்தையாகும்.

அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் கட்டளைகளை ஏற்றுச் செயல்படுவதே இஸ்லாம் மார்க்கத்தின் அடிப்படை கொள்கையாகும். இவை இன்றி ஈமானும் இல்லை; இஸ்லாமும் இல்லை.

இதையே இறைவன் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் வலியுறுத்திக் கூறுகின்றான்.

''அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர்கள் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டு (அல்லாஹ்வை) அஞ்சுவீர்களாயின் உங்களுக்கு மகத்தான (நற்)கூலியுண்டு''. (திருக்குர்ஆன்-3:179)

''நிச்சயமாக அல்லாஹ் இறையச்சம் உள்ளவர்களோடு இருக்கின்றான் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்'' (திருக்குர்ஆன்-9:123) -இப்படி எண்ணற்ற வசனங்கள் உள்ளன.

இறைவன் திருக்குர்ஆனில் மனிதர்களை, 'இறை நம்பிக்கையாளர்களே' என்றுதான் அழைக்கிறான். மனிதர்கள் இறை நம்பிக்கையோடும், இறையச்சத்தோடும் வாழ வேண்டும் என்பதே அவனுடைய ஆசையும், விருப்பமும்.

இஸ்லாம் மார்க்கத்தில் இறை நம்பிக்கையும், இறையச்சமும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போல பிரிக்க முடியாதவை. ரெயில் தண்டவாளங்களைப் போல இணை பிரியாதவை.

'வாழ்வையும், மரணத்தையும் அளிப்பவன் இறைவனே' என்பதை முஸ்லிம்கள் மனதார ஒப்புக் கொள்ள வேண்டும். 'அவனின்றி அணுவும் அசையாது' என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.

''உண்மையில் உயிரைக் கொடுப்பவனும், உயிரைப் பறிப்பவனும் அல்லாஹ்வே ஆவான்'' (திருக்குர்ஆன்-3:156)

''அவனே வாழ்வை அளிக்கின்றான். இன்னும் (அவனே) மரணிக்கச் செய்கின்றான். பின்னர் அவனிடமே நீங்கள் (மறுமையில்) திரும்பக் கொண்டு செல்லப்படுவீர்கள்'' (திருக்குர்ஆன்-10:56)

''அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த உயிரினமும் மரணிக்க முடியாது''. (திருக்குர்ஆன்-3:145)

## இயேசு பிரான் நிகழ்த்திய அற்புதம்

இறைமகன் இயேசு இம்மண்ணுலகில் அவதரித்து, பாவச்சேற்றில் உழன்று கொண்டிருக்கும் மக்களைக் காப்பதற்காகவும், தன்னை யார் என்று அடையாளப் படுத்துவதற்காகவும், வியப்படையத்தக்க செயல்களை செய்தார்.

அந்தக் காலத்தில் இயேசு பிரான் படகில் ஏறி மறுகரைக்குச் சென்று, தன் சொந்த ஊரை அடைந்தார். அப்பொழுது சிலர், முடக்குவாதம் கொண்ட ஒருவரைக் கட்டிலில் வைத்து அவரிடம் கொண்டு வந்தனர். இயேசு பிரான் அவர்களிடம் இருந்த நம்பிக்கையை நன்கு உணர்ந்து கொண்டார். முடக்குவாதம் கொண்டவரை நோக்கினார். 'மகனே! துணிவாக இரு. உன்னிடமுள்ள பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்று சொன்னார்.

அப்பொழுது அங்கிருந்த மறைநூல் அறிஞர்களில் சிலர், 'இவன் கடவுளைப் பழிக்கிறான்' என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டனர். அவர்களுடைய எண்ணங்களை இயேசு பெருமான் உணர்ந்து கொண்டார். பிறகு அவர்களை நோக்கினார். 'உங்கள் மனதில் தீமையானதைச் சிந்திப்பது ஏன்? உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சொல்வதா? எழுந்து நட என்பதா? எது எளிதானது? மண்ணுலகத்தில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்' என்று கூறினார்.

எனவே முடக்குவாதத்தில் கிடந்தவரை நோக்கி, 'நீ எழுந்து உன் கட்டிலைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குப் போ' என்றார். அவரும் எழுந்து அவரது வீட்டிற்குச் சென்றார். இதை நேரில் கண்ட மக்கள் கூட்டம் அச்சம் அடைந்தது. இத்தகைய அதிகாரத்தை மனிதருக்குக் கொடுத்த கடவுளைப் போற்றினர்; புகழ்ந்தனர்.


மத்தேயு எழுதிய இந்த நற்செய்தியை ஒருகணம் சிந்திப்போம். முதலில் ஒருவருக்கு நம்பிக்கை வர வேண்டும் என்ற கருத்து வெளிப்படுகிறது. நம்பிக்கைதான் வாழ்க்கை என்பதை உணர வேண்டும். இத்தகைய நம்பிக்கை, மனிதரை முன்னேற்றப்பாதையிலும், முயற்சியிலும் ஈடுபடுத்தும். நம்பிக்கையோடு ஒரு கூட்டம் இயேசு பிரானை நாடி வந்தது. அக்கூட்டத்தில் வந்த சிலர், எழுந்து நடக்க முடியாத, முடக்குவாதம் கொண்ட ஒருவரைக் கட்டிலில் கிடத்தி தூக்கி வந்தனர். அவர்களின் நம்பிக்கையை இயேசு பெருமான் உணர்ந்து கொண்டார்.

முடக்குவாதம் கொண்டவரை நோக்கி, அவர் முதன்முதலில் சொன்ன வார்த்தையைக் கவனிப்போம். 'மகனே! துணிவாக இரு' என்று அவருக்கு நம்பிக்கையை ஊட்டுகிறார். துணிச்சல் தேவை என்பது, இவ்வார்த்தையின் மூலம் வெளிப்படுகிறது. அடுத்து அவர், 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்றார். மக்கள் இதைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. மறைநூல் அறிஞர்களில் சிலர்தான், 'கடவுளையே இவன் பழிக்கிறான்' என்று வெளிப்படையாகச் சொல்லாமல், தங்களுக்குள்ளேயே சொல்லிக் கொண்டனர்.

இறைமகன் இயேசுதான், மனிதராக அவதரித்து இருக்கிறார் என்பதை உணரவில்லை. இதை உணர்ந்து கொண்ட இயேசு பிரான், அவர்களைப் பார்த்து, 'தீமையானதைச் சிந்திப்பது ஏன்?' என்ற வினாவைத் தொடுத்து விட்டு, 'எது எளிது?' என்ற கேள்வியைக் கேட்கிறார். 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சொல்வது எளிதானதா? எழுந்து நட என்று சொல்வது எளிதானதா?' என்ற ஒரு வினாவைத் தொடுத்துப் பேசுகிறார்.

'மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு' என்கிறார். 'நீ, உன் கட்டிலை எடுத்துக் கொண்டு நட' என்றும் கூறுகிறார். முடக்குவாதக்காரர் எழுந்தார். நடந்தார் என்ற நற்செய்தியை இதன் மூலம் அறிகிறோம்.

மக்கள் கூட்டம் இச்செயல்களைக் காண்கிறது. பயப்படுகிறது. ஏனென்றால் இச்செயல்களை இவர்கள் இதுவரைக் காணவில்லை.



மறைநூல் அறிஞர்களை விட மக்கள் கூட்டம், இயேசு பிரானின் வார்த்தைகளை நம்புகிறது. விசுவாசம் கொள்கிறது. இப்படி எவ்வளவோ அற்புதங்களை இயேசு பிரான், தன் தந்தையின் திருவுளப்படி செய்கிறார் என்ற செய்தியை அறிய முடிகிறது.

அலங்கார வார்த்தைகளில் மயங்கி தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டு, பாவச்சேற்றில் உழன்று கொண்டிராமல், நம்பிக்கை தரும் வார்த்தைகளைச் செவிமடுத்து நிறைவாழ்வு வாழ வேண்டும். நிறை வாழ்க்கையின் இறுதி நிலைதான் நித்திய வாழ்வு என்பது இயேசு பிரானின் போதனையின் வெளிப்பாடாக இருக்கிறது.

ஆலமரமாய் வேரூன்றி நின்ற தேவ குமாரனுக்கு, விழுதுகளாய் நின்று போதிக்க சீடர்களைத் தயார்ப்படுத்தினார். அவர்களை விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் வேரூன்ற வைத்து விழுது களாய் ஆக்க, அவர்களுக்கு நற்செய்திகளை அருளினார். அவ்வளவு நெருக்கமாக இருந்தும், அவரின் அன்பையும், அற்புதத்தையும் நேரிலே கண்டறிந்தும், யூதாசு என்னும் சீடர், அவரைக் காட்டிக் கொடுத்தார் என்பதும் ஒரு வரலாறுதான். அதனால்தான் வேறோர் இடத்தில் இயேசு பெருமான், தன் சீடரான தோமையாரிடம், 'கண்டும் விசுவாசிக்கிறவனை விட காணாமல் விசுவாசிப்பவன் பாக்கியவான்' என்ற ஒரு கருத்தை எடுத்துரைக்கிறார்.

அன்பும், சமாதானமும் இவ்வுலகில் நிலைத்திருக்க வேண்டுமானால், நாமும், அன்பை வளர்ப்பவர்களாகவும், சமாதானத்தில் வாழ்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதே, நற்செய்தி வாசகங்களில் இருந்து நம்மால் உணர முடிகிறது.

# கண்ணான கண்ணே..கண்ணான கண்ணே... என்தோளில் சாய வா!



சமூகத்தில் பொதுவாகவே விழுமியங்கள் வீழ்ச்சியடைந்து வருகின்றன. இதற்கான அடிப்படை காரணம் குடும்பங்களிலும் இதுவரை குடும்ப விழுமியங்கள் எனக் கருதப்பட்ட விழுமியங்களும் வீழ்ச்சியடைந்து வருவதாகும். மனித வாழ்க்கை இயந்திரமயமாகுதல், மனித விழுமியங்கள், பண்புகள் என்பற்றிற்கு பதிலாக Materialism என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பொருளாசை, தொலைக்காட்சி, கணினிகளின் மிதமிஞ்சிய பாவனை என்பவற்றால் மனித உறவுகளை வளர்த்துக் கொள்ளுவதற்கான சந்தர்ப்பம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்மை என்பன குடும்ப விழுமியங்களின் வீழ்ச்சியை துரிதப்படுத்தியுள்ளன.

தந்தை தாய், பிள்ளைகளுக்கிடையிலான உறவுகள் வேகமாக திரிபடைந்து வருகின்றது. ஓரிண்டு வயது குழந்தைகளின் கையில் கைதொலைபேசிகள் கொடுத்து இந்த சிறிய வயதிலேயே தங்கள் பிள்ளைகள் அவற்றை இயக்கும் திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள் என மற்றவர்களிடம் பெருமையடித்துக் கொள்ளும் பெரும்பாலான பெற்றோர்கள் அந்த பிஞ்சு வயதிலேயே பிள்ளையை மனித உறவில் இருந்து பிரித்து இயந்திர உலகத்திற்கு பலாத்காரமாக தள்ளும் கொடுமையை செய்கிறார்கள் என்பதைக் கூட உணர்ந்து கொள்ளாதவர்களாக இருப்பது பரிதாபத்துக்குரிய வியடமாகும். இவ்வாறு பிள்ளைகளுக்கு மனித உறவின் முக்கியத்துவத்தை உணரும் சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்யும் பெற்றார்கள் பிள்ளைகள் பத்துப் பதினைந்து வயதிலேயே தங்களை மதிக்காதவர்களாவும், தங்களை எடுத்தெறிந்து பேசுபவர்களாகவும் இருக்கிறார்கள் என கவலைப்படுவதை பார்க்கிறோம்.

பெருந்தோட்ட பகுதிகளில் மிகவும் இள வயது பெண், ஆண் பிள்ளைகள் தங்கள் தாய் தந்தையரை கைநீட்டி அடிக்கும் அளவுக்கு நிலமை உள்ளது என வருத்தப்படும் பெற்றார்கள் பெருமளவில் உள்ளார்கள். மனித உறவுகள் பாதிப்படைந்தால் பிள்ளைகள் பொறுப்பை உணராதவர்களாக இருக்கின்றனர். மறுபுறம் பெற்றார்களின் அதிலும் தந்தையரின் பொறுப்பற்ற நடத்தையும் செயல்படுகளும் குடும்பங்களை பாதிக்கின்றன.

இந்த பின்னனியில் ஜுன் 16ம் திகதி தந்தையர் தினம் கொண்டாடப்படுகிறது. இறைவனை தந்தையே, அப்பனே என்று அழைக்கும் வழக்கம் எல்லா மதங்களிலும் காணப்படுகிறது. இறைவனை போன்று தந்தை என்பவர் உயிரை உருவாக்குபவர், தாங்குபவர், பாதுகாப்பவர், போசிப்பவர், வழிநடத்துபவர், திருத்துபவர் என்ற பல்வேறு பொறுப்புக்களை கொண்டவராவார். இறைவனை போலவே ஒரு குடும்பத்திலும் ஒரு தந்தை குடும்பத்தை அன்பு செய்து , பாதுகாத்து, போசித்து, வழிநடத்தி, குடும்பத்தை முன்னேற்றும் பொறுப்புடையவர் ஆவார். எந்த குடும்பத்தில் தந்தை இவ்வாறான பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றுகிறாரோ அந்த குடும்பம் நிச்சயமாக வளம் பெற்று செழிக்கும். இதனால் ஒவ்வொரு தந்தையும் ஒரு படைபாளி (Evey father is a creator) என்ற கருத்தை அறிவாளிகள் வழியுறுத்துகிறார்கள். இவ்வாறான ஒரு தந்தை தனது பிள்ளைகளையும் சிறுவயது முதலே பொறுப்புள்ளவர்களாக வளாப்பதில் கவனம் செலுத்துவார். எந்த குடும்பத்தில் தந்தை மேற்கூறிய பொறுப்புக்களை நிறைவேற்றவில்லையோ அல்லது உதாசீனம் செய்கிறாரோ அந்த குடும்பத்தின வளர்ச்சியிலும் ,பிள்ளைகளின் முன்னேற்றத்திலும் பாதிப்புக்கள் ஏற்படும். பெருந்தோட்ட பகுதிகளில் தமது வருமானத்தின் குறிப்பிடத்தக்க பகுதியை மதுபாவனைக்கு செலவிடும் தந்தையரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது பொறுப்பற்ற தந்தையரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையே காட்டுகிறது. பல தந்தையர்கள் தோட்ட வேலை தவிர வேறு தொழில்கள் வருமானமீட்டும் முயற்சிகளில் ஈடுபட்டு அதிக வருமான தேடினாலும் அந்த வருமானத்தின் பெரும் பகுதி இவ்வாறான பொறுப்பற்ற செயல்களால் வீணடித்துவிட்டு கடன்காரர்களாக ஆகியிருக்கிறார்கள்.

பெருந்தோட்ட பகுதியை கடன் கலாச்சாரம் வேகமாக விழுங்கி வருகிறது. கடன் வழங்கும் நிர்வனங்கள் வகைதொகையின்றி பெருந்தோட்ட பகுதிகளில் பெருகியிருப்பது, வருட வட்டி மாத வட்டி என கடன் வழங்கி வந்த வங்கிகள் கூட கிழமை வட்டி, நாள் வட்டி என மனித வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் கடன் வாங்கும் நாளாக ஆக்குவதில் வெற்றிபெற்றிருப்பதன் காரணம் குடும்பங்களின் விசேடமாக தந்தைமாரின் பொறுப்பற்ற தனத்தின் பெருக்கத்தையே சுட்டிக்காட்டுகிறது.

பல தந்தையர்கள் தாங்கள் ஒரு படைப்பாளி என்பதை உணர்வுபூர்வமாக உணர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்வதால் குடும்பங்கள் முன்னேறி வருவதை காண்பது மகிழ்ச்சியளிக்கும் அதே வேளையில் பல்;வேறு காரணங்களால் வேறு பல தந்தையர்கள் தங்கள் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றாதவர்களாகவோ, அதனை உதாசினம் செய்பவர்களாகவோ இருந்தாலும்; தந்தையரின் பொறுப்புக்களை உரிய முறையில் அவர்களுக்கு உணர்த்தும் பொறுப்பு மனைவியருக்கும், பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் உள்ளது. குடும்ப நலன் கருதி மனைவியும் பிள்ளைகளும் தந்தையர்களை பொறுப்புள்ளவர்களாக மாற்ற உதவியும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டியது அவசியமானதாகும் என்ற கருத்தை சமூக மயமாக்க தந்தையர் தினம் பயன்படுத்தப்படும்.

ஒரு குடும்பத்தின் இரண்டு தூண்களாக இருப்பவர்கள் அன்னையும் தந்தையுமாவர். இருவருக்கும் வெவ்வேறு பொறுப்புக்களும்,கடமைகளும், இருந்தாலும் இருவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே குடும்பத்தை பாதுகாக்கவும் முன்னேற்றவும் முடியும். பிள்ளைகளை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வளர்க்க முடியும்.

இரட்டை பொறுப்பை ஏற்க வேண்டிய தந்தையர்கள் இதைவிட பெருந்தோட்ட பகுதியிலிருந்து பெருமளவிலான தாய்மார் வெளிநாடு சென்றுள்ள பின்னனியில் அக்குடும்பங்களிலிலுள்ள தந்தையர்கள், தாய் தந்தை ஆகிய இருவரினதும் இரட்டை பொறுப்புக்களை ஏற்க வேண்டிய நிலையில் உள்ளனர். உண்மையில் தனது மனைவியை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அனுப்பும் ஒரு தந்தை தாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் குடும்பத்தில் இந்த இரட்டை பொறுப்பை ஏற்றுக்கொண்டே தமது மனைவியை வெளிநாடு அனுப்புகிறார் என்பதே யதார்த்தமான நிலையாகும். ஆனால் இந்த விடயத்தில் தந்தைமார் தாம் கவனமாக ஏற்க வேண்டிய இரட்டை பொறுப்பை உணர்ந்து செயல்படாமல் இருப்பதால் குடும்ப நலன் கருதி எத்தனையோ தியாகங்கள் சிரமங்கள் மத்தியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பால் உழைக்கும் குடும்பங்கள் வளம் பெற்று முன்னேறுவதற்கு பதிலாக சிதறி சின்னாபின்னமடைகின்றன. தமது மனைவி குடும்பத்தோடு இருக்கும் போது தமது பொறுப்புகளை உணர்ந்து செயல்படும் பழக்கம் தந்தைமாரிடம் குறைவாக காணப்படும் பின்னணியில் மனைவி இல்லாத சூழலில் இரட்டை பொறுப்பை தாம் கட்டாயம் ஏற்றாக வேண்டும் என்ற உணர்வு பெரும்பாலான தந்யைருக்கு ஏற்படுவதில்லை. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்று தற்போது புலன் பெயர் அபிவிருத்தி பங்காளர் என அழைக்கப்படும் இவ்வாறான குடும்பங்களில் குடும்ப முன்னேற்ற கண்காணிப்பு அட்டையை என்னும் ஒரு புதிய யுக்தியை பயன்படுத்தி இரட்டை பொறுப்பை ஏற்க வேண்டிய அவசியத்தை அக் குடும்ப தந்தையருக்கு உணர்த்தியதன் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்ற பல குடும்பங்களில் இது வரை காணப்பட்ட அவல நிலையை ஓரளவு மாற்றுவதில் வெற்றி பெற்றுள்ளது. இதுவரை வெளிநாடு சென்று திரும்பிவரும் அன்னையர்கள் தங்கள் உழைப்பு வீணானது மட்டுமின்றி குடும்பமும் பாதிப்படைந்திருப்பதை கண்டு மனம் வெதும்பி துயரப்படும் நிலையே பொதுவாக காணப்பட்டது.



தங்கள் குடும்பங்களை சொந்தம் கொண்டாடும் தந்தையரே குடும்பத்தை தாங்கி தக்க வைத்து முன்னேற்ற பாதையில் நடத்துகிறார்கள். ஒரு புறம் குடும்பத்தை தாங்கும் தந்தையரின் கரங்களை பிள்ளைகளும், குடும்ப அங்கத்தவர்களும் கனப்படுத்தி, கௌரவப்படுத்த வேண்டும், மறுபுறம் தாங்கள் குடும்பத்தை தாங்கும் பொறுப்புடையவர்களாக தந்தைமார் இருப்பதால் அவர்கள் அந்த பொறுப்பை உணர்ந்து தங்கள் கரங்களை தாங்களே பலப்படுத்தும் வகையில் கௌரவத்துடன் நடந்து கொள்ளுவதை ஒவ்வொரு தந்தையும் உறுதி செய்ய வேண்டும். ஒவ்வொரு தந்தையும் ஒரு படைப்பாளி என்பதை ஒவ்;வொரு தந்தையும், ஒவ்வொரு பிள்ளையும் தெரிந்து , உணர்ந்து கொண்டு ஒருவர் ஒருவரை கனப்படுத்தும் நிலை உருவாக வேண்டும்.

பாடசாலைகள், சமய நிறுவனங்கள் ஆகியவையும் தந்தையர் தினத்தை கொண்டாடி பிள்ளைகள் மத்தியிலும், தந்தையர் மத்தியிலும் இது தொடர்பான விழுமியங்களை கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.





## பத்துமாதம் தாய் சுமக்க... பின் மொத்தமாய் நீ சுமக்க...

எத்தனை ஜென்மமோ
அத்தனை ஜென்மத்திலும்
தந்தை எனும் வரத்தில்
நீ எனக்கு வேண்டுமப்பா!

குழந்தையை போன்ற
உந்தன் புன்சிரிப்பை - நான்
பார்க்கும் நொடிகளெல்லாம்
யுகங்களாக வேண்டுமப்பா!

சின்னஞ்சிறு வயதிலும்
சிரித்தழும் காலத்திலும்
இன்றைய இந்த
இன்னத சூழலிலும் - என்
வாழ்வின் கதவுச் சாவி
என்றும் நீயேயப்பா!

என் பெயரை நீ சொல்லி
அழைக்கும் நொடிகளெல்லாம்
மறுபிறவி எடுத்து வந்தேன்
மகளாக நான் உன்னிடம்!


அப்பாவின் வாழ்வில் வந்த
அரிய பொருள் நானே
என்றும் சொல்வேன்
ஏறு போல் நானதை!

சொர்கமே என்னை
நெருங்கி வந்தாலும்
அதிலும் சொர்கம் - என்
அப்பாவின் காலடி மண்
என் நெற்றி நீறாவதே!

பத்து மாதம் தாய் சுமக்க
மீதி மொத்தமாக நீ சுமந்தாய்!

துயில் குழம்பி நான்
சிறுவயதில் சினந்தபோது
தூக்கம் விட்டு எழுந்திடுவார்
பால் கரைத்து தந்திடுவார்

இன்றுவரை நானவரை
அப்பா என்றழைத்தால்
அணைத்திடுவார் எனனை
அவர் அன்பிற்கு எல்லை ஏது!




ஆய அரிய கனியென
ஆய்ந்து விட்டாய் என்னை
சாயங்கால நேரத்தில்
தோய விடாய் என்னை
இத்தனை செய்து - நீ
பக்குவமாய் வளர்த்தாய்
என் அன்பு அப்பாவே

மாலை நேர நினைவில்
மனத்தில் மௌனமாக - ஒரு
மயக்க வினா - என்
அப்பா இவ்வுலகில்
உன்னையல்லாய் யாரப்பா?

**வர்ணிகா சிவபாலன்**

## தந்தை

என் வாழ்கை பற்றி
எனக்கு அறிய வைத்தாய்
நம் நட்பிற்கு நல்ல
இலக்கணமாய் திகழ்ந்தாய்
திறமையை ஊக்கவிக்கும்
சிறந்த ஆலோசகராய்
அமைந்தாய்
உன் அன்பினின் மூலம்
கடவுளின் சிறப்பை உணரச்
செய்தாய்
என் வெற்றிக்கு நீ ஒரு
சான்றாய் விளங்கினாய்
தோளின் மீது சாய்ந்து
இன்பத்தினை
பகிர வைத்தாய்
அன்பு எனும்
மந்திர சொல்லை
உணர வைத்தாய்
உன் வேர்வை சிந்தி என்
கண்ணீர் துளி விழாமல்
காத்தாய்
நீ கடந்து சென்ற பாதையில்
என்னை நடக்க செய்தாய்
நான் நடந்து செல்லும்
பாதைக்கு வழி நடத்தி
துணையாக இருந்தாய்
உன் மந்திர சொற்களால்
என்னை நல்ல மனிதனாய்
உருவாக்கினாய்!

# கடவுளின் கணக்கு புரிவதில்லை!



**தா**மரையின் திருமணம் நின்று போனது. எவ்வளவோ முயன்றும், மகளின் திருமணத்தை நடத்திப் பார்க்க முடியவில்லை. கதறி அழக்கூட திராணி இல்லை, சிவகாமிக்கு.

'விடும்மா... எதுக்கு அதையே நெனச்சு அழுதுகிட்டு கெடக்குற,'அம்மாவை சமாதானப்படுத்த முயன்றாள், தாமரை.

'மனசு ஆறவே மாட்டேங்குதுடி... எவ்வளவு நல்ல சம்பந்தம். அசல்னாலும் ரொம்பவும் பாந்தமான மனுஷங்கடி... இப்படி கைக்கு எட்டுனது, வாய்க்கு எட்டாம போயிடுச்சேடி.'

'ஆமா... நீ தான் அவங்களை மெச்சிக்கணும். பணமும், நகையும் இல்லைன்னதும், அடுத்த நிமிஷமே துண்டை உதறி தோள்ல போடுறாப்புல, நம் சம்பந்தத்தை உதறி தள்ளிட்டாங்களேம்மா.'

'ஆமா... நமக்கு நடந்தத சொன்னா, யார் தான் நம்புவாங்க... நம்ப தான் முடியுமா? பணங்காசு இல்லைன்னாலும் பரவாயில்ல... இருந்தும், அது நமக்கு இல்லைன்னு ஆயுடுச்சேடி. இந்த ஆத்தாமையை எங்க போய் சொல்றதுன்னே தெரியலையேடி.'

'சரி... விட்டுத் தொலைம்மா... நடந்துருச்சு, என்ன தான் பண்ணித் தொலைக்கிறது?'

'நாம யாருக்கு என்ன பாவம்டி செஞ்சோம்... நமக்கு ஏண்டி இப்படியெல்லாம் நடக்கணும். மறுபடியும் நாம எப்ப அவ்வளவு சம்பாதிச்சு, நகை நட்டுன்னு வாங்கி, உனக்கு கல்யாணம் பண்றது. நம் சக்திக்கு முடியற காரியமாடி?'

'எனக்கு கல்யாணம்ன்னு ஒண்ணு நடக்காட்டா போகுதும்மா... நான், உன்னை இழந்துடுவேனோன்னு பயமா இருக்கும்மா. கல்யாணம் தான் வாழ்க்கையா... இப்படியே சந்தோஷமா ஒருத்தருக்கொருத்தர் துணையா வாழ்ந்துட்டு போயிடலாம்... விடும்மா' விரக்தி வழிந்தோடியது, தாமரையின் வார்த்தைகளில்.

'கடவுள்ன்னு ஒருத்தர் இருந்தால், இப்படியெல்லாம் நடக்குமா, தாமரை. அது, வெறுங்கல்லு தான்கிறது வெட்ட வெளிச்சமாயிடுச்சு. அந்த கல்லுக்கு தான் எத்தனை பூஜை, புனஸ்காரங்கள், மாலை மரியாதைகள்... எல்லாம் வீண் செலவுகள் தான் இல்லையா?'

திரும்ப திரும்ப, தாமரையின் திருமணம் நின்று போன நிகழ்வை பற்றியே யோசித்து, அரற்றிக் கொண்டிருந்தாள், சிவகாமி.

இப்படி புலம்பியே, அம்மா பைத்தியமாகி விடுவாளோ என்று, பயம் வரத் துவங்கியது, தாமரைக்கு.

சென்னையில் பெருமழை பொழிந்து, வெள்ளம் பிரவகித்து, குடிசைகளையும், மாளிகைகளையும் வித்தியாசமில்லாமல் மூழ்கடித்தது. அந்த கருப்பு தினத்தில் தான், ஜெயசீலியின் குடும்பமும், சிவகாமியின் குடும்பமும் ஒருவருக்கொருவர் பரிச்சயமாகின.

ஒரு பள்ளியில் தங்க வைக்கப்பட்டு, பரஸ்பரம் இழப்புகள் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது தான், இருவரின் குடும்பங்களும், தாம்பரத்தை அடுத்த முடிச்சூரில், அடுத்தடுத்த தெருக்களில் வசிப்பது தெரிய வந்தது; மனதால் நெருக்கமாயினர்.

'பாருங்க... பக்கத்து பக்கத்து தெருக்கள்ல பல ஆண்டுகளா வாழ்ந்திருக்கிறோம்... ஆனாலும், நமக்குள்ள இது வரைக்கும் பழக்கமே இல்ல...'என, வருந்தினாள், ஜெயசீலி.

'அதான் பட்டணம். இங்க, பக்கத்து பக்கத்து வீடுகள்ல வாழ்றவங்களே கூட பழகறதில்ல தெரியுமா... அடுக்குமாடி குடியிருப்பில், நானே பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கேன், மேடம்...' என்று அவளை சமாதானப்படுத்தினாள், சிவகாமி.

'நாமெல்லாம் ஒண்ணா பழகிக்கிறதுக்கு, அவ்வளவு பெரிய வெள்ளமும், இழப்பும் வரவேண்டியிருக்கு. அதான் இங்க பெரிய காமெடி..' என்று சிரித்தாள், ஜெயசீலி.

ஜெயசீலியின் குடும்பத்தில், அவள் கணவன் மற்றும் அவர்களின் எட்டு வயது பெண், பிலோமினா என்று மூவர். சிவகாமியின் குடும்பத்திலும், அவள் மாமியார், கணவன் மற்றும் மகள் தாமரை என்று நால்வர் இருந்தனர். ஆனால், சிவகாமியின் மாமியார் வெள்ளத்தில் சிக்கி இறந்து போக, அவர்களின் குடும்பத்திலும் இப்போது மூவர் தான்.

உணவு, உடை, தண்ணீர் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் யாவும் தாராளமாக வினியோகிக்கப்பட்டாலும், ஜெயசீலியின் குடும்பத்தினரால், கூட்டத்தில் அடித்து பிடித்து அவற்றை வாங்க முடியவில்லை. அந்த சமயங்களில், அவர்களுக்கும் சேர்த்து, சிவகாமியின் குடும்பமே வாங்கி தந்ததில், அவர்களின் அன்பில் நெக்குருகிப் போயினர். எப்போதும் அவர்களுடனேயே இருந்தாள், பிலோமினா.

மழை நின்று, ஓரளவிற்கு வெள்ளம் வடிந்ததும், பள்ளிக்கூடங்களை துவங்க வேண்டுமென்று, அங்கிருந்த அனைவரையும் கிளம்ப கூறினர்.

அனைவரும் அவரவர்களின் இடங்களுக்கு திரும்பி போய் விட்டனர். சிவகாமியின் குடும்பம், வாடகைக்கு வசித்த காம்பவுண்டிற்கு போன போது, அங்கிருந்த ஓட்டு வீடுகள் மொத்தமும் இடிந்து தரைமட்டமாகிக் கிடந்தது.

'இப்போதைக்கு, என்னால் வீடுகளை புதிதாய் கட்டி கொடுக்க முடியாது..' என்று, வீட்டு சொந்தக்காரர் கூறவும், எங்கு போவது என, மலைத்து நின்றனர்.

இந்த தகவல், ஜெயசீலியின் கவனத்திற்கு வந்தது. அடுத்த நிமிஷமே, அவர்களை தேடி போய், தங்கள் வீட்டிற்கே அழைத்து, தங்க வைத்துக் கொண்டாள்.

ஜெயசீலியின் கட்டடத்திற்கு வெள்ளத்தில், பெரிய பாதிப்பில்லை என்றாலும், வீட்டினுள்ளே எல்லாமே தண்ணீரில் உப்பி தாறுமாறாக கிடந்தன. பாம்பு, தேள் என, விஷ ஜந்துகளும் இருந்தன. எல்லாவற்றையும் அப்புறப்படுத்துவதற்கு, சிவகாமியின் குடும்பம் உதவியது.

இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப, சில நாட்கள் தேவைப்பட்டன. வீட்டின் மாடியில் இருந்த படுக்கை அறையை, சிவகாமியின் குடும்பத்தினர், தற்காலிகமாக உபயோகப்படுத்திக் கொண்டனர். இரண்டு குடும்பங்களுக்கும் சேர்த்து, சிவகாமியே சமைத்து கொடுக்க, சந்தோஷமாக சாப்பிட்டனர்.

ஜெயசீலியும், அவள் கணவனும், வேலைக்கு போவதால், சிவகாமியே அவர்களின் வீட்டு, சமையல் வேலைகளை செய்தாள், பிலோமினாவை பள்ளியில் விட்டு, அழைத்து வருவது என்று பொறுப்பாய் கவனித்துக் கொள்ள, ஜெயசீலிக்கும், அவளை மிகவும் பிடித்து போனது.

ஒரு நாள், சிவகாமியின் கணவன், குடித்து வந்து, மனைவி, மகளுடன் ரகளை பண்ணிக் கொண்டிருந்தார்.

ஜெயசீலியின் கணவர், மாடிக்கு போய் விசாரிக்கவும்,'என் பொண்டாட்டிய, நான் என்ன வேணா பண்ணுவேன்... நீ யாருடா அதை பத்தி கேட்குறதுக்கு... நீ அவளுகளை வச்சிருக்கியா?' என்று எகிறினார்.

போலீசுக்கு அவர் போன் செய்ய, சிவகாமியின் கணவனை போலீசார் கைது செய்தனர்.

அடுத்த நாளே, காவல் நிலையத்திற்கு போய், சிவகாமியின் கணவனை மீட்டு வந்தார், ஜெயசீலியின் கணவர்.

அதன்பின், அவளது கணவன், குடிப்பதை குறைத்துக் கொண்டார். எப்போதாவது வேலை முடிந்து வரும்போது, குடித்தாலும், பூனை மாதிரி வீட்டிற்குள் சென்று, அமைதியாக படுத்துக் கொள்வார்.

தாமரையும் அங்கிருந்தபடியே, ஆயத்த ஆடை நிறுவனத்தில் வேலைக்கு போகத் துவங்கினாள். ஆனால், எவ்வளவு தேடியும் அவர்களுக்கு கட்டுப்படியாகும் வாடகையில் வீடு கிடைப்பது, சிரமமாக இருந்தது.

'பேசாம, நம் வீட்டு மொட்டை மாடியிலேயே நாலு சுவரை எழுப்பி, கூரைக்கு பதிலா சிமென்ட் சீட் அல்லது தகரம் போட்டு கொடுத்துடுப்பா... அவங்களும் இங்கேயே இருந்துட்டு போகட்டும்...' என்று கணவனிடம் சொன்னாள், ஜெயசீலி. உடனே, மேஸ்திரியை வரவழைத்து, எளிமையாய் வீட்டை கட்டி, சில நாட்களிலேயே சிவகாமியின் குடும்பம் அங்கு குடியேறியது.

வாடகை பற்றி பேச்சு வந்தபோது, 'அதெல்லாம் ஒண்ணும் தரவேணாம்... கர்த்தர் புண்ணியத்துல, எங்களுக்கு வசதி குறைச்சல் இல்லை...' என்று சொன்னதோடு, சிவகாமி செய்யும் வேலைகளுக்கு, மாதம் சிறு தொகையும் கொடுத்தாள்.

ஒருமுறை, ஜெயசீலியிடம், 'நான் ஒண்ணு கேட்டா கோவிச்சுக்க மாட்டீல்ல கண்ணு...'என்றாள், சிவகாமி.

'என்ன பீடிகை எல்லாம் பெருசா இருக்கு, தாமரை அம்மா...' என்றாள், ஜெயசீலி.

'ஒண்ணுமில்ல தாயி... உங்களை தேடி, உங்க சொந்தக்காரங்களோ, சரோட சொந்தக்காரங்களோ யாருமே வந்ததாவே தெரியல. நீங்களும் சொந்த ஊர் பக்கம் போறதே இல்லையே, அதான்...' என்றாள்.

'நாங்க காதலித்து, ஜாதி மாறி கல்யாணம் பண்ணிக்கிட்டதால, ரெண்டு பேரோட குடும்பத்துலயும் எங்கள ஏத்துக்கல...' என்று விட்டேத்தியாய் சிரித்தாள், ஜெயசீலி.

'கிறிஸ்துவ மதத்துல கூட, ஜாதி இருக்கா தாயி...' என்று, சிவகாமி, ஆச்சரியமாய் கேட்க, 'ஜாதி தான், நம் இந்தியர்களோட சாபக்கேடு, தாமரை அம்மா... நாட்டை விட்டு பொழைக்க போனாலும், மதம் மாறுனாலும், ஜாதியையும் தூக்கி சொமந்துகிட்டு தான் போறாங்க...'

'இந்த குழந்த முகத்த பார்த்தும் கூடவா, அவங்களுக்கு கோபம் தீரல?'

'அவங்க எல்லாம் ரொம்ப பிடிவாதமானவங்க. இவளோட தாத்தா, பாட்டியெல்லாம் திண்டுக்கல்லுக்கு பக்கத்துல இருக்குறாங்க. எங்களோடது ரொம்ப பெரிய குடும்பம். எனக்கு, ஐந்து அண்ணன்; மூன்று அக்கா... மனசுக்கு பிடிச்சவன காதலிச்சு, கல்யாணம் பண்றது அத்தனை பெரிய குத்தமா... எங்கள, வீட்டு படிய மிதிக்கக் கூடாதுன்னு துரத்திட்டாங்க...

'எங்கயாவது தற்செயலா பார்த்தாலும், மூஞ்சிய திருப்பிக்கிட்டு போயிடுறாங்க... இத்தனை பேரு இருந்தும், என் மகளுக்கு தான், உறவுன்னு சொல்லிக்க யாரும் இல்லாம போயிருச்சு... அத நெனச்சா தான் சில சமயங்கள்ல மனசுக்கு ரொம்பவும் கஷ்டமா இருக்கும், தாமரையம்மா...' என்று கூறி, கண்கலங்கினாள், ஜெயசீலி.

ஒருமுறை, துணி பொட்டலத்தை கொடுத்து,'இதை நீ கொஞ்சம் பத்திரமா வச்சுருந்து, நான் கேட்கும்போது குடுக்கிறியா தாயி...' என்றாள், சிவகாமி.

என்னவென்று பிரித்து பார்க்க, அதிர்ந்து போனாள், ஜெயசீலி.

அவ்வளவும் பணம். இரண்டு லட்சத்திற்கு மேலிருந்தது.

'தாமரை சம்பாதிக்குறத வச்சு, சீட்டு கட்டிகிட்டு வந்தேன். கடைசி வரைக்கும் சீட்டை எடுக்காததால, இன்னிக்கு மொத்தமா குடுத்தாங்க... இதை வச்சுதான் இவளுக்கு கல்யாணம் பண்ணணும்... வீட்ல வச்சிருக்க பயமா இருக்கு; என் புருஷன் மோப்பம் புடிச்சிருச்சுன்னா, எடுத்துட்டு போயி குடிச்சே அழிச்சிட்டு வந்துடும் அதான்...' என்றாள், சிவகாமி.

'வங்கி கணக்கு துவங்கி, அதில் போட்டு வைக்கலாம்...'என்று ஜெயசீலி சொன்னதை, ஏற்கவில்லை, சிவகாமி.

'அது ஒரு சள்ளை பிடிச்ச வேலை தாயி... அப்பப்ப வேலையக் கெடுத்திடும். அதனால, நீயே பத்திரமா வச்சிருந்து, நான் கேட்குறப்ப குடு தாயி போதும்,' என்று சொல்லி விட்டாள்.

அவர்களின் பணத்தை ஜெயசீலி, தன் வங்கி கணக்கிலேயே, வைப்பு நிதியில் போட்டு வைத்திருந்தாள். இரண்டு ஆண்டுகளை தாண்டி, வைப்பு நிதியில் போட்ட பணம், வட்டியுடன் மிக மெதுவாய் வளர்ந்து கொண்டிருந்தது.

திடீரென்று ஒருநாள், ஜெயசீலியிடம், 'தாமரைக்கு கல்யாணம் கூடி வருதும்மா... உன்கிட்ட குடுத்து வச்சிருக்கிற பணத்துல நகை வாங்கி குடுக்குறியா தாயி...' என்றாள். இருவரையும் நகை கடைக்கு அழைத்து போய், அவர்களுக்கு பிடித்த நகைகள் வாங்கி கொடுத்தாள். 5,000 ரூபாய் குறைந்த போதும், அந்த தொகையை செலுத்தினாள், ஜெயசீலி.

சிவகாமி மறுத்த போது, 'தாமரையின் கல்யாணத்திற்கு, என் பங்களிப்பா இருக்கட்டும்மா...' என்றாள் வாஞ்சையாக.

வாங்கிய நகைகளை, ஒருமுறை மகளுக்கு போட்டு, அழகு பார்த்த, சிவகாமி, உடனே அவற்றை கழற்றி, ஜெயசீலியிடம் கொடுத்து, 'பத்திரமா வச்சுக்க தாயி... கல்யாணத்திற்கு முதல் நாள் குடு போதும்...' என்றாள்.

வீட்டில் வைத்திருந்தால் பாதுகாப்பில்லை என, அவர்களிடம் சொல்லி, வங்கி லாக்கரில் அவள் நகைகளுடன் சேர்த்து வைத்துக் கொண்டாள்.

கல்யாணத்திற்கு ஒரு வாரம் இருந்தது. ஜெயசீலியும், அவள் கணவனும், ஸ்கூட்டரில் அலுவலகம் போன போது, தண்ணீர் லாரி மோதிய விபத்தில், அந்த இடத்திலேயே இறந்து போயினர்.

செய்தியை கேட்டதும், சிவகாமியால் கதறி அழக்கூட முடியவில்லை. மகளின் கல்யாணம் நின்று போனதற்கு அழுவதா அல்லது ஜெயசீலியும், அவள் புருஷனும் இப்படி அநியாயமாக இறந்து போனதற்கு அழுவதா... என்ன ஜென்மம் இது...

ஜெயசீலியின் அலுவலகம் மூலம் அவர்களின் மரண செய்தியை அறிந்து, வேண்டா வெறுப்பாக வந்த, தாத்தாவும், பாட்டியும், பிலோமினாவை அழைத்து, ஊருக்கு போய் விட்டனர்.

ஜெயசீலியின் வங்கி, லாக்கரில் இவர்களின் நகைகள் இருப்பதாக சொன்னால், யார் தான் நம்புவர். கேட்டவர்கள் எல்லாம் கேலி செய்தனர். அதை நிரூபிக்க, அவர்களிடம் எந்த அத்தாட்சியும் இல்லை.

பிலோமினாவோ விபரம் தெரியாத சிறு பெண்; அவளுக்கு, இவர்களின் நகைகள், தன் அம்மாவின் லாக்கரில் பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை புரிந்துகொள்கிற வயது கூட இல்லை. இருவரும் இப்படி திடுதிப்பென்று இறந்து போவர் என்று, யார் தான் எதிர்பார்த்திருக்க முடியும்?

மாப்பிள்ளை வீட்டாரிடம், விஷயத்தை சொன்ன போது, 'இதையெல்லாம் எங்கள நம்ப சொல்றீயாக்கும்; போடுறதா சொன்னதே நொள்ளை, 15 பவுன்; அதையும் போட முடியாதுங்குறதுக்கு இப்படி ஒரு நொண்டிக் காரணத்தை இட்டுக்கட்டி சொல்றீயாக்கும்...' என்றனர்.

எவ்வளவு எடுத்துச் சொல்லியும், நம்பாமல், திருமணத்தை நிறுத்தி விட்டனர்.

பிலோமினாவின் தாத்தா குடும்பத்தினர், ஜெயசீலியின் வீட்டில் இருந்த பொருட்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர். அப்போது, அவள் கைப்பட எழுதி வைத்திருந்த,'தாமரையின் நகைகள், என் வங்கி லாக்கரில் பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது..' என்ற குறிப்பு கிடைத்தது. மரண சான்றிதழ், வாரிசு சான்றிதழ் போன்ற வழக்கமான வங்கி நடைமுறைகளுக்கு பின், லாக்கரை திறந்து பார்த்தனர். அங்கு, இவர்களின் நகைகள் தனி கவரில் போடப்பட்டு, 'இவை, தாமரையின் நகைகள்...' என்று, அதன் மேல் எழுதி வைக்கப்பட்டிருந்தது.

திருமணம் நின்று, மூன்று மாதங்களுக்கு பிறகு, ஜெயசீலியின் வங்கி, லாக்கரில் இருந்த நகைகள், சிவகாமியின் கைக்கு வந்து சேர்ந்தது.

நகைகள் திரும்ப கிடைத்த சந்தோஷத்தில், மறுபடியும் திருமணத்திற்கு நாள் குறிக்கலாம் என்று, மாப்பிள்ளை வீட்டாரை சந்திக்க போன போது, சிவகாமிக்கு கிடைத்த செய்தி, இன்னும் அதிர்ச்சியாக இருந்தது. மாப்பிள்ளை வீட்டாரின் குடும்பமே, அப்போது, போலீஸ், 'கஸ்டடி'யில் இருந்தது.

என்னவென்று விசாரித்ததில், அகப்பட்ட அபலை பெண்களை திருமணம் செய்து, அந்த பெண்களுடன் சில நாட்கள் வாழ்வதாய் நாடகமாடி, அணிந்து வரும் நகைகளையும், பணத்தையும் அபகரித்து, அப்புறம் காணாமல் போய் விடுவராம். இதே போல், பல ஊர்களில், இது வரை ஏழெட்டு திருமணங்கள் செய்து, இப்போது தான் அகப்பட்டுள்ளனர்.

தாமரையை கட்டிக்கொண்டு, 'கடவுளே... காப்பாற்றினாயே...' என்று கதறினாள், சிவகாமி.

'அடக்கடவுளே... உன் கணக்கு தான் என்ன... என் பெண்ணை ஒரு மோசடி கும்பலிடமிருந்து காப்பாத்துறதுக்காக, பரிசுத்தமான இரண்டு ஆத்மாக்களை பலிகடா ஆக்கிட்டியே பாவி...' என்று, மார்பிலும், வயிற்றிலும் அடித்து, அழத் துவங்கினாள், சிவகாமி.

**சோ. சுப்புராஜ்**

# சிவலிங்க வழிபாடு

**ஆ**தியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியை இலிங்கமாக வழிபடும் வழமை தொன்று தொட்டு மருவி வந்துள்ளது. இலிங்கத்தின் நீள்கோள வடிவு அகிலத்தின் வடிவாக உள்;ளது. இவ்வாறு இலிங்க வழிபாட்டின் இயற்பியல் தத்துவம் அதர்வவேதத்தில் உள்ளதாக சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.


அக்கினிக்குழம்பாக உருவாகிய பூமியே ஓர் சிவலிங்க சொரூபமாக திருக்கைலாயமலை அமைவதாக ஞானிகள் உணருவர். அவ்வாறே பூமியின் பல பாகங்களிலும் சுயம்புலிங்கங்கள் பூமிக்கடியில் காணப்படுகின்றன. சைவசமயத்திற்கு முன்பாகவே லிங்கவழிபாடு தென்அமெரிக்காவில் காணப்பட்டுள்ளது. மேலும் இலிங்கத்தின் முப்பரிமாணம் காலத்திற்குகாலம் வெவ்வேறு மத நம்பிக்கைக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டு வந்தது. லிங்கம், சதுரம், செவ்வகம், வட்டம், முக்கோணம் என பல்பரிமாண வடிவங்களை வெவ்வேறு கோணங்களில் நோக்கும்போது இது ஒவ்வொரு பொருளைக் காட்டுகின்றது. இலிங்கத்தின் உருவினை கிறிஸ்தவர்கள் சிலுவையாக நோக்குகின்றனர். எபிரேயர்கள் தமது கடவுளாக வணங்குகின்றனர். மக்காவில் இஸ்லாமியர்கள் கர்பாவில் நீள்கோள வடிவிலான இலிங்கத்தினையே வைத்து வணங்குகின்றனர். சகல இஸ்லாமியருக்கும் மக்காவிற்கான புனித பயணம் மிகவும் இன்றியமையாதது. பௌத்தர்களும் லிங்கத்தின் அமைப்பினையே தாதுகோபுரமாக வணங்குகின்றனர்.

சுயம்பு இலிங்கங்கள் இயற்கையோடு கூடிச்

**மருத்துவர் சி. யமுனாநந்தா**

செயற்படுகின்றன. மனித சரீரத்திலும் பஞ்சபூதங்கள் உள்ளன. சுயம்பு மூர்த்தி உள்ள தலங்களில் வசிக்கும் மனிதர்களே இம்மண்ணுக்கான மழை, காற்று, அக்கினி, மண்வளம் என்;பனவற்றை தீர்மானிக்கின்றனர்.

அணுவின் வடிவம் அகிலத்தின் வடிவம் நீளகோளப் பாதையாக அமையும். அதனையே சிவலிங்க உரு எமக்கு உணர்த்துகின்;றது. அவ்வாறே ஆத்மாவின் வடிவில் அணுவினைப் போன்று நீள்கோளத்தில் அமையும்.



சுயம்பு சிவலிங்கங்கள் பல மில்லியன் வருடங்;களுக்கு முன் எரிமலைக்குழம்புபோல் இருந்து உருமாற்றம் பெற்ற கருங்கற்களால் ஆனவை. இவற்றிற்கு அபிசேகம் செய்யும் போது அவற்றில் இருந்து கதிர்வீச்சுப் பாதிப்புக்களை தவிர்க்கவே இவ்விலிங்கங்கள் ஆறு, குளம், கடல், கிணறுகள் என்பவற்றுடன் சார்ந்தே அமைந்திருக்கும். இலங்கையில் பஞ்சாஈச்சரங்களும் கடல்சூழ அமைந்தமையும் ஈண்டு நோக்கத்தக்கது.

பிரதோச காலத்தில் சிவலிங்க வழிபாட்டில் அபிசேகம், ஆராதனை, கற்பூரதீபம் என்பன லிங்கத்தின் அருள்வீச்சினை ஆத்மாவிற்கு வழங்கும்.

சிவலிங்கம் செய்வதற்கு ஏற்றவை எனத் திருமந்திரத்தில் கூறப்படுபவை.

முத்துடன் மாணிக்கம் மொய்த பவளமும்
கொத்தும் அக்கொம்பு சிலைநீறு கோமளம்
அத்தன் தன் ஆகமம் அன்னம் அரிசியாம்
உய்த்த அதன் சாதனம் பூமணல் இலிங்கமே.
(திருமந்திரம் 1719)

அதாவது முத்து, மாணிக்கம், அழகிய பவளம், சீவிச் செதுக்கி அழகாக்கப்பட்ட மரம், கல், திருநீறு படிகம் போன்ற வெண்மையான கற்கள் அல்லது பச்சை மரகதம், ஆகம நூல்கள், சோறு, அரிசி, மலர், மணல் எல்லாமே சிவப் பரம்பொருள் சிவலிங்கம் செய்வதற்கு ஏற்றவை.

கெட்டித்தயிர், பசுநெய், பால், பசுஞ்சாணம் (துய்யமெழுகு) சுத்தப்படுத்தப்பட்ட செம்பு, நெருப்பு (கனல்), இரசம், நீரில் தோன்றும் வலம்புரிச்சங்கு, நன்கு சுடப்பட்ட வில்வ இலை, பொன் ஆகிய வற்றினாலும் சிவலிங்கம் செய்து வழிபடலாம்.

துன்றும் தயிர் நெய் பால் துய்ய மெழுகுடன்
கன்றிய செம்பு கனல் இரதம் சலம்
வன்திறல் செங்கல் வடிவுடை வில்வம் பொன்
தென்றியங்கு ஒன்றைத் தெளி சிவலிங்கமே
(திருமந்திரம் 1720)

மேலும் ஆலயத்தில் கருவறைக்கு மேலாகக் கட்டப்பட்டுள்ள விமானம் தூல வடிவான இலிங்கமாகும். கருவறையில் எழுந்தருளியுள்ள சதாசிவம் சூக்குமலிங்கமாகும். சிவனுக்கு முன்பாக நந்திக்கும் கொடிக்கம்பத்திற்கும் இடையில் உள்ள பலிபீடம் பத்திரலிங்கமாகும்.

தூய விமானமும் தூலம் அதாகுமால்
ஆய சதாசிவம் ஆகும் நற்சூக்குமம்
ஆய பலிபீடம் பத்;திர லிங்கமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே.
(திருமந்திரம் 1718)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.